உ

குகன் றுணை.

மலையாள பகவதி.

(இரண்டாம் பதிப்பு.)

மதுரை ஜில்லா, செம்பூர் வித்வான்

வீ. ஆறுமுகஞ் சேர்வையாரவர்கள்

இயற்றியது.

சென்னை

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியார் அவர்களால்

வெளியிடப்பெற்றது.

1926

 [விலை ரூபா 1.

முன்னுரை.

இப் பூமண்டலத்திலுதித்த மனிதர் அடைதற்குரியனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்களை எய்துதற்கான மார்க்கங்களை அம்மக்களாயினார்க்கு எளிதிற் போதிக்கத்தக்க நூல்களைப் பண்டைக்காலத்திலிருந்த பெரியோர்கள் இத்தமிழ்நாட்டில் பெரும் பான்மையும் செய்யுட்களாலேயே இயற்றிப் பயன்படுத்தி வந்தனர். அந்நூல்களெல்லாம் மானிடர் பல நன்மார்க்கங்களை யுணர்தற்கும், செய்யுட்களை மனத்திற் பதியவைத்துக் கல்வியை விருத்திசெய்து கொள்வதற்கும் இன்றியமையாக் கருவிகளாயிருந்து வந்தன. அவற்றால் தமிழ் நிலத்தவர் மிக்க சீரும் சிறப்புமடைந்து வந்தனர். எனினும், உலக இயல் காலந்தோறும் மாறுதலடைவது இயற்கையாதலின், இக்காலத்தில் அத்தகைய கல்வி முறையானது வேறுபட்டிருக்கின்றது. நூதனக் கல்விமுறை பயின்றார் பலர் தோன்றி, "மனிதர்க்குக் கல்வி போதிக்கும் முறை எளிதாயிருக்க வேண்டும்; செய்யுட்களால் நூல்களை இயற்றி மாணவர்க்குப் போதிப்பது கடின முறையாகும்; செய்யுட்களை இயற்றுதல் பயனற்ற வேலை" என்று பல தீர்மானங்களைச் செய்து, நடையிலேயே எளிய நூல்களை எழுதி வித்தியார்த்திகட்குப் போதிக்கும் முறையைப் பழக்கத்திற்குக் கொண்டுவந்து விட்டனர்.

இப்பழக்கம் அதிகரித்து வர வர, செய்யுட்களால் நூலியற்றும் பழக்கம் நம்மவர்க்குள் மிகுதியும் குறைந்து விட்டது. இலக்கியப்பயிற்சி செய்து இலக்கணங் கற்றுப் புலமைத்திறம் பெறுதலும் போய்விட்டது. அதனால், முறைப்படி கல்வி பயின்றவர்களும் செய்யுட்களால் நூலியற்றுவதை விடுத்து வசனத்தாலேயே பல நூல்களை

இயற்றி வருகின்றனர். அங்ஙனம் இயற்றுவாருட் பலர், மாணவர்க்கு விளங்காத கடின நடையில் புத்தகங்களை எழுதுகிறார்கள்; சிலரே தெள்ளிய தமிழில் எழுதுகின்றனர். இவர்கள் இவ்வாறு எழுதுவதைப் பார்த்துவிட்டு ரகர, றகர, லகர, ளகர, ழகர, ணகர, நகர, னகர பேதங்களையும் உணராமல், எழுத்துக்களைக் கூட்டி வாக்கியங்களை மாத்திரம் வாசிக்கும் இயல்பினை யுடைய பலரும், 'நடையில் நூலியற்றுவது எவர்க்குஞ் சுலபமான காரியமாகும்; ஆதலின் நாமும் வசனத்தில் நூல் எழுதலாம்' என்று முடிவு செய்துகொண்டு மனம் போனவாறே வழுக்கள் நிறைந்த புத்தகங்களை எழுதி அலங்காரப் பெயருடன் எங்கும் பரப்பி வருகின்றனர்.

இம் மூன்று வகுப்பார்களுடைய புத்தகங்களுள்ளும் முதல் வகுப்பினருடைய நூல்கள் உயர்ந்த கல்வியாளர் சிலர்க்கே பயன் படுவன; இரண்டாம் வகுப்பினருடைய நூல்கள் எல்லோருக்கும் பயன்படக் கூடியனவும், தமிழை விருத்தி செய்யக்கூடியனவுமாம்; இறுதியிற் கூறியவர்களுடைய புத்தகங்களோ எவர்க்கும் எவ்வகையிலும் பயன் படாதனவும், தமிழின் சிறப்பை அடியோடு கெடுத்துவிடத் தக்கனவுமாம். இவை இத்தன்மை யுடையனவாயிருந்தும், தமிழ் நாட்டில் உயர்தரப் படிப்பில்லாதவர்களே அதிகரித்திருப்பதாலும், விநோதப் பெயர்களும் பொருத்தமற்ற விஷயங்களும் அருவருக்கத் தக்கனவாயிருப்பினும் அவற்றையே அவர்கள் விரும்பக்கூடியவர்களாயிருப்பதாலும் இந்த அபத்த நூல்களையே மிகுதியும் விரும்புகின்றனர். ஆதலின் இத்தகைய பிழைபட்ட புத்தகங்கள் எங்கும் மலிந்து தமிழின் உயர்வைத் தாழ்த்தி வருகின்றன. இவற்றை ஒழித்துத் தமிழை நல்ல நிலைக்குக் கொண்டு வருதல் அறிஞர் கடமையாம்.

முதலிற் கூறிய வகுப்பாரும், இரண்டாவது வகுப்பாரும் இவற்றை யொழித்து நற்றமிழ் நாடெங்கும் பரவுமாறு செய்யக்கூடியவரெனினும் அவர்கள் எழுதும் நூல்களின் சிறப்பான பெயர்களும், பொருள்களும், இந்த இழிந்த நூல்களை விரும்பும் சாமானியர்களின் மனதைக்

N. Ramaswamy

கவாக்கூடாதனவா யிருக்கின்றன; இக்காரணதால் அவர்கள் அவ்வழுப்புத்தகங்களின் விருப்பத்தை விட்டொழிவது கஷ்டமா யிருக்கின்றது. அவர்களை நற்றமிழ்ப்பயிற்சி முறைக்குத் திருப்பவேண்டுமானல், அவர்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு இலக்கணப் பிழையில்லாத எளிய நடையில் விநோத விஷயங்களும், கதைகளுமடங்கிய புத்தகங்களை யெழுதி வெளியிடல்வேண்டும். அங்ஙனம் வெளியிடின் அவர்கள் அவற்றைவாங்கிப் படிப்பதன் மூலம் நல்ல தமிழ்ப் பயிற்சித்துறையி லிறங்கிவிடுவார்கள். அவ்வாறு திரும்பிய பின் கல்வி நிரம்புதலில்லாதவர்களால் எழுதப்படும் அத்தகைய பிழைப்புத்தகங்கள் ஒழிந்துபோம். அறிஞர், தமிழ் விருத்திக்குச் செய்யத்தக்க காரியங்கள் பலவுளவேனும் அவற்றுள் இது முக்கியமானதாகும்.

ஆதலின், சாமானிய மனிதர் விரும்பத்தக்க விஷயங்களடங்கிய புத்தகங்களை இனிய தமிழில் எழுதி வெளியிட வேண்டுமென்னும் எண்ணம் எனக்குண்டாயிற்று. அதனாலேயே நான் வேறு பற்பல உயர்ந்த நூல்களை எழுதி வெளியிட்டு வருவதோடு இத்தகைய நூல்களையும் வெளியிடத் தொடங்கி இப்போது "மலையாள பகவதி" என்னும் இந்த விநோதமான கதையை எழுதி வெளியிட்டனன்.

இக்கதையில், ஒரு சமஸ்தானத்திலிருந்த சேகவனொருவன் பொது ஜனங்களுக்குப் பற்பல தீமைகளைப் புரிந்து வந்ததால், எண்ணிறந்த இன்னல்களுக்குள்ளாகிக் கெட்டொழிந்த வரலாறு முக்கியமாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்கதை சிறிதாயினும் இதன் சார்பாகவரும் விஷயங்கள் மிகவிரிவானவையும், படிப்பார்க்கு இனிமையைத் தருவனவும், மிக்க விநோதமானவைகளும், அடிக்கடி நகைப்பையுண்டாக்கக் கூடியனவுமாம். இவற்றில், சமஸ்தானங்களிலுள்ள தாழ்ந்த வேலைக்காரர்களின் அக்கிரமநடத்தைகளும், சமஸ்தானப் புரட்டர்களின் இயற்கைகளும், மெய்ப்புலவர், போலிப் புலவர் ஆகியவர்களின் தன்மைகளும், வைராக்கிய சித்தமுடையவர் குறித்ததை நிறைவேற்றியே தீருவார்களென்பதும், அநீதியுடையவர்க்கு அளவற்ற துன்

பங்கள் அடுத்தடுத்துண்டாகும் விநோத சம்பவங்களும், தாழ்ந்த குணமுடையவரின் இல்வாழ்க்கையின் விநோதங் களும், தாசிகளின் இயற்கைகளும், பிறர்க்குக் கடன் கொடுத்தவர் அவரைத்துன்புறுத்தும் விதங்களும், பிறரிடம் கடன் கொண்டவர் அடையுந் துன்பங்களும், கோடாங்கி, பூசாரி ஆகியவர்களின் இயற்கைகளும், பேய், பூதங்களின் இயற்கைகளும், மந்திர தந்திரங்களின் விதங்களும், மனிதர் மீது தெய்வ ஆவேசம் வந்து செய்யும் விநோதச் செயல் களும், பெண்கள் பேயாடும் அற்புதங்களும், கோடாங்கிக் கூத்தும், கோடாங்கி பெண்களிடமுள்ள பேய்களை ஓட்டும் விதங்களும், பூசாரிகள் பேதைகளை ஏமாற்றும் விதங்களும், மாயாஜால மந்திரக்காரர்களையும், கோடாங்கிகளையும், பேய் பிசாசுகளையும் நம்புவோர் தீராத்துயரத்திலும், அவமானத் திலும், தரித்திரத்திலும் சிக்கி, மனையிழந்து மதிகெட்டு மாண்டொழிவரென்பதும், இன்னும் இவைபோன்ற அரிய விஷயங்களும் விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. இவை, படிப்பார்க்கு விநோதமானவைகளாகக் காணப்படினும் நல்ல விவேகத்தை யுண்டாக்கக் கூடியனவாம். இத்தகைய விஷ யங்களடங்கிய இந்நூலை வாசிப்பவர், பல ஏமாற்றுக்காரர் களின் மோசத்திற் சிக்காதிருக்கும் மார்க்கங்களை உணர்ந்து கொள்வதோடு மானிடர்க் கின்றியமையாதனவாகிய பல அரிய நீதிகளையும் தெரிந்துகொள்ளலாம். இனிய தமிழ் நடைத் தேர்ச்சியையும் அடையலாம்.

ஆதலின், இவ்வகைப் பயன்களைத் தரத்தக்க இந் நூலைத் தமிழ் மக்களனைவரும் அங்கீகரிக்குமாறு செய்ய எல்லாம்வல்ல இறைவனை நான் பிரார்த்திக்கின்றேன்.

இதனை அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டுக்குத வியசென்னை ஆனந்தபோதினிப் பத்திராதிபர், திருவாளர்-நா. முனிசாமி முதலியாரவர்கட்குத் தனிமுதற்கடவுள் தண்ணருள் புரிவாஞக.

இங்ஙனம்,

வீ. ஆறுமுகன்.

Sundaram

N. SUNDARAM

பொருளடக்கம்.

N. Sundaram

உ

குகன்றுணை.

மலையாள பகவதி.

காப்பு.

நேரிசை வெண்பா.

செந்தமிழ்ப்பா வாணர் தினமும் புகழுமெங்கள்
கந்தனுக்கு மூத்தோன் கழல்பணிவாம்—சுந்தரமார்
இந்தக் கதையோ ரிடையூறி லாதுமுடிந்
தெந்தவிடத் தும்பரவ வே.

கதை.

1-வது அத்தியாயம்.

கோட்டைவாயிற் குரங்கு.

திருமடந்தைக்கே எப்பொழுதும் வாசஸ்தானமாய் விளங்கும் 'கூடற்பதி' என்னும் மதுரைமா நகரத்தைப் பாண்டியர்கள் காலத்துக்குப் பின்னர் சற்றேறக்குறைய இருநூறு ஆண்டுகட்குமுன் "திருமலைநாயுடு" என்பவர் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர் மகாதருமகுணசீலர்; மண்ணுலகிலுள்ள உயிர்களைத் தன்னுயிரெனப் பாவிப்பவர்; மீனாக்ஷி சுந்தரேஸ்பரர்மீது மிக்க பக்தியுள்ளவர்; மீனாக்ஷி கோவிலுக்கு இவராலியற்றப்பட்டு இன்றும் இருக்கின்ற திருப்பணிகளும், பூசனைகளும், திருவிழாக்களும் பலவுள. இன்னும் இவரால் பலநிலங்களும், கிராமங்களும் கோவி

லுக்கு மானியமாக விடப்பட்டிருக்கின்றன; இவர் வசித்து வந்த அரண்மனையிற் சிறிதுபாகம் இன்னும் அழிவுறாது, "திருமலை நாயுடுமால்" என்னும் பெயருடன் விளங்கி மனிதர்களுக்கு இவருடைய ஞாபகத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றது; இந்தக் கட்டிடத்தை நேரில் காண்பவர்களுக்கு இவருடைய சீரும்சிறப்பும் ஒருவர் எடுத்துச் சொல்லாமலே விளங்கும்; இவர் குடிகள்மீது மிக்க அன்பும் ஆதாவுமுள்ளவர்; இவர் ஆட்சிக்குட்பட்டவர்களுக்கு இவரிருக்குமளவும் துன்பமே கிடையாது; அதனுல் ஜனங்கள் இவர் மறைந்து எத்தனையோ வருடங்களாகியும் இவரை மறவாமல் இன்னும் இவரது கீர்த்தியைப் புகழ்ந்து கொண்டாடி வருகின்றனர்.

இவர் மேற்கண்டவாறு ஆட்சிபுரிந்து வருங் காலத்தில் மாதமும்மாரி வழுவாமற் பெய்யும்; நாடெல்லாம் முப்போகம் தப்பாமல் விளையும்; 'பஞ்சம் இன்னவிதம்' என்பதைப் பாண்டிநாட்டார் அறிந்திரார்; 'குபேரநகரும் இதற்கு இணையாகாது' என்று சொல்லும்படி மதுரை நகரானது சிறப்புற்றுச் செல்வத்தால் மல்கப்பெற்றிருந்தது; இவர் ஆட்சிக்குட்பட்ட ஜனங்களெல்லோரும் இந்திரலோக வாசிகளைப் போன்ற வனப்புற்றுலாவுவார்கள்; இவர் மற்ற அரசர்களினும் மேம்பட்டு மிக்க செல்வம் பொருந்தி வாழ்ந்தனர். இதை, இவரால் நடைபெற்றிருக்கும் கோவிற்றிருப்பணிகளும், அரண்மனைக் கட்டிடமுமே இன்னும் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இவர் மங்களமாக வாழ்ந்த அக்காலத்தில் 'மால்' என்று இப்பொழுது வழங்கப்பட்டு வரும் அரண்மனையானது மிகவும் விசாலமாய், (மதுரையிற்பாதி) இருந்தபடியால், அரண்மனையின் சொந்த உபயோகத்துக்கு மாத்திரம் ஐம்பதின்மருக்கு மேற்பட்ட சேவகர்கள் மந்திரியால் நிய

மிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களெல்லோரும் இராஜ சமுகத்திலேயே உள்ளவர்களான படியாலும், பலர்க்கு இவர்களுடைய தயவு வேண்டியதாகையாலும், இவர்கள் மிகக் கெர்வங் கொண்டவர்களாய் ஒருவரையும் மதியாமல் உக்கிராணத்து எலிகளைப் போன்று உலவி வந்தார்கள். அரண்மனை வாசலில் இவர்களுடைய அதிகாரந்தான் பலமாயிருக்கும்; மந்திரி முதலானவர்கள் கூட இவர்களைப் போன்று சட்ட திட்டங்கள் செலுத்தமாட்டார்கள்; இவர்கள் 'வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை'; எவரேனும் அரண்மனைக்குள் நுழைவதென்றாலும், அரசரைப் பார்ப்பதென்றாலும் முதலில் இவர்களுக்கு ஒன்றிரண்டு தக்ஷிணை கொடுத்து இவர்களுடைய கொடியமனத்தைத் திருப்திப் படுத்திக்கொண்டுதான் பிரவேசிக்கவேண்டும்; இல்லையேல் ஒன்றும் சரிப்படாது. சிலர் தெய்வ கிருபையால் இவர்கள் கண்களுக்கு அகப்படாமல் உள்ளே போய் விட்டாலும் அவர் காரியத்தை அடியோடு கெடுத்து விடுவார்கள்; எவரேனும் அரசருக்கு எழுத்து மூலமான மனுக்களை அனுப்புவதென்றாலும் இந்தக் கோட்டை வாசற் பிசாசுகளுக்குக் கால் ரூபா தக்ஷிணை கொடுத்துத்தான் உள்ளே அனுப்பவேண்டும்; தக்ஷிணை யின்றி மனுக்கொடுத்தால் அஃது அரசர் சமுகத்தை நாடிப்போவதற்குப் பதிலாக அக்கினி பகவான், அல்லது வருணபகவான் முதலியவர்களின் சமுகத்தை நாடிப்போய்விடும்; எவரேனும் பசியால் வருந்தி 'அரசரிடத்தில் ஏதாவது வாங்கிச் செல்லலாம்' என்று போனாலும், பிச்சை யெடுத்தாவது அரைக்கால் ரூபா இவர்கள் கையிற் போட்டபிற்பாடுதான் உள்ளே போக வேண்டும்; இவை தவிர அரண்மனைச் சொத்திலும் இவர்கள் கைகொண்டமட்டும் கொள்ளையடிப்பார்கள்; இவர்கள் என்ன அக்கிரமங்கள் நடத்தினாலும் திருமலை

நாயுடு அவர்கள் மிக்க தாக்ஷண்ணிய முடையவர்களாதலால், இவர்கட்கு மிகக்கடினமான தண்டனைகொடாமல் "இவர்கள் பரம்பரையாய் நமக்கு அடிமைத்தொழில் செய்பவர்கள்; அரண்மனை வேலையைவிட்டு வெளியே சென்றால் இவர்களை ஒரு பொருட்டாகவெண்ணி எவரும் எதையும் இவர்களுக்குக் கொடுக்கமாட்டார்களே; இவர்களுடைய ஆட்டமெல்லாம் அரண்மனையி லிருக்கும்வரை தானே; நம்பினவர்கள்; பிழைத்துப்போகட்டும் பாவம்!" என்று இவர்களைச் சிறிது கண்டித்து, வேலையிலிருந்து விலக்காமல் விட்டுவிடுவது வழக்கம். அதனால் இவர்கள்மேலும் மேலும் மிக்க உன்மத்தர்களாகி, அரண்மனை வாசலிலிருந்தபடியேகணக்கிலடங்காப் பொருளைச் சம்பாதித்துக்கைகளில் தோடாவும், கழுத்திற் சூடாவும், காதில் வைரக்கடுக்கனும், சிரசில் பட்டுத் தலைப்பாகையும், இடுப்பில் தங்க அரைநாணும், உடம்பில் பட்டுச் சட்டையும், அரையில் சரிகை வஸ்திரமும், மார்பில் திருமலை நாயுடு அவர்கள் விலாசமிடப்பட்ட வெள்ளி வில்லைகள் வைத்துத் தைத்துப் பூணூல்போல வணிந்த பட்டைகளும், எலுமிச்சம் பழம் நிறுத்தத் தக்க மீசைகளும், யகரவளைவு, பகரவளைவாகச் சிமிட்டாக்கள் போட்டு நகாசு வேலை செய்யப்பட்ட, கருமந்திக் கிருதாக்களும், இடைவிடாது வெற்றிலைபாக்கு மென்ற வாய்களும், வெள்ளிப் பூண்கட்டிய பிரம்பு பிடித்த கைகளும், கோவைப்பழம் போன்று சிவந்த கண்களும், வெற்றிலைக்காவி பிடித்த பற்களும், தொந்தி சரிந்தவயிறும், தங்கம் போன்று சிவந்த தேகமும், உடையவர்களாய் நாயுடு அவர்களைப் புகழ்ந்து பெருமிதத்தோடு வசித்து வந்தார்கள்.

இக் கூட்டத்தாருக்குள்ளே சுப்பையத் தேவனென்பவன் சிரேஷ்டம் பொருந்தியவனாயும், எல்லாரினும் மிக்க சாமார்த்தியசாலி யாகையால் டபேதார்ப் பட்டம் பெற்று

வனுயுமிருந்தான். இவன் மதுரைக்கு நேர்கிழக்கே இருபத்தேழு மைல் தூரத்திலுள்ள 'சிவகெங்கை' என்னும் நகரில் அகம்படியர்குலத்திற் பிறந்தவன் ; ரூபத்தில் மிகவும் குள்ளன்; இவனுடைய கைகால்களெல்லாம் தசைப்பிடிப்பின்றி எலும்பைப்போன்றிருக்கும் ; முகம் பலகைபோன்று சமமாய் இரத்த சத்தின்றிப் பிரகாசிக்கும்; இவன் நெற்றிக்கு நேரே தலையில் பகாவளைவு வைத்துச் சௌரம் செய்துகொண்டிருப்பான்; கழுத்தில் ஒற்றை உருத்திராக்கம் கட்டியிருப்பான்; காதில் சிவப்புக் கல்வைத் தழுத்திய கடுக்கனிட்டிருப்பான்; இவனுக்குக் கைந்நிறைய மோதிரங்களுண்டு ; இவன் மற்ற சேவகர்களைப் போன்று ஆடையாபரணங்கள் தரித்துக்கொண்டிருப்பானெனினும் இவனுக்கு விசேஷமாகக் காற்பெருவிரலுக்கடுத்த விரல்களிலும் வெள்ளி மிஞ்சி கிடந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும் ; மேலும் இவன் வெள்ளை வஸ்திரங்களில் மிகவும் பிரியக்காரனுனதால், சிப்பிச் சுண்ணும்பைப்போல சலவை செய்யப்பட்ட உயர்ந்த வெள்ளைவஸ்திரத்தைத்தான் அறையில் தரித்துக்கொண் டிருப்பான்; ஆள் குள்ளனுயிருந்தாலும் 'டபேதார்' என்பதை உத்தேசித்து இவன் தலைப்பாகையும் வில்லையும் சற்றுப் பருமனுள்ளவைகளாகவே யிருக்கும்; இவன் மீசையானது பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்துக்கொண்டிருக்கும்; இதற்குக் காரணம்:—அது, வரிசையில் ஒவ்வொரு மயிர்வைக்கப்பட்டு அடர்த்தியாயிராமல் ஈர்க்குப்போன்றிருக்கும்படி இரண்டு பக்கத்திலும் கத்திகொண்டு ஒதுக்கிவிடப்பட்டிருப்பதே. தன்னை அலங்கரித்துக் கொள்வதற்கு இவன் பின்வாங்க மாட்டான் ; இடுப்பில் வெள்ளைப் பட்டுக்கரை வேஷ்டிகட்டி மேலே செம்பட்டுச் சட்டையணிந்து, அதன்மேல் டவாலி போட்டு, அதன்மேல் இடுப்பைச் சுற்றிச் சிவப்புச் சல்லாவை முறுக்கி இரண்டு மூன்று சுற்று

வரும்படி கட்டி, அதன்மேல் வலப்பாரிசத்தில் உடைவாள் செருகி, சிரசில் சரிகைத் தலைப்பாகை வைத்து, நெற்றியில் மூன்றுவிரல் கீற்றுத் தனித்தனியே தெரியும்படி விபூதியைக் குழைத்துப்பூசிப் பூரணச் சந்திரன்போலச் சந்தனப் பொட்டிட்டு, அதனடுவே கடுகைப்போலக் குங்குமப் பொட்டிட்டு அரண்மனை வாசலில் வந்து நிற்பான். அப்போது இவனது கோலத்தைக் கண்டோர் பிரமித்துப் போவார்கள். இவன் சித்திரக்குள்ளனும், வெளியூரிலிருந்து வந்தவனுமாயிருந்தும் மிக வாயாடியாகையால் மற்ற சேவகர்களை வாயடியடித்துக் கீழ்ப்படுத்தித் தானே மகா சாமார்த்தியவானென்று அதிகாரிகளிடம் காட்டி டபேதார் உத்தியோகத்தைப் பெற்றுக்கொண்டான்; மற்ற சேவகர்களில் எத்தனையோ சாமார்த்தியமுடையவர்களும், சுந்தர புருஷர்களுமிருந்தும் இவன் வாய்ச்சாமார்த்தியத்துக்கு மேலதிகாரிகள் மயங்கிவிட்டார்கள்; மேலும் இவன், புருஷர்கள் எந்தவேலையினால் மயங்குவார்களோ அது 'இன்னது' என்று தெரிந்து அதைக் கூசாமற் செய்து அதிகாரிகளைச் சரிப்படுத்திக் கொள்ளக்கூடியவன்; அதனால் இவனுடைய காரியமே அரண்மனையில் எதிலும் மேம்பட்டிருந்தது; இவன் ரூபத்தில் சிறியவனாயினும் ஒரு அதட்டுப் போடுவானேயானால் சேவகரில் படேபடே ஆசாமிகளெல்லாம் நடுங்கிவிடுவார்கள்; சேவகர் கூட்டத்தில் ஏதேனும் வரும்படி விஷயங்களில் பஞ்சாயத்து நடந்தால், இந்தச் சுப்பையத்தேவன் பேச்சே முதன்மைபெற்றிருக்கும். இவன் எதை முடிவுசெய்தாலும் "சுப்பையா! அண்ணன் சொன்னதே சரி!" என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

இன்னும் இவனுடைய குணவிசேஷங்களை எடுத்துக் கூறுவதென்றால் அவைகளே ஒரு புத்தகமாகிமுடியும்; ஆயி

னும், நாம் அவற்றுள் சிலவற்றைமாத்திரம் கதைக்கு அனு கூலமாக இங்கே எழுதுவாம்:—

இந்தச் சுப்பையத் தேவனுக்கு அப்போது வயது ஐம் பதுக்கு மேற்பட்டிருந்தது; இருந்தாலும் இவன் அதற்குள் அநேகம் சமஸ்தானங்களில் சேவகத் தொழிலிலிருந்து உருட்டுப் புரட்டில் மிகத் தேர்ச்சியடைந்திருந்தான். உல கத்திலுண்டாகியிருக்கும் சமஸ்தானப் புரட்டர்களெல்லாம் இவனைக் கண்டால் "ராம்; ராம்; சலாம்" என்று சொல்லி விட்டு ஓடவேண்டும். இவன் எப்பேர்ப்பட்டவர்களும் அரண் மனைக்குள் நுழையாமல் அவர்களைத் தடுத்துவிடுவான்; எவ ரேனும் இவனிடம் தாவந்தமாய்ப் போய் 'இராஜ சமுகத் தைத் தரிசிக்க வேண்டு' மென்றால் இவன் உள்ளேபோய்ப் பார்க்காமல் வெளியிலிருந்தபடியே, இப்பொழுது மகாராஜா அவர்களுக்கு ஸ்நான சமயமென்றும், பூஜை நேரமென்றும், போஜனவேளையென்றும், நல்ல நித்திரையென்றும், இரண் டாம்வேளைப் போஜன சமயமென்றும், மலபாதைக்குப் போ கும் வேளையென்றும், ஜலபாதைக்குப்போகும் சமயமென் றும், தர்பார்சமயமென்றும், தேசவிசாரணை நேரமென்றும், சத்காலக்ஷேப சமயமென்றும், வித்வான்களோடு சம்பாஷ ணையென்றும், பிரைவேட்ரூமிலிருந்து இரகசியம் பேசும் வேளையென்றும், பல்துலக்கும் வேளையென்றும், முகம் கழு வுந் தருணமென்றும், தேக சௌக்கியமில்லாத நேரமென் றும், வேட்டைக்குப்போகும் வேளையென்றும் நடக்காத சங் கதிகளைத் தேகநடிப்போடு அவரிடம் சொல்லி அவரைப் பய முறுத்தி, அவர் மனம் நொந்துபோகச் செய்வான். அவர்க ளுள் எவரேனும் இவனுடைய சட்டைப்பையில் ஒன்றிரண் டணு செம்புத் துட்டுக்களைச் சலசலவென்னப் போட்டு விட் டால் அப்படிப்போட்டவர்களோடு இவன் முகமலர்ச்சி யுடன் பேசி, அவர்களைப் பக்குவமாயழைத்துப்போய் இரா

ஜப்பிரபு என்ன வேலையிலிருந்தாலும், அவரைப் பிறர்பார்க்குஞ் சமயமில்லாவிட்டாலும் அவர்கள் அவரைத் தரிசிக்கும்படி செய்து, அவர்களுக்காக வேண்டிய காரியங்களையு முடித்து விடுவான்; துட்டைப் பெரிதென்று நினைப்பானே தவிர மனிதரை உயர்ந்தவரென்று கருதமாட்டான்; பள்ளிக்கூடத்தில் மழைக்கும் ஒதுங்கி யிருக்கமாட்டான்; பலரும் இவனை, படிப்பில் நிரக்ஷரகுக்ஷியென்று சொல்வார்கள். அதனால் இவன் பெரியோர், சிறியோர், படித்தோர், படியாதவர், சாதுக்கள், மூடர்கள் ஆகிய எல்லோரையும் ஒரே தன்மையுடையவர்களென்று கருதி வேலை செய்பவன்; பணம் கொடுத்தவரே இவனுக்குப் பரமசிவக் கடவுளாவர்; மற்றையர் நாயினும் கடையரென்று இவன் கருதுவான்; அகங்காரமானது இவன் மனத்தைவிட்டு எப்பொழுதும் நீங்குவதில்லை; இராஜசமுகத்துக்கு மிக்க அவசரமாய்ப் போகவேண்டியவர்கள் முதல்நாளிரவிலேயே இவன் வீட்டிற்குப்போய் இவனைப் பார்த்து, உத்தரகிரியைக்கு மொய்ப்போடுவது போன்று ஏதேனும் இவன் கையில் வைத்தழுது சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்; இராஜசமுகத்தில் வித்யாசாமர்த்தியங்களைக்காட்டிச் சன்மானம் பெறப்போகின்றவர்கள் வரும்படியில் பாதி இவனுக்குக் கொடுப்பதாக ஒப்பினால் மாத்திரந்தான் இவன் அவர்களை உள்ளே விடுவான்; இல்லையேல் அவர்களுக்குத் தடைதான். இன்னும் இவன் அரண்மனையில் காரியசித்தி பெறவிரும்பிச் செல்பவர்களிடத்தில் "மலையை விழுங்கிவிடுவேன், அண்டத்தைப் புரட்டிவிடுவேன், ஒரு நிமிஷ நேரத்தில் உங்கள் காரியத்தை முடித்துவிடுவேன்" என்று ஆசை வார்த்தை கூறி மோசமாகப் பொருள் பறித்துக் கையில் காசேறியவுடன், "இப்பொழுது சமயமில்லை, நீங்கள், நாளைவந்து சேருங்கள்" என்று கடுகடுத்துப்பேசி அவர்களைத் துரத்திவிடுவான்; கிராம உத்தியோகஸ்

தர்களுக்கெல்லாம் இவனுடைய தயவு மிகவும் அவசியப்பட்டும்; அவர்கள் அரண்மனை அதிகாரிகளுக்கு வேண்டுவன கொடுத்துத் திருப்தியுண்டாக்குவதைக் காட்டிலும் பதின்மடங்கதிகமாக இவனுக்குத் திருப்தி செய்யவேண்டும். தவறினால் இவன் சமயமறிந்து மேலதிகாரிகளிடம் கோட்சொல்லி அந்தக் கிராம உத்தியோகஸ்தர்களின் உத்தியோகங்களைத் தொலைத்து அவர்கள் வாயில் மண்ணைப்போட்டு விடுவான்; அதனால் கிராமங்களிலிருந்து தினந்தோறும் தவறாமல் இவனுக்கு நெய்யும், பாலும், தயிரும், மோரும், வெண்ணெயும், காய்கறி பதார்த்தங்களும், தானிய வகைகளும், அரிசி வகைகளும், ஆடும், கோழியும், முட்டையும், விறகும், இன்னும் வீட்டிற்கு அவசியமாகும் பதார்த்தங்களும் கணக்கில்லாமல் கிராம உத்தியோகஸ்தர்களால் அனுப்பப்பட்டு இவன் வீட்டுக் கொல்லைப்புறத்தில் இரகசியமாக வந்திறங்கிக் கொண்டிருக்கும்; நாட்டுப்புற வாசிகளுக்கு விசேஷமான பதார்த்தங்கள் அகப்பட்டால் அவற்றை அவர்கள் அனுபவியாமல் 'டபேதார் ஐயாவுக்கு' என்று எடுத்து வைத்து வரமுடியாமல் இடையில் எத்தனை நாட்கள் செல்லினும் பொறுத்திருந்து முடிவாகவருஞ் சமயம் நேர்ந்தபோது இவனிடத்திலேயே கொண்டுவந்து கொடுப்பார்கள்; பள்ளர், பறையர் ஆகிய ஏழைஜனங்களெல்லாம் இவனை, தெய்வம் என்றே கருதிக் கலங்குவார்கள்; அவர்களிடத்திற்றான் இவன் முழு அதிகாரத்தையும் காட்டுவான்; அரசர் வெளியே புறப்படும்போது ஏழைஜனங்கள் அவரைக் கண்டுவணங்கித் தங்கள் குறைகளைச்சொல்லிக்கொள்ள வாயெடுத்தால்பக்ஷிக் கூட்டத்திற் இராஜாளி பாய்ந்ததைப் போன்று அவர்கள் கூட்டத்திற் பாய்ந்து நிர்த்தாக்ஷணியமாய் அவர்களை அடித்துத் துரத்துவான்; இவனைக்கண்டவிடத்திற் புகழ்ந்துபேசினும் மனதிற்குள் 'இவன் எப்பொழுது தொலைவான்' என்று

திட்டாதவர்கள் இவனிருந்த விடங்களில் ஒருவருமிரார்; இவன் படிப்பில்லாத மூடனாதலால் எத்தகைய சாதுக்களிடத்திலும் பரிகாசமாகவே பேசுவான்; இலஞ்சம் வாங்கும் அதிகாரிகளுக்கு இவன்றான் பெரிய துணைக்கருவி; இவனில்லாவிட்டால் அவர்கள் பாக்கெட்மணி ஒருபைசாவேனும் சம்பாதிப்பது அரிதாகும்; இருவர் சண்டையிட்டு அதிகாரிகளிடத்தில் தங்கள் வழக்கைச் சொல்லித் தீர்த்துக் கொள்ளவந்தால் இவன் இரண்டு பேருக்குமே சாதகம் செய்வதாகச் சொல்லி இருபக்கங்களிலும் தக்க தொகை வாங்கி அதிகாரிகளுக்குக் கொடுத்துத் தன் சட்டைப் பையையும் நிரப்பிக் கொள்ளுவான்; இதை முன்னிட்டே இவனை அதிகாரிகளெல்லோரும் "சுப்பையாவைப்போலுண்டா!" என்று ஸ்தோத்திரம் பேசிப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்; அந்தப்புரத்திற் கூட இவனுடைய சாமர்த்தியம் செல்லும்; சில காரியங்களில் இவன், அந்தப்புரத்து ஸ்திரீகளைக்கொண்டே அரசர்களுக்கு விஷயங்களைச் சொல்லும்படி செய்து நன்மையாக முடித்துவிடுவான்; எவ்விதத்தாலும் முடியாதபெருங்காரியங்களுக்குத்தான் இவன் இப்படிச் செய்வது வழக்கம். இவன் ஆதியில் பல சம்ஸ்தானங்களிலிருந்து எண்ணிலடங்காப் புரட்டுக்கள் செய்து பல ஜனங்களுக்குத் துன்பத்தை யுண்டாக்கி அவற்றையெல்லாம் பாழாக்கிவிட்டு முடிவாக மதுரையில் மேற்கூறியபடி திருமலைநாயுடு அவர்கள் சம்ஸ்தானத்தில் வந்து சேர்ந்தவன். மற்றவிடங்களைக் காட்டினும் இவர்கள் சமஸ்தானம் மிகத் தாக்ஷணியமுள்ளதா யிருந்தபடியால் இவனுடைய மோசடி வேலைக்கு வெகு யோக்கியமா யிருந்தது; அதனால் இவன் முன் நடத்தி வந்தவைகளைக் காட்டினும் பதின்மடங்கதிகமாகவே உருட்டுப் புரட்டுக் காரியங்களை நடத்திவந்தான்; இதனால் இவனுக்குத் தினந்தோறும்

வரும்படியில் எட்டுணையும் குறைவில்லை. இவன் அரண்மனையி லிருந்து இரவில் வீட்டிற்குப் போகும் போதெல்லாம் இவ னுடைய சட்டைப் பையிரண்டும் பணம் நிறைந்தேயிருக் கும். இவன் அரண்மனைவாயிலில் இருந்து, குரங்கைப்போல் பல சேஷ்டைகளைச் செய்து வந்தானாதலின் இவனுக்குக் "கோட்டைவாயிற் குரங்கு" என்று ஒரு பெயருண்டாயிருந் தது.

இவ்வாறு இவன் அரண்மனையில் அதிக வருவாயுள்ள வனாயிருந்தும் இவனுக்குக் கையிலொன்றும் மிஞ்சுவதில்லை; இவன், "நாம் ஆயுள்வரை அரண்மனை உத்தியோகத்தை விட்டு விலகவேமாட்டோம்; அப்படியிருக்க நமக்கென்ன குறைவு; தினந்தோறும் தக்க வரும்படி வருவதில் எள்ளள வும் தடையிராதே; கைந்நிறையக்காசுவரும்போது என் கரு மித்தனஞ் செய்யவேண்டும்? நாம் இறந்துபோய்விட்டால் எது நம்கூடவரும்? நாம் இருக்கும்வரை சுகத்தை அனுபவிப் பதைத்தவிர உலகில் நமக்குக் கிடைக்கும் பலன் வேறொன் றுமில்லையே; ஆதலால், நாம் ஒன்றும் மிச்சம் வைக்கவேண் டியதில்லை; ஒவ்வொரு நாளும் வருவதை அப்போதைக்கப் போது செலவிட்டு மனத்திருப்தி யுண்டாகும்படி உயர்ந்த பதார்த்தங்களோடு ஆகாரம் சாப்பிடுவதே நலம்; நமது சந் ததிகளுக்கு சம்ஸ்தானம் இருக்கவேஇருக்கிறது; அவர்கள், எப்படியும் பிழைத்துக் கொள்வார்கள்; அவர்களுக் கென்ன குறைவு ? நாம் எதற்காக அவர்களுக்குப் பணம் சேர்த்து வைக்கவேண்டும்" என்று தனது மூடமதிக்கேற்பக் கருதி, "பொருள்தனைப்போற்றி வாழ்" என்பதையும் மறந்து, வரு வதையெல்லாம் சாப்பாட்டிலும், ஆடையாபரணங்களிலும் செலவு செய்துவிடுவான்; சிலசமயம் வருவதும் போதாமல் கடன் வாங்கிக்கொள்வான் ; அநியாயவழியிற் சம்பாதிப்பத னாலேயே இவனுக்கு இவ்விதம் பொருளைப் போக்கும்படி

யான புத்தியுண்டாயிற்று. இது தவிர இவனுக்கு மெய்யான தெய்வபக்தியில்லாவிட்டாலும், இவன், தனது குலதேவதை யாகிய மொட்டைக்கோபுரத்து முனியை வணங்குவதிலும், மாரியாத்தாள், மதுரை வீரன், மாடன் முதலிய தெய்வங் களுக்கும், பைசாசங்கட்கும் பூஜை போடுவதிலும் மிக்க சிரத்தையுற்றுக் கணக்கற்ற பொருளைச் செலவாக்குவான்; கோடங்கியை யழைத்துக் குறிகேட்பதிலும், மந்திர தந்தி ரங்கள் செய்வதிலும் மிகவிருப்ப முடையவன்; எடுப்பதற் கெல்லாம் 'தெய்வகுறை' யென்று மந்திரமூர்த்திடம் சாந்தி செய்துகொள்வதற் கோடுவான் ; இவன் வீட்டில் ஒரு மாதத்திற்கு இரண்டு மூன்றுமுறை முனிசாமி பூசை நிறை வேறும்; இவனைப்போல இவன் மனைவி முத்துக்கருப்பியும் பேய்விஷயத்தில் மயக்கமுடையவள். இவ்விருவரும் பூசாரி கள் எது கேட்டாலும் கொடுப்பார்கள்; என்ன சொன்னாலும் கேட்பார்கள்.

மேற்கண்டவாறு சுப்பையத் தேவன் மூடத்தன்மை யால் பொருளையெல்லாம் செலவிட்டு வறிஞனுயிருந்தாலும் இடம்பஞ் செய்வதில் மட்டும் பின்வாங்கமாட்டான். வெளி யேறும்போது இலட்சாதிபதிகளைப் போன்றுதான் புறப் படுவான்; இவன் மனைவிக்கு ஆடையாபரணங்களைக் குறை வில்லாமல் வாங்கிக்கொடுத்து அந்தப்புரத்து இராஜ ஸ்திரீகளைப்போல அவள் அலங்கரித்துக் கொள்ளும்படி செய்வான்; அவள் உடம்பெல்லாம் ஆபரணங்களின் ஒளியி னல் தங்கமயமாகவே யிருக்கும்; நூறு ரூபாய்க்குக் குறைந்த விலையுள்ள புடைவையை அவள் தரிப்பதில்லை. அவள் குடத்தை யெடுத்துக் குளத்துக்குப்போய்த் தண் ணீர் மொண்டுகொண்டு வீதியில் வரும்போ தெல்லாம் வேண்டுமென்றே காலிலணியப்பட்டிருக்கும் வெள்ளி மிஞ்சி கள் கலீர் கலீர் என்று அடிபடும்படி குலுக்கிக் குலுக்கி

நடப்பாள்; அரண்மனைத் தயவிருக்கிறதென்று ஒருவரையும் மதிக்கமாட்டாள்; பேரிடிபோல இரைந்து புருஷனும் நடுங்கும்படி பேசுவாள். சுப்பையத்தேவன் வெளியே என்ன அதிகாரம் செலுத்தினாலும் தன் மனைவியாகிய முத்துக் கருப்பியிடத்தில் மாத்திரம் அவன் வீரம் ஒன்றும் செல்லாது; அவளைக் கண்டவுடன் இவன், பூனையைக் கண்ட எலி போலவும், கெருடனைக் கண்ட சர்ப்பம் போலவும், புலியைக்கண்ட பசுப்போலவும் ஒடுங்கி விடவேண்டும். இவன் அவள் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசுவதில்லை; சில சமயம் அவள் மனதிற்கிசைய நடப்பதில் சிறிது தவறினால் இவனிடத்தில் அவளுடைய கைநீட்டுக்கூட நடக்கும்; இவன், தனக்கு உதைவிழுந்தாலும் தாங்கிக்கொண்டு மௌனமாயிருந்து விடுவான்; அவளுக்குக் கோபம் வரும் போது அவள் கையிலென்ன இருந்ததோ அது இவன் தலையிலிருக்கும்; இரண்டொரு சந்தர்ப்பங்களில் இருவர்க்கும் வாக்குவாதம் நடந்தபோது அவளுக்குக் கோபம்வரவே அப்போது அவள் எச்சில்பாத்திரத்தில் தண்ணீர்விட்டுக் கழுவிக் கொண்டிருந்தபடியால் அந்தத் தண்ணீரை அப்படியே இவன் முகத்தில் வீசி அடித்துவிட்டாள்; இவ்வளவு கேவலமான செய்கை நடந்துங்கூட இவன் அதைச் சகித்துக்கொண்டு ஒன்றும் பேசாதிருந்து பின் அவளுக்குச் சமாதானங் கூறி அவளைச் சாந்தப்படுத்தினான்; இந்தக் கேவலத்தையெல்லாம் சகித்தற்குக் காரணம்:-இவனுக்கு அவள்மீதுண்டாயிருந்த ஆசை மிகுதியேயன்றி வேறன்று. என்ன மிகுதியாயினும் இத்தகையோர் புத்திமான்களால் வெறுக்கத்தக்க பேடிகளேயாவர். இந்தச் சுப்பையத்தேவன் மனைவியை அடக்கியாளும் விஷயத்தில், பாத்தையர் தெருவில் ஆண்பெண் ஆகிய இருபாலார்க்கு மிடையிலிருந்து தூதுபேசி மானமாகிய போர்வையை மதியீனமாகிய சுழல்காற்றிற் பறக்க

விட்டு நாயினுங்கடையராய் ஜீவனம் புரிந்துவரும் நபுஞ்சகராகிய அண்ணுத்தைமார்களிலும் மேம்பட்டவன்; இவன் தனக்கு ஆகவேண்டிய காரியங்களை இலகுவில் முடித்து வருவதற்காகத் தன் மனைவியை அலங்காரப்படுத்திப் பிரபு சமுகங்கட்கு முன்னே யனுப்பிப் பேசும்படிசெய்து, தான் பின்னேசென்று ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்று தன்காரியம் முடிந்தவுடன் மரியாதையோடு அழைத்துக்கொண்டு வந்துவிடுவான்; இதனால் இவனுக்கு எப்பேர்ப்பட்ட காரியங்களும் பிரபுக்களிடத்தில் முடியத் தடையிராது; "பெண்ணென்றால் பேயும் இரங்கும்" என்னும் வாக்கியத்தின் உட் பொருளை இவன் நன்றுயுணர்ந்தவன்; இன்னும் இவனுடைய இல்வாழ்க்கையின் தன்மைகளையும் ஒழுங்குகளையும் எடுத்துக்கொண்டால் மிகவும் ஆச்சரியமாயிருக்கும். அவை இக்காலத்திலுமுள்ள அத்தகைய குணமுடைய சில மதியீனர்க்கு நல்லறிவையுண்டாக்க ஏதுவாயிருக்கு மாதலின் அவற்றுள் சிலவற்றைமாத்திரம் நாம் இங்கெடுத்துரைப்பாம்:

2-வது அத்தியாயம்.

சுப்பையத்தேவன் இல்வாழ்க்கை.

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன், ஏறுபோற் பீடுநடை" என்னும் வள்ளுவப்பெருந்தகையார் வாக்கின்படி இந்தச் சுப்பையத்தேவனுக்கு மனைவியாய்வாய்ந்த முத்துக்கருப்பி மிகவும் துர்க்குணமுள்ளவளும், வியபிசாரத் தன்மையுடையவளுமானபடியால், ஊரில் இவன் சிறப்படைவதில்லை. ஊரார் புறங் கூறலாகிய நிந்தையும், பரிகாசமுமே இவனுக்கு அதிகமாயிருக்கும். (இவன் ஊரார்க்கு உத்தியோகக் கர்வத்தால் செய்துவரும் தீங்கே இவ்வித நிலைமையையுண்டாக்கியது). பலர் இவனைக் கண்டபோது பயந்து புகழ்ந்து தோத்திரமாகப் பேசினாலும், காணாதபோது, "சீ! சீ!!

இவன் ஒரு ஆண்பிள்ளையா! மனைவியை அடக்கியாளாத பேடி; எதற்காக உலகில் உயிருடன் உலாவவேண்டும்; கழுதைக்கும் இவனுக்கும் ஏதேனும் பேதமுண்டா? இவன் அவள் ஆணைகடவாது சொன்னதையெல்லாம்கேட்டு நடக்கின்றனே; என்ன ஆசைகொண்டிருந்தாலும் பெண்ணேவல் செய்யலாமா? ஆணாய்ப்பிறந்தவனுக்கு இது தகுமா? இவன் கெட்டான் மடையன்; இந்தப்பேடிக்கு அரண்மனையில் உள்ளவர்கள் டபேதார் உத்தியோகம் கொடுத்தார்களே; இவனுக்கு உடைவாளேதுக்கு? கையில் பிரம்பு எதற்கு? டவாலியெதற்கு? இவன் அரண்மனை வாசலில்மட்டும் மகா சிப்பாய் போன்று பேசுகின்றன்; சொந்த வீட்டில் ஆண் தன்மையில்லாத பெண்ணுகி விடுகின்றனே; இவன் வெளியே இடம்பமாயிருந்து என்ன பிரயோசனம்; வீட்டிற்குள்ளும் அது இருந்தாலல்லவா இவனுக்குக் கௌரவமாயிருக்கும்; இவனைத்தான் நிந்திப்பதில் என்ன பிரயோசனம்; யாரும் ஊர்வாயிலிருக்கக்கூடாது; சொற்ப அதிகாரங்கள் கிடைத்தவுடனே தலைகீழாகத்துள்ளி உலகத்துக்குத் துன்பஞ்செய்து வருவோரின் பிழைப்பெல்லாம் இவ்வித நிலைமையிற்றன் வரும்; இவன் இன்னும் கடைசிநாளில் கணக்கிலடங்காத துன்பத்தை யடைவான்; நாமெல்லாம் உயிரோடிருந்தால் இவன் நிலைமையைப் பார்க்காமல் போக மாட்டோம்" என்று பலவாறு நிந்திப்பார்கள். இவனுடைய பேடித் தன்மையைக்கேட்போர்க்கு ஆச்சரியமுண்டாகாமற் போகாது. இவன் அரண்மனையிலிருந்து வீட்டிற்கு வரும்போது தடதடவென்று உள்ளே செல்லமாட்டான். வெளியில் நின்றபடியே 'வரலாமா' என்று மனைவியைக் கேட்பான்; முத்துக்கருப்பி, 'வரலாம்' என்று பதிலுரைத்தால் மாத்திரம் உட்செல்வான்; இல்லையேல் அவள் உத்தரவு வரும் வரை புறந்திண்ணையிற் காத்திருப்பான். இதற்குக்காரணம்:-

அவள் அண்டை அயல் வீட்டு வாலிபர்களை உள்ளே அழைத்து அவர்களோடு பரிகாசம்பேசி விளையாடிக்கொண்டிருப்பது வழக்கமாதலால், அச்சமயத்தில் "நாம் திடுமெனச் சென்றால் அவளுக்குக் கணக்கிலடங்காக் கோபமுண்டாகும்; உடனே அவள் நம்மோடு சந்தோஷமாய்ப் பேசாமல் நம்மைத் துரத்திவிடுவாள்" என்று இவன் பயந்திருந்ததேயாம். இதை வாசிக்கும் கனவான்களே! இத்தகைய தம்பதிகளை எங்கேனும் பார்த்ததுண்டா? இவர்களுக்கு என்ன கெதி கிடைக்குமோ அதைப்பற்றி நீங்களே யோசித்துப் பாருங்கள்; இவ்வித துராத்மாக்களிருந்தால் அவர்களுக்குப் புத்திகூறுங்கள்; இன்னும் இவன் முத்துக்கருப்பியோடு தனித்திருந்து சந்தோஷ வார்த்தைகளாடிக் கொண்டிருக்கும்போது, அவளுக்கு பிரைவேட் சிநேகிதர்களில் எவனேனும் வந்துவிட்டால் அவள் குறிப்பின்படியே வந்தவனுக்கு நல்ல இருப்பிடங் கொடுத்து "அண்ணா வாருங்கள்! உங்களைக் காண்பது கார்த்திகைப் பிறை போன்றிருக்கின்றதே! ஏன் இந்தப்பக்கம் அதிகமாகவரக்காணோம்" என்று அவன், தினந்தோறும் வரக்கூடியவனா யிருந்தாலும் அவனைக் காணாதவனைப்போன்று உபசார வார்த்தைகள் கூறி உட்காரவைத்துத் தட்டோடு தாம்பூலத்தை மரியாதையாக அவனுக்குக் கொடுத்து அவளோடு அவன் பேசும்படி செய்து விட்டுச் சிறிதும் தாமதிக்காமல் வந்தவனிடத்தில், "அண்ணா! எனக்கு மிகவும் வியர்வையாயிருக்கிறது; நீங்கள் பேசிக்கொண்டிருங்கள்; நான் வெளித்திண்ணையில் போய்ச் சிறிது நேரம் காற்றுடப் படுத்துக்கொண்டிருக்கிறேன்; நான் இல்லாமற் போகிறேனென்று மனஸ்தாபப்படவேண்டாம்" என்று வஸ்திரத்தைக் களைந்தெறிந்து விட்டுக் கோவணத்தோடு ஒரு பாய் தலையணையை யெடுத்துக்கொண்டு வந்து வெளித்திண்ணையிற்போட்டுப் படுத்துக்கொள்வான்;

அவ்வாறு படுப்பவன் தூங்குகிறவனைப் போன்று நடித்திருந்து வந்த ஆசாமி பேசிமுடிந்து வெளியே சென்றபின்பு தான் உள்ளேசென்று அவளோடு பிரியமாக வார்த்தையாடுவான்; இதுபோன்ற விஷயங்களிலெல்லாம் இவன் மிகவும் பொறுமையுள்ளவன். இதை முன்னிட்டே முத்துக்கருப்பியும் சில சமயங்களில் தன்னைப் போன்ற பெண்களிடத்தில் "என்புருஷனைப் போன்ற பொறுமைசாலி உலகத்தில் கிடைப்பதரிது" என்று சொல்வது வழக்கம். இன்னும் அவள் மனதிற் சந்தேகமின்றி வந்தவரோடு உறவாடுவதற்காக அவள் செய்யும் குறிப்பின்படியே ஒவ்வொரு இரவில் இவன் காரணமில்லாமல் அடுத்தவூர்ப் பிரயாணம் போய் விடிந்தபின் வருவான். அவள் தேகம் வாடாமல் வதங்காமல் மினுமினுப்பா யிருப்பதற்காக அவளுக்கு யாதொரு சிரமமுங் கெடாமல் தினந்தோறும் வீட்டில் நடக்கும் பெண்பாலார் வேலைகளை நடத்திவிடுவதில் எள்ளளவும் பின்வாங்கமாட்டான். அரண்மனையிலிருந்து வந்தவுடன் உடைகளைக் களைந்து வைத்துவிட்டுச் சிறிதும் தாமதிக்காமல் சமையலறையிற் பிரவேசித்துச் சமையல்வேலையை முடித்துவிடுவான். உதயத்திலும் அவ்விதமே செய்வதோடு அவளுக்கு ஸ்நானத்திற்கு வெந்நீர் வைத்துக் கொடுப்பான்; சீலையைத் தோய்த்துக் காயப்போட்டுவிடுவான்; குளிப்பதற்கு மஞ்சளரைத்துக் கொடுப்பான்; மிளகாயரைப்பான்; அவள் தலைக்கு எண்ணெய் தேய்ப்பான்; கூந்தலைச் சீவி முடிப்பான்; அவளுக்கு ஆடையுடுத்துவான்; முடிவாகச் சொல்லுமிடத்து அவள் சாப்பிட்ட பின்புதான் இவன் சாப்பிடுவான். வீட்டில் இவன் ஒரு பெண்ணும் முத்துக்கருப்பி ஒரு ஆணுமாயிருப்பார்கள். இவற்றையெல்லாம் சிநேகிதர்களுள் யாரேனு மொருவர்கண்டு, "என்ன

வோய்! இவ்வாறு பேடித்தனமான வேலை செய்யலாமா?" என்று இவனிடம் கேட்டால் அதற்கு இவன் "என்மனைவி பலமில்லாதவள்; அவள் தேகம் ரோஜாப்பூவைப் போன்றது; அதனோடு அவள் பிள்ளைக்காரி பாவம்! என்ன செய்கிறது? எங்களுக்குப் பெண்குழந்தை யிருந்தால் இவற்றையெல்லாம் பார்த்துக்கொள்ளும்; இல்லாத படியினால் நான்தானே செய்து தீரவேண்டும்; எது எப்படியானாலும் என்மனைவி மட்டும் மனம் வருந்துதல் எனக்குப் பிடிக்காது" என்று தக்க காரணம் சொல்லி அவர்களைச் சரிப்படுத்தி விடுவான். இவன் இப்படியெல்லாம் வேலை செய்தாலும், அவள் துர்க்கிருத்தியங்களைக் கவனிக்காமலிருந்தாலும் இவனிடம் சிறிது தவறு நேர்ந்தசமயத்தில் முத்துக்கருப்பி அகப்பட்டதை யெடுத்துக்கொண்டு இவனைப் போடுபோடென்று போட்டு விடுவாள். சிலசமயம் சந்தோஷ முண்டாய் 'என் புருஷனைப் போலுண்டா!" என்று அவள், இவனை ஸ்தோத்திரிப்பது முண்டு. சுப்பையத்தேவன் குடும்பவியல் முழுதும் நாம் எடுத்துக் கூறவேண்டுமாயின் அதுவே ஒரு புத்தகமாய் முடியுமாதலின் இம்மட்டோடு அதை நிறுத்தி எடுத்துக் கொண்ட கதைக்கு வேண்டியவேறு விஷயத்தை எழுதத் தொடங்குவாம்:—

மேற்கூறிய சுப்பையத்தேவன் வருவாய்க்கு மேல் செலவிடத்தக்கவனாயினும், முத்துக்கருப்பியின் பிடிவாதத்தால் சிறிதுபொருளை மீதிப்படுத்தி மதுரைக்குத் தெற்கே சமீபத்திலுள்ள வில்லாபுரத்து வயலில் ஒருமா நிலமும், புறம்போக்கில் ஐந்து குருக்கம் புன்செய் நிலமும், ஒரு ஏர்க் காளைமாடுகளும், ஒருபசுவும் வாங்கியிருந்தான். விவசாயம் நடத்துவதற்காக 'பனையன்' என்ற ஒரு பண்ணைக் காரப்பறையனையும் நியமித்திருந்தான். இந்தச் சுப்பனுக்கு நெடுநாள் பிள்ளையில்லாதிருந்து பின் இவன் பெருந் தவஞ்

செய்து பல தலயாத்திரை நடந்து, அநேகம் தேவதா பூஜைகளை யியற்றிக் குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கோடங்கியிடத்தில் குறிகேட்டு, அரசமரத்துச் சோதிடர், ஆலமரத்துச் சோதிடர், நடுத்தெருச் சோதிடர், குட்டிச்சுவர்ச்சோதிடர், பாழ்மண்டபச் சோதிடர் ஆகியவர்களிடத்தில் மிகுந்த பணச் செலவின்பேரில் தன் கிரகநிலைகளைப் பரிசோதித்துப் பார்த்து, முத்துக்கருப்பிக்குப் பிடித்திருந்த பதினாறுபேய்களை ஓட்ட, பட்டணத்து மந்திர மூர்த்திகளை வரவழைத்துக் கழிப்புக் கழித்து, பல தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் சேர்த்து, இன்னும் பலவித பெரு முயற்சியாலும், பணச்செலவாலும் வருந்திப் பெற்றெடுத்த ஒரு ஆண் குழந்தையுமுண்டு. இது தன்னுருவ மில்லாமல் பக்கத்துவீட்டுப் பரசுராமன் உருவமா யிருந்தது. எனினும் டபேதாரவர்களுக்கு இக்குழந்தைமீது அதிகப்பற்றுண்டு. தாம் செய்யாத சிறப்பெல்லாம் செய்து பெற்ற குழந்தை மீது சுப்பையடபேதாருக்கு விருப்பமிருந்தது ஆச்சரியமல்லவே. "கடந்துள்ளோர்களும் மறப்பரோ மக்கண்மேற் காதல்."

இந்தச் சுப்பையத்தேவன் பிள்ளை, மனைவி ஆகியவர்களிடத்தில் எவ்வளவு பற்றுவைத்திருந்தாலும் அதனால் மெய்சோர்ந்து விடாமல் அரண்மனை உத்தியோகத்தை மட்டும் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துவந்தான். வேலைக்குப்போக ஏற்பட்ட நேரம் அரண்மனைக்குப் போவதில் தவறவேமாட்டான். "எல்லாச் சிறப்பும் உத்தியோகத்தினாற்றான் ஏற்படுகிறது" என்பதை இவன் நன்றாயுணர்ந்திருந்தான்; இவன் வீட்டிற்குள் என்ன ஒழுங்கீனமா யிருந்தாலும் அரண்மனை வாசலில்மாத்திரம் அதிகாரம் செலுத்துவதில் பின்வாங்கமாட்டான்; இவன், டவாலியெடுத்து மாட்டி அங்கேபோய் நின்றவுடன், பைத்தியக்காரனுக்கு இரவில் பித்தம் அதிகப்பட்டுப் பகலில் நடந்தவற்றைக்காட்டிலும் மிக விநோதமான

செய்கைகளை யுண்டாக்குவது போல, கெர்வமானது இவனிடத்தில் அதிகரித்து ஒழுங்கீனமான செய்கைகளையெல்லாம் உண்டாக்கி விடும்; அந்த இடத்தில்மட்டும் பகைவர், நேயர் ஆகிய எல்லோரும் இவனுக்கு ஒரே தன்மையர்தாம்; தனக்கு ஒருவர் நேயரா யிருந்தாலும் இவன் அவரிடத்திலும் கடுகடுப்பாகவே பேசுவான். முடிவாகக் கூறுமிடத்து இவன் அரண்மனை வாசலில் கெர்வத்தால் பைத்தியம் பிடித்தவனைப் போன்றிருப்பான். (இவன் இவ்வாறிருந்தது ஆச்சரியமன்று; இப்பொழுதும் புத்தியின்மையால் உத்தியோக கெர்வம் பிடித்தவர்களுள் இவனைப்போன்ற சிலரைக் காணலாம்; இவர்க ளெல்லோரும் தங்கள் தங்கள் ஜென்மம் "இவ்வித நிலைமையிலிருக்கிறது" என்பதை யுணராதவர்களே யாவர்.)

3-வது அத்தியாயம்.

சுப்பையனுக்கும் விகடக் குருசாமிக்கும் விவாதம்.

இந்தச் சுப்பையத்தேவன், மேலே கூறிவந்தபடி உலகத்தார் நிந்திக்க நியாயவழியினின்றுந் தவறி ஏழையெளியவர்களுக்குத் துன்பஞ்செய்து கொள்ளையடிப்பதுபோல பிறர்பொருளை யபகரித்து அரண்மனைச் சேவகருள் தலைமை உத்தியோகம்பெற்றுச் சந்தோஷத்தோடு வாழ்ந்து வருங் காலத்தில், தீபாவளிதினத்தன்று உதயத்தில் ஸ்நானஞ் செய்து போசனமுண்டு கோடிவஸ்திரமுடுத்தி உத்தியோக உடைகளைத் தரித்து மிகுந்த அலங்காரத்தோடு, "இன்று விசேஷ நாளாயிற்றே; அரண்மனை வாசலில் கூட்டம் அதிகமாயிருக்கும்; என் சட்டைப்பையில் துட்டு நிறையும் நாள் இதுதானே; நான் தாமதிக்கக்கூடாது; பிந்தினால் என் வரும்படி போய்விடும்! சீக்கிரம் தாம்பூலம் கொடு, நான்

போகவேண்டும்" என்று மிகுந்த அவசரமாய் மனைவியிடம் வெற்றிலைபாக்கை வாங்கி வீதியில் நடந்து, செல்லும் பொழுதே பாக்கை வாயிலிட்டு வெற்றிலையை மடித்து மடித்துப் போட்டுக்கொண்டு ஒய்யாரமாய்ப்போய் அரண்மனை வாயிலில் நின்று உலாவிக் கொண்டிருந்தான்.

அன்று தீபாவளிப் பண்டிகையா யிருந்தபடியால் நாயுடவர்களிடத்தில் கோடிவஸ்திர முதலியவற்றைச் சன்மானமாகப் பெறுவதற்கு வேதியர், வித்வான்கள், சோதிடர், மாந்திரீகர், சங்கீத வித்வான்கள், பாகசாஸ்திரக் காரர்கள், தாசிகள், நட்டுவர், பலவிதமான வாத்தியக்காரர்கள், ஜாலவித்தைக்காரர்கள், அகசியக்காரர், நாடகக்காரர், கத்திவீச்சுக்காரர்கள், குஸ்திசெய்யும் பயில்வான்கள், சரியான படிப்பில்லா விட்டாலும் வாயடியால் வித்வான்களென்று நடித்துத் தமக்கேற்ற பாமரப் பிரபுக்களையும் ஜனங்களையும் ஏமாற்றி நல்லோர் நிந்தித்தற் கேதுவாகிப் பூமிக்குச் சுமையெனத் திரியும் போலிப்புலவ சிகாமணிகள் ஆகியவர்களும், அற்ப காரியத்தையும் நிறைவேற்றும் தத்துவம் தங்களிடத்தி லில்லா விட்டாலும் மகா மதிவல்லவர் போன்று வாயால் நடித்துப் பேதையர்களிடத்தில் மந்திரிஸ்தானம் பெறும் தந்திரக்காரர்களும், தேகசிரமமின்றிச் சம்பாத்தியம்செய்து சாப்பிடும் சமஸ்தானப்புரட்டர்களும், கும்பகோணத்துப் பேர்வழிகளும், சிவகெங்கை எத்தர் மதுரை எத்தர் தஞ்சாவூர் எத்தர் சென்னப்பட்டணத்துத் திறமான எத்தர் மலையாளத்து எத்தர் ஆகியவர்களும், சுருக்குப்பைப் புளுகர், வண்டிப்புளுகர், அண்டப் புளுகர், ஆகிய ஜெகஜாலப் புளுகர்களும், தனவான்களின் மனம் போற்பேசிப் பொருள்கவரும் பேராசைக்காரரும், சிற்பிகளும், சித்திரவேலைக் காரர்களும், தாய்ப்பொன்னிலும் மாப்பொன்தட்டும் தட்டார்களும், உடைதைப்பதற்காக ஷாரார்

வாங்கி யாதொரு ஆதாரவுமின்றிக் கொடுக்கும் துணிகளை வாங்கி 'இதுதான் சமயம்' என்று சுருட்டிக்கொண்டு ஓட்டம் பிடித்துக் கொடுத்தோரைக் கதறவிடும் தையற்காரர்களும், இன்னும் பலவிதமான தொழிலாளிகளும் திரள் திரளாய் வந்து கோட்டைவாசலிற் கூடியிருந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் பிரபு அவர்களைக் காணுவதற்காக இரண்டிரண்டு எலுமிச்சம் பழங்களும், ஒவ்வொரு ரோஜாமலர் ஹாரமும் இருந்தன. இவர்களோடு, பொருள்பறிப்பதற்காகவே பிரபு அவர்களிடம் ஹிதமாகப் பேசி மெத்த விசுவாசிகள் போன்று நேயங்கொண்டு அவர்களோடு சமமாகிய அந்தஸ்தைப் பெற்றுப் பிரியாம லுடன் றிரியும் சுயகாரியப் புலிகளாகிய பொய்க்நட்புக்காரர் சிலரும் வந்திருந்தார்கள். இன்னும் தாங்கள் 'வித்வான்' என்று சொல்வதற்குத் தகுதியற்றிருந்தும், தங்கள் சாமார்த்தியத்துக்காகப் பிரபுக்கள் பரிசளித்ததுபோல தங்கத்தோடா, தங்கமெடல் ஆகியவைகளைச் சொந்தப்பணம் போட்டுச் செய்து அவற்றில் பிரபுக்கள்பெயரைத்தீட்டி, "இதைப் போட்டுக்கொள்வதற்கு மட்டும் அனுமதி கொடுத்தால் எங்களுக்கு வெளியே நல்ல பிழைப்புக் கிடைக்கும்; ஜனங்கள் மயங்கி வேண்டுவன கொடுப்பதற்கும் ஏதுவாகும்; ஆதலால் ஏழைகள்மீது கிருபைசெய்து, இது தங்கள் அந்தஸ்துக்குத் தகாத காரியமாயினும் இதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்" என்று கும்பிட்டுக் கூத்தாடி அவர்கள் மனதைக் கரைத்து அவர்களிடம் அனுமதிபெற்றுப் போட்டுக் கொண்டு உலகத்தை ஏமாற்றித் திரியும் பொய்த்தோடா மெடல்காரர்களும், தமக்கு ஒரு வாக்கியத்தைத் தப்பில்லாமல் எழுதத் தெரியாதிருந்தாலும் நடுத்தெருப் புலவர்களிடத்தில் கூலி கொடுப்பதாகச் சொல்லி அவர்களைக்கொண்டு சிரிப்புக்கிடமாகும் புத்தகங்களை எழுதுவித்து அதன் தலைப்பில் சிறிதும் வெட்கமின்றித் தம்பெயரைச் சூட்

டிப் பெருமையடையும் நூலாசிரியர்களும், தாம் பிரபுக்களின் அனுமதி பெருமலே சில பிரயோசனமற்ற புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் பலவிதமான தந்திரங்களால், அந்தப் பிரபு அவர்களின் சமஸ்தான வித்வான் என்று தங்கள் பெயரைப் போட்டுக்கொண்டு வித்வத்தன்மை சிறிது மில்லாதிருந்தாலும் மகா வித்வான்கள் போன்று அகங்காரம் கொண்டு பலமுறை பழகினவர்களைக்கண்டாலும் வாய்பேசாமல் ஆகாயத்தைப் பார்த்தபடியே அறிவுள்ளவர் வெறுக்கத் திரியும் தடபுடல் கவிராயர்களும், தாம் சிறிது படித்த மாத்திரத்திலேயே பலருக்குப் பாடம்சொல்லும் குருவாகி, வீண்கெர்வங்கொண்டு தம்மோடு பழகின சாதுக்கள் தம்மைக் கண்டவுடன், 'இவர்கள் முதலில் நமக்குக் காங் கூப்பினுல் மாத்திரம் நாமும் இரண்டாவது இவர்களைக் கும்பிடவேண்டும்; இவர்கள் முதலிற் பேசினுல் மாத்திரம் நாம் இரண்டாவது பேசவேண்டும்; இவ்வாறின்றி நாமே இவ்விஷயங்களில் முந்தினுல் நம்முடைய மதிப்புக்குக் குறைவாகும் " என்று கருதி நல்லோருட னுறவாடாமல், நற்சத்தின்றி வெற்றுடம்போடு திரியும் விருத்தர்களும், தம்மிடத்து நிறைந்த படிப்பில்லாதிருந்தாலும் படித்த விவேகிகளைக் கண்டபோதெல்லாம், நூற்பொருள் தெரிந்தவர்கள் போன்று நடித்து அவர்களோடு வாய்க்கு வந்ததையெல்லாம் உளறித் தருக்கமாடி அவர்கட்கு மனவருத்தத்தை யுண்டாக்கியும், பெரியோரைக் காணுதவிடத்தில் நிந்தித்துத் தமக்குக் கீழ்ப்பட்டவராகப் பிரஸ்தாபித்தும், மகாசாதுக்கள் போன்று தலையையெல்லாம் நரையாக்கி நடித்துப் பாமரரை மயக்கி அவர் மதியிற் புலவர்பட்டம்பெற்றுத் திரியும் புலவர்களும், தாம்பிறரோடு பேசினுல் தம் பெருமை குறையுமென்று பேசாமல் திரியும் சில பேதைகளும், பிரபு அவர்களை ஏமாற்றி வஸ்திரம் வாங்க ஒரு பக்கத்தில் வந்து நின்றூர்கள். அக்காலத்தில்

அங்கு வருவோர் எத்தகையராயிருந்தாலும் நாயுடவர்கள் மிகத் தருமகுணசீலரானபடியால் அவரைக் கடிவதில்லை.

அங்கே மேற்கண்டபடி யாசகத்திற்கு வந்தவர்கள் பேசிக்கொள்ளும் சந்தடியும், கீதவாத்தியங்களின் இசையும், பறையர்களால் முழக்கப்பட்ட பறையின் முழக்கமும், கழைக்கூத்தர் முதலிய தாழ்ந்த வேடிக்கைக்காரர்கள் தங்கள் தங்கள் தொழில்களை நடத்திக் காட்டும் பேரிரைச்சலும், அரசிறையாக நெய், பால், தயிர், மோர், காய்கறிகள், கோழி, ஆடு, பலவகைத் தானியம், விறகு ஆகியவற்றைக் கொண்டு வந்திருந்த குடிகளின் உரத்த சப்தமும், தங்கள் தங்கள் தொழிலுக்குரிய சாமான்களைக் கொண்டுவந்தவர்களும், கிராமங்களுக் கின்றியமையாதவர்களுமாகிய ஒன்பது தொழிலாளிகளுடைய ஆர்ப்பரிப்பும், இருந்த விடத்திலேயே உலகத்தவரை ஏமாற்றிக் கைப்பொருளைப் பறித்து வாயிற்போடும் பகற்கொள்ளைக்காரராகிய சிலஜவுளிக் கடைக்காரர்கள், "சம்ஸ்தானத்தில் சொன்ன விலைக்குத் துணிகளைக்கொடுத்துத் துட்டுப்பறித்துத் தீபாவளிப் பெருங் கொள்ளை யடிக்கலாம்" என்று கருதி, சுப்பையன் முதலிய சேவகர்களுக்குக் கைக்கூலிகொடுத்து அவர்களைச் சமாதானப்படுத்தி, வாசலிற்கூடி நிற்கும் ஜனங்களை 'தள்ளு தள்ளு' என்று அடித்து விலக்கி வியாபாரத்துக்கு ஜவுளி மூட்டைகளைக் கொண்டு செல்லும் பெருந்தொனியும், சேவகர், அங்கே வந்தவர்களை அடித்து அங்குமிங்கும் ஓடும்படி அதட்டித் தூத்தும் கனைப்பும், மேககர்ஜனை, கடன் முழக்கம் ஆகியவற்றிற்கும் மேற்பட்டிருந்தன. சுப்பையத்தேவன் மீசையை முறுக்கிக்கொண்டு வீறுப்புடன் அதட்டி மனிதர்களைப் பயமுறுத்தும் ஓசையானது எல்லாவற்றினு மேற்பட்டிருந்தது.

இவ்வாறு கூட்டம் அதிகமாகவே சேவகர்கள் பாடு மிகவும் முழக்கமாயிருந்தது; அங்கு டபேதாராகிய சுப்பை யத்தேவன் கட்டளைப்படியே வந்தவர்களிடத்தில் எல்லா அதிகாரங்களும் நடந்தேறின; சேவகர்கள், "இப்பொழுது மகாராஜா அவர்களுக்கு ஸ்நானவேளை; ஆதலினால் ஒருவரும் உள்ளே செல்லுதல் கூடாது; இங்கே நின்று வழியை மறைக்கவேண்டாம்; செல்லுங்கள்! செல்லுங்கள்!!" என்று சொல்லி ஜனங்களை * ஆட்டுத்தோல், மான்தோல், கொம்பு ஆகியவற்றால் அடித்தும், கைகளினாற் குத்தியும், பிடரியிற் கைபோட்டுத் தள்ளியும் தாத்தி, ஒருவரும் சமீபத்தில் நெருங்காதபடி சிங்கங்களைப் போன்று அங்கு மிங்கும் உலாவினார்கள்; சக்கரம்போன்று சுழன்றார்கள்; அநுமானைப் போன்று தாவினார்கள்; பீமனைப்போன்று எதிர் நின்றவர்களை மோதினார்கள்; தங்கள் சிப்பாய்த்தனங்களைக் குறைவு படாமற் காட்டினார்கள். இவர்கள் செய்த உபத்திரவத்தால் யாசகர், ஐந்தாறு புலிகளால் பாயப்பட்ட செம்மறியாட்டுக் கூட்டம்போலவும், பல ராஜாளிகளால் மோதப்பட்ட பக்ஷிக் கூட்டங்கள் போலவும் மருண்டோடி அரண்மனைக்கு வெளியே ஓரிடத்தில் "இந்தச் சண்டாளச்சேவகர் துன்பத்திற்கு என்ன செய்யலாம்? 'இடுவார் பிச்சையைக் கெடுவார் கெடுப்பது' போன்று இவர்கள் வழியில் நின்று நம்மைத் தடுக்கின்றார்களே; இவர்களுக்கு நாம் ஏதேனும் சில்லறைத் துட்டு வைத்தழுதாலாவது இவர்கள் நம்மை விடமாட்டார்களா; அப்படியாவது நாம் கொடுத்துப் பார்ப்போமா" என்று யோசித்துக்கொண்டு நின்றார்கள்.

இந்தச் சேவகர்கள் செய்த முடுக்கும் துடுக்கும் அந்தத் துட்டுப் பிடுங்குவதற்காகத்தான். இதே போன்ற

---

* திருப்பதிக் கோவிலிலுள்ள சேவகரும் இவ்விதமே மனிதரை அடிக்கிறார்கள்.

நியாய விரோதமான செய்கைகளை இப்பொழுதும் பலவிடங்களில் சந்தேகமறக் காணலாம். இந்த வழக்கம் பெரும் பான்மையும் இந்துக்களிடத்திற்றான் அதிகரித்திருக்கின்றது.

இதுநிற்க; மேற்கூறியபடி மருண்டோடிய ஜனங்கள், "நாம் துட்டுக்கொடுத்தால் சேவகர்கள் நம்மை விட்டுவிடுவார்கள்" என்று அவர்களுடைய முகக்குறிப்பால் தீர்மானித்துக் கொண்டார்கள். அதைப் பரிசோதிப்பதற்காக ஒரு மனிதன் மிருதுவாய்ப்போய்ச் சுப்பையத் தேவனிடத்தில் ஒரு பணத்தை இரகசியமாகக் கொடுத்து, 'தயவு செய்யவேண்டும்; நான் நெடுநேரமாகக் காத்திருக்கின்றேன்' என்றான். துட்டுக் கையில் வந்தவுடனே டபேதாரவர்கள் சிறிது முகமலர்ச்சியோடு 'சரி சரி! நீ சீக்கிரம் போய்த் திரும்பிவிடு' என்று அவனுக்கு உட்புக உத்தரவு கொடுத்தார்கள். அந்த மனிதன் உட்சென்றவுடன் மற்ற கூட்டத்தாரெல்லோரும் நாமும் துட்டுக் கொடுத்தால் இவர்கள் நம்மையும் போகவிடுவார்கள் என்பதையும், இதற்காகவே இவர்கள் தடுத்திருக்கிறார்களென்பதையும் தெரிந்து கொண்டார்கள். அப்படி யறிந்ததும், எல்லோரும் ஒருவர் பின் ஒருவராகத் தங்கள் தங்களுக்கு இயன்ற அளவு சேவகர்களுக்கு இலஞ்சப்பணம் கொடுத்து உள்ளே செல்லத் தொடங்கி விட்டார்கள். டபேதார் சுப்பையத் தேவனுக்கும், மற்ற சேவகருக்கும் நல்ல அதிர்ஷ்டம் திரும்பி விட்டது; கோபக்குறி அதிகரித்திருந்த அவர்கள் முகத்தில் சந்தோஷக்குறி பிரகாசித்தது; அவர்கள், புன்முறுவலோடு இரண்டு கைகளினாலும் யாசகரிடத்தில் பணத்தை வாங்கி வாங்கிச் சட்டைப்பைகளில் நிறைத்தார்கள். சிறிது நேரத்திற்குள் அங்கே நின்றவர்களெல்லோரும் உள்ளே போய் விட்டார்கள்; சேவகருக்கும் பைகளில் துட்டுக்கள் நிறைந்

துவிட்டன. சுப்பையத்தேவன் துட்டுவாங்கும் விஷயத்தில் மிகுந்த சுறு சுறுப்புக்காரனுதலால் தன் சட்டைப்பையில் துட்டை நிறைத்து மேலும் இடமில்லாமல் மடியிலும், தலைப்பாகையிலும் நிரப்பிக்கொண்டான். மற்ற சேவகர்க ளெல்லோரும் தமக்கு வந்த வரும்படியில் பாதி பாதி பங் கிட்டு டபேதாராகிய சுப்பையனுக்கு வழக்கபடியே கொடுத்து விட்டார்கள். அவற்றையெல்லாம் அவன் வாங்கி ஒரு துண்டில் முடிப்புக்கட்டி மறைவான விடத்தில் பதுக்கி வைத்துக் கொண்டான். அவனுடைய வரும்படியில் மாத் திரம் ஒருவருக்கும் பங்கில்லையாதலால் அன்று சம்பாத்தியத் தில் மற்றையரினும் அவன் மேற்பட்டிருந்தான். இவ்வளவு கொள்ளை கிடைத்தும் சேவகரெல்லோருக்கும் திருப்தி யுண்டாகவில்லை. சுப்பையத்தேவன் முதலாகிய ஒவ்வொரு வரும், "இதென்ன வரும்படி! இன்றைக்கு ஜனக்கூட்டமே யில்லை; போனவருஷம் தீபாவளிக்கு வந்த வரும்படியில் காற்பங்குகூட இன்றைக்கு வரவில்லையே; சென்ற வருஷத் துச் சங்காந்தி வரும்படியே வரும்படி; இதெல்லாம் அதற் கீடாகுமா?" என்று பழங்கதை பேசத்தொடங்கினுர்கள். அப்போது வந்திருந்த கூட்டத்தில் சில கையழுத்தக்கார ஆசாமிகள் மாத்திரம், "தருமப்பிரபு அவர்களைப் போய்ப் பார்ப்பதற்காக இந்தச் சேவகத் தடியருக்கு இழவுக்கு மெர்ய்யெழுதினதுபோல ஏன் பணம் கொடுக்க வேண்டும்? எப்படியாவது இவர்களோடு சண்டையிட்டுக் காசு கொடா மல் உள்ளே செல்வதுதான் சரி; இதென்ன நியாய மில்லா மல் படிக்காத முட்டாள்களாகிய சேவகப் பயல்கள் வைத்த சட்டமாயிருக்கிறது; என்னவந்தாலும் நாம் இன்று ஒருகை பார்த்துத்தான் விடவேண்டும்; நாயுடவர்களிடம் தெரி வித்து இவர்களுடைய கொடுஞ்செய்கையை ஒடுக்க வேண் டும்; இப்படி விட்டுவிடுவது சரியன்று; கவனியாதிருந்தால்

இவ்வழக்கமானது எப்பொழுதும் அதிகரித்துவிடும்” என்று பேசிச் சேவகரோடு சண்டை தொடுப்பதற்கு ஆயத்தமாயிருந்தார்கள்.

பின்பு எல்லோரும் ஒன்று சேர்ந்து, சேகவரை இலட்சியஞ் செய்யாமல், ‘மடமட’ வென்று கோட்டைக்குள்ளே பிரவேசித்தார்கள். அதைப் பார்த்தவுடன் சுப்பையத் தேவனுக்கு அடங்காக் கோபமும், ஆச்சரியமும் உண்டாயின; அவன் அப்பொழுதே எழுந்து, “படேபடே ஆசாமிகளும், வித்வான்களும், நாயுடவர்களுக்கு மிக்க சிநேகிதர்களுமே நமக்குச்சேரவேண்டிய வாசற் கட்டளையைக் கொடுத்து நம்மைச் சமாதானப் படுத்திக்கொண்டு உட்பிரவேசித்திருக்க, இந்தப் பஞ்சைப் பயல்கள் மாத்திரம் நம்மைச் சிறிதும் மதியாமல் செல்கின்றார்களே! இவர்களுக்கு என்ன தைரியம்! என்ன வீரம்! இவர்களெல்லோரும் அரண்மனைக்குச் சகாயம்பண்ண வருகின்றவர்களில்லையே; இங்கிருந்து எதையேனும் பிடுங்கிக் கொண்டுபோக வரும் யாசகக்காரப் பயல்கள்தாமே; இவர்களுக்கு இவ்வளவு இறுமாப்பா? நாம் இவர்களை ஏன் சும்மா விடவேண்டும்? பகற்கொள்ளையடிக்கப்போகிற இந்தப் பஞ்சைப்பயல்கள் நமக்கேதேனும் கொடுத்துச்சென்றால் இவர்களுக்கு என்னகுறைவு நேரும்? முன்னே சென்றவர்களைக் காட்டினும் இவர்களென்ன கொம்பு முளைத்தவர்களா? சீசீ; இந்தக்கழுதைகள் காரியம் இங்கே செல்லுமா? இப்பொழுது இவர்கள் சண்டமாருதக் காற்றிலகப்பட்ட பஞ்சைப் போன்று பறக்க நான் இவர்களை அடிக்கிறேன்” என்று மிகுந்த கோபங்கொண்டெழுந்து மற்ற சேவகரை உற்று நோக்கி ‘என்ன நீங்கள் பேசாமலிருக்கின்றீர்கள்!’ என்று சொல்லிவிட்டுத் தன் கையிலிருந்த பிரம்பினால் நாய்களை அடித்துத் துரத்துவது போல அவர்களை அடித்துத் துரத்தினான். அந்தச் சுப்பைய

னென்னும் தலைவன் குறிப்புணர்ந்த மற்ற சேவகரும், அவர்கள் 'மனிதப்பிறவிகள்' என்னும் எண்ணமேயில்லாமல் அவர்களைப் பலங்கொண் டடித்தார்கள். அடிகள் அதிகப்படவே மிக்க தைரியத்தோடு 'என்னவந்தாலும் நாம் ஒருகை பார்ப்போம்' என்று சென்ற அந்த யாசகர் கட்டுக்குலைந்து தைரியம் கெட்டு, "அப்பா! இப்படி இவர்களிடம் அடிபட்டுக் கொண்டு உள்ளே சென்று தானம் வாங்குவதைக் காட்டிலும் வீட்டுக்கு வீணே திரும்பி விடுவது மேலாகும்; எப்படி யிருந்தாலும், யாசகராகிய நம்முடைய முடுக்கெல்லாம் அரண்மனைச் சேவகரிடத்தில் செல்லுமா? அவர்களுள் டபேதார் சுப்பையத் தேவன் மிகப்பொல்லாதவனன்றோ" என்று மருண்டோடி முன்னிருந்த விடத்தில் கூடி நின்று மீண்டும் என்னசெய்யலாமென்று யோசிக்கலாயினர்கள்.

அப்போது அக்கூட்டத்தாருள் நின்ற விவேகியொருவர் மற்றவர்களைப் பார்த்து, "சிநேகிதர்களே! நாம் இதற்கு முன் செய்த வேலை மிகவும் மூடத்தன்மையானது; சமஸ்தானம் அல்லது அதிகாரஸ்தானத்திலிருக்கும் கீழான வேலைக்காரர்கள் எந்தவிடத்திற் போய்ப் பார்த்தாலும் இதேதன்மை யுடையவர்களாய்த்தா னிருப்பார்கள்; ஏதோ கடவுள் அவர்களுக்கு இவ்விதமான கெட்ட புத்தியைக் கொடுத்திருக்கிறார்; ஆனால் இவர்கள் செய்யும் தீமை வீண்போகாது; இப்போது இவர்கள் சந்தோஷத்தை யடைந்தாலும் பின் உடுத்தும் ஆடையும் உண்ணும் உணவுமின்றிக் குடித்தனங்கெட்டு வறிஞராய்ப் பிச்சை வாங்கியுண்டு கஷ்டப்படுவார்கள். இது சத்தியம். இப்பொழுது நாம் அவ்விதம் கஷ்டப்படுபவர்களுள் எத்தனையோ பேர்களை நேராகக் காண்கிறோம்; எப்படி யிருந்தாலும் நாம் யாசகத்துக்காகப் போகின்றவர்கள்தாமே; அப்படி யிருக்க ஏன் இவர்களோடு பகை கொள்ளவேண்டும்; அரண்மனைக்

குச் சாதகம் செய்யும் பொருட்டாகப் போகின்றவர்களிடத்திலேயே இவர்கள் துட்டுவாங்கும் ஆசாமிகள்; நம்மை இலகுவில் விடுவார்களா; இவர்களுக்கு மற்றையர் பணம்கொடுப்பது நியாயமற்ற விஷயமாயிருந்தாலும் இதற்காக இவர்களை இங்கே கண்டிப்பவர்யாவர்? இவர்கள் இவ்விடத்தில் என்ன செய்தாலும் அது செல்லுமே; நாம் இதை, கனம் நாயுடவர்களிடத்தில் தெரிவித்துத்தானே இவர்களை அவர்கள் கண்டிக்கும்படி செய்யவேண்டும்; இவர்களுடைய அனுமதியின்றி நாம் எப்படி அவர்களைப்பார்த்தல் முடியும்? நாம் எந்த வழியில் நுழைந்தாலும் இவர்கள் நம்மைத்தடுத்து அவர்களை நாம் பார்க்காமலிருக்கும்படி செய்துவிடுவார்களே; நாம் மீறி இவர்களோடு கலகப்படுத்திக்கொண்டு அடியும் பிடியுமாய் நாயுடவர்கள் சமுகத்திற் செல்லலா மென்றால் அவ்வாறு செல்வதற்கு எவ்வளவோ காலதாமதமாய்விடும்; அதனால் நாம் குறிப்பிட்டு வந்தகாரியம் ஒன்றும் நிறைவேறாது; அந்தக் காரியம் கெட்டாலும், நாம் வீட்டு வேலைகளையெல்லாம் விட்டு இந்த விசாரணைக்காகப் பலநாள் அங்குமிங்கும் அலையவேண்டும்; நாம் இவர்களுக்குக் கொடுக்கும் ஒருபணம் செலவாகிறதை நிறுத்தப் பார்த்தால் அதில் இவ்வளவு சங்கடமிருக்கிறது; இதையறிந்துதான் முன்வந்தவர்கள், கடிக்கும் நாய்க்கு எலும்பெறிந்தமாதிரி இவர்களுக்குத் துட்டை வீசி யெறிந்துவிட்டு உள்ளே சென்றார்கள். நாம் எதற்காக வீண்கலகம் செய்யவேண்டும். பேசாமல் இவர்களுக்குத் துட்டைக் கொடுத்துவிட்டு உள்ளே செல்வோம்; பிடிவாதம் செய்வோமானல் நமக்குத்தான் வரும்படி கெடும்” என்று சமஸ்தான வேலைக்காரரின் இயல்பை எடுத்து விளக்கமாகக் கூறினர். இதைக்கேட்டு எல்லோரும் “ஐயா சொல்வது சரியான காரியந்தான்” என்று அவர் வார்த்தைகளை ஒப்புக்கொண்டார்கள்; உடனே சென்று

சேவகருக்குத் துட்டைக் கொடுத்தார்கள். அவர்களும் கோபம் நீங்கிச் சமாதானமாகி இவர்களுக்கு உட்செல்ல அநுமதி கொடுத்தார்கள்; இவர்கள் உள்ளே பிரவேசித்து விட்டார்கள். (இதேவழக்கம் இப்பொழுதும் பல விடங்களில் நடக்கக் காணலாம்; அவ்விஷயங்களெல்லாம் நீங்கி நன்மைவளர்வதற்கே இக்கதையில் இவ்விஷயங்கள் எடுத்தெழுதப் படுகின்றன).

அதன்மேல் தஞ்சாவூரிலிருந்து வந்து மதுரையில் குடியேறிய அகஸ்யக்காரக் குருசாமி என்பவன், "இன்றைக்குத் தீபாவளியாயிற்றே; நாம் அரண்மனைக்குச் சென்று அகஸ்யம் செய்தால் நாயுடவர்களிடம் ஒரு வஸ்திரமாவது கிடைக்குமே; செலவுக்கும் சிறிது பணம் அகப்படுமே; இவற்றை நாம் ஏன் விடவேண்டும்; சீக்கிரம் சென்று வாங்கி வரலாம்; இப்பொழுது அதிக நேரமாய் விட்டபடியால் நமக்கு அங்கே வரும்படி கிடைக்குமோ கிடைக்காதோ; எதற்கும் நாம் போய்ப்பார்ப்போம்" என்று அவசரப்பட்டுத் தலைவிரி கோலமாய் ஓடோடியும் வந்து கோட்டை வாசலில் உள்ளே நுழைந்தான். அப்பொழுது டபேதார் சுப்பையத் தேவன் அவனைத் தடுத்து "ஓய்! ஓய்!! யார்வோய் அங்கே அவசரமாய்ப் போகிறவர்? நில்லும்." என்றான்.

குருசாமி:-என்ன அண்ணே சுப்பையா! குருசாமி யில்லோ; தெரியலையா?

சுப்:—குருசாமியுந் தெரியாது கிருசாமியுந் தெரியாது; வெளியேபோ.

குரு:—என்ன அண்ணே! இப்படிப் பேசுறியே; எத்தனையோ தபா நான் அரண்மனையிலே விகடஞ் செய்தேனே, நீ பாக்கலே?

சுப்:—வயித்துப் பிழைப்புக்கு நெதம் எத்தனை பயலோ

இங்கே வந்து போறுன்; அவனை யெல்லாம் நினைச்சுக் கிட்டா இருக்கிறேன்.

குரு:—என்ன அண்ணே! வீட்டிலேகூட நான் ஒருநா கண்டு பேசலே?

சுப்:—இங்கே வாறபசங்க எல்லோரும் இப்படித்தான் சொல்றது வாடிக்கே.

குரு:—நான் அப்படி இல்லே அண்ணே! தெரிஞ்சிருந்தும் இப்படிச் சொல்றியே.

சுப்:—தெரிஞ்சாலும் சரி தெரியாட்டாலுஞ் சரி; வெளியே போன்னு போயேன்.

குரு:—என்ன அண்ணே! டபேதார் வேலைக்கு வந்தா கண் கூடவா தெரியாமெ போயுடும்?

சுப்:—போன்னுப்போ; அதிகமாகப் பேசாதே.

குரு:—ஆனு, உள்ளே போகப்படாதோ?

சுப்:—ஆமா! ஆமா!

குரு:—ஏன்?

சுப்:—அப்படித்தான்.

குரு:—தடுக்கிறதுக்கு என்ன காரணம் அண்ணே! அதை யாவது சொல்லப்படாதா.

சுப்:—வாறவனுக்கெல்லாம் விபரஞ் சொல்லத்தான் இங்கே இருக்கிறமோ; சீ! போன்னுப்போ; எனக்குக் கோபம் வந்தா கெட்டதாயிருக்கும்.

குரு:—என்ன அண்ணே! தீவாளிக்கு அரமனையிலே எதா கிலும் துணி மணி வாங்கிக் கிட்டுப் போகலாமின்னு வந்தாக்க இப்படித் தடுக்கிறியே.

சுப்:—நீ வாங்கினு எங்களுக்கென்ன?

குரு:—அண்ணே! உங்களுக்கு ஒண்ணுமில்லே; இருந்தா லும் இப்ப மத்தபேரெல்லாம் போகலயா? என்னே மட்டும் ஏன் தடுக்குறே?

சுப்:—மத்தபேரெல்லாம் போனது போலே போனு நீயும் போகலாம்? அப்பத்தடையேது?

குரு:—மத்தபேரெல்லாம் எப்படிப் போனுங்கோ? அதை யாவது சொல்லு அண்ணே! நானும் அப்படிப் போறேன்.

சுப்:—அது என்ன தெரியாதா? நீயே யோசித்துப்பாரே.

குரு:—எனக்கு ஒண்ணும் பிடிபடலே அண்ணே! காசு கீசு உங்களுக்குக் குடுத்துப் போனுங்களா?

சுப்:—அது தெரிஞ்சது தானே; அப்புறம் ஏன் என்னைக் கேக்கிறே.

குரு:—ஆமா அண்ணே! குருசாமி கூடவா காசு குடுக்கனும்?

சுப்:—ஒங்கோ தாத்தா கூட.

குரு:—என் சங்கதி ஒனக்குத் தெரியுமா தெரியாதா?

சுப்:—தெரியுந் தெரியும்; ஊரூராத் திரிஞ்சு வாயடிச்சிக் காசு வாங்கிறது நீதானே?

குரு:—அந்தவழக்கம் ஒனக்குத்தான் அண்ணே; என்னைச் சொல்லாதே; நாக்கு அழுகப்போறது.

சுப்.—ஏய்! பேச்சு ரொம்ப மேலே போகவேண்டாம்.

குரு:—பின்னே என்ன ? பையப்பைய அடிமிடாவிலே கையை வைக்கிறியே.

சுப்:—நான் என்ன களவாணிப் பயலா? மிடா கிடா இன்னு பேசுறியே, அந்த மட்டிலே அடக்கு.

குரு:—மிடா இன்னு சொல்லுறதிலுங் கிடா இன்னு சொல்லுறது ஒனக்குச் சந்தோஷம் போலே யிருக்கு.

சுப்:—அடே! ஒன்னுடைய வெகடப் பேச்செல்லாம் பேச வேண்டாம்.

குரு:—போடாபோ; ஒன்னுடைய கில்லாடிப் பேச்சே இங்கே காட்டாதே.

சுப்:—என்னடா கழுதே! அடா புடா இன்னு பேசுறியே! வாயிலே கொழுப்பேறி யிருக்குதோ.

குரு:—ஆமடா நாயே! நீ முந்திப் பேசின பிறகுதான் நானும் பேசுறேன்.

சுப்:—அட காமாட்டிக் கழுதே! காசு குடுத்து உள்ளே போக முடிஞ்சாப்போ; இல்லாட்டா வெளியேறு; இங்கே என்னத்துக்கு வாயடி யடிக்கிறே மாடே!

குரு:—அட நாயினுங் கேடுகெட்ட நாயே! ஒனக்கா குரு சாமி காசு குடுப்பேன்; ஒனக்குக் குடுக்கிற காசை சாக் கடையிலே போடுறது மேலாச்சே.

சுப்:—இல்லையின்னு கழுதை நீ உள்ளே போறதைப்பாக் கிறேன்.

குரு:—அடே காமாட்டிப் படுவாமகனே! கழுதைகிழுதை இன்னு பேசாதே; பல்லெல்லாங் கீழே உதுந்து போகும்.

சுப்:—அடே மடையா! நீயா பல்லை உதுக்கிறவன்! ஜாஸ்திபேசாதே; அரமனே டபேதார் இன்னு கொஞ் சங் கூட நீ மதிக்கலே! அதிகமாப் பேசினு வாயைக் கிழிச்சிடுவேன்.

குரு:—நல்லது! நல்லது!! ஒன் டபேதார் வேலையையும், ஒன்னேயும், ஒன் குடித்தனத்தையும் ஒருகைபாக்கி றேன்; குருசாமிக்கு விரோதம் பண்ணியா நீ உருப்பிடி யாகப் போறே; ஒரு பக்கத்தில் வைச்சிரிக்கிறேன்; இரு! இரு!!

இவ்வாறு முடிவாகப் பேசியவுடன் விகடக் குருசாமி அரண்மனைக்குச் செல்லாமல் மிகுந்தகோபங்கொண்டு, "இந்தக் கொள்ளைக்காரப் பாவியை எவ்வித உபாயத்தாலா வது இன்னும் சில நாட்களில் நான் கெடுக்கிறேன்" என்று சபதங் கூறிப் போய் விட்டான்.

இந்தக் குருசாமி யென்பவன் விகடத்தில் மிகவுந் தேர்ச்சி பெற்றவன்; எத்தகைய விசன முடையவர்களையும் ஒருநிமிஷ நேரத்தில் சிரிக்கும்படி செய்துவிடுவான்; 'சிரிக்காமலிருக்கிறேம்' என்று ஆயிரம் இரண்டாயிரம் ரூபா பந்தயங் கட்டிக்கொண்டு வந்தவர்களை யெல்லாம் சிரிப்புண்டாக்குதலினால் ஜெயித்திருக்கிறான்; பல சம்ஸ்தானங்களிலும் சென்று தங்கமெடல், தோடா ஆகிய பரிசுகளைப் பெற்றவன்; எப்பேர்ப்பட்ட மூர்க்கரையும் அரைநிமிஷ நேரத்தில் சிநேகிதராக்கிக் கொள்வான்; இவனுக்கு எவ்விடத்தும் பகையென்பதே கிடையாது; இவன் எங்குச் சென்றாலும் ஒருவரும் இவனைத் தடுக்கமாட்டார்கள்; கடின காவல்களிலெல்லாம் இவன் தட்டின்றி உள்ளே செல்வது வழக்கம்; எந்தக்காரியத்தையும் முடிக்காமல் விடமாட்டான்; சபதஞ் சொன்னால் அதை நிறைவேற்றாமலிரான்; தன் மனம்போல் நடக்காதவர்கள் எவ்வித அந்தஸ்திலுள்ளவர்களாயினும் அவர்களையும் சிறிது நேரத்துக்குள் அவமானப் படுத்தி விடுவான்; பணத்தை இவன் எவரிடத்தும் வாங்குவது வழக்கமே தவிரப் பிறருக்குக் கொடுப்பதில்லை; இவன் விகடக்காரனென்பதை யுத்தேசித்து எல்லோரும் இவனுக்குப் பயந்து வேண்டுவனசெய்து இவனைச் சந்தோஷப் படுத்துவார்கள்; இவனுக்கு இவ்வளவு சாமார்த்தியங்களெல்லாம் இருந்தும் சுப்பையத் தேவனிடத்தில் இவன் காரியம் ஒன்றும் பலிக்கவில்லை; அவன் உத்தியோகக் கெருவம் பிடித்தவனும், காசாசைகொண்ட பேயனும், முழுமூடனுமானபடியால் மேற்கண்டவாறு இவன் உள்ளே செல்ல இவனிடத்தில் காசு கேட்டுப் பகைகொண்டான். அவனுக்குக் கெடுங்காலம் சமீபித்ததினாலேயே இப்பகை நேர்ந்தது. பேராசைக் காரரெல்லாம் இப்படியேதான் விவேகமற்றிருப்பார்கள்.

இவைநிற்க, மேற்கண்டவாறு சபதங் கூறிச் சென்ற குருசாமி சுப்பையத் தேவனைக் கெடுக்கும் உபாயத்தைத் தேடுதற்கு அப்பொழுதே உருமாறி வேற்றூர்க்குச்சென்று விட்டான். இவன் கல்யாணஞ்செய்யாமல் பிர்மச்சாரியா யிருந்தான். அதனால் எந்த இடத்துக்கும் நினைத்தபோது செல்வதற்கும், உத்தேசித்த காரியங்களை முடிப்பதற்கும் இவனுக்குச் சௌகரியமாயிருந்தது. சுப்பையத்தேவனுக்கும் விகடக் குருசாமிக்கும் நெடுநாட் பழக்கமாயிருந்தும் சுப்பையனுடைய சேவகத் தொழிலுக்கு ஏற்பட்ட காசாசையானது இவ்வாறு அவன் மேற்கண்ட குருசாமியைத் தடுத்து அவனுடைய சிநேகத்தையும் எதிர்பாராமல் அவனைத் தூரத்தும்படி செய்து விட்டது. இதை வாசிக்கும் நண்பர்களே! அதிகார ஸ்தானங்களிலுள்ள அற்ப வேலைக்காரரின் உறவு எவர்க்கும் எப்பொழுதும் பிரயோசனப்படாதென்பதை இதன் மூலம் தெரிந்து கொள்வீர்களாக. நாடகக்காரர், சங்கீதக்காரர், வாத்தியக்காரர், ஜாலவித்தைக்காரர், நடிப்பு வித்வான்கள், தாசிகள், சோதிடர், மாந்திரீகர், வைத்தியர், பூசாரிகள் ஆகிய இவர்கள் உறவும் இதுபோன்றதுதான். இவர்களுடைய உறவும் காசளவிற்றான் நிற்கும். இவர்களுள் மிகமயக்கமுள்ள நாடகக்காரர் முதலிய சில வகுப்பாரோடு நேயங்கொண்டு கைப்பொருளிழந்து வறிஞராய்க் கெட்டோர் பலர். ஆகலின், மனிதர், "சேரிட மறிந்துசேர்" என்னுந் திருவாக்கைப் பெரிய மந்திரமாக மனத்துட்கொண்டு அதன்படியே நல்லினத்தை ஆராய்ந்து நேசிப்பது எம்மையு மின்பந்தரும். இங்கே சுப்பையத்தேவன் நடத்திய கொடுமைக்குத் தக்கபடி தாங்கவொண்ணாத துக்கத்தையடைந்துகெட்டது பின்னேவிளங்கும்.

4-வது அத்தியாயம்.

சுப்பையன் புலவர்வசைக் காளாதல்.

இவைநிற்க, முன்கூறியபடி, விகடக் குருசாமி சபதமிட்டுச் சென்ற சிறிது நேரத்துக்குப்பின், அரண்மனைக்குட் சென்று நாயுடவர்களைக் காணும் பொருட்டு, வெள்ளைத் தலைப்பாகை துலங்கும் சிரசும், பீதாம்பரம் பிரகாசிக்கும் மார்பும், பட்டுக்கரை வேஷ்டிகட்டிய இடையும் உடைய ஓர் விருத்தர்வந்தார். இவர் மடியில் ஓர் கூரிய எழுத்தாணியும், கையில் எழுதப்படாத சில ஓலை ஏடுகளும் இருந்தன. ஒருகெஜ நீளமுள்ள நான்கு நாடாக்களை வாயில் வைத்துத் தைத்துச் சுருக்கிட்ட வெற்றிலை பாக்குப் பையொன்று இடதுபக்கத்துத் தோளில் தூங்கிக்கொண்டிருந்தது. இவர் முகத்தில் குறு வியர்வை வெளிப்பட்டுக்கொண் டிருந்தது. இவர் வாய்நிறையத் தாம்பூலத்தை அடக்கி மென்றுகொண் டிருந்தார். கனவான்களே! 'இவர்யாரோ' என்று சந்தேகப் படவேண்டாம். இவர்தாம் பழையகாலத்துத் தமிழ் வித்வான். இவரைப் போன்றவர்களைத் தாம் இப்போது இரண்டொரு வசனமான கதைகளைப் படித்துவிட்டு, 'புது நாகரீகக்கல்வி கற்றோம்' என்று இறுமாந்து திரியும் புலவசிகாமணிகள், கருநாடகத்துப் புலவரென்றும், நாகரீகந் தெரியாதவர்களென்றும், புளுகுகிறவர்க ளென்றும் சொல்லி, அவர்கள் படிப்பு ஒன்றுக்கு முதவாத தென்றும் பேசுவார்கள். மேற்கண்ட வார்த்தைக ளெல்லாம் இவர்கள் பக்கம் சாருமேயன்றி அவர்கள் பக்கம் ஒருசிறிதும் சாரமாட்டா. இவர்கள் நினைக்கிறபடி அவர்கள் அநாகரீக முடையவர்களல்லர்; அக்காலத்தவ ரெல்லோரும் மகாமேதாவிகள்; மிகவும் புத்தியுடையவர்கள்; மனவடக்கத்திற் சிறந்தவர்கள்; சத்தியந் தவறாதவர்கள்; வாக்குப் பலிக்குந் தன்மை யுடையவர்கள்; அவர்களாற் செய்யப்பட்டு இன்றும் உலகப் பிரயோசன

மாக நிலவிவரும் பெருமையுடைய பல சாஸ்திரங்களே அன்னோருடைய உயர்தகவைவிளக்கும் உத்தமக்கருவிகளா யிருக்கின்றன. அவர்கள் மனத்தில் உத்தேசித்துப் பாடிய படி அநேககாரியங்கள் நடந்திருக்கின்றன. அவற்றை நிச்சயப் படுத்துவதற்கான பலகுறிகள் இன்று மிருக்கின்றன. இவ்வாறு அவர்களுக்கு வாக்குப் பலித்ததற்குக் காரணம்-மனவொடுக்கமும், தூய் தன்மையுமேயாம். இப்போது பலருக்கு வாக்குப் பலிப்பதில்லை. இதற்குக் காரணம்—மனத்தூய்மை யின்மையே. இப்பொழுதும் அருள் வாக்குடையார் தென்னாட்டுட் சிலருண்டு. இவர்களிடத்து முன் நடந்த அவ்வளவு பெருமையில்லாவிடினும் குறைந்த அளவாவது இருக்கக் காணலாம். இதற்கும் நம்பிக்கையும், கவிகளின் விருப்பமுமே காரணம். இக்காலத்திற் சிலர் தங்களுக்கு வாக்குப் பலிக்காததைக் கொண்டே அக்காலத்தி லுள்ளவர்களுக்கும் வாக்குப் பலித்திராதென்றும்,சரித்திரங்களிற் கூறியிருப்பன வெல்லாம் கட்டுக்கதைக ளென்றும் வாய்கூசாமற் கூறிவருகின்றனர். இது ஆராய்ச்சியுடைய விவேகிகள் வெறுக்கத்தக்க வார்த்தை யென்பது புத்திமான்களுக்குச் சொல்லாமலே விளங்கும். மற்றையர் எவ்வாறு கருதினுங் கருதுக. அவர் துணிபு நமக்குத் தேவையில்லை.

இங்கே நாயுடவர்களின் அரண்மனைவாசலில் வந்ததாகச் சொன்ன புலவரோ மகாசாது; மனத்தூய்மை யுள்ளவர்; அடக்கத்தில் ஆமைபோன்றவர்; விரைவிற் கவிபாடுந்திறமுடையவர்; நல்லகற்பனையோடு கவிசொல்வதில் முதன்மை பெற்றவர்; எந்தப் புராணங்களையும் நன்றாய்ப் பிரசங்கிக்கக் கூடியவர்; மெய்யான அவதானஞ் செய்யத்தக்கவர்; பல சம்ஸ்தானங்களில் தம்முடைய வித்வத் தன்மையைக் காட்டிச் சத்தியமான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்றவர்; மிகுந்த

தெய்வ பக்தியுடையவர்; ஜீவதயையுள்ளவர்; இப்போதிருக்கும் சிலரைப்போல உருட்டுப் புரட்டில்லாதவர்; கற்றதற்கேற்ற நல்லொழுக்க நடையுடையார்; வசைபாடுவதில் காளமேகப்புலவருக்கு மேற்பட்டவர்; இவர் எதைச் சொன்னாலும் வெகுசீக்கிரத்தில் இவருடைய வாக்கின்படியே காரிய சித்தியாகும். இவர், பாண்டியர்களுக்கு ஆதியிற்சொந்தமாயிருந்த கொற்கைநகரில் வேளாள வகுப்பிற் பிறந்தவர்; இவர்பெயர் வசைகவி மாணிக்கப்புலவர்; இவருக்கு வாக்குப் பலித்ததை யுத்தேசித்து இப்பெயர் ஏற்பட்டது. இவர் பெயரைக்கேட்டால் பாண்டியநாடு முழுவதும் நடுங்கும். இவருக்கு எல்லாச் சிறப்பு மிருந்தும், பூர்வீக வழக்கப்படியே 'வித்வான்க ளிடத்தில், "நாவின்கிழத்தி யுறைதலாற் சாராளே பூவின்கிழத்தி புலந்து" என்று சொல்லும் பெரியோர் வாக்கின்படி இலக்குமிமட்டும் அருள்செய்யாதொழிந்தனள்; ஈகையற்ற கருமிகளிடத்தும் கூசாமற் குடியேறும் அவளுக்கு மகா உத்தமராகிய இந்தவித்வசிகாமணியிடத்தில் குடிபுகுதற்கு இஷ்டமில்லாமற் போயிற்று; ஊரிலுள்ள தரித்திரங்களெல்லாம், "இவர் மகாசாதுவா யிருப்பதினால் எப்பொழுதும் நம்மைக் கடிந்து துரத்தமாட்டார்; அடாவடிக் காரரிடத்தில் நாம் போனால் அவர்கள் உருட்டுப் புரட்டுச்செய்து நம்மை ஒரு நிமிஷமும் வைக்காமல் துரத்திவிடுவார்கள்; இந்தப் புண்ணியவான் அவ்வளவு தடபுடல் செய்யமாட்டாராகையால் எப்பொழுதும் நாம் சிவனேயென்று இவரைவிட்டசையாமற் கிடக்கலாம்" என்று உறுதிகொண்டு இவர்பால் வந்து குடியேறிவிட்டன. இதனால் இவரடைந்த துன்பத்திற்கு அளவேயில்லை. இவருடைய குடும்பமோ மிகவும் பெரிய குடும்பம்; அதற்கு ஒருவேளைச் சாப்பாட்டுக்குத் தேடுதல் இவருக்குப் பகீரதப் பிரயத்தனமாய் முடியும். இவ்வித நிலைமையில் தீபா

வளியொன்று வந்து சேர்ந்தபடியால் செலவுக்கு ஒன்று மில்லை யென்று இவர் குடலெல்லாம் தீப்பற்றி யெரிந்தது; அதனால் இவர் "இன்று விசேஷ நாளாயிற்றே; வீட்டில் பலகார பக்ஷணங்கள் செய்யப்பட வேண்டுமே; மனைவிக்குச் சேலையொன்று அவசியப்படுமே; குழந்தைகளுக்கு வஸ்திரங்கள் வேண்டுமே; இவற்றிற் கெல்லாம் பொருள்தானே பிரதானமா யிருக்கின்றது; அஃது நமக்கு எங்கேகிடைக்கும்? நான் அதற்காக எவரிடத்திற் சென்று பல்லைக்காட்டுவேன்; இது கலிகால மாதலினால் எங்கும் எவரிடத்தும் ஈகை குறைந்திருக்கின்றதே; நான் என்னசெய்வேன் கடவுளே!" என்று விசனித்துக் கொண்டிருந்தார்; முன்னொருசமயம் திருமலை நாயுடு அவர்கள் நல்ல கொடையாளி யென்றும், வித்வான்களை ஆதரிக்கிறார்களென்றும் அவர் கேள்விப் பட்டிருந்தார். அஃது அப்போது அவருடைய ஞாபகத்திற்கு வந்தது. அதன்மேற்றான் அவர் சந்தோஷமாய் முதல்நாளே புறப்பட்டு அவசரமாக நடந்து நாயுடவர்களிடம் தீபாவளிச் செலவிற்குப் பணம் வாங்குதற்கு மேற்கூறியபடி சுப்பையத்தேவன் காத்து நிற்கும் அரண்மனை வாசலில் வந்து சேர்ந்தார்.

இந்த வசைகவி மாணிக்கப்புலவர், கோட்டை வாசலில் சென்றவுடனே, "நாம் மீனாக்ஷி மனமகிழ்ந் துறைவதாகிய மதுரை ஸ்தலத்தை ஸ்பரிசித்த விசேஷத்தால் நம்முடைய தரித்திரமெல்லாம் தீருவதிற் றடையில்லை; அதினும் நாயுடவர்கள் நல்ல விவேகி யென்று நாம் கேள்விப் பட்டிருக்கின்றோம். தமிழ்ச் சுவையறியுந் தன்மையில்லாததால் 'கவிபாடுவது வீண்வேலை' என்றுசொல்லும் பாமரரைப் போல் பாட்டை வெறுக்காமல் கற்பனையுள்ள கவிகளைக் கேட்பதில் இவர் மிக்க விருப்பமுடையவரென்று பலர் சொல்லி யிருக்கின்றனர்; ஆதலின் இவர் நம்முடைய கவி

யில் ஆசைப்படாமலிரார்; அதனைக்கேட்டு நமக்குத் தக்க படி சன்மானஞ்செய்வார்; நாமும் சிறிது நிதானித்து நல்ல கற்பனையோடு அழகாகிய ஐந்தாறு பாடல்களைப் பாடிக் கொண்டு அவரிடம் போகவேண்டும்; இன்று இன்னும் பல வித்வான்கள் வந்திருப்பார்களாதலால் அவர்களெல்லோ ரும் கேட்டவுடன் கவிசொல்லாமல் வாயை மூடிக் கொள்ளத் தக்கவைகளாய் நம்கவிகளிருக்கவேண்டும்; நானென்ன நூலின்றன்மையை உணராமல், கையில் ஒன் றிரண்டு கொடுப்பதற்கும், இடம்பத்திற்கும் சாற்றுக் கவியெழுதிக் கொடுக்கும் அழுத்தமற்ற ஆசாமிகளைப் போன்றவனு? மாணிக்கம் எதிலும் அழுத்தக் கார னன்றே; ஒருகை பார்க்கிறேன்; என் கவித்திறத்தைக் காட்டுகிறேன்" என்று மடியிலிருந்த எழுத்தாணியை யெடுத்துக் கையிலுள்ள வெள்ளேட்டில், குமரக் கடவுளை வணங்கி நாயுடவர்கள்மீது பொருத்தம் முதலியன பார்த்து அரசப் பொருத்தத்தில் தொடங்கி ஐந்து கவிகளை யெழுதி முடித்தார். இவர் நினைத்தபோது பாட்டுக்களை எழுதாமற் பாடும் ஆசுகவித்திறம் பெற்றோராயினும் "பிரபுவிடம் பொருள் அதிகமாகப் பெறவேண்டும்" என்று கருதியபடி யால் அவ்வாறு கலவரமில்லாமலிருந்து அவற்றை எழுதிக் கொண்டார். பாட்டெழுதி முடிந்தவுடனே ஓலையைச் சுருட்டி எழுத்தாணியையும், அதையும் மடியில் வைத்துக் கொண்டு முகமலர்ச்சியோடு டபேதார் சுப்பையத் தேவ னைச் சிறிதும் கவனியாமல் அரண்மனைக்குள்ளே பிரவேசித் தார்.

சிறிது நேரத்துக்கு முன் குருசாமி வாய்ச் சண்டையிட் டுத் தன்னைத் தூஷணையாகப் பேசிப் போனபடியாலும், அந் தச் சமயத்தில் கூட்டமில்லாமையால் தனக்கு வரும்படி யொன்றும் வராதிருந்ததனுலும் சுப்பையத்தேவன் மனங்

கொதித்துத் திரிந்தானாதலின், வசைகவி மாணிக்கப்புலவர் உள்ளேசெல்வதைப் பார்த்தவுடன், தனதுமூடமதிக்கேற்ப அவருடைய தன்மையையுணராமல், அவசரப்பட்டுப்போய் அவருக்கு எதிரே நின்று, "ஓய்கிழச்சவமே! உனக்குத் தலை நரைத்துப்போய் விட்டபடியால் புத்தியும் வெளுத்துப் போய் விட்டதோ; இத்தனை சேவகர் இவ்வாயிலைக் காத்து நிற்கும்போது நீ எவரையும் மதியாமல் தடதடவென்று உள்ளே போகின்றாயே; அரண்மனைக்குள் தாராளமாகப் போவதற்கு உனக்கு எப்படித் தைரியம் ஏற்பட்டது! நீ சமஸ்தானங்களிற்பழகியிருந்தாலல்லவா, 'இங்கேபோகலாம் போகக்கூடாது' என்பதை ஆராய்ந்து செல்வாய்; சிறு கிராமங்களிலுள்ள பெரிய குடித்தனக்காரரிடத்தில் கெஞ்சிப் பிச்சை வாங்கும் உனக்கு இராசாங்க சட்டத்தின் தன்மை யெப்படித் தெரியும்; இஃதென்ன சந்தைக்கடைக் கேட்டென்று பார்த்தயா, அல்லது எவரும் தடையில்லாமற் செல்லும் தாசி வீடென்று நினைத்தனையா? மதிகெட்ட மாடே! இங்கே போகக்கூடா தென்பது உனக்குத் தெரியாதா; சிறுபிள்ளைகளுக்குக்கூடத் தெரியுமே; உனக்குத் தெரியாமற் போனது மிகுந்த ஆச்சரியமே! நீ கள்ளுக் குடித்திருக்கின்றாயோ, அல்லது கஞ்சாப்புகை பிடித்தாயோ; குட்டிச்சுவரே! காரியந்தெரியாத கழுதை! நல்லது கெட்டது பகுத்தறியாத நாயே! சீசீ! வெளியே போ; போ!!" என்று கண்விழிகளில் இரத்தந்தெறிக்க, அவர் மனம் அளவற்றுக் கொதிக்க, அவரிடம் தப்பிதமொன்றுமில்லாதிருந்தும் துட்டுப் பிடுங்குவதற்காகக் குடிமுழுகிப் போனதுபோல எல்லை கடந்து நிந்தனைபேசி அவரைத் தூரத்தினன். (இத்தகைய சேவகர் மனிதர்மீது தவறு ஒன்றும் நேராதிருந்தாலும் தங்கள் காரியம் கைகூடக் கருதி ஆரம்பத்திலேயே எவ்வகைக் கௌரவமுடையவர்களையும்

மதியாமல் கொலைக்குற்றம் செய்தவர்களைப்போல பாவித்து வாய்க்கு வந்தபடி திட்டுவதையும், அடிப்பதையும் இப்பொழுதும் சென்னைக் கஞ்சித்தொட்டி ஆஸ்பத்திரிக்கேட் முதலிய பல விடங்களிற் காணலாம். இவர்களைக் கடவுளே கவனிக்க வேண்டும்.)

சுப்பையத்தேவன் தொடக்கத்திலேயே மடத்தனமாய் வாய்க்கு வந்தபடி திட்டவே, மாணிக்கப் புலவருக்கு அதிக ஆச்சரியமுங் கோபமுமுண்டாயின. அவர், "இஃதென்ன! தருமப்பிரபு சமஸ்தானத்தில் இப்படி அக்கிரமம் நடக்கிறது; இந்தக் கடுங்காவலையும், கனைத்த பேச்சையும் நாம் எங்கும் கண்டதில்லையே; பாதிநாள்வரை பசிநீங்காத ஏழையாயிருந்து, வீடுகள் தோறும் நுழைந்து பிச்சையெடுத்துண்டு பின்பு தெய்வசங்கல்பத்தால் நூதனமாகப் பிரபுத்துவம் பெற்றவர்களுடைய வாசலிலன்றோ இவ்வாறு விவஸ்தையற்ற செய்கை நடக்கும்; இந்தக் 'காவலானது, எவரும் தடையின்றி மேலேறிக் கனிபறித்துண்ணுதற்கமைந்த தீங்கனியுள்ள மாந்தருவினடியிற் சர்ப்பங்கிடந்து சீறுவதுபோன் றிருக்கின்றதே; பல ஏழைகளும் செல்வதற்கிடமாகிய அரண்மனை வாசலில் இந்தக் கடுங்காவலாகுமா? இந்தச் சேவகரெல்லோரும் உள்ளே செல்லத்தகாத அயோக்கியரைத் தடுப்பதற்கும், வேறு சில வேலைகட்கும் நியமிக்கப்பட்டிருப்பார்களேயொழிய நம்மைப் போன்றவர்களைத் தடுப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்; இவ்வாறு எல்லோரையும் தடுக்கும்படி அரண்மனையில் உத்தரவும் பிறந்திருக்காது; இஃது, இவர்கள் வருகிறவர்களிடம் துட்டுப் பிடுங்குவதற்காகச் செய்கிற வேலையாயிருக்கலாகும்; இங்கே இவர்கள் எவ்வித சத்துமின்றி இடம்பப் பெயர் வைத்துப் பெரிய வித்வான்களைப் போன்று நடித்து வீண்கெர்வம் பிடித்துத் தலை நரைத்தும் சற்குண மில்லா

மற்றிரியும் சண்டாளர்களை யன்றோ தடுக்கவேண்டும்; இவர்கள் அத்தகைய மடையர்களிடத்தில் பணத்தை வாங்கிக் கொண்டு அவர்களையெல்லாம் தடையேதுமின்றி உள்ளே விட்டிருப்பார்களே; அப்படியிருக்க இவன், மெய்ப் புலவனாகிய வசைகவி மாணிக்கத்தைத் தடுக்கலாமா? தடுத்ததோடு விடாமல் துடுக்கான வார்த்தைகளையும் பேசிவிட்டானே; இவனுக்கென்ன தைரியம்! என்ன படபடப்பு! என்ன மூர்க்கத்தனம்! தமிழ்நாட்டில் நம்முடைய பெய்ரைக்கேட்டால் எவரும் நடுங்குவார்களே! இவன்மட்டும் நம்மைக்கண்டு ப்யப்படாமல் பேசிய காரணம் யாதோ தெரியவில்லையே! ஒருசமயம் நம்முடைய பிரஸ்தாபம் இவனுக்குத் தெரியாமலிருக்கலாம்; அல்லது நம்மிடம் இவன் இரண்டு மூன்று திருப்பாட்டுக்கள் வாங்கிக் கொள்ளவும், இவன் அடியோடு கெட்டொழியவும் நாள் சமீபித்து விட்டிருக்கலாம்; இப்பொழுது நாம் மனங்கொதித்து இவன்மீது வசைமொழி சொன்னால் இவன் அழிந்து போவதிற் றடையில்லை; ஆயினும் நாம் அவசரப்பட லாகாது; இவனுடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்வோம்; இரண்டொரு வார்த்தை இவனிடத்தில் விட்டுப் பார்ப்போம்" என்று பல யோசனையோடு அவனைப் பார்த்து, "அப்பாசேவக சிகாமணியே! ஏன் இவ்வாறு நீ என்னை நிந்தித்துப் பேசுகிறாய்? இது பெரிய சம்ஸ்தானமாதலால் என்னைப் போன்ற வித்வான்கள் உட்செல்லத் தடையிராதென்று கருதி நான் உள்ளே பிரவேசித்து விட்டேன்; இதுதானா என்மீது பெரியதப்பிதம்! சகிக்கமுடியாத காரியத்தைச் செய்தவனைப்போல என்னை நினைத்து நீ நிந்தனை கூறுகின்றாயே; இங்கே நல்லவர்களும் வருவார்கள், கெட்டவர்களும் வருவார்கள்; நீறுபூத்த நெருப்பைப் போன்றும் சிலர் வருவார்கள்; இருவர்கள் வெளிக்கு இடம்பமாகத் தங்களைக் காட்ட

மாட்டார்கள்; மனதில் நினைத்த எதையும் செய்து முடிப்பார்கள்; ஒரு தத்துவமுமில்லாத வாயாடிகள் மிகுந்த இடம்பத்தோடு வெளிவருவார்கள்; அவர்கள் எதையும் செய்ய முடியாத பேடிகளாவர்; இவர்களை யெல்லாம் பெரிய சம்ஸ்தானத்திலிருக்கும் டபேதாராகிய நீ பகுத்தறிந்து "எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ" என்று யோசித்துப் பேசவேண்டும்; வேஷத்தினாலே ஒருவரைப் பெரியவரென்றும் சிறியவரென்றும் மதிக்கலாகாது; அப்படி மதிப்பது மதிகெட்ட மூடர்களுடைய செய்கை; குணத்தினாலும் செய்கையினாலுமே ஒருவன் தன்மையைப் பற்றி மதிக்க வேண்டும்; அறிவீனர்களே இடம்பத்தால் மயங்கிக் கெட்டழிவார்கள்; மற்றவர்க்கு அந்தவழக்கம் வராது; செந்தமிழ் வளரும் சீர்மதுரை வாசியாகிய நீயேன் அதை அனுசரிக்கின்றாய்; நான் உனக்கு மனிதனாய்த் தோன்றவில்லையோ; வசை கவிமாணிக்கத்தைத் தமிழ் நாட்டில் தெரியாதவர்களில்லையே; நீ தெரிந்து கொள்ளாமலிருந்தது ஆச்சரியம்! இப்போது நீ அறியாமற் பேசினதற்காக நான் மனஸ்தாபம் கொள்ளவில்லை; இப்பொழுது நீ என்னை வசைகவிமாணிக்க மென்று தெரிந்து கொண்டாய்; இனிமேலாவது என்னைத் தடை செய்யாமலிரு; நான் நெடுந்தூரத்திலிருந்து இங்கே வந்திருக்கின்றேன்; ஆனதால் நீ என்னைவிட்டுவிடு; நான் சீக்கிரம்போய் நாயுடவர்களைக் காணவேண்டும்" என்றுரைத்தார்.

மூடசிகாமணியாகிய சுப்பையத் தேவனுக்கு இந்தத் திருமந்திர மெல்லாம் ஏறுமா? அவன் அரண்மனை வாசலுக்குச் சென்றவுடன் எல்லோரையும் மிருகங்களென்றும், தான் ஒருவனே மனிதனென்றும் கருதுகின்றவனன்றோ? மாணிக்கப்புலவர்; அவன் கெட்டுப் பேவானென்றிரங்கி அவன்மேல் வசைபாடாமல் இதமாகச் சென்ன வார்த்தை

களெல்லாம் அவனிடத்தில் சண்டமாருதக் காற்றி லகப்பட்ட பஞ்சுபோலாயின; அவர், அவற்ருல் இதமாகு மென்று நினைக்கச் சுப்பையனுக்குக் கதமாகி முடிந்தது; ஆகவே சுப்பையத் தேவனுக்கு முன்னிலும் அதிகமாய்க் கண்கள் சிவந்துவிட்டன; மீசைகள் படபடவென்று துடித்தன; உடனே அவன், புலவரை அறைபவன் போன்று கையை ஓங்கிக்கொண்டு, "ஓய்மதிகெட்ட கிழட்டு மாடே! இங்கே ஏமாந்தவர்கள் ஒருவரு மில்லை; உன்னுடைய இந்திரஜாலமெல்லாம் இங்கே செல்லாது; உன்னைப் போன்று வசைகவி பாடுவேனென்று ஜனங்களை ஏமாற்றிப் பொருள் பறிக்கும் மோசக்காரப் பயல்களுள் பலரை நான் பார்த்திருக்கிறேன்; என்கையினுல் இத்தகைய அநேகர் அடிவாங்கியும் சென்றிருக்கின்ருர்கள்; அவர்களுடைய வசைகளெல்லாம் என்னை ஒன்றும் செய்யவில்லை; நீங்களெல்லோரும் பிழைக்க வழியில்லாத சோம்பேறிப் பயல்கள்; உங்களுக்குவேறுபிழைப்புக் கிடையாதா? இஃதென்ன மானங்கெட்ட பிழைப்பு; நீங்கள் மனிதர்களிடம் கவிபாடுகிருேமென்று பொய்யும் புளுகுமாக ஸ்தோத்திரஞ்செய்து இரண்டொரு பாடல்களை அவர்கள்மீது எழுதிப் படித்துவிட்டு, அவர்கள் கையிலிருந்து நூறு இருநூறு வாங்கிக் கொண்டு போய்த் தேகப்பிரசையின்றிச் செலவிட்டு விலாப் புடைக்க உணவுண்டு தசையை வளர்க்கின்றீர்களே; இப்படி நீங்கள் சும்மா காசுபறிப்பதிலும் உங்களுக்குப் பிறர் கொடுத்தவரையில் திருப்தியாவதில்லை; உங்களுக்கு ஒருவன் ஆயிரங் கொடுத்தாலும் நீங்கள் அதுவும் போதவில்லையென்று அவ்வாறு பணம் கொடுத்தவனை, "ஈகையில்லாத கன்னெஞ்சன்" என்று நிந்திப்பீர்கள்; உங்களுக்கு விசுவாசமேது? நீங்கள் இரக்கமற்ற கொடும்பாவிகளல்லவோ! மனிதருக் கேற்பட்டிருக்கும் சந்தர்ப்பாசந்தர்ப்பங்கூட உங்க

ளுக்குத் தெரியாதே; ஒரு வீட்டில் பிணம் செத்துக் கிடந் தாலும் அவ்வீட்டுக்காரனிடத்தில் "எனக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு மறுவேலை பாரு" என்று நீங்கள் சொல்லு கின்றவர்கள் தாமே; ஊரிலுள்ள பொய்யெல்லாம் உங் கள் நாவிற்றானே குடியிருக்கின்றது; உலகத்திலுள்ள வஞ்ச கத்துக்கெல்லாம் இருப்பிடம் உங்கள் நெஞ்சுதானே; பொறாமையே உங்களுக்குப் பூஷணமாயிற்றே; கோளல் லவோ உங்களுக்குக் குலதெய்வம்; புலவர் என்ற பெயரே எனக்குப் பிடிக்காதே; அவர்களுடைய மாறுபாட்டு நிலைமை யெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியுமே. தினம் இரண்டு மூன்று பேருக்குக் குறையாத புலவர்கள் இங்கே என் கையினால் அடிவாங்கிச் செல்கின்றார்களே; உன்னுடைய இதமானவார்த்தைகளுக்கு நான் இரங்கமாட்டேன்; வேறே யாராவது இவ்வளவு இதமான வார்த்தைகள் பேசினால் அவற்றிற்காக இரக்கமுற்று நான் எனக்குச் சேரவேண்டிய கேட்டுக்கூலியை அவர்களிடம் வாங்கிக் கொண்டாவது அவர்களை உள்ளே விட்டுவிடுவேன்; நீ புலவனென்று சொன்னபடியால் எனக்கு ரூபா ஆயிரங்கொடுத்தாலும் நான் உன்னை விடவேமாட்டேன். வசைகவி மாணிக்கம் கிணிக்கமெல்லாம் இங்கே தூள் தூளாகப் பறந்து போய் விடும்; நீ வேண்டுமானால் உன் வசைகவிபாடும் வேகத்தைக் காட்டு; நான் என் கைவேகத்தை உன் கன்னத்தில் காட்டு கிறேன்; எது முந்தி வேலை செய்கிறதென்று நாம் பார்க்க லாம்; சீ! சீ!! நாட்டுப்புறத்துக் கழுதை! இங்கே யாரை ஏமாற்ற வந்தாய்; போநாயேபோ" என்று போலிப்புலவர் சரித்திரங்களை யெல்லாம் விளக்கி இவரையும் அவர்களைப் போன்றவரென்று கருதி, இராமபாணம் போன்று மன தைத் துளைத்துக்கொண்டு போகும்படியான வார்த்தைக ளைப் பேசினான்.

இவர், 'வசைகவி மாணிக்கப்புலவர்' என்று தம்பெயரைக் கூறியும் சுப்பையத்தேவன் மெய்யான வித்துவானென்று இவரை மதிக்காது பொய்ப்புலவனென்று மதித்து இவ்வாறு நிந்தித்துப் பேசியதற்குக் காரணம்:—அக்காலத்தில் மேற்கண்ட செய்கைகளினும் மேற்பட்ட செய்கைகளையுடைய போலிப்புலவசிகாமணிகள் எங்குமிருந்து அயோக்கியமாகிய காரியங்களை நடத்திவந்ததும், 'போலி வித்வான்கள் பகற்கொள்ளைக் காரரானபடியால் அவர்களிடத்தில் எந்த விஷயத்திலும் கடிந்து பேசி அதிகத் துண்டுப் பிடுங்க வேண்டு' மென்று அந்தச் சுப்பையன் கருதியிருந்ததும், அங்குச் சமஸ்தான வித்வான்களில் சோரதவரும் படிப்பில்லாதவருமா யிருந்தும், "நான் சமஸ்தான வித்வான்களுள் தலைமை பெற்றவன்" என்று சொல்லிப் பாமரரை யேமாற்றிச் சேவகர் நேயம் பெற்றிருந்த பால்வண்ணப்புலவர், வித்வான்கள்மீது தமக்கேற்பட்டிருந்த பொறாமையால், அந்தச் சுப்பையனிடத்தில், 'தமிழ் வித்வான்கள் இங்கே வந்தால் நீ அவர்களை உள்ளே விடாதே' என்று கட்டளை செய்திருந்ததுமேயாம். இதனாலேயே சுப்பையன் வசைகவி மாணிக்கப் புலவருடைய தெய்வீகத் தன்மையையும், அவரை நிந்திப்பதால் தனக்குக் கெடுதிவருமென்பதையும் உணராமல் இவ்வாறு எல்லை கடந்து அவரை அவமதித்துப் பேசினான்.

வசைகவி மாணிக்கப் புலவர் என் செய்வார் பாவம்! அவருக்குண்டான கோபத்திற்கு அளவேயில்லை. எனினும் அவர் அதை அடக்கிக்கொண்டு, தமக்குண்டாயிருந்த கஷ்டதிசையினால் "நாம் அவசரப்பட்டு எதையும் செய்து விடக்கூடாது; இவனோ படிக்காத முட்டாள்; அறியாமையினால் இவற்றைப் பேசியிருந்தாலு மிருப்பான்; அறிந்தே பேசியிருந்தாலும் நாம் இன்னும் பக்குவமான சில வார்த்தைகளைப் பேசினால் விட்டுவிடுவான்; நாம் இவன்மீது

கோபங்கொண்டு வசை பாடிவிட்டு வீட்டிற்குத் திரும்பினல் நமக்குண்டாகி யிருக்கும் வறுமை நீங்குவதற்கு வழியில்லையே; எவ்விதத்திலும் நம்முடைய காரியந்தானே கெடும்; 'அடக்கமமரருளுய்க்கும்' ஆதலின் நாம் பொறுமையோடு காரியத்தை நடத்துவோம்" என்று கடியாமல் மீண்டும் அவனை நோக்கி, "அப்பா சேவகா! உலகத்தில் பல அயோக்கியர் புலவரென்று வெளியேறி இவ்வாறு மெய்யான புலவர்களுடைய நன்மதிப்பை யெல்லாம் கெடுத்துவிட்டார்கள்; ஆயினும் நீ மனிதரைப் பகுத்தறிந்து அவரவர் நிலைமைக்குத் தகப் பேசவேண்டும்; என்னை அவர்களைப் போன்றவனென்று நீ கருதாதே; நான் மெய்ப்புலவன்; என் வாக்குப் பலிக்கும்; நீ என்னைத் தடுத்து வீணுய்க் கெட்டுப் போகாதே! பாவம் என்னைவிட்டுவிடு" என்று அவனுக்குச் சற்றுப் பயமுண்டாகும்படியான வார்த்தைகளைக் கூறினர்.

அந்தோ! சுப்பையனுடைய கெட்டகாலத்தால் இந்த வார்த்தைகள் அவனுடைய செவியுட் புகு முன்னரே அவனுக்கு முன்னிலும் மும்மடங்கு அதிகமான கோபம் பொங்கிவிட்டது; உடனே அவன் படபடத்து, "அடே கிழட்டுத் தேவடியாள் மகனே! நெஞ்சங்கலங்காமல் நீ என்ன வார்த்தை சொன்னுய்; நீயா என்னை வசைபாடிக் கெடுக்கத்தக்கவன்? எங்கே நீ கெடுத்துவிடு நான் பார்க்கிறேன்! கெடுத்துவிடு பார்க்கிறேன்!!" என்று சொல்லிக்கொண்டே பற்களை நெறநெற வென்று கடித்துக்கொண்டு அவரைப்பிடித்து, அவர் முதுகில் ஒருகுத்துக்குத்திப் பிடரியிற் கைபோட்டுத் திடுதிடென வெளியே கொண்டு வந்து தள்ளிவிட்டான்; அச்சமயத்தில் மற்றசேவகரும் அங்கே ஓடி வந்து, புலவரைப் பார்த்து, "அடகிழட்டுப் பிணமே! நீ என் டபேதார் அண்ணனேடு தர்க்கமிட்டுக் கொண்டிருக்

றாய்; உன் பல்லெல்லாம் உதிர்ந்துவிடும்; நீ போகழுதை போ" என்று பரிகசித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இதற்கு மேலும் என்ன செய்வார் புலவர்? அவர் தட்டுண்டு தடுமாறி நெஞ்சுபடபடவென்று துடிக்க வெளியே வந்து நின்றார்; பொறுமையினால் பிரயோசனமில்லையென்று தெரிந்து கொண்டார்; உடனே அவருக்கு மெய்ம்மறந்த கோபமுண்டாய் விட்டது; அதனால் அவர், "இவன் குடும்பத்தை நான் அடியோடு தொலைத்து விடுகிறேன்" என்று அங்கே நின்ற சிலரிடத்தில் மிருதுவாய் அவன் பெயரை விசாரித்தறிந்து கொண்டு, மனசுத்தமுள்ள மெய்ப்புலவர்க்குத் துணைபுரியும் எனது வழிபடு கடவுளாகிய குமரனை மனதிற் றியானித்து, கண்மூடி அசைவற்ற நிலையையடைந்து பின்பு கண்விழித்துச் சுப்பையத் தேவன்மீது சரியான மாணப் பொருத்தம் பார்த்து அமங்கலச் செல்லில் ஆரம்பித்து,

"ஐயையோ வறுமையினா லவதியடைந்
திங்குவந்த வடியேன் றன்னைக்
கையினாற் பிடித்திழுத்துப் புடைத்துவசை
பேசிமிகக் கடிந்து தள்ளும்
பையனாஞ் சுப்பையனிப் பணியிழந்து
மனையிழந்து பாலன் சாக
மெய்யெலா நலிந்திறந்து சுடுகாடு
செலவருள்வாய் வேற்கை யோனே"

என்ற பாடலை நின்றபடியே அதிகவிரைவில் அளவிறந்த மனக் கொதிப்போடு பாடிவிட்டு, "நம்முடைய இந்த வாக்குப் பின்னே பலிப்பதாயிருந்தாலும் இப்பொழுது நாம் இங்கே தாமதித்து நின்றால் இந்தப்பாவி நம் எலும்பை நொறுக்கி விடுவான்; ஆதலினால் நாம் இவன் கையில் அகப்படாமல் தவறி ஓடிவிடவேண்டும்" என்று கருதி அரை

நிமிஷ நேரமும் அங்குத் தாமதிக்காமல் வந்ததிசையை நோக்கி ஓடினார். அவ்வாறு புலவர் வசை பாடினவுடனே சுப்பையத்தேவன் அதைக்கேட்டுக் கோபமீறி அவரைப் பிடித்து உதைக்க நினைத்தான். எனினும் அவர் பாட்டைச் சொன்னதும் அங்கே நில்லாமல் விழுந்தோடினது அவனுக்கு மிகுந்த சிரிப்பை யுண்டாக்கியபடியால் அவன் கோபந்தணிந்து மற்ற சேவகரைப் பார்த்துச் சிரித்து அவர்களிடத்தில், "கிழட்டுப் பயலுடைய மாதிரியைப் பார்த்தீர்களா? நான் அவனை எவ்வளவோ கடிந்துபேசியும் அவன் பயப்படாமல் 'வசைபாடுகிறேன்' என்று எதையோ உளறிவிட்டு, இங்கே நின்றால் தனக்கு உதை விழுமென்று கருதி ஓடுகின்றானே; இவனுக்கு இது என்ன பைத்தியம்! இவன்பாட்டு என்னை என்னசெய்யும்? எல்லாத் தத்துவமும் இவன் நாவிலா அடங்கி யிருக்கிறது? மனிதன் பாடுகிறபடி நடக்குமென்று கருதுவது மூடர்களுடைய செய்கையல்லவா" என்று இப்பொழுது சில அறிவிலிகள் தமிழ்க் கவிகளின் அருமையையும் மெய்ப்புலவர் பெருமையையும் தெரிந்துகொள்ளாமற் பேசுவது போன்று பேசிவிட்டு, இந்தப்பாட்டினால், தான் பின்பு அனுபவிக்கவிருக்கும் கேட்டை யுணராமல் திடசித்தங்கொண்டு சிங்கமென நின்றுலவினான்.

புலவர் வாக்குப் பலிக்குமென்பது இப்பொழுது சில மந்த மதியினர் சொல்வதுபோல பொய்யன்று; மெய்யே; இவ்வாறு புலவர் சொல்வது நிறைவேறுதற்கு முக்கிய காரணம்:—அவரின் மனவோர்மையேயாம். மனிதர் மனமானது மகா தெய்வீகம் பொருந்தியதென்றும், அதைச் சிதையவிடாமல் ஒன்றுபடுத்தி அசையாவண்ணம் ஓர் பெருங்காரியத்தில் செலுத்தினால் அது தானே ஒரு வடிவமாகிச்சென்று அக்காரியத்தை அதி இலகுவில் செய்து

முடிக்குமென்றும், அடங்கின மனதால் சாதிக்க முடியாத காரியம் உலகத்தில் ஒன்றுமே இல்லையென்றும் நம்முடைய முன்னோர்களின் உண்மை நூல்கள் கூறுகின்றன. அவைகளுக்கிணங்க இப்பொழுது அமெரிக்கர் முதலிய மேல்நாட்டுப் புத்திமான்கள் அந்த மனோதத்துவத்தைக் கண்டு பிடித்து அதனை விளக்கும் மெஸ்ம்மரிஸ்ம், ஹிப்னூடிஸ்ம் என்னும் பல அரிய சாஸ்திரங்களையும் இயற்றி அத் தத்துவத்தால் ஆச்சரியமான தொழில்களையும் நடத்தி வருகின்றார்கள். இங்ஙனம் மனவோர்மையால் பெருங் காரியங்களெல்லாம் நடக்கும்போது வாக்குப்பலிப்பது ஒரு ஆச்சரியமல்லவே. சில வித்வான்களுக்கு மனதை ஒன்றுபடுத்தும் தன்மை யேற்படா விட்டாலும், ஒருவன் தமக்குத் துன்பஞ் செய்கிறகாலத்தில் உண்டாகிற கோபத்தால் ஒரே சிந்தனை யேற்படுகிறது; அப்பொழுது அந்த மனத்திற்குத் தெய்வத்தன்மை யுண்டாகி விடுகிறது; அந்நிலையில் அவர்கள் என்ன சொன்னாலும் அது பலிக்கிறது; மனசுத்தமில்லாதவர்க்கு மட்டும் பலிப்பதில்லை. இந்த மனோதத்துவத்தைக் கொண்டுதான் பண்டைக் காலத்து வித்துவான்கள், கவிகளில் சொன்னபடி காரியங்கள் நடக்குமாறுசெய்து வந்தார்கள். ஆனால் அவர்கள் சொல்லியவற்றையெல்லாம் நடக்குமாறு செய்த மனவோர்மையைத் தெய்வ அருளென்று செல்வார்களேயொழிய மனத்தின் தன்மையென்று சொல்லமாட்டார்கள். 'மனது ஒன்றுபடத் தெய்வத் தன்மை யுண்டாகிறது' என்று மெஸ்மரிஸக்காரர் சொல்வதினால், புலவர்கள் தெய்வ கிருபையால் நாம்சொன்னது நடக்கிறது என்று நினைப்பதும் சரிதான். ஆச்சரியமான செய்கைகளையெல்லாம் மேல்நாட்டார் மனத்தின்மேல் ஏற்றுகின்றார்கள்; நம்மவர்களாகிய பண்டையோர் தெய்வத்தின்மேலேற்றி வந்தார்கள். இவ்விருவகையாரின் அபிப்

பிராயமாத்திரம் வெவ்வேருயினதேயன்றிச் செய்கை வேறு படவில்லை; அதுமட்டும் இருவர் அபிப்பிராயத்திலும்சார்ந்து ஒன்ருகியே நிற்கின்றது. நம்முன்னேர்களின் சாஸ்திரங்கள் ஒருதொழில் நடப்பதற்கு வெவ்வேறு காரணங்களைக் கூறி னும் அத்தொழில் முடிவுமட்டும் உண்மையாய் மற்றையர் முடிபுக்கு ஒத்ததாய் நடந்துவிடுகிறது. இவ்வாறு நடப் பதை யுணர்ந்தபின், இந்து சாஸ்திரங்களைப் பொய்யென்று கூறிவந்த மேல்நாட்டாரும் சிறிது சிறிதாக அவற்றை நம் பத் தலைப்பட் டிருக்கின்றனர். நம்முடைய சாஸ்திரங்களி லும் பூரணபுத்தியைச் செலுத்தாமல், மேல்நாட்டுக் கல்வி யிலும் அதிகத்தேர்ச்சி பெருமல், அதில்சிறிது பழகின மாத் திரத்திலேயே இந்து சாஸ்திரங்கள் பொய்யென்று சொல் லத் தலைப்பட்டு இரண்டுங் கெட்டவர்களாய்த் திரியும் சில நூதன இந்து நண்பர்களுக்குமட்டும் நம்முன்னேர் அபிப் பிராயங்களில் நம்பிக்கை யுண்டாகவில்லை. இன்னேர் ஐந்து நிமிஷமேனும் மனதை அசையாம லடக்கிப் பார்ப்பார்களே யானல் இவற்றினுண்மை விளங்கும். 'நான்மனதை அடக்கு கிறே'னென்று அடக்கிப்பார்த்து ஒரு நிமிஷநேரமும்அடக்க வன்மையில்லாமையால், அது அங்குமிங்கும் ஆயிரம் இடங் களுக்குத் தாவுவதைப் பாாத்து "யூஸ்லெஸ்! யூஸ்லெஸ் !! நம் இந்துக்களுடைய சாஸ்திரம் என்ன சாஸ்திரம்! வெரி பாட், வெரிபாட்" என்றுசொல்லி மூளை விருத்திக்காக நெற்றிக்குமேலே வளர்த்து வளைத்து விட்டிருக்கும் மயி ருக்கு எண்ணெய் தடவிச் சீவிக்கொண்டு வெளியேசென்று ஊர்சுற்றும் புண்யாத்மாக்கள் எப்படி மனத்தின் உண்மையை அறிவார்கள். எந்தவகையிலும் மேல்நாட்டார் மனவுறுதி யுடையவர்கள்; அவர்கள் எல்லாச் சாஸ்திரங்களையும் பார்த் துக்கஷ்டப்பட்டு ஒவ்வொன்றையும் பரிசோதித்து முடிவாக ஒன்றைச் சித்தாந்தப்படுத்துவார்கள்; அதனலேயே அவர்க

ளுக்குச் செல்வமும் புகழும் சிறந்தோங்கி வளர்கின்றன. நம்மவர் ஒன்றையும் பரிசோதிக்காமலே சோம்பேறித்தனங் கொண்டு திண்ணையி லிருந்தபடியே சிறந்த காரியங்களை யெல்லாம் உபயோகமற்றவை யெனத் தள்ளிவிடுவார்; அதனோடுவிடாமல் அவற்றை அறிய முயல்பவர்களையும் நிந்திப்பார்கள். பலவருடங்கட்கு முன் தென்னாட்டில் வீரவைஷ்ணவராயிருந்த ஒரு வக்கீலிடத்தில், மற்றொரு பஞ்சாங்கக்கார ஐயங்கார் தமக்கு வரும்படி வருமென்பதை யுத்தேசித்து 'உங்கள் வீட்டில் தினந்தோறும் இரவில் திருவாய்மொழி படித்துவந்தால் மிக்க நலமுண்டாகு' மென்று சொல்ல, அவர், "வாட்டிஸ்திஸ், திருவாய்மொழி" என்று அவரிடம் கேட்டதாக ஒரு பிரஸ்தாபம் வந்தது. இந்துக்களில் பலர் புத்தி இவ்வாறு மாறியிருக்கும்போது நம்முன்னோரின் அபிப்பிராயத்துக்கு எப்படி யிணங்குவார்கள் ? (இந்து மகான்களுடைய உயர்ந்த கொள்கைகளை இந்துக்களா யிருப்பவர்களே நிந்திக்க அதை நான் பலதடவை கேட்டு மனம் புண்பட்டுக் கொண்டிருந்தபடியால் இங்குக் கதையைவிட்டு இவ்விஷயத்தை இவ்வளவுதூரம் வளர்த்தெழுதத் துணிந்தேன். காலத்தை வீணாக்கினேனென்று இதை வாசிக்கும் நண்பர்கள் வெறுக்காதிருக்கவேண்டுகிறேன். இவையெல்லாம் நல்ல விஷயங்கள். ஆதலின் பலர் திருந்துவதற்கு ஏதுவாம்.)

இவை நிற்க ; வசைபாடிவிட்டு, சுப்பையத்தேவன் தம்மை உதைப்பானென்று மிகப்பயந்தோடிய மாணிக்கப் புலவர் நெஞ்சம்பதைக்க, குதிக்கால் பிடரியிற்பட, மேலே போட்டிருந்த வஸ்திரம் நழுவிக் கீழே வீழ்ந்தும் குனிந்து அதையும் எடாமல் வாயுவேக மனோவேகமாய்ப் பலவிடங்களில் வீழ்ந்து வீழ்ந்து எழுந்து தமக்குண்டாகிய அளவற்ற துக்கத்தினால் அந்தச் சுப்பையத்தேவனை, "அடா

பாவி! குடிகேடா! நீ உருப்படுவாயா? உன்மனைவியோடு சேர்ந்து வாழ்வாயா? உன்பிள்ளை நிலைக்குமா? உனக்கும் சுகம் ஏற்படுமா? உன்வீடு இடிந்து வீழாமற்போகுமா? அதில் எருக்கும், குருக்கும் முளைக்காம லிருக்குமா? உன் உத்தியோகம் நிலைநிற்குமா? என்வயிறு எரிவதுபோல உன் தலை சுடுகாட்டிலிருந்து எரியாமற்போகுமா? வறுமையா லலைந்து வந்த என்னை நீ வாயாலும் கையாலும் அடித்துத் துரத்தினையே; இது வீண்போகுமா? இன்னும் ஒருவரு ஷத்தில் நீ எல்லாவற்றையும் இழந்து ஊரைவிட் டோடி நாதியற்று வீதியிலிறந்து கிடப்பாய்; அட உன்கொண்டை யழிய; உன்தலை மொட்டையாய்ப்போக" என்று திட்டிக் கொண்டே சென்றார். (இவர் இங்குத் தூஷித்துப் பேசிய படியே சுப்பையனுக்குக் கெடுதி சம்பவித்ததைப் பின்னே காணலாம். இதற்கு இவர்க்கேற்பட்ட அதிக துக்கத்தால் மனம் ஒன்றுபட்டதே காரணம்.)

மேற்கண்டவாறு சுப்பையனை வைதுகொண்டு சென்ற புலவர் முகவாட்டத்தோடு திருப்பரங்குன்றத்திற்குப் போகிற சாலைவழியாகத் தம் மூரைநோக்கிப் போயினர். அப்போது,எதிரே நல்ல ஆடையாபரணங்களோடு பற்குச்சியை வாயில்வைத்துப் பற்றுலக்கிக்கொண்டு மதுரையை நோக்கி ஒரு இடம்பமான ஆசாமி வந்தான். புலவர் அவனைக் கண்டு பகல் வேடக்காரனென்று நினையாமல், "இவன் மிக மதிப் புள்ளமனிதனும், மதுரைவாசியுமா யிருக்கலாம்; இவனிடத் தில் நாம் பட்டுவரும் துன்பத்தைச் சொல்லி மனக்கொதிப் பைச் சிறிது ஆற்றிக்கொண்டு செல்லலாம்" என்று கருதி அவனுக்கு முன்னேபோய் நின்று, "ஐயா! தாங்கள் மதுரைவாசிதாமோ?" என்றார். அதற்கவன், "ஆம்; நான் மதுரைவாசிதான்; இங்கேயுள்ள சமஸ்தானப் புலவருள் நான்றான் முதன்மை பெற்றவன்; என்னை, 'பால்வண்ணப்

புலவர்' என்று எவருஞ்சொல்வார்கள்" என்று தற்பெருமை யாகப் பேசினன். அப்போது வசைகவி மாணிக்கப்புலவர் அவன் சொல்லிய புளுகான வார்த்தைகளை மெய்யென் றெண்ணி, "இவர் சமஸ்தான வித்வானயிருப்பதால் இவ ருடைய துணையைக் கொண்டேனும் நாம் அரண்மனைக்குட் சென்று நமது வறுமையைத் தணித்துக்கொண்டு போக லாம்" என்னும் நினைப்போடு அவனைநோக்கி, "ஐயா! நீங்கள் என்னை அறியமாட்டீர்களா? நான் கொற்கைநகர் வசைகவி மாணிக்கப் புலவனல்லவா; தீபாவளிப் பரிசுபெறு வதற்காக நான் உங்கள் சம்ஸ்தானத்தை நாடிவந்தேன்; வந்து நான்பட்டபாடு போதுமென்ருய் விட்டது; முந்தியே நான் தங்களைக் கண்டிருந்தால் எனக்கு இவ்வளவு சங்கடம் நேர்ந்திராது; வாசலில் நிற்கும் சேவகர் என்னைப்போன்ற வர்க்குச்செய்யும் அக்கிரமம் சகிக்கமுடியாததா யிருக்கிறது; பெரிய சமஸ்தானங்களி லெல்லாம் இவ்வித அக்கிரம முடையசேவகர் இருத்தல்கூடாது; நான் டபேதாரிடத்தில் என்னுடைய தாவந்தத்தைச் சொல்லி எவ்வளவோ முறை யிட்டும் பயன்பெருமல் சுப்பையத்தேவன் கையினல் தள் ளுண்டு வந்துவிட்டேன்; வந்தும் என்னுடைய தரித்திரக் கொடுமையானது என்னை, ஊர்க்குச் செல்லவிடாமல் பின்னே தள்ளுகின்றது; நான் செய்த நற்றவமே தங்களை எதிரே காணச்செய்தது; 'கற்ருரைக் கற்ருரே காமுறுவர்' என்றபடி என்னுடைய அருமை தங்களுக்கன்ருே தெரியும்; படிக்காத மூடனுகிய சேவகன் அதை எப்படியறிவான்? ஆதலால் தாங்கள் தயைசெய்து எப்படியாவது என்னைச் சமஸ்தானத்திற் கழைத்துக்கொண்டு போய்த் தீபாவளிச் செலவுக்கு எனக்கு ஏதேனும் நாயுடவர்களிடத்தில் வாங்கிக் கொடுக்கவேண்டும்; என் வீட்டுக்கஷ்டம் என்னுற் சொல் லுதற்கியலாது; நீங்கள் என் கல்வித்திறத்தை நோக்காவிடி

Ramanan. Ramam-

னும் நான் படும் கஷ்டத்தையாவது நோக்கிச் சிறிது என் மீது தயைசெய்ய வேண்டும்" என்று மிகவுங் கெஞ்சிக் கேட்டார்.

இந்தப்பாவி மெய்யாகவே சம்ஸ்தானப் புலவனு யிருந்தாலன்றோ அவர் பேச்சுக்களைக் கேட்டதும் இவ னுக்கு இரக்கமுண்டாகும்; இவன் படியாத மூடனும், வெளியூர்க்காரரை ஏமாற்றுதற்காகச் சம்ஸ்தானப் புலவ னென்று சொல்லிக்கொண்டு திரிபவனும், மிகுந்த சம்ஸ் தானப் புரட்டனும், கொள்ளையடிக்கும் சேவகரோடு கூட் டுக் கள்ளனுமாயிருந்தபடியால் மனதில் எள்ளளவும் இரக்க மின்றி அவர் முகத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்து, "ஐயா புலவர் பெருமானே! நீங்கள் இருந்திருந்து கஷ்டம் தீருவதற்காக நல்ல சம்ஸ்தானத்தைத் தேடிவந்தீர்கள்! இந் தச் சம்ஸ்தானம் மிகவும் கெட்டுப்போய்விட்டதே; இங்குச் சேர்ந்திருப்பவர்கள் நாயுடவர்கள் மனதைக் கெடுத்துவிட் டார்களே ; அவருக்கு முந்தி யிருந்ததுபோல இப்பொழுது வித்வான்கள்மீது அபிமான மில்லாமற் போயிற்று; இங்குத் திரியும் இரண்டொரு பொறுமையுள்ள புலவர்கள், வித்வான் களைத் தினந்தோறும் நிந்தித்து இகழ்ச்சியாகப் பேசி வந்த மையால் அவர் மனம் இப்படித் திரும்பிவிட்டது; வித்வான் களென்றால் அவருக்கு அவர்கள்மீது மிகவும் அருவருப்புண் டாகும்; அதனாலேயே அவர், வாசற் சேவகருக்கு 'வித்வான் கள்வந்தால் நீங்கள் அவர்களை இலகுவில் உள்ளே விடாதீர் கள்' என்று கட்டளையிட்டிருக்கிறார். இதையுணராமல் நீங்கள் சேவகரை நிந்திக்கிறீர்கள்? அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! கொஞ்சமாவது அரண்மனை உத்தரவில்லாமல் அவ் வாறு செய்வார்களா? உத்தரவன்றிச் செய்தால் அவர்களின் தலை போய்விடு மென்பது அவர்களுக்குத் தெரியாதா? இந் தக்காலம் கெட்டுப்போய்க்கிடக்கிறது ; ஆயினும் 'கைக்

காடைகொண்டு காட்டுக்காடை பிடித்தல்' முறையாதலால் நீங்கள் வாசலிலிருக்கும் சேவகருக்கு ஏதாவது கொஞ்சம் துட்டுக்கொடுத்து அவர்களைச் சரிப்படுத்திக் கொண்டால் அவர்கள் உங்களை எப்படியாவது உள்ளே அழைத்துப் போய்ச் சமயமறிந்து பிரபு முன்விட்டு உங்கள் காரியம் கைகூடும்படி செய்துவிடுவார்கள்; நாம் அற்பச் செலவுக்குப் பின்வாங்கினால் நம்முடைய காரியந்தானே கெடும்; நாம் எல்லோரும் தடையின்றி உள்ளே செல்லும் அரண்மனை களிற்கூட இந்த இரகசியம் நடப்பது வாடிக்கை தானே; இங்கே ஒருவரையும் உள்ளேவிடக் கூடாதென்று பிரபுவின் கட்டளை பிறந்திருக்கும்போது நடப்பதற்குத் தடை யென்ன? நீங்கள் சேவகரைத் தானே நேசப்படுத்திக் காரியத்தை முடித்துக் கொள்ளலாம்; வீணாக மனஸ்தாபப் பட்டுக் காரியத்தைக் கெடுத்துக் கொண்டீர்களே" என்று, மிகவும் ஒழுங்கான நிலைமையில், தருமந்தவறாமலிருந்து வந்த சம்ஸ்தானத்தை மாறுபாடாக நிந்தித்து, ஏதாவது புலவரிடத்திலிருந்து காசைப் பிடுங்கிச் சேவகர்க்குக் கொடுத்து அவரிடம் அதில் பங்கு வாங்கலாமென்று கருதி மித்திர பேதமும், அசாத்தியப் புளுகுமாகிய இவ்வார்த்தை களைப் பேசி அவரை ஏமாற்றப்பார்த்தான். புலவர், எப் பேர்ப்பட்டவரிடத்தும் ஏமாறாத அசாத்தியப் பேர்வழியாயி னும் பால்வண்ணனுடைய திடீர்ப்புளுகில் சிறிது மயங்கி அவன் புளுகியவற்றை யெல்லாம் சற்று சந்தேகத்தோடு மெய்யென்று நினைத்து, தம்மிடத்தில் சேவகருக்குக் கொடுப்பதற்கு ஒரு தம்பிடிகூட இல்லாதபடியால் 'இவ னைக் கொண்டு சேவகரைச் சரிப்படுத்திக் கொண்டு நாம் அரண்மனைக்குட் செல்லலாம்' என்று தரித்திர மிகுதியால் கருதி, அவனிடத்தில் "ஐயா! என்னிடத்தில் ஒருகாசுகூட இல்லை; இருந்தால் நான் எப்படியாவது

சேவகருக்குக் கொடுத்துவிடுவேன்; தாங்கள் சமஸ்தானப் புலவராயிருக்கின்றபடியால் சேவகர் தங்கள் சொல்லைக் கேட்பார்கள்; ஆனதால் தாங்கள் சேவகரிடம் எனக்குச் சிபாரிசு சொல்லியாவது நான் அரண்மனைக் குள்ளே போகும்படி செய்தால் உங்களுக்கு மெத்தவும் புண்ணிய முண்டு; தாங்கள் செய்யும் நன்றியை நான் என்றும் மறவேன்" என்றார். அதற்கவன் "ஐயையோ! என்னுடைய காரியம் அவர்களிடத்தில் ஒன்றும் சாயாதே; அவர்கள் மிகவும் பொல்லாதவர்கள்; துட்டின்றி ஒருவேலையும் செய்ய மாட்டார்களே; மூடர்களுக்கு வித்வான்கள் தயவு எதற்கு? அது முடியாத காரியம்" என்றுரைத்தான். புலவர், "அப்படியானால் தாங்கள் எனக்கு ஒருபணம் கடனாகக் கொடுத்தால் நான் அரண்மனைக்குள்ளே சென்று நாயுடவர்களிடம் வரும்படி பெற்றுத் திரும்பிவரும்போது அதை மீண்டும் உங்களுக்குக் கொடுத்து விடுவேன்" என்றார். பால்வண்ணன், "ஐயோ! சுவாமி! ஒருகாசுகூட என்னிடம் இல்லையே! இருந்தால் நான் இவ்வளவு தங்களுக்குச் சொல்வேனா; பேசாமல் காரியத்தை முடித்து விடமாட்டேனா" என்றுரைத்தான்.

இவ்வாறு சொல்லவே வசைகவி மாணிக்கப்புலவர், பால்வண்ணனுடைய மோசடியான வார்த்தைகளின் இரகசியத்தையும், தந்திரமான எண்ணத்தையும் தெரிந்து கொண்டார். உடனே அவர், "இந்தப்பாவிகூறும் வார்த்தைகளெல்லாம் முன்னுக்குப்பின் முரணாயிருக்கின்றன; இவனை ஒரு வித்வானென்று நாம் கருதினோம்; இப்போது இவனுடைய பேச்சினால் இவன், பெரும்புளுகுக் காரனும், வெளியூரிலிருந்து வருகிறவர்களிடம் ஏமாற்றுதல் செய்து காசு பிடுங்கும் மோசக்காரனும் தெரிகின்றான்; முதலிற் சமஸ்தானம் கெட்டுப்போய் விட்டதென்றான்; பின்னால், பிரபு சிலருடைய பேச்சைக்கேட்டு வித்வான்களை வெறுத்

திருக்கின்று றென்றான்; வித்வான்களை உள்ளே விடக் கூடாதென்ற கடுங்கட்டளை அவரிடமிருந்து பிறந்திருக் கிறதென்றான்; நாம் சேவகரைநிந்திப்பதில் பிரயோசன மில்லை யென்றான். பின்பு சேவகருக்கு நாம் ஏதா வது கொடுத்தால் அவர்கள் நம் காரியத்தைச் சரிப் படுத்தி விடுவார்களென்றும் சொல்லுகிறான்; தன்னை முதலில் சம்ஸ்தான வித்வானென்று சொல்லியும் இங்கே தன்னாலொன்றுமாகா தென்கிறான்; மெய்யாகவே காவ லருக்கு வித்வான்கள்மீது வெறுப்புண்டாகி யிருந் தால் நாம் சேவகருக்குத் துட்டுக் கொடுத்தவுடனே அவர்கள் அதை எப்படிச் சரிப்படுத்தல் முடியும்? இவன் மெய்யாகவே சமஸ்தான வித்வானயிருந்தால் அவர்கள் இவன் பேச்சைக்கேட்டதும் நடுங்கமாட்டார்களா? இவ னிடத்தில் நாம் துட்டுக் கடன் கேட்டும் இவன் காசில்லை யென்கிறான்; இவற்றையெல்லாம் உத்தேசிக்க இவன் முழு மோசக்காரனென்பது சொல்லாமலே விளங்கு கின்றது; மோசக்காரர் பேச்சுக்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமில் லாதிருப்பது போல இவன் பேச்சுமிருப்பதால் மோசக்கார ரில் இவன் முதல் நம்பரென்றே சொல்லவேண்டும்; இவன் காசு பறிக்கும் சேவகரோடு கூட்டுக்கள்ளனு யிருக்கலாம்; அவர்கள் வலையிலகப்படாமல் தெறிபட்டோடுகிறவர்களைத் தன் வாய்ப்பிலுக்கால் திருப்பிச் சிக்கவைப்பது இவனு டைய தொழில்போலும்; தாராளமாக யார் சென்றாலும் அவர்க்குத் தருமங்கொடுக்கும் பிரபுவுள்ள இங்கே, இவர் கள் வாசலில் நின்று வருகின்றவர்களிடம், "நீங்கள் உள்ளே சென்றால் உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது; நீங்கள் எங் களுக்கேதேனும் கொடுத்தால் நாங்கள் உங்களுக்குப் பிரயோசன முண்டாகும்படி செய்கின்றோம்" என்று சொல்லிக் காசுபிடுங்கி அவர்களை உள்ளே யழைத்துச்

சென்று, "அங்கே நில்லுங்கள், இங்கே, நில்லுங்கள்" என்று கையினால் வாயை மூடியும், கண்ஜாடை காட்டியும் தூரமாக ஒருபக்கத்தில் நிறுத்தி, பிரபு சமுகத்தில் அடுத்து நின்று அவர்களுக்கு உதவி வார்த்தைகளைச் சொல்பவர்போல நடித்து, ஒன்றுஞ் சொல்லாமல், இயற்கையாக பிரபு, அவர்களுக்குத் தானங்கொடுக்க, அதைத் தாம் பிரயாசைப்பட்டு வாங்கிக் கொடுத்தது போலக்காட்டிச் சிரித்துச் சிரித்துத் தம் சாமார்த்தியத்தைச் சொல்லி, அவர்களை வெளியே கொண்டுவந்து தள்ளிவிடும் வழக்கத்தை அநுசரித்து வருகின்றார்களென்பது தெரிகிறது; இவர்களெல்லோரும் சீக்கிரம் கெட்டுப் போவார்கள்; நடந்தது நடக்கட்டும்; நாம் ஊருக்குப் போய்விடுவோம்; இந்த மோசக்காரனுக்கு 'உன் மனத்தின் இரகசியத்தை நான் தெரிந்துகொண்டேன்' என்பதை விளக்காமற் போகக் கூடாது; அஃதிவன் மனத்திற் படும்படி இரண்டு வார்த்தைகளேனும் கூறிவிட்டு நாம்செல்வோம்" என்று கருதி, அவனை நோக்கி, "போலிப்புலவசிகாமணியே! உனது அந்தரங்கத்தை நான் தெரிந்துகொண்டேன்; உலகத்தில் எத்தனையோ உத்தமமான தொழில்களெல்லா மிருக்கும்போது நீ இந்த ஏமாற்றுத் தொழிலைக் கைக்கொண்டிருக்கின்றாய்? சேவகர் கொள்ளைக்குத் துணைக்கருவியான ஆசாமியா நீ? இச்செய்கையாலேற்படும் பாவம் வீண்போகாது; நீ சீக்கிரம் கெட்டுப் போவாய்; இனிமேலாவது நீ நல்ல தொழிலிற் பிரவேசி" என்று சொல்லிவிட்டு, 'இவனும் உதைத்தாலும் உதைப்பான்' என்று கருதி அங்கே நில்லாமல் முன்னிலும் வேகங்கொண்டு திரும்பிப்பார்த்தபடியே ஊரைநோக்கி ஓடினார். பால்வண்ணன் அவர் கூறிய வார்த்தைகளுக்கு அவரை அடிக்கத்தக்கவனாயிருந்தும் அவர் தனது மோச இரகசியத்தை யறிந்து சொன்னவுடனே மிகவும் வெட்கித்

தலைகுனிந்து, "இவன்யாரோ அசாத்தியப்பேர்வழி; நமது வலையிற் சிக்கவில்லை" என்று விசனப்பட்டு முகவாட்டத்தோடு ஆமை போலச் சுருங்கி மதுராபுரிக்குட் போய்விட்டான். இந்தப் பால்வண்ணனுடைய செய்கைகள் மிகவும் வேடிக்கையாயிருப்பதோடு, இதைவாசிக்கும் நண்பர்கள் இத்தகையாரின் மோசங்களிற் சிக்குண்டு வருந்தாமல் இருக்கும் வழிகளையும் விளக்குமாதலால் நாம் அவற்றுள் சிலவற்றைச் சுருக்கி எழுதுவோம்:—

இந்தப் பால்வண்ணன், ஒரு ஏழைக்குடும்பத்திற் பிறந்தவன்; இவனுக்குக் கொஞ்சம் தமிழில் எழுதப்படிக்கத் தெரியும்; இவன், தனக்கு விசேஷமான படிப்பில்லை யெனினும் எந்த அன்னியருடைய பாடல்களையும் மனப்பாடம் செய்வதில் மகா சமர்த்தன்; மகாவாயாடித் தன்மையுள்ளவன்; எத்தகையரிடத்தும் பெரிய அஸ்திவாரம் போட்டுப் பேசி அவரை மயக்கிவிடுவான்; இவன் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறினவுடன் வேறு எந்தத்தொழிலிலும் பிரவேசிக்காமல், பெரியவித்வான் போன்று நடித்துப் பாமர ஜனங்களை ஏமாற்றுந் தொழிலிற் பிரவேசித்து விட்டான்; இவன், அன்னியர்பாடி வெளிப்படாமல் மறைந்து கிடந்த சில பாடல்களை மனப்பாடம் செய்துகொண்டு அவற்றைக் கொண்டே தனது வித்வத் தொழிலை நடத்திவந்தான்; ஒருநாள் முழுதும் யோசித்தாலும் ஒரு பாடலும் வகையோடு எழுத வன்மையில்லாத இவன், நிமிஷகவி பாடுவதாக எவரிடத்தும் புளுகுவான்; யாராவது அவ்விதமே இவன் கவிபாடுமாறுசொல்லி இவனைப் பிடித்துக்கொண்டால் இவன் தனக்குப் பாடமாயிருக்கும் பாடல்களில் அவருடைய பெயரை மாட்டி அப்பொழுதுதான் அவற்றைக் கவனஞ் செய்தவன் போன்று சொல்லிவிடுவான்; தான் வீட்டுத் திண்ணையிலிருந்து கொண்டு வீதியிற்செல்லும் தகுதியான

வாசிப்புடையவர்களைக் கூப்பிட்டு அவர்களிடத்தில் தன் கையிலிருக்கும் ஒரு புத்தகத்தைக்கொடுத்து, தான்தெரிந்து கொள்வதற்காக அவர்கள் வாசிக்குமாறு சொல்பவன்போற் சொல்லி அவர்கள் படிக்குமாறு செய்து எதிரே யிருந்து அவர்களுடன் விவகாரம்பேசி, அச்செய்கை வெளியே பார்ப்பவருக்கு அவர்கள் தன்னிடம் நூற்பாடங்கேட்டுக் கொள்வதுபோலவும், தான் பாடஞ்சொல்வது போலவும் விளங்க நடித்து, அதனால் சகலருக்கும் குருஸ்தானம் பெற்றுக் கொள்வான்; தன்னோடு சேர்ந்திருக்கும் மெய்யன்புள்ள சிநேகிதரிடம், தன்னுடைய சிறுகாரியங்களை அவர்கள் முடிக்குமாறு கெஞ்சிக்கதறி அவ்வேலைகளுக்காகத் தந்திரமாய் அவர்கள் அங்குமிங்கும் ஓடும்படிசெய்து, மற்றபாமாரிடத்தில் அவர்கள் தன்னுடைய வேலைக்காரென்று பிரஸ்தாபித்து விடுவான்; படிப்பில்லாதவர்களிடத்தில் சில புத்தகங்களைக் கூலிக்குப் பிழைதிருத்திக் கொடுப்பதாக வாங்கி, கஷ்டகாலத்தால் தன்னோடு சேர்ந்திருக்கும் நல்ல படிப்புள்ள சிநேகிதர்களிடத்தில் திருத்தும்படி சொல்லிக் கொடுத்து, அவர்கள் அதைவாங்கி உள்ளேயிருந்து வேலை செய்யுங் காலத்தில், தான் வெளியே இருந்து கொண்டு தன்னிடம் வருகின்ற பாமரரிடத்தும், அப்புத்தகத்தைக் கொடுத்தவனிடத்தும், அவரைச் சுட்டிக்காட்டி, ‘இவர் என்னுடைய சிஷ்யர்; அப்புத்தகத்தில் செய்யவேண்டிய வேலை விவரமெல்லாம் என்னிடம் கேட்டுத்தெரிந்துகொண்டு உள்ளே இதில் பிழை திருத்துகிறார்’ என்று சொல்லி நடித்துப் பொய்ப் பெருமையடைந்து உண்மையோடு வேலை செய்கின்ற அவர்களுடைய மதிப்பைக்கெடுத்து, ஊராரிடம் அப்படி இன்னொருவர் செய்தவேலைகள் யாவும், தானே முடித்ததாகக் காட்டி அதற்காகப் பொருள்பறித்து அவ்வாறு வேலைசெய்தவர்களுக்குக் கொடாமல் தானே

வாயிற் போட்டுக்கொண்டு வாய்ச்சாமார்த்தியத்தால் அவர்களை மயக்கிவிடுவான்; பின்னும் அவர்கள் வேலைசெய்ததற்காகத் தான் பிறரிடம் காசுவாங்குவது அவர்களுக்குத் தெரியாமலிருக்கும்படி தந்திரம் செய்வான்; இவற்றோடு அவர்கள் செய்யும் வேலைக்கு மனதிற் சிறிதும் விசுவாசமில்லாமல் எந்த நேரமும் வந்தவரிடத்தில் அவர்கள்மீது நிந்தைகூறி அவர்களைத் தாழ்த்தித் தன்னை உயர்த்திக்கொண்டேயிருப்பான்; பலசமஸ்தானங்களிற் சென்று அங்குள்ள வித்வான்களை வாய்ப்பேச்சினால்மயக்கி அவர்களோடுநேயங்கொண்டு முன்னாலேயே இரகசியமாக, அவர்கள் சிலவிசித்திரப்பாடல்களைப் பாடும்படிசெய்து அவற்றைத் தான் பாடம்பண்ணிக்கொண்டு அவற்றினீற்றுக்களைப் பிரபுக்களின் முன் அவர்களே தன்னிடம் கூறி அவற்றின் முழுப்பாடல்களையும்பொருத்தமாக முடிக்கவேண்டுமென்று கேட்கச்செய்து அவ்வாறு கேட்டவுடன், தான் பாடமாக்கி யிருந்த அப்பாடல்களையே மடமடவென்று பாடி, அப்பொழுதுதான் ஆசுகவிகள் பாடிவிட்டவன் போன்று நடித்து, அவற்றிற்காக அப்பிரபுக்களிடம் நற்பரிசுபெற்றுத் தனக்குதவியாயிருந்த அந்த வித்வான்களுக்கு அதில் பங்குகொடுத்து வீண்பெருமை யடைந்து திரிவான்; இவன்வாயில் மெய்யென்பது மருந்துக்கும் கிடைப்ப தரிதாகும்; பொய்யே இவனுக்குக் குலதெய்வம்; பொறாமையே பொற்பூஷணம்; எந்தநேரமும் மோசத்திலேயே இவன்புத்தி பிரவேசித்துக்கொண்டிருக்கும். இவன் ஒழுக்கமான காரியங்களைச் செய்யவேமாட்டான்; அவற்றைச் செய்பவர்களைக் கண்டால் எரிச்சலடைவான்; நல்லோர் சிநேகத்தை விரும்பவே மாட்டான்; அவிவேகிகளுடைய நேயமே இவனுக்கு மிகவும் சிரேஷ்டம். இவன் எத்தகைய பெரிய வித்வான்களையும் இழிவாகப்பேசி, தானே புலமையில் மிக்கவனென்று புகல்

வான்; இவன் வெளியூர்களுக்குச் சென்று ஆங்காங்குள்ளாரை ஏமாற்றும் நேரங்கள் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் அரண்மனைவாசலில் நின்று சேவகருக்குத் துணையாகி, வந்தவர்களிடத்தில் வாய்க்கு வந்தவற்றைப் புளுகித் தான் வித்வானென்று நடித்துத் துட்டுப் பிடுங்கிக் கொடுத்து அவர்களிடம் அதில்பங்குவாங்குவது இவனுடையதொழில்; இவன் செய்யும் எல்லாத் தொழில்களிலும் படித்த வித்வான்களை ஏமாற்றுவதே இவனுக்குப் பிரதானமானதொழில். இவன் கூறியபடி சம்ஸ்தான வித்வானுமில்லை, சாதாரண வித்வானுமில்லை; இவன் பிரபு சமுகத்தை ஒருநாளுமே அறிந்திருக்க மாட்டான்; அரண்மனைக்குள்ளேசென்றதுமில்லை; வெளியிற்றான் இவனுடைய வேடிக்கை எல்லாம்; இவன் அப்போது தன்னுடைய வழக்கப்படியே கிருதமா நதிப்பக்கம் மலபாதைக்குப் போய்த்திரும்பி, "துட்டுப்பிடுங்குவதற்கு வெளியூர்க்காரர் எவராவது அகப்படமாட்டார்களா" என்று எண்ணிக்கொண்டு வந்தான். அப்படிவரும்போதுதான் முற்கூறியபடி வசைகவி மாணிக்கப்புலவரை ஏமாற்றத் தொடங்கினான். அவரிடத்தில் இவன் சொல்லியவைகளெல்லாம் அவர்கருதியபடியே கலப்பில்லாத பொய்கள்தாம்; அவற்றுள் ஒன்றேனும் நிசமில்லை. இவன் இக்காலத்திலிருந்தால், போலிப்புலவர்களிடம் பாரம்ஒன்றிற்கு இரண்டணா நாலணாக் கொடுத்து அவர்கள் வாய்க்கு வந்ததைப் புத்தகமாக எழுதிக் கொடுக்கச் செய்து வாங்கி அதைத் தாங்களே இயற்றியதாக அச்சிட்டுக் கொள்ளும் சிலவியாபாரிகட்கும், நூற்புரட்டு, விஷயப்புரட்டு, கவிப்புரட்டு, உரைப்புரட்டுக் காரருக்கும், தகுதியுடைய ஓர் வித்வானிடத்தில் உயர்ந்த புத்தகத்தை யெழுதி வாங்கிக்கொண்டு தக்ககூலி கொடாமலும், வேலையின் கஷ்டத்தை யுணராமலும், வேலை செய்த அவரு

டைய திறமையை அறியாமலும், அந்த வேலையிற் சிறிதும் சம்பந்தப் படாத மற்றொரு நடிப்புக்காரரை, அதில் பேர் போடத்தக்கவராக மதித்து, அவரையே சிறப்பாகத் துதித்து, அவர் பெயராலேயே அப்புத்தகத்தை வீண் பெருமையோடு வெளியாக்கி, உள்ளபடி அதற்கு உழைத்தவருடைய மதிப்பைக் கெடுத்துத் திரியும் மந்த மதியினர்க்கும், இடம்பமில்லாத ஓர் உண்மைக் கல்விமான் பிழைதிருத்திய புத்தகத்தில், பிறரை யேமாற்றுவதற்காக 'இவர் பெயரிருந்தால் கௌரவப்படாது' என்று கருதி மற்றொரு கல்வித் திறமையில்லாத இடம்பக்காரனால் அது பார்வையிடப் பட்டதாக அதை அச்சிடுவோர்க்கும், கல்விமான்களுக்குச் சொற்பச்சம்பளம் கொடுத்துப் பலபுத்தகங்களை அவர்கள் இயற்றுமாறு செய்து அவற்றை இயற்றியவர்கள் தாமேயென்பது விளங்க வெளிப்படுத்தி, வயிற்றுப் பிழைப்புக் கருதி உண்மையில் அவற்றை இயற்றிய அவர்களுடைய பெயர் வெளிவராமல் அதனை அடக்கஞ் செய்வோருக்கும், நல்ல புத்தகங்களின் விலையைக் குறைப்பதற்காக அவற்றின் தன்மையை அறியாமலே அவற்றை உபயோக மற்றவையெனக் கூறும் மோச வியாபாரிகட்கும், அபத்தரூபங்களாகவே பல புத்தகங்களை யெழுதி நல்லரூபமுடையனவைகளாக்கிப் பெருமை யடைவோர்க்கும், இன்னும் தமிழ்க் கவி சம்பந்தமாகப் பல ஒழுங்கீனங்களை நடத்துவோருக்கும் மிக்க உபகாரமுள்ளவனாயிருப்பான். [இத்தகையருக்கெல்லாம் எக்காலத்தில் நல்லொழுக்க மேற்படுமோ அக்காலத்திற்றான் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் மிக்க சிறப்புண்டாகும்.]

இவை நிற்க; முன்னே கூறியபடி ஓடிய வசைகவி மாணிக்கப்புலவர், "நம்முடைய கஷ்டகாலமானது இப்படி முடிந்ததே! 'ஈயாரை யீயவொட்டா னவனுமீயான்' என்ற

படி இந்தச் சுப்பையத்தேவன் நமது காரியத்துக்கிடையூறு செய்து விட்டானே; திருப்பரங்கிரி வாசர் மெய்யருளுடைய வராகில் அவனைத் தவறாமல் தண்டித்துவிடுவார்" என்று சொல்லி எதிரிலிருந்த திருப்பரங்குன்றத்தைத் தரிசித்துக் கொண்டே தமதூரில் போய்ச்சேர்ந்து எப்பொழுதும் தமக்குப் பொருள் கொடுத்ததுவும் சிலபெரிய குடித்தனக் காரரிடம் ஊதியம் பெற்றுத் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடி அது முதல் மிகவும் சுகத்துடனே வாழ்ந் திருந்தார். டபேதாராகிய சுப்பையத்தேவனோ மாணிக் கப் புலவரை நிந்தித்து மற்ற சேவகரோடு பேசிக்கொண் டிருந்தான். அதன்மேல் பால்வண்ணன் அவனிடம் சென்று, புலவர் தனது வலையிற் சிக்கவில்லை என்பதைச் சொன்னான். சுப்பையன் அதைக் கேட்டுச் சிரித்து அவனோ டுறவாடிச் சாப்பாட்டு நேரம் வந்தபடியால் சந்தோஷ மாகவே வீட்டுக்கேகினான். அதன்மேல் இவன், விகடக் காரனாகிய குருசாமி தன்னோடு விரோதங்கொண்டு சென்ற தாலும், வசைகவி மாணிக்கப் புலவர் தன்மீது வசைபாடிச் சென்றதனாலும் தனக்குக் கேடுவருமென்பதைச் சிறிதும் உணராதவனாய்த் தினந்தோறும் மனக்கவலையின்றி மேற் குறித்தபடியே சந்தோஷத்தோடும் கெர்வத்தோடும், அநி யாயஞ் செய்வதிற் குறையாமலும், நல்லோர்க்கிடர்செய்து, தன்னுடைய உத்தியோகத்துக்கு மாத்திரம் கெடுதி வாராதபடி வெகு தந்திரமாக அதனை நடத்தி வந்தான்.

5-வது அத்தியாயம்.

மலையாளபகவதி மதுரைக்கு வருதல்.

இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்தன. "அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்றறுக்கும்" என்றதையனு

சரித்து, வசைகவி மாணிக்கப்புலவர் குமரக்கடவுளிடத்தில் சுப்பையனுக்கு அழிவைத் தால் வேண்டும் என்று பாடல் மூலமாகக் கேட்டுக் கொண்டபடி, அக்கடவுள் அவனி டத்தே தீமைகளை அந்த இரண்டு வருடங்களுக்கு மேல் அனுப்பத் தொடங்கினர். அப்போது மலையாளத்திலிருந்து ஒரு * கோடங்கி மதுரைக்குத் தனியாக வந்துசேர்ந்து பூசாரித்தொழிலில் மிக்க சிறப்புற்றுச் சகலரும் கொண் டாடத் தக்கவனாகி வசித்து வந்தான். இவன் ஊருக்குப் புதியவனாதலினாலும், மகா வாய்ச் சமர்த்தனாகையாலும், தெய்வம் வந்ததாக நடிப்பதில் மிகத் தேர்ச்சிபெற்றவனான படியாலும், ஒவ்வொருவர் மனத்தையுங்கண்டு அவரவர் நோக்கத்துக்குத் தக்கபடி நடப்பதில் முதன்மை பெற்றவ னானதினாலும், பிறர்வாயைக் கொண்டே முன் நடந்தகாரி யங்களைப் பக்குவமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு சொல்வ தில் வல்லமை யுடையவனாதலினாலும் மதுரையிலுள்ளவரிற் பாமர ஜனங்களியாவரும், "மலையாளத்துக் கோடங்கி ரொம் பக்கெட்டிக்காரர்; சங்கதிகளை உள்ளபடியே புட்டுப்புட்டு வைக்கிறார்; உடுக்கையெடுத்துத் தட்டு முன்பாகவே தெய் வம் அவருக்கெதிரேவந்து நடனமாடுகிறது; தெய்வம் வந்தா லும்வெகு துடுக்கு; ரொம்ப அவசரம்; குற்றமுடையவர்களை அது போடுபோடென்று போட்டுவிடுகிறது; பேய் பிசாசுக ளெல்லாம் அவருக்கு முன்னே சென்றவுடன் பறந்தோடு கின்றன; அவர் உடுக்கை தட்டாமலே முத்துக்குறியில் அநேகம் சங்கதிகளைச் சொல்லிவிடுகிறார்; மதுரைவீரசுவாமி தானும் அவருக்குக் குறிமுகத்துத் தேவதை; அவர்மீது

---

* உடுக்கை தட்டிப்பாடித் தெய்வங்களைக்கூவி அவை தன் மீது அருபமாய் வந்தேறியிருப்பதாகப் பாவனைகாட்டி வெறி யாடி மனிதர்க்கு வருங்காரியங்களைத் தந்திரத்தோடு சொல்லும் பூசாரிகளுக்கு, 'கோடங்கி' என்றுபெயர்.

மருள்வந்து ஏறியவுடன் அவரைப் பார்த்தால் மதுரைவீர சுவாமி போலவே இருக்கிறார்; மற்ற கோடங்கிகளைப் போன்று அவர் பொய் சொல்லுகிறதே யில்லை; அவரிடத்தில் மெய்யாகவே தேவதை அருளிருக்கின்றது; கழிப்புச் சுற்றிப்போடுதல், விபூதி பிடித்துக் கொடுத்தல், மந்திரம் ஜெபித்தல், யந்திரம் கட்டுதல், தேவதைகளுக்குப் பலி கொடுத்தல், ஆகிய தொழில்களிலெல்லாம் அவர் மகா வல்லவர்; ஒரு நாளைக்கு இருநூறு முந்நூறு பேருக்குக் குறி பார்த்துச்சொல்லுகிறார்; நம்முடைய அதிர்ஷ்டமே அவரை இவ்வூர்க்குக் கொண்டுவந்து சேர்த்தது; அவர் வந்தது முதல் நமக்கொரு குறைவுமில்லை" என்று பேசித் தினந் தோறும் அவனிடம் குறி கேட்கத் தலைப்பட்டு விட்டனர். பலர் அவனுக்குக் கைகளில் வெள்ளிவளையல் செய்துபோடு பவரும், மோதிரங்கள் செய்து போடுவோரும், கழுத்தில் ஜெபமாலைகள் செய்து போடுவாரும், உயர்ந்த வஸ்திரம் சால்வைகளை வாங்கிக் கொடுப்பாரும், வெங்கல உடுக்கைகள் வாங்கிக்கொடுப்பாரும், வெற்றிலை பாக்குப்பை தைத்துக் கொடுப்பாரும், அவன் *முத்துக்குறிபார்த்துச் சொல்லுவதற்காக அவனுக்கு வெள்ளிமணிகள் செய்து கொடுப்பாரும், அவன் உடுக்கையை வைத்துக்கொள்ள அவனுக்குப் பை தைத்துக் கொடுப்பாருமாய் அவனைக்கொண்டாடி வந்தனர். அதனால் அவனுக்கு வரும்படியில் சிறிதும் குறைவில்லை. ஒவ்வொரு நாளும் நாலைந்து மரக்கால் நெல்லும்,

---

* பனிரண்டு மணிகளைச் சித்தப்படுத்தி அவற்றுள் ஒன்றுக்கு அடையாளமிட்டு எல்லாவற்றையும் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொன்ருகக் கீழேபோட்டு அடையாளமிட்டது விழுந்தவுடன் நிறுத்திக்கொண்டு கீழே கிடக்கும் மணிகளையெண்ணி எத்தனை வந்ததோ அத்தனையாவது ராசியை அனுசரித்துக் குறி சொல்வது, முத்துக் குறியென்று சொல்லப்படும்.

வேறுவகைத் தானியங்களும், பத்துப்பணத்துக்குக் குறையாத துட்டும் கிடைக்கும். அவனுக்கு அளவுக்கு மிஞ்சிச் சன்மானம் வருவதால் அவன் இரண்டு கைகளிலும் முழங்கைமட்டும் வெள்ளி வளையலை யணிந்து, பையிலும் பத்தெட்டு வளையல்களைப் போட்டிருப்பான். அவனுடைய பத்து விரல்களிலும் வெள்ளி, பொன், தங்கம், செம்பு ஆகியவற்றால் செய்த மோதிரங்கள் நிறைந்திருந்தன; கழுத்தில் பத்துப்பதினைந்துக்கு மேற்பட்ட ஜெபமாலைகளுண்டு; இன்னும் அவன் திரிபுண்டரமாய் ஐம்பத்தொன்று மொத்தத்தில் வரும்படி நெற்றிமுதல் பலவிடங்களில் திருநீற்றைக் குழைத்துப் பூசியிருப்பான்; கையில் வெள்ளிப்பூண் கட்டப்பட்ட ஒற்றைமுளிப் பிரம்பொன்று வைத்திருப்பான்; இரண்டு காற்பெருவிரல்களிலும், அவற்றிற் கடுத்த விரல்களிலும் வெள்ளி மிஞ்சிகளை அணிந்துகொண்டிருப்பான்; அபினைத் தின்பவர்கள் அதை வாயிற் போடத் தவறிவிட்டாலும் அவன் வெற்றிலை பாக்கு,புகையிலை ஆகியவற்றை வாயிலடக்கிப் புளிச்சுப் புளிச்சென்று எச்சில் துப்புவதைக் கைவிடமாட்டான்; எந்தநேரத்திலும் அவனுடைய வெற்றிலைபாக்குப்பையில் ஒருகட்டுவெற்றிலையும்,அரைவீசை பாக்கும், ஒருவீசை புகையிலையுமிருக்கும். அவன் கல்யாணத்தை முற்றிலுமே வெறுத்ததாகவும், அதனாலேயே தனக்குப் பலதெய்வங்கள் பிரசன்னமாயின வென்றும் நடிப்பான். ஆனால், உண்மையில் அவனுக்குக் கல்யாணமில்லை; அவன் பிரமசாரிதான்; தன் கையினாலேயே மிகவும் ஆசாரத்தோடு உணவுகளைச் சமையல்செய்து சாப்பிட்டுக்கொண்டு வந்தான்; அவனை மலையாளத்துக் கோடங்கி யென்றும், மலையாள பகவதியென்றும் எல்லோரும் கூப்பிடுவார்கள்; அவன் தன்னுடைய அசல் பெயர் பகவதியாசாரியென்று சொல்லியிருந்தான். அப்பெயர் எப்படியிருந்தாலும் மலையாளத்

துக் கோடங்கி யென்றால் அவன்தா னென்பதைச் சிறுபிள்ளைகளும் அறிவார்கள்; அவனுடைய பிரஸ்தாபம் அரண்மனை வரையிலுங்கூட எட்டியிருந்தது. அந்தவூரார் எடுப்பதற்கெல்லாம் குறி கேட்பதற்கு இந்த மலையாளத்துக் கோடங்கியைத்தான் அழைத்துச் செல்வார்கள். தலைவலிக்கும் கோடங்கிதான்; சுரத்திற்கும் கோடங்கிதான்; வயிற்றுவலிக்கும் கோடங்கிதான்; வாயுக் குடைச்சலுக்கும் கோடங்கிதான்; சிரங்குக்கும் கோடங்கிதான்; அம்மைப் பிணிக்கும் கோடங்கிதான்; வாந்திபேதிக்கும் கோடங்கிதான்; மூலரோகத்துக்கும் கோடங்கிதான்; காசரோகத்துக்கும் கோடங்கிதான்; ஒருவர்க்கொருவர் சண்டைவந்தால் அதற்கும் கோடங்கிதான்; உழவு மாடுகள் பிணியினாலிறந்து விட்டால் அதற்கும் கோடங்கிதான்; வியாதிகாரணமாக மனிதரிறந்தாலும் அதற்கும் கோடங்கிதான்; மழையில்லாததற்கும் கோடங்கிதான்; பயிர் விளையாததற்கும் கோடங்கிதான்; சுவர் பலமில்லாமல் வீடு இடிந்து விழுந்தால் அதற்கும் கோடங்கிதான்; தாங்கள் தப்பிதஞ்செய்து உத்தியோகங்களுக்குக் கேடுண்டானால் அதற்கும் கோடங்கிதான்; அறியாமையினால் வியாபாரத்தில் நஷ்ட முண்டானால் அதற்கும் கோடங்கிதான்; கல்யாணத்திற்கும் கோடங்கிதான். இவற்றிற் கெல்லாம் கோடங்கியை யழைத்துக் குறிகேட்கும்போது பேயோட்டுவதற்குங் கோடாங்கிதானென்பதைச் சொல்வானேன்? அதற்கும் முதன்மையாகக் கோடங்கிதான்; தெய்வங் கும்பிடுவதற்கும் கோடங்கிதான்; அங்குள்ளாரெல்லாரும் இப்படியே எல்லாவற்றிற்கும் கோடாங்கியையே அழைத்து ஒவ்வொன்றிலும் வரும் நன்மை தீமைகளை அவனிடம் கேட்டுணர்ந்து, நன்மை யுண்டாவதற்கு அவன் சொல்லும் பரி

காரங்களைச் செய்து, உலகில் வெவ்வேறு காரணங்களைக் கொண்டு இயற்கையாய் நடக்கப்பட்ட நன்மையான காரியங்களெல்லாம் அக்கோடங்கி சொல்லிய பரிகாரத்தைச் செய்ததனுல் உண்டாகின்றன வென்று நம்பிவந்தார்கள். அதனுல் மேலும் மேலும் அங்குள்ளார் அவனையழைத்து அவனுக்குக் காணிக்கை கொடுத்து அவன் கடவுளைக் கூப்பிட்டு அத்தெய்வம் தன்மேல் வந்ததாக நடித்துத் தங்களுக்குவரும் நன்மை தீமைகளைச் சொல்லக்கேட்டு, அவன் வாக்கே தெய்வவாக்கென்று கருதிப் பேதைக்குணமேலிட்டு அவன் சொன்னபடி நடந்துவந்தார்கள். ஊராரே இப்படியிருந்தால் அளவில்லாத மூடத்தன்மை பொருந்திய டபேதார் சுப்பையத்தேவனும், அவன் மனைவியும் கோடங்கி விஷயத்தில் இன்னவிதமாயிருந்தார்களென்பது சொல்ல வேண்டுமா? அவர்கள் அந்த மலையாளத்துக் கோடங்கியை உயிரினும் அருமையாகக் கருதியிருந்தார்கள். அதிலும் சுப்பையன் அரண்மனைச் சேவகனுயிருந்தபடியால் அக்கோடாங்கியிடம் அந்த மதிப்பைக்காட்டி அவனை மிகவும் சினேகிதனுக்கிக் கொண்டிருந்தான். கோடங்கியிடம் எத்தனை பேர் கூடியிருந்தாலும் சுப்பையன் போய்விட்டால் இவன் குறியைத்தான் அவன் முதலிற் பார்க்கவேண்டும். சுப்பையன் அவ்விடத்திலும் தன் அதிகாரத்தைக்காட்டி எல்லோரினும் மேற்பட்டிருந்தான். எல்லாருடைய வீட்டைப்பார்க்கிலும் இவனுடைய வீட்டிலேதான் கோடங்கியடி பலமாயிருக்கும். நாள்தோறும் இவன் வீட்டில் சாப்பிடுவது தவறினுலும் கேடங்கி பார்ப்பதுமட்டும் தவருது; கோடங்கி விஷயத்தில் இவனுக்கும் இவன் மனைவிக்கும் பிடித்திருந்த பைத்தியம்போல வேறுயாருக்கும் பிடிக்கவேயில்லை. இவன் தனக்கு ஒருவேளை மலம் சரியாய்க் கழியாவிட்டாலும் அதற்கும் கோடங்கியை அழைத்து அவன் சாமியைக் கூப்

பிட்டு அதனிடம் அதைப்பற்றிக் கேட்குமாறு அவனிடம் சொல்லுவான்; இதற்கே இவன் இப்படியிருப்பா னென்ருல் மற்ற விஷயங்களில் இன்னவிதமா யிருப்பானென் பதை இதனை வாசிப்போர் தாமே உய்த்துணர்ந்து கொள்ள லாம். இந்தச் சுப்பையத்தேவன் எடுப்பதற்கெல்லாம் கோடங்கியை அழைப்பதால் நாளெல்லாம் அவன், இவன் வீட்டிற்ருனிப்பான்; இரண்டுமூன்றுநாட்களுக்கொருமுறை சுப்பையன் வீட்டில் கோடங்கிக்கு நல்லசாப்பாடு நடக்கும். இவனைக்காட்டிலும் இவன் மனைவி முத்துக்கருப்பிக்குக் கோடங்கியின்மேல் அதிக விருப்பமாதலால் அவள், பதார்த் தங்களை அவனுக்கென்று விசேஷமாகவேசெய்து போடு வாள்; சுப்பையன் வீட்டிவில்லாத சமயங்களிலும் முத்துக் கருப்பி, கோடங்கி தனக்குக் குறிபார்க்குமாறு அவனை வீட் டிற்கழைப்பது வழக்கம்; அவனுக்கு அங்கே குறிபார்க்கும் வேலையில்லாவிட்டாலும் அவள் அவனையழைத்து எந்த நேரமும் அவனேடு சம்பாஷணை செய்துகொண்டிருப்பாள்; இவ்விருவருக்கு முள்ள நேயத்தைப் பார்த்தால் எவர்களும் அதைப்பற்றிச் சந்தேகம் கொள்ளாமலிரார்கள்; முத்துக் கருப்பியினுடைய நேயத்தையும் சுப்பையனுடைய நேயத் தையும் உத்தேசித்தே கோடங்கி, இவர்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டைக் குடிக்கூலிக்குப்பேசி அதில் வசித்து வந்தான்; என்ருலும் எந்தநேரமும் சுப்பையத்தேவன் வீட்டிற்ரு னிருப்பான்; கோடங்கியைத் தினந்தோறும் அழைக்கக வருகின்றவர்கள் சுப்பையத்தேவன் வீட்டிற் குத்தான் வருவார்கள். முடிவாகக் கோடங்கி, சுப்பையத் தேவன் வீட்டிற்கே சொந்தமாகி விட்டானென்று சொல்லு லாம். இவன் தன்வீட்டில் எவ்வளவு நெருங்கியிருந்தாலும் "கோடங்கி அண்ணன் நமக்குச் சொந்தமாகி விட்டார்" என்று சுப்பையன் சந்தோஷமடைவானே யன்றி "இவன்

எந்தநேரமும் நமது மனைவியோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கின்றானே" என்று அதிருப்தியடைய மாட்டான். அவனைத் தனது சகோதரனென்றே எண்ணியிருந்தான்.

இந்த மலையாளத்துக் கோடங்கிபோன்ற பூசாரிகளுடைய தன்மையை யெடுத்தெழுதுவதென்றால் அதுவே ஒரு புத்தகமாகும். ஆயினும் பின்வரும் கதையை வாசிப்போர்க்கு இவர்கள் விஷயம் சிறிதுதெரிந்திருத்தல் அவசியமாதலின், இங்கு நாம் அதனைச் சுருக்கியெழுதுவாம்:—

கோடங்கிகள் எப்பொழுதும் பொய்கூறுவோராவர். இதுபற்றியே தென்னாட்டார் இந்தக் கோடங்கியென்னும் பெயரை 'கோள்-தங்கி' எனப்பிரித்து, 'கோள்-பொய்யானது, தங்கி-(எப்போதும்) தங்கப்பெற்றவன்' (அதாவது பொய்சொல்வோன்)' என்று பொருள் கூறுவார். உண்மையிலேயே இவர் பொய்கூறுங் காரணத்தைப்பற்றியே ஆதியிலிருந்து இவர்களுக்கு இந்தக் கோடங்கியென்னும் காரணப்பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. இவர்கள் இந்தப் பொய்கூறுந் தொழிலை நடத்திவருவது இப்பொழுது மட்டுமன்று; பண்டைக் காலங்களிலும் நடத்தி வந்திருக்கிறார்களென்பது விளங்குகின்றது. இதனை, ஐந்திணைக் கோவை முதலாகிய நூல்களில் 'வெறி விலக்கு' என்னுந் துறையில், தலைவிக்குண்டான காதல்மயக்கத்தை, 'இது பேயினால் நேர்ந்ததாம்' என்று கருதிய செவிலி அக்கருத்தினை மனத்திலடக்கி வைத்துக்கொண்டு பூசாரியை யழைத்து அவனிடம் 'எங்கள் பெண்ணின் மயக்கம் எதனால் நேர்ந்தது?' என்று கேட்க, அவன், அவள் உள்ளத்தி லிருப்பதைத் தெரிந்துகொண்டு அதை யனுசரித்தே தன்மீது தெய்வம் வந்ததாக நடித்து, 'இதுபிசாசால் வந்தபிசகு' என்றும், 'இது தீரவேண்டுமானால், எனக்கு நீங்கள் ஆடு பலியிடவேண்டும்' என்றும் சொல்ல, அதைக்கேட்டுணர்ந்த

பாங்கி, தலைவியினுடைய நிலைமையை யுணராமல் அவன் சொன்ன பேதைமையான வார்த்தையைப் பற்றிப் பரிக சித்ததாகப் பூசாரியின் செய்கை சொல்லப்படுவதாற் காண லாம். இதற்குதாரணமாகத் திருவெங்கைக்கோவை-பாங்கி வெறிவிலக்கலில்,

"வீட்டை யுவந்து தருவார் திருவெங்கை வெற்படுத்த
காட்டை விரும்பி யுறைதெய்வ மேயெங்கள் கன்னிபடும்
பாட்டை நினைந்திலை வாளா வுலகிற் பலர்விரும்பும்
ஆட்டை விரும்பினை நன்றோ விதுசொல் லறிவினுக்கே"

என்னும் பாங்கிகூற்றினை உய்த்துணர்க. கோவை புனைந் துரையாயினும் பண்டைக்காலவியலை யுணர்த்துமாதலின் இதைக் கொண்டு ஆராயுமிடத்து இத்தொழிலானது, பேதைமை மிகுந்த ஸ்திரீகளுக்கிடையிலும் புருஷர்களுக் கிடையிலுமே அறிவின்மையால் நடக்கக்கூடியதாகத் தெரி றது. என்றாலும், பிரயோசனமின்றி உலகத்தில் ஒன்று உண் டாகமாட்டாதாதலின், நோய் முதலியவற்றால் சங்கடப்படு வோர்க்கு மற்றையர் பொய்யாகவேனும் 'இத்துன்பம் ஒரு பேயின் செய்கையால்வந்தது' எனச்சொல்லி அதற்கு அவர்கள் சாந்தி செய்யுமாறு புரிந்தால் அந்நோயாளியின் மனம் அதனால் திருப்தி யடைவது காரணமாக அவர்கட்குச் சௌக்கிய முண்டாகுமென்பதை யுத்தேசித்து ஆதியில் பெரியோர்கள் இத்தொழிலை யேற்படுத்தி யிருக்கலாம்; அல்லது மெய்யாகவே சில மகான்கள் மனத்தை ஒன்றுபடுத் தித் தெய்வதத்துவத்தை யடைந்து சத்தியமாக மனிதர்க்கு நடந்தவற்றை யெடுத்துக்கூறித் திருப்தியை யுண்டாக்கி வந்து அதனை மேற்கொண்ட பிற்பட்ட காலத்தவர் அவ் விதநிலைமையை அடையமுடியாமல் அதில் இவ்வாறு நடிப்பு வேலையைச் செய்யப் பிரவேசித்திருக்கலாம். எவ்விதமானு லும் இந் நடிப்புத்தொழில் புத்திமான்கள் வெறுத்து நிந்திக்

கத்தக்கதேயாகும். இத்தொழிலினால் இக்காலத்தில் ஜனங்களுக்குப் பல விடங்களில் பொருள் நஷ்டமும், மானக்கேடும் நடந்துவருகின்றன. இது மிகவும் ஒழுங்கீனமான தொழிலென்பதற்கு, கோடங்கிகள் படிப்பில்லாதவர்களும், மதியீன முள்ளவர்களும், அநாகரீக முள்ளவர்களும், தாழ்ந்த ஜாதியார்களுமாயிருப்பதே முக்கிய சாக்ஷியாகும். இந்தக் கோடங்கிகளில் பல வகுப்பாருண்டு:—

1. "நாம் இப்பொழுது தெய்வம் வந்ததாக நடித்து மனிதரை ஏமாற்றுகிறோம்; நம்முடைய கோடங்கித்தொழிலில் ஒன்றுமில்லை" என்று தங்கள் உண்மை நிலையினைத் தெரிந்துகொண்டு, வேண்டுமென்றே தங்கள் வாய்ச்சமர்த்தால், தங்கள்மீது பெரிய மருள்வந்ததாக நடித்துப் பிறர் மனத்தி லிருப்பதை அவர்கள் முகக்குறிப்பாலும், வாய்மொழியாலுமே வெகு சாமர்த்தியமாகத் தெரிந்துகொண்டு அவர்களுக்குத் தெய்வமே சொல்வதுபோலச் சொல்லி நம்பிக்கை யுண்டாக்கி, அதன்மேல் தாங்கள் சொல்வனவெல்லாம் தெய்வவாக்குப் போன்றிருக்கு மாதலால் மிகவும் ஆர்ப்பரிப்போடும், அளவற்ற ஆங்காரத்தோடும் வாயில் வந்தவற்றை யெல்லாம் சொல்லி அவர்களை ஏமாற்றி அவர்களிடம் பொருள் பறிப்பவர் ஒருவகுப்பார். இவர்கள்தாம் பெரிய மோசக்காரருட் சேர்ந்தவர்கள். இவர்கட்குச் சுய ஞானம் சிறிதுண்டு. சிலமாதர்க்குப் பிடித்த பேயை ஓட்டுவதாகச்சொல்லி அப்பெண்களை வசப்படுத்தி அடித்துக் கொண்டு ஓடுகின்றவர்கள் இந்த வகுப்பிற் சேர்ந்தவர்கள் தாம். இவ்வகுப்பார், தங்களுக்குப் படிப்பிருந்தாலும் இல்லாவிட்டாலும் மிக்க சாமர்த்திய சாலிகளாகவே யிருப்பார்கள். அநேகமாய்ச் சிறிது எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவே யிருப்பார்கள். இவர்களுடைய மந்திரங்களும், தந்திரங்களும் அளவிடற்கரியனவாம்.

2. உடுக்கையடித்துத் தாங்கள்தெய்வத்தை ஸ்தோத்திரஞ்செய்து அழைப்பதினால் அத்தெய்வம் தங்கள்மேல் மெய்யாகவே வருமென்று நம்பி, அதில், மனவோர்மையும், அத்தெய்வத்தின் மீது பக்தியுங்கொண்டு உடுக்கடித்துத் தேவதுதிபாடித் தேகம் சிலிர்த்து, மெய்ம்மறந்து ஒருவித மான மருளேறி மனிதர்க்கு வரும் நன்மை தீமைகளை அம் மயக்கத்தோடு சொல்லி அவர்களிடம் பணம் வாங்குவோர் ஒருவகுப்பார். இவர்கள் சொல்வனவற்றில் கொக்கின்மீ தெறிந்த உண்டைபோல் சில பலிக்கும், பெரும்பான்மை யன பலிக்காமற் போவது முண்டு. இவர்கள் மூடபக்திக் காரர்கள்; இவர்களிடத்தில் மோசமில்லை. என்றாலும் இவர் களுஞ் சிறிது விவேகமற்றோர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தாம்.

3. மேற்குறித்த மோச எண்ணமின்றி, மகாமூட சிகா மணிகளாகி, தெய்வம் வந்ததாக நடிப்பதற்கும் சக்தியில்லா மல் உடுக்கைத்தட்டி முகத்தைச் சுளித்து, வாயைநெளித் துச் சாமி யழைப்புப் பாட்டைப்பாடி வாய்க்கு வந்ததை யெல்லாம் உளறி மத்தியில்மத்தியில் "ஆமென்றால் சொல்லு அல்லவென்றால் தள்ளிவிடு" என்று குறிகேட்போரைப் பார்த்துச்சொல்லிக் கேட்போராகிய பேதையர் அவற்றுள் சரியாயிருக்கும் வார்த்தைகளை யெல்லாம் மிகவும் உயர்வாக வும், பயத்தோடும் எடுத்துக்கொண்டு அவற்றிற்குச் சந் தோஷித்துத் தமக்குப் பொருள்கொடுக்க வாங்கித்திரி வோர் ஒருவகுப்பார். இவர்களும் இவர்களை விரும்புவோ ரும் வடிகட்டியெடுத்த மடையர்கள். இவ்வகுப்பாரை மிகப் பேதைகள்தாம் விரும்புவார்கள்; மற்றவர்கள் "இவர் குறிசொல்வதில் கெட்டிக்காரரில்லை" என்று தள்ளிவிடுவார் கள். இவர்களாலும் அதிக மோசமில்லை.

இந்தமூன்று வகுப்பாருள்ளும் முதலிற் சொல்லப்

பட்ட வகுப்பார்தாம், அறிவுடையோர் மிகவும் வெறுக்கத் தக்கவர். அவர்கள் வலையிற்சிக்கிய பேதைகளெல்லோரும் அவர்களுடைய வாக்குத் தெய்வவாக்கென்றே பயத்தோடு அதனைக்கேட்டு நடப்பார்கள்; மகாவீரசூர பராக்கிரமமுடையவர்களும் அவர்கள் மருளாடும்போது தங்களை உதைத்தாலும், அடித்தாலும், குடுமியைப் பிடித்திழுத்துச் சுழற்றினலும் மிகப்பொறுமையோடு அவற்றை யெல்லாம் சகித்துக் கொள்வார்கள். இவ்விசேஷங்களை யெல்லாம் இக்கதைமுடிவில் விரிவாகக் காணலாம். இவற்றை யெல்லாம், மனிதர் சகித்துக் கொள்வதற்கு அவர்களின் மூடமே காரணம். மனிதர்க்கு மூடமிருந்தாலும், வெவ்வேறு காரணங்களால் வரப்பட்ட துன்பத்திற்கு அந்தந்தவழிகளில் அவர்கள் பொருளைச் செலவிடாமல் எடுப்பதற் கெல்லாம் பூசாரிவிஷயத்தில் செலவிடும் பணம் வீணேயாகும். அவர்களால் நல்ல வழியிற் சம்பாதிக்கப் படாத பொருள்தான் இப்படிப்போகும். இந்தப் பேதைமைத் தொழில் வெளிநாடுகளில் உள்ளோரிடத்து நடப்பது இயற்கையெனினும், மிகவும் நாகரீகம் பொருந்திய பட்டணங்களி லுள்ளவர்களிடத்திலும் மிகுதியாய் நடந்து வருகின்றது; அவற்றுள்ளும் சென்னையில் உள்ளாரிடம் விசேஷமாய் நடக்கக் காண்கின்றோம். இதுமனத்திற்கு மிகவும் விசனத்தை உண்டாக்குகிறது. இவர்களுள் சில புத்திமான்களும் இதனை விரும்பும்பேதைப் பெண்கள் பேச்சைக்கேட்டு வருங்காலபலனை யுணர்தற்குப் பூசாரிகளை யழைப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாம்! சிலர் நோய்வந்தவுடன் அதற்குச் சிறந்த வைத்தியரிடம் மருந்துவாங்கிச் சாப்பிட்டு அது உடம்பிற்சென்று வியாதியைத் தணிக்குமட்டும் பொறுத்திராமல், அது தன் குணத்தைச் செய்வதில் அரைகுறையா யிருக்கும்போதே "வியாதிமருந்தினல் தீரவில்லை; இது பேயினலுண்டான

கெடுதியே" என்று ஓடி ஒரு ஏமாற்றுக்காரப் பூசாரியை யழைத்துவந்து, அவன் அதற்குக் கழிப்புச்சுற்றிப் போடுவ தற்குப் பத்திருபது ரூபா செலவிட்டு அவனால் அதை நிறை வேற்றுவார்கள். அச்சமயத்தில் முன்சாப்பிட்ட மருந்தினால் வியாதி நீங்கிச் சௌக்கியமாகும். அவ்வாறானது பூசாரி யினால் ஆனதாக அவர்களால் கருதப்படும். அதனால் அவர் கள் அவனுக்கு இருபது முப்பது ரூபா கொடுத்து அவனை அனுப்பிவிட்டு உண்மையில் சௌக்கியப்படுத்தின வைத் தியனுக்கு ஒன்றிரண்டு கொடுப்பார்கள். இவர்களுடைய இந்த மூடத்திற்கு என்னசெய்யலாம்? உபயோகமற்ற விஷ யங்களில் நம் தேயத்தாருக்குள்ள மயக்கம் போன்றது வேறெத்தேயவாசிகளுக்கும் ஏற்படுவதில்லை. இன்னும் இக்கோடங்கிகளின் விஷயத்தை எடுத்தெழுதுவதென்றால், அதுவே ஒரு புத்தகமாகும்; அன்றியும், இதில் அதன் விரி வை நாம் எழுதின், விஷய வளர்ப்பின்றிக் காரியத்தை முன் னுக்கிக் காரணத்தைப் பின்னே சொல்லி மனத்தை இழுக் கும் கதைகளைப்படிக்கும் விருப்பமுள்ள புது நாகரீக மனி கள் அதைப்பார்த்து "இதை எழுதின மனிதன் வீண் விஷ யத்தை வளர்க்கிறான்; இக்கதை உபயோகமானதாயில்லை; மிகவும் துருப்பிடித்து விளக்கமில்லாமல் கிடக்கும் இரும் பைக் காந்தம் இழுப்பதுபோல் நம்முடைய மனத்தை இது இழுத்துக்கொண்டு போகவில்லை" என்று இதனை நிந்திப் பார்கள். ஆதலின் நாம் இதை இம்மட்டோடு நிறுத்திக் கொண்டு எடுத்த கதையை எழுதத் தொடங்குவாம்.

6-வது அத்தியாயம்.

சுப்பையத்தேவனைச் சனி தொடரல்.

இவைநிற்க; மேற்கூறியபடி மலையாளத்துக் கோடங்கி யோடு சுப்பையத்தேவனும் அவன் மனைவி முத்துக்கருப்பி

யும் சிநேகமாய் வாழ்ந்துவருங் காலத்தில் அந்தச் சுப்பை யனுக்குக் கெட்டகிரக திசையானது நடக்க ஆரம்பித்தது; அதனுடு விகடக் குருசாமி செய்துபோன சபதமும், வசை கவி மாணிக்கப் புலவருடைய வாக்குப் பலிதமும் நிறை வேறுதற்குரிய காலமும் சமீபித்தது. இந்தக் காரணங்களால் அதற்கு முதல் வருஷத்தில் வில்லாபுரத்தில் அவனுக்குச் சொந்தமாயிருந்த நிலத்தில் அவனுல் செய்யப்பட்ட பயிர் விளையாமல் சாவியாய்ப் போயிற்று. அச்சமயத்தில் அவன் செய்திருந்த சில தப்பிதங்களை முன்னிட்டு அவனுக்குச்செல் லவேண்டிய இரண்டு மூன்றுமாதச் சம்பளம் மேலதிகாரி களால் கொடுக்கப்படாமல் அபராதமாகப் பிடிக்கப்பட்டிருந் தது. பகற் கொள்ளையாகிய வரும்படியும் அவனுக்கில்லா மற் போயிற்று. இவை இவ்வாருகவே அவனுடைய வீட் டில் சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டமேற்பட்டிருந்தது. முத் துக்கருப்பி பெருந் தீனிக்காரியாதலால் தனக்கு அதிகத் தீனி கிடைக்கவில்லை யென்று தினந்தோறும் புருஷனைத் திட்டிக்கோபித்து மொறுமொறுத்துக்கொண்டு வரத் தலைப் பட்டாள். அவளுடைய கோபத்திற்கஞ்சிச் சுப்பையன் பலவிடங்களினும் சென்று பணத்தைக் கடனுக வாங்கி வந்து செலவிட்டு ஜீவனத்தை நடத்தினுன். எனினும், அவனுடைய கஷ்டம் தீரவில்லை. அதன் பொருட்டு முத் துக் கருப்பியிடம் நிந்தைப் பேச்சு வாங்கிக் கொள்ளாமல் அவன் ஒருநாள் தள்ளுவது ஒரு யுகமாயிருந்தது. அவன் வீட்டில் கஷ்டம் அதிகப்பட அதிகப்படச் சுப்பையன் கோடங்கி மூலம் அதனைத் தீர்த்துக்கொள்ள அதிக முயற்சி செய்தான். அதனுல் அவன் வீட்டில் மலையா ளத்துப் பூசாரிக்கும் கிராக்கி அதிகமா யேற்பட்டு வந்தது; நாள் தவறினும் சுப்பையன் வீட்டில் உடுக்கடி தவறுவ தில்லை; அங்கே ஒன்று மில்லாமலிருக்கும்போதே அது

தவருமல் நடந்துவரும்; கஷ்டம் மிகுதியாய் வந்தபோது நடக்காமலிருக்குமா ? "வெறும்வாயை மெல்லுகிறகிழவி ஒருவாய் அவல் அகப்பட்டால் விடுவாளா?" சுப்பையன் வீட்டில் வெகுவிமரிசையாய் வெறியாட்டு நடந்து வந்தது; கோடங்கி மலையாள பகவதியும் தன்னுடைய சாமார்த்தியத்தையெல்லாம் காட்டி "எரிகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம்" என்றபடி சுப்பையனுக்கு நேர்ந்த அந்த இடைஞ்சலில் அகப்பட்டவரையில் அவனிடம் பொருளைப் பறித்து மேலும் பெருங் கொள்ளைக்கெல்லாம் அடிப்போட்டுக் கொண்டிருந்தான். சுப்பையத்தேவன், தினந்தோறும் பூசாரியைக் கொண்டு குலதெய்வத்தையழைக்கச் செய்து, அது சொல்வதாக அப்பூசாரி சொல்வதைப் பக்தியோடு கேட்டு, அவன் முன்னே காணிக்கை வைத்துக் கும்பிட்டு வீழ்ந்து வந்தான். எனினும் அவனுடைய கஷ்டம் ஒடுங்கவில்லை; மேலும் மேலும் வளர்ந்து கொண்டே யிருந்தது. "உடுக்கடிபட்ட வீடும் நெருப்படி பட்ட காடும் உருப்படியாகா" என்ற சொல்லை அவன் சத்தியவாக்காக்குதற்கும், பின்னல் அவன்வீடு கெடப் போவதற்கும் அறிகுறியாய் உடுக்கையினொலி அங்கு வெகு துடுக்காய் நடந்தது. "பிறவிக் குணத்திற்கு மருந்து கொடுத்தால் அது தீருமா?" சுப்பையன் என்ன என்னவோ நடத்தியும் அவனுக்குச் சுகமுண்டாக வில்லை. தினம் அவனுக்கு ஆகாத சொப்பனங்களும், சகுனத்தடைகளும், எங்குச் சென்றாலும் காரியக் கேடுகளுமே நடந்து கொண்டிருந்தன; பலவிடத்தும் பகைகள் அதிகமாயின; அரண்மனையிலும் அவனைப்பற்றிப் பல தகுந்த மனிதர்கள் குறைகூறத் தொடங்கி விட்டார்கள். இவை யெல்லாம் தீருதற்கு அவன் கோடங்கியிடம் குறி கேட்டுக் கொண்டிருந்தானே யன்றி, 'ஊரார்க்கு நாம்

தீங்கு செய்ததால் நமக்குத் துன்பம் வரத்தொடங்கியிருக்கின்றது' என்பதைக் கிஞ்சித்தும் உணரவில்லை. தனக்கு வேண்டிய அனுகூலங்கள் எல்லாம் பூசாரிகைக்குளிருக்கின்றன வென்றே எண்ணி வந்தான். அவனுக்கு மேலும் தாங்கக் கூடாத துன்பம் வரும்சமயம் சமீபித்தது.

தேளின் திருக்கூத்து.

அக்காலத்தில் ஒருநாள் சுப்பையன் காலையிலெழுந்து ஸ்நானபான மெல்லாவற்றையும் முடித்துக்கொண்டு, தன் மனையாளாகிய முத்துக்கருப்பி அன்பினுற் கொடுத்த வெற்றிலைச் சுருளை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு அரண்மனைக்குச் செல்வதற்கு அவசரமாய், ஒரு ஆணியில் மாட்டி வைத்திருந்த தன் சட்டையை எடுத்துத் தேகத்தில் மாட்டினுன். ஐயோ! அவன் துர்ப்பாக்கிய திசையைப்பற்றி நாம் என் சொல்வது! கெட்டகாலத்திற்கு ஒற்றுமையாக அந்தச்சட்டைக்குள் ஒருதுஷ்டத் தேளிருந்து அந்த முட்டாளுடைய முதுகிற் பட்டுப்பட்டென்று கெட்டியாய்க் கொட்டிவிட்டது. உடனே அவன் முகத்தைச் சுழித்து ஆ வென்று கதறிக்கொண்டு தன் மனையாளைக் கூப்பிட்டு, "அடியே முத்துக்கருப்பி! ஏதோ முதுகிற் கடித்து விட்டது; சீக்கிரம் ஓடிவந்துபார்! பார்!!" என்று சொல்லிக்கொண்டே முதுகை நெளித்து அங்குமிங்குமாய்த் துள்ளினுன். அப்போது முத்துக்கருப்பி அடுப்பில் எதையோ வைத்து நெருப்பை எரித்துக் கொண்டிருந்து, நெருப்பு அதிகமாயிருக்கிறதென்று இரண்டொரு கொள்ளிக் கட்டைகளைப் பிரித்து எடுத்து அவற்றில் தண்ணீர் விட்டு நெருப்பை அவிக்கச் சென்று கொண்டிருந்ததால், சுப்பையனுடைய ஆபத்தைக்காட்டும் சப்தம் காதில் புகுந்தவுடனே, அந்தக் கொள்ளிக்கட்டைகள் கையிலிருந்ததை மறந்து, சிறிதும் அவற்றின் ஞாபகமில்லாமல் இடது கையி

விருந்த அக்கொள்ளிக் கட்டைகளுடன் மிகுந்த பதற்ற மாக ஓடி வலதுகையால் அவன் சட்டையைப் பிடித்து, படக்குப் படக்கென்ன உதறினாள். தேளானது சட்டையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்த படியால், அவள் பலங்கொண்டு உதற உதற அது கீழே விழாமல் உதறுவதால் தொந்தாவுற்று மேலும்மேலும் கோபம் அதிகரித்துச் சுப்பையன் முதுகில் கொட்டின விடத்திலேயே பத்துப் பதினைந்து முறை பட்டுப் பட்டெனக் கொட்டி விட்டு, முத்துக்கருப்பி உதறினவிசையால் பக்கத்திற் படுக்கப்போட்டிருந்த சுப்பையனுடைய ஆண் குழந்தையின் மீது போய்விழுந்து இரண்டுமூன்று கொட்டுக் கொட்டிவிட்டது. அவ்வாறு கொட்டவே குழந்தை வீறிட்டழுது துடி துடித்து அங்குமிங்கும் புரண்டது. அதனால் அந்தத் தேள் நசுங்குண்டிறந்தது. இந்தக் கலவரத்தில் முத்துக்கருப்பியின் இடதுகையிலிருந்த கொள்ளிக்கட்டைகள் சுப்பையன் கட்டியிருந்த அரைவேஷ்டியிற் பட்டதால் அதில் பொசு பொசுவென்று நெருப்புப்பற்றிக்கொண்டது. இதற்குள் தேள் கொட்டினதைப் பொறுக்கமுடியாமல் அவன் கதறிய சப்தத்தாலும், அவன் குழந்தை அழுத இரைச்சலாலும் பக்கத்து வீட்டுக்காரராகிய ஆண்பாலர், பெண்பாலர், குழந்தைகள் ஆகிய அனைவரும், "ஓகோ! டபேதார் வீட்டில் ஏதோ அபாயம் நடந்துவிட்டது" என்று ஓடிவந்து சுப்பையன் வீடு கொள்ளாதபடி அங்கே நிறைந்துவிட்டார்கள். அச்சமயத்தில் அவன் வேஷ்டியிற் பட்ட நெருப்பு அதிகமாய்ப் பற்றிப் புகைந்து எரிந்து எரிந்து முழங்காலுக்குமேல் வந்து அவனைச் சுட்டுவிட்டது. அவனுக்குத் தேள் கொட்டினதாலுண்டான வேதனையைக் காட்டிலும் நெருப்புச் சுட்டதால் நேர்ந்த வேதனை அவனால் சகிக்கமுடியாததாயிற்று. ஐயோ! சுப்பையன் என்ன செய்வான் பாவம்! வேஷ்டியை

அவிழ்த்தெறிந்துவிட உத்தேசித்தான்; சுற்றிலும் பெண்கள்கூட்டம் அதிகமாயிருந்தபடியால் 'மானம்போய்விடுமே' என்ற பயத்தால் அவனுக்கு அது கூடாமற்போயிற்று. அதனால் அக்கினி வேதனையைச் சகிக்கமுடியாமல் அவன், கரையிலெறியப்பட்ட கெண்டை மீனைப்போன்று துள்ளினான்; துடித்தான்; ஆடினான்; ஓடினான்; கைகளையும் கால்களையும் உதறினான்; வாயால் ஒன்றும் சொல்வதற்கியலாமல் உளறினான்; தேகத்தை நெளித்தான்; முகத்தைச் சுளித்தான்; பல்லைக்கடித்தான்; உதட்டைமடித்தான்; கையினால் நெருப்பைத் தேய்த்தான்; வாயினால் ஊதினான். அப்போது அவனுடைய ஒருபக்கத்து மீசையில் தீப்பற்றி யெரிந்து அது மொட்டையாய்ப் போய்விட்டது. காலிலும் பலவிடங்களில் நெருப்புப்பட்டுக் கொப்புளங்களுண்டாயின. அதற்குமேல் அவனால் துன்பம் சகிக்கக்கூடவில்லை. அவன் கௌபீனம் கட்டியிருந்தபடியால் வேஷ்டியை அவிழ்த்தெறிவதற்குச் சிறிது துணிந்து "உயிரினும் மானமென்ன பெரிதா? ஆபத்துக்குப் பாவமில்லை; நாம் உள்ளுடை கட்டியிருப்பதால் ஆடையை யவிழ்த்தெறிந்து விட்டாலும் தோஷமில்லை; இங்கு வந்திருப்பவர்களெல்லோரும் நமக்குத் தாய்க்குச் சமானமானவர்கள்தாம்; இப்போது இதன்பொருட்டு எவரும் நம்மைப் பரிகாசிக்கமாட்டார்கள்" என்று விரைந்து வேஷ்டியை அவிழ்த்தெறிந்து விட்டு, உள்ளுடை கட்டி யிருந்தும் பெண்களுக்கு முன்னே நிற்கக்கூடாதென்று உடனே எதிரிலிருந்த அறை வீட்டிற்குள் தனியாக ஓடினான். அந்தச் சமயத்தில் அங்கு வந்திருந்த குடும்ப ஸ்திரீகளெல்லோரும் "ஐயோ! டபேதார் அண்ணனுக்கு என்ன கஷ்டகாலம் நேர்ந்துவிட்டது பார்த்தீர்களா!" என்று அவன் நிலைமைக்குத் துக்கப்பட்டுக் கண்ணீர் விட்டார்கள். ஆனால் அக்கூட்டத்தோடு நின்ற

சாரதாம்பாள், அம்மாக்கண்ணு என்னும் இரண்டு தாசிகள் மாத்திரம் மனதிற் சிறிதும் இரக்கமின்றிச் சுப்பையனிடத்தில் நடந்த விநோத துன்பத்தைப் பார்த்துக் கைகொட்டித் தேகம் குலுங்கக்குலுங்க வாயில் துணியை வைத்துக் கொண்டு சிரித்தார்கள். இவர்கள் செய்த காரியம் "நண்டுக்குத் திண்டாட்டம் நரிக்குக் கொண்டாட்டம்" என்ற பழமொழியிலடங்கிய செய்கை போன்றிருந்தது. இவர்கள், தங்களிடத்திற்கு வருகின்றவர்களுக்கு என்ன ஆபத்து நேர்ந்தாலும், எவ்வகைப் பொருள் நஷ்டமானாலும் அவற்றிற்குச் சிறிதும் நெஞ்சிரங்காமல், அக்கஷ்டங்கள் நேர்ந்த சமயத்தும் அவரிடத்தில் பொருள்பறிக்க வழிதேடும் சிந்தையுடைய பரத்தையர் வகுப்பைச் சார்ந்தவர்களாதலின் "ஜாதிக்குத்தகுந்த புத்தி" என்றபடி இயற்கையிலேயே வன்னெஞ்சுடையவர்களாகி இவ்வாறு சுப்பையனுக்கு ஆபத்து நேர்ந்த காலத்திலும் மனதிரங்காமல் தங்கள் ஜாதிக் குணத்தையே காட்டிவிட்டார்கள்.

இது நிற்க, ஆடையை யவிழ்த்தெறிந்துவிட்டு அவதிப்பட்டு அறைவீட்டிற்குள் ஓடிய சுப்பையன், முன்னே நெருப்புப்பற்றிய வேஷ்டியை அவசரப்பட்டு அவிழ்த்து ஒருபக்கத்தில் வீசி யெறிந்த விசையால் அவன் மேலே மாட்டியிருந்த சட்டையிலும் அக்கினி பற்றிக்கொண்டது. அதனால் அவன் அறை வீட்டிற்குள் நுழைந்தவுடன் அவனுடைய விலாப்புறங்களில் இரண்டு மூன்று இடங்களில் தீச்சூடு பட்டுவிட்டது. அங்ஙனம் படவே அவன், "ஆகா!" என்று துடித்து நெளித்துக்கொண்டு சட்டையைப் பார்த்தான். அவ்வாறு பார்க்கையில் அச்சட்டையிலும் அக்கினியானது அதிகரித்துவிட்டது. அதைக் கண்டவுடனே, அவன், "அடடா! பெரிய மோசமல்லவா வந்துவிட்டது" என்று சட்டையைச் சீக்கிரம் கழற்ற முயன்று பார்த்தான்.

அதில் பிருவாயுள்ள பொத்தான்கள் மாட்டப்பட்டிருந்தன வாதலால் அவனால் அதனைத் துரிதமாய்க் கழற்றல் முடியவில்லை. அப்போது அதைக் களைய அவனுக்கு வேறொரு மார்க்கமுந் தோற்றவில்லை. அதன்மேல் அவன், அச்சட்டை உயர்ந்ததாயிருந்ததால் "இது பணம் பெற்ற சட்டையாயிருந்தாலு மிருக்கட்டும்; இந்தச் சமயத்தில் இதைப் பெரிதாக எண்ணக்கூடாது" என்று உடனே அதைத் தாறுமாறுக்கிக் கிழித்தெறிந்து விட்டான். பின்பு அவன் கோவணத்தோடு அறைக்குள்ளிருந்து தன் உடம்பைப் பார்த்தான். அவனுடைய பாதமுதல் இடுப்புவரையிலும், முதுகிலும் பற்பல விடங்களில் நெருப்புப்பற்றிக் கொப்புளங்களாகி வெடித்து அவற்றிலிருந்து நீர்வடிந்தது. அவன் அதைக் கண்டவுடனே, அந்தோ பாவம்! அவனுக்கு எரிச்சலுண்டாகிவிட்டது; எரிச்சலென்றால் ஒருவிதமான எரிச்சலன்று; தேளெரிச்சல் ஒருபக்கமும், நெருப்பெரிச்சல் ஒருபக்கமுமாயிருந்து அவனை வாட்டி யெடுத்துவிட்டன; அவன் அவற்றின் வேதனையைச் சகிக்கக் கூடாதவனாய் அறைக்குள்ளிருந்தபடியே ஓவென்றலறினான். அவனைக் காட்டிலும் தேளினால் கொட்டப்பட்ட அவன் பிள்ளையானது அதிகமாய்க் கதறிற்று. அவனுடைய மனைவி, இவற்றையெல்லாம் பார்த்து மனஞ் சகிக்காமல் திடீரென்று கீழே வீழ்ந்தழுது கதறினாள். அவளுடைய அரற்றுதல் பலமாயிருந்தது. இம்மூவருக்கும் ஜனங்கள் தேறுதல் சொல்லிக்கொண் டிருந்தார்கள். அதனாலுண்டான இரைச்சல் எல்லாவற்றினும் மேற்பட்டிருந்தது. ஆகவே சுப்பையன் வீட்டில் அரைநாழிகைக்குள் பெருங் கூக்குரலுண்டாகிவிட்டது.

இவ்வாறாகவே சுப்பையன் அந்தச் சமயத்தில் நடந்த துக்க சம்பவங்களைப்பற்றி அதிகமாய் விசனிக்க வில்லை; அந்

தக்கொடிய தாசிகள் தன்விஷயத்தில் இரக்கமின்றிச் சிரித்ததைப்பற்றியே அவனுக்கு அளவற்ற விசாரமுண்டாகியிருந்தது; இருந்தாலும், அச்சமயத்தில் அவனுக்கு அரண்மனை அதிகாரம் குறைந்திருந்தது காரணமாக ஒன்றும்செய்யக்கூடாம லிருந்தபடியால், அவன் " இஃதிருக்கட்டும்; இப்பொழுது நமக்கு நல்லகாலமில்லை; அதிகாரமான சமயம் வரும்போது இந்தச் சாரதாம்பாளையும், அம்மாக்கண்ணையும் நாம் ஒருகை பார்த்துக்கொள்ளுவோம்; எஃதெப்படி யிருந்தாலும் தாசிகள் அம்மம்மா! மகா கொடியவர்கள்; இவர்களுடைய தன்மை இப்பொழுதுதான் தெரிந்தது" என்று தனக்குத்தானே வேதனையோடு சொல்லிக்கொண்டான்.

இவன்செய்தி இப்படியிருக்க, இவன் மேற்சொல்லியவாறு கதறியதைக்கேட்டு அங்கு வந்திருந்தவர்களில் கூட லிங்கம்பிள்ளை, முத்தைய பிள்ளை, குருசாமிக்கோனார் முதலிய சில கனவான்கள் அவனிருந்த அறைக்குட் பிரவேசித்து வேறேவேஷ்டி கொண்டுவந்து சுப்பையன் கையிற் கொடுத்துக் கட்டிக்கொள்ளும்படிசெய்து அவனை வெளியே அழைத்துக் கொண்டுவந்து வாசலில் உட்காருவித்து அவனுடம்பில் அக்கினியாலுண்டான புண்ணுக்குத் தேங்காயெண்ணெய் முதலியன தடவி, எரிச்சலைத் தீர்த்து ஏறிய தேள் விஷத்திற்கும் மந்திரித்து அதைச் சாந்தப்படுத்தினதோடு, அவன் குழந்தைக்கும் சிகிச்சைசெய்து தேள்விஷத்தைத் தீர்த்துச் சுகமுண்டாக்கினார்கள். அதற்குள் நாழிகை பனிரண்டாய் விட்டது. நேரத்தைப் பார்த்ததும் சுப்பையன், " ஆகா! நாழிகை அதிகமாய் விட்டதே; நாம் அரண்மனைக்குப் போகாவிட்டால் நம் சம்பளத்தில் மண் விழுந்து போகுமே; இப்பொழுது அரண்மனையில் உள்ளவர்கள் நம்மைப்பற்றி வெறுப்படைந்திருக்கிறார்களே; இன்று நாம் வேதனைக்கஞ்சி அங்குப்போகாம லிருந்துவிட்டால், இக்

காரணத்தைக் கொண்டே அவர்கள் நம்மை வேலையிலிருந்து நீக்கினாலும் நீக்கிவிடுவார்களே; நம் வேலைபோய் விட்டால் நாம் ஜீவிப்பது மகா கஷ்டமாகுமே; சென்றவருஷம் நெல்லும் விளையவில்லையே; வீட்டிலும் ஒன்று மில்லையே; நாம் அரண்மனைவாசலில் நினைத்தபடி அதிகாரம் செலுத்தினது போக இப்போது நமக்கு இவ்வித கஷ்டகாலம் வந்திருக்கிறதே; நாம் இதற்கு என்னசெய்யலாம்; அது ஒருகாலம் இது ஒருகாலம்; நமக்கு இப்படித் துன்பம் நேர்ந்ததற்குக் காரணம்மட்டுந் தெரியவில்லை" என்று பலவாறுயோசித்து, அங்கு வந்திருந்தவர்களை யெல்லாம் மரியாதையோடு வெளியிலனுப்பிவிட்டு, அரண்மனைக்குச் செல்லும் பொருட்டு வேறே உடுப்பை எடுத்துப்போட்டுக் கொள்வதற்காகக் கண்ணாடிக்கெதிரிற் சென்றான்.

சுப்பையன் மீசைக்கு நாசம்வந்தது.

அடடா! என்னபரிதாபம்! அவன் வேஷ்டியில் எரிந்த நெருப்பை ஊதியமர்த்தும்போது அவனுடைய ஒருபக்கத்து மீசையில் நெருப்பானது பற்றி யெரிந்ததால் அது கருகி மொட்டையாய்ப் போயிற்று என்று நாம் முன் கூறினோமல்லவா! அதை முன் எற்பட்டிருந்த பலவிதக் கலக்கத்தினால் அவன் காணாமல் அப்பொழுதுதான் கண்டான். அதனால் அவனுக்குண்டான விசனத்திற் களவேயில்லை. அத்துக்கத்தால் அவன், "ஆகா! நமக்கு என்ன கஷ்டகாலம் நேர்ந்துவிட்டது! எலுமிச்சம் பழத்தை நிறுத்தும்படியாய் அடர்ந்து வளர்ந்து வளைந்து சுருண்டு நிமிர்ந்திருந்த நமது மீசைக்கும் நாசம்வந்து விட்டதே; இது நமக்கு இனிமேல் வரும் கெட்டகாலத்திற்கு அறிகுறியோ! ஒருபக்கம் மீசையிருக்க மற்றொருபக்கம் மீசை அடியோடு இல்லாமற் போய்விட்டதே; இந்த விகாரத்தோடு நாம்

எப்படி வெளியே செல்வோம்! சீ! சீ!! இதைப் பார்த்தவர்கள் நம்மைப் பரிகசிக்க மாட்டார்களா? இப்பொழுது இருக்கும் ஒருபக்கத்து மீசையையும் நாம் கத்தரித்து விடவேண்டும்; அதனால் முகம் விகாரமாயிருக்கும்; எனினும் எங்கும் ஒரே மொட்டையாயாவது இருக்கும்; ஒரு பக்க மீசையில்லா விகாரத்துக்கு முழுமொட்டை விகாரம் கொஞ்சம் பாதகமில்லாததாகும்; நாம் கருமாதி காலத்தில் செய்யவேண்டிய இக்கிரியை காரணமில்லாமல் இப்போதுதானே நடந்தேறிவிட்டது; இது யான் செய்த தீவினையின் பயனோ; வேறு யார்செய்த கொடும்பாவ பலனோ? அரண்மனை வாசலில் மீசையில்லாத என்னைப் பார்ப்பவர்களெல்லோரும் 'வீட்டில் என்ன விசேஷம்! என்ன விசேஷம்!!' என்று கேட்பார்களே; அவர்களுக்கு நான் என்ன மறுமொழி கூறுவேன்" என்று எண்ணாததெல்லா மெண்ணி, முத்துக்கருப்பியிடம் கத்திரிக்கோல் வாங்கி மற்றொரு பக்கத்து மீசையை வெட்டினான். அந்த விசேஷத்தை முத்துக்கருப்பியும் கண்டு, "ஆகா! என் கணவருடைய மீசைக்குமா மோசம் வந்தது? எல்லாப் புருஷருக்கும் ஒருவிதமான மீசை யமைந்திருக்க, என் புருஷருக்கு மாத்திரம் நூதனமீசை அமைந்திருந்ததே; இந்த மீசையின்மீது ஆசைகொண்டுதானே நான் ஆதியில் இவருக்கு மனைவி யானேன்; இப்போது இவருடைய முகம் மிகுந்த ஆபாசமாய் விட்டதே; இவர் கருமாதிக்காரரைப் போன்றிருக்கின்றாரே; அந்தச் சண்டாளத்தேளல்லவா இவ்வளவு காரியங்களையும் நடத்திவிட்டது; நான் பாவி அந்தக் கொள்ளிக்கட்டைகளை எறிந்துவிட்டு ஓடிவந்தேனில்லையே; அப்படிச் செய்திருந்தால் இந்தக் கஷ்டங்களெல்லாம் நேர்ந்திருக்க மாட்டாவே; துன்பம் தேள்கொட்டு ஒன்றோடு ஒழியுமே" என்று பலவாறு துக்கித்தனள்.

அவளுடைய மொழிகளைக்கேட்ட சுப்பையன், "முத்துக்கருப்பி! நாம் என்ன செய்யலாம்; நமக்கோ இப்பொழுது கஷ்டகாலம் வந்திருக்கிறது; அதை நாம் அனுபவித்துத் தானே தீரவேண்டும்; விசனப்படுவதாலாவதென்ன? நீ விசனப்படாதே" என்று அவளிடம் சொல்லிக்கொண்டே மீசையை வெட்டினான்.

அச்சமயத்தில் மலையாளத்துப் பூசாரியாகிய பகவதி எங்கேயோ திரிந்துவிட்டுச் சுப்பையன் வீட்டிற்கு ஓடிவந்து அங்கே நடந்தவற்றை யெல்லாம் அவனிடம் கேட்டறிந்து தன்னுடைய தொழிலுக்கு அனுசரிப்பாக அச்சுப்பையனை நோக்கி, "அண்ணா! இவையெல்லாம் தெய்வத்தினுடைய கோபத்தினாலே நேர்ந்திருக்கும்; நாம் குறிமுகத்தில் பார்த்தால் நமக்கு எல்லாம் தெரிந்துவிடும்" என்றுரைத்தான். சுப்பையத்தேவனும், முத்துக்கருப்பியும், "ஆமா! ஆமா!! நாங்களும் அப்படித்தான் இவற்றைப்பற்றிக் குறிகேட்க நினைத்திருந்தோம்; இன்னும் இரண்டு நாட்கள் போனபிறகு நாம் குறிபார்க்கவேண்டும்; நடக்கும் காரியங்கள் ஒருமாதிரி யாயிருக்கின்றன" என்று அவனுக்கிணங்கி யுரைத்தார்கள். பூசாரி, "நம் காரியம் பலித்தது" என்று புன்சிரிப்போடு மௌனமாயிருந்தான். பின்பு சுப்பையன் உடுப்பு முதலியவைகளையெல்லாம் அணிந்துகொண்டு தான் ஒருசமயம் பெரிய பதினறடி வேங்கையொன்றைக் குத்தியதற்காக அரசர் தனக்குப் பரிசளித்த ஜரிகைத்தலைப்பாகையையும் எடுத்துத் தலையில் வைத்து டவாலியைமாட்டிப் பிரம்பைக் கையிற் பிடித்து அரண்மனைக்குச்செல்ல மனைவியிடத்திலும் பூசாரியிடத்திலும் விடைபெற்று மேற்கூறியபடி முத்துக்கருப்பியினால் தனக்குக்கொடுக்கப்பட்டு அங்கே நடந்த தடபுடலான காரியங்களிலும் தன்கையை விட்டு நழுவாமலிருந்த வெற்றிலைச்சுருளுடன் விரைந்து வெளியேறி மீசை போன

தைப்பற்றி ஏற்பட்ட வெட்கத்தோடு வீதியில் நடந்தான்.

சுப்பையன் பல்லுக்குப் பங்கம்வரல்.

மேற்குறித்தபடி சுப்பையன் வீட்டைவிட்டு வெளியே வரவும், வையாபுரி என்னும் அம்பட்டன் கத்திப்பையுடன் தலைமயிரை விரித்துப் போட்டுக்கொண்டு அவனுக்கு எதிரில் வந்தான். (அம்பட்டர்கள் சகுனம் இயற்கையிலேயே மிகக் கொடிதெனினும், சிலசமயம் பலிப்பது முண்டு; பலிக்காமற்போவதுமுண்டு; இந்த வையாபுரி சகுனமோ அப்படிப்பட்டதன்று; மனிதர் இவனை எதிரில் பார்த்தால் அவருக்குப் பெருத்த சங்கடங்கள் தவறாமல் உண்டாகும்; ஆதலால் அவ்வூராரெல்லோரும் வெளியிற் புறப்படும்போது இவன் எதிர்ப்பட்டால் 'என்ன தீங்கு நேருமோ!' என்று மிக நடுக்கங்கொள்வார்கள்;) அதனால் இவனைப் பார்த்தவுடன் சுப்பையன் தனக்குத் துன்பம் வருமென்று நடுக்கத்தை யடைந்துவிட்டான். அதனால் அவன், "அடடா! இன்றைக்கு நமக்கு என்ன கஷ்டகாலம் நேர்ந்திருக்கிறதோ தெரியவில்லை; நாம் அரண்மனைக்குப் போகப் புறப்பட்டவுடன் அளவில்லாத துர்ச்சகுனங்களெல்லாம் நேரிட்டு வருகின்றன; முந்தியோ நம்மைத் தேள்கொட்டினது, நெருப்புச்சுட்டது ஆகிய சகிக்கவொண்ணாத் துயரத்தையுடைய பல கெட்ட சகுனங்கள் நேர்ந்தன; இப்பொழுதோ அம்பட்ட வையாபுரி தலைவிரித்த கோலமா யெதிரில் வருகின்றான்; இன்றைக்கு அரண்மனையில் நமக்கு என்ன தீங்கு உண்டாகுமோ!" என்று விசனித்து எப்படியாவது அரண்மனைக்குச் சென்றே தீரவேண்டுமாதலின், அக்கொடிய அம்பட்டனது சகுனத்தை மீறி அப்பால் நடந்தான். அப்படி நடக்குங்காலத்தில் 'தாம்பூலத்தைப் போட்டுக்கொண்டு செல்லலாம்' என்று கருதித் தன்மனைவியாற்

கொடுக்கப்பட்டுக் கையிலிருந்த வெற்றிலைச் சுருளைப்பிரித்து அங்குமிங்கும் பாக்குப்பார்த்த வண்ணமாய் உள்ளேயிருந்த பாக்கைக் கையாற்றடவி எடுத்து வாயிற் போட்டான். அடடா! அவனுக்குநேர்ந்த கஷ்டத்தை என்னென்று சொல்லலாம்! அது பாக்கன்று; ஒருகல். அவன் மனைவி வெற்றிலைச் சுருளை அவசரமாய்ச் சுருட்டி அவனிடம் கொடுக்கும்போது பாக்கைப்போன்றிருந்த உருண்டை வடிவுள்ள கருங்கல்லொன்றைப் பாக்கென்றே நினைத்து அதில் வைத்திருந்தாள். அதுவே அவன் எடுத்து வாயிற் போட்டது. பாக்குக்குப் பதிலாய் அது வாய்க்குட் சென்று விட்டது. அதன்மேல் அவன் மேற்கண்டவாறு அறியாமையால் வாய்க்குள்ளே போட்ட கல்லைப் பாக்கென்றே சந்தேகமற நினைத்துப் பலங்கொண்டு கடித்தான். அதுமிகவும் அழுத்தமுள்ள கல்லாகையால் உடைபடவில்லை. அப்போது அவன், தன்னுடைய கஷ்டங்களையெல்லாம் மறந்து "அடடா! என்ன ஆச்சரியம்! நாம் ஒரு பெரிய சேவகனுயிருந்தும் சிறிதாகிய பாக்கைக் கடித்தல் நம்மால் முடியவில்லையே!" என்று வீராவேசத்தோடு பின்னும் உக்கிரமாய் மூக்கைச் சுழித்துக்கொண்டு அதைக் கடித்தான். அவ்வாறு கடிக்கவே வாய்க்குள் படீரென்று ஒரு சப்தமுண்டானது. அவ்வித சப்தமுண்டானவுடனே அவனுடைய நாவின் ஓரத்தில் இரண்டு மூன்று துண்டுகள் தட்டுப்பட்டன. அவன் அவற்றை நாவினல் தடவிப் பார்த்துவிட்டுப் பாக்குத்தான் மூன்று துண்டுகளாகி விட்டதென்று நினைத்தான். அவ்வாறு நினைப்பதற்கு முன்னரே அவனுடைய வாய்க்குள் சகிக்கமுடியாத வலியும், ஓர் விதமான கைப்புருசியும், அளவில்லாத நீருற்றமு முண்டாகக் கண்டான். வலி அவனல் சகிக்கக்கூடவில்லை. அதனல் அவன், வாயைத்திறந்து எச்சிலை வெளியில் துப்பினன். சிவசிவா! அப்போது

நிகழ்ந்த சம்பவத்தை யாதென்று சொல்லலாம்! அவ்வாறு அவன் துப்பும்போது ஒரு கருங்கல்லும், அவனுடைய இரண்டு பற்களும், இரத்தமும் வீழ்ந்தன. அவன் அக்கல்லைக் கடித்ததால் இரண்டு பற்கள் உடைந்துபோயின. கல்லால் பற்கள் உடைந்துபோனதை அவன் தெரிந்து கொண்டான். அவற்றைப்பார்த்தவுடன், "ஆகா! பாக்கென்று கல்லைக்கடித்துப் பற்களை யிழந்தோமே! இஃதென்ன நமக்குப் பெரிய இழவு நேர்ந்தது. மீசைபோனதுமன்றிப் பல்லுமா போகவேண்டும். மனிதர்களுக்கு ஏற்பட்ட அவயவங்களில் பற்கள் முக்கியமான கருவிகளல்லவா; 'பல்போச்சோ சொல்போச்சு' என்ற பழமொழிப்படி நமக்கு இனிமேல் சுத்தமாகப் பேசுதலும் முடியாதே; இஃதென்ன கொடுமை! முன் ஏற்பட்ட சகுனங்களிலெல்லாம் இது மகா கொடிதல்லவா; ஏதோ இன்னும் வருவதெல்லாம் வரட்டும் பார்போம்" என்று சொல்லிக்கொண்டு எதிரிலிருந்த தடாகத்திலிறங்கி, வாயில் ஜலத்தைச் செலுத்திக் கொப்பளித்துவிட்டு அதைத் துடைத்துச் சுத்தி செய்துகொண்டு போய் அரண்மனை வாசலிற் சேர்ந்து, நடந்தவற்றை நினைத்து நினைத்து விசனித்து ஒருவரோடும் வார்த்தை யாடாமல் உட்கார்ந்திருந்தான்.

சுப்பையன் தலையில் கட்டிடம் இடிந்து வீழ்தல்.

அரண்மனை முகப்புக்கட்டிடம் பல்லாண்டுகட்கு முன் கட்டப்பட்ட பழைய கட்டிட மாதலால் அதன்மேற்பாகம் இற்றுப் போயிருந்தது. அதில் சில விடங்களில் தினந்தோறும் சுண்ணாம்புக்கட்டி செங்கற்றூள் ஆகிய இவைகள் உதிர்ந்து கொண்டேயிருக்கும். அவ்விடங்கள் சுப்பையத்தேவனுக்குத் தெரிந்திருந்தும், முன் நடந்த சம்பவங்களால், அவன் புத்திமயங்கி இற்றுப்போயிருந்த அவ்விடங்களில் ஓர் இடத்துக்கு நேராகவே அவன் உட்கார்ந்திருந்தான்.

அப்படியிருந்த அரைநிமிஷத்திற்குள் பெரிதானசுண்ணும்புக் கட்டியொன்று திடீரென்று மேற்பாகத்திலிருந்து நழுவி அதிக வேகத்தோடுவந்து அவனுடைய மண்டையில் திட்டென்று வீழ்ந்தது; உடனே அவன் துள்ளித்துடித்து அவசரப்பட்டுப் பதறியெழுந்தான். அவ்வாறெழுந்த கலகத்தால் அவன் இருந்த திண்ணையைவிட்டுத் தவறிக் கீழே வீழ்ந்துவிட்டான்; அத்திண்ணை மிகவும் உயர்ந்ததாயிருந்தபடியால் அவ்வளவு உயரத்திலிருந்து வீழ்ந்ததில் அவனுக்கு அடி பலமாகப்பட்டு அவனுடைய வலது முழங்கை பிசகிப் போய் விட்டதோடு கட்டி வீழ்ந்த அதிர்ச்சியால் மண்டையிலும் சிறிது காயம்பட்டு இரத்தஞ் சுரந்து தலைப்பாகையெல்லாம் சிவப்பாகிவிட்டது. இவற்றை யெல்லாம் கண்டவுடன் அங்கிருந்த சேவகருட் சிலர் அவன் துன்பத்திற்கு வருந்தி அவனை உபசரித்தார்கள்; சிலர் அவன் மீசையிழந்திருந்ததைப்பற்றியும், அவனுக்கு நேர்ந்த விநோத சம்பவங்களைப்பற்றியும் சிரித்தார்கள். அதனால், சுப்பையனுக்கு முன்னிருந்ததைக் காட்டினும் அதிகமான விசனமுண்டாய் விட்டது. 'இதுவும் காலகெதிதான்!'' என்று அவன் கண் கலக்கப்பட்டான்.

கடன்காரி சுப்பையனைக் கடிந்து பேசல்.

அப்போது முன் ஒருநாள், அவனுக்கு அவசர காரியத்திற்கு ஐந்து ரூபா கடனைக் கொடுத்துதவிய வாயாடிச் சுப்பி யென்னுந்தாசி அதை வாங்கும்பொருட்டு அங்கே வந்து அவனைக்கண்டு அவனுடைய கஷ்டத்தை நினையாமல், "ஓய் பெரிய டபேதாரே! நீர் ஆள்மட்டும் ஜம்பமாய்க் கெண்டைத் தலைப்பாகையும், தங்கப்பில்லையும், வெள்ளி பெல்ட்டும், பட்டுக்கரை வேஷ்டியும், முருக்குமீசையும், உருக்குச் சமுதாடும், மருக்கொழுந்துக் கொண்டையும்,

வெற்றிலைக்காவி பிடித்த பற்களும், ஒய்யாரமான நடையும், ஊத்த பேச்சும், பெருத்தவாயும், புறுமுட்டைபோல் திருதிரென்று விழிக்குங் கண்களும், படர்ந்த மார்பும், வளர்ந்த கையுமுடையவராய் மிகுந்த இடம்பம் செய்து கொண்டிருக்கிறீரே; இந்தப் பணத்தை எப்பொழுது கொடுக்கலாமென்று நினைத்திருக்கிறீர்; உமக்கு மனதில் கொஞ்சமாவது வீரமில்லையா? வெட்கமில்லையா? மானமில்லையா? ஈனமில்லையா? அன்று நீர் என்ன சொல்லி என்னிடமிருந்த பணத்தை வாங்கிச் சென்றீர்? 'விடிந்தவுடன் நான் விற்காததை விற்றாவது பணம் சேகரித்துக் கடனை அனுப்பிவிடுகிறேனென்று சொல்லிப் போனவரல்லவா நீர்? இதுவரை நீர் பணத்தை வைத்திருக்கலாமா? சோற்றைத் தின்கிறீரா வேறெதையும் தின்கிறீரா? அன்றைக்கு என்னிடம் காரியமாகுமட்டும் எவ்வளவு தாவந்தப் பட்டீர்? எவ்விதம் கெஞ்சினீர்? எத்தனை தரம் கண்ணைக் கசக்கினீர்? எத்தனை தரம் நல்ல வார்த்தைகள் சொன்னீர்? 'சுப்பி நீ இந்தச்சமயம் உதவிசெய்! இந்தச் சமயம் என்னைக் காப்பாற்று!! இந்தச்சமயம் கைவிடாதே!!! ஹிம்சை என்னாற் சகிக்கக் கூடவில்லை; என்வீட்டில் நானும், மற்ற எல்லோரும் பட்டினியா யிருக்கிறோம்; நீ எனக்குதவி செய்தால் உனக்கு மிகுந்த புண்ணியமுண்டாகும்; கடவுள் உனக்கு உதவிசெய்யாமற் போகமாட்டார்; நீ நல்ல செல்வத்தை யுடையவளாயிருப்பாய்'' என்று எவ்வளவோ பாசாங்கான வார்த்தைகளையெல்லாம் நீர் என்னிடம் சொல்லி, இரவில் இரகசியமாகக் கடன் வாங்குவது பிறருக்குத் தெரியக்கூடாதென்று காரியத்தை முடித்துக்கொண்டு போனீரே; அப்படிப்பட்ட மானஸ்தர் சொன்னபடி பணத்தைக் கொடுத்துவிட வேண்டாமா? இந்த ஐந்துரூபாவும் என்னிடத்தி லிருந்தால் எத்தனையோ காரியங்களுக் குதவுமே; உம்மிடத்தி லிருந்தால்

எனக்காவதென்ன ? உம்முடைய யோக்கியதை இவ்வளவு தானு ? நீரேப்பின்னே உமக்கு மனுஷாள் வேண்டாமா ! நீர் நாணயமாக என்னிடம் வாங்கியகடனேச் செலுத்திவிட்டா லல்லவா பின்னெரு சமயத்திலும் தடையில்லாமல் பணம் வாங்கிக்கொள்ளலாம்; நீர் நாணயம் தப்பினுல் எவர்கள் தாம் உம்மை நம்புவார்கள்; உம்முடைய காரியம் முடிந்த வுடன் கடனேத்தீர்க்கும் நினைப்பே உமக்கு வாவில்லையே; நீர் எந்தக்கடனே வைத்துக் கொண்டாலும் தாசிவீட்டுக் கடனே வைத்துக்கொள்ளலாமா ? இப்படிச் செய்வீரென்று கொஞ்சமாவது அன்று எனக்குத் தெரிந்திருந்தால் உம்மு டைய வாய்ப்பிலுக்கு என்னிடம் செல்லுமா; நீர் ஒரு காசா வது என்னிடத்தி லிருந்து வாங்கல்முடியுமா ? நான் உம்மு டைய ஏமாற்றுத் தொழிலேத் தெரிந்துகொள்ளாமல் மோ சம்போய் விட்டேன்; இதனுல் என் தாயாரிடத்தில் எவ்வ ளவு பேச்சுவாங்கிக் கட்டிக் கொள்கிறேன்; நீர் டபேதாரா யிருந்தால் எங்களுக்காவ தென்ன ? உம்முடைய வீருப்பும் அதிகாரமும் எங்களே என்னசெய்யும் ? உம்முடைய ஆடம் பரமெல்லாம் அரண்மனே வாசலிற்ருன் நடக்கும்; தேவடி யாள் தெருவிற்செல்லாது; நீர் நல்லமானமுடைய மனிதரா யிருந்தால் பணத்தைக் கொடுத்துவிட்டு வேறுவேலேபாரும்; அப்படிச்செய்யாவிட்டால் என்வாயில் பேச்சுத் தாறுமாருக வந்துவிடும் ; இன்றைக்கு என்னவந்தாலும் நான் உம்மிடத் திற் பணத்தை வாங்காமற் போகமாட்டேன்" என்று குடி முழுகிப்போவது போல ஆரம்பத்திலேயே உதட்டை நெளித்து, முகத்தைச்சுளித்து, கையைநீட்டி, காலே உதறி, இடுப்பைவளேத்து, தேகத்தைக் குலுக்கி எள்ளுப்பொரி பொரிவதுபோல மூச்சுவிடாமற் பேசிப் பெருங்கோபம் கொண்டு பத்திரகாளிபோன்று, அவன் மானங்கெடச் சது ராட்டமாடி ஜாதிக்குணத்திற் சிறிதுகாட்டினுள்.

இந்த வாயாடியின் திருக்கூத்தையும், திருப்பாடல் களையும், சுப்பையன், பார்த்துங் கேட்டும் ஆனவுடன் அவ னுக்குண்டான விசனத்திற்கோர் அளவில்லை; அவனுக்குச் செய்வது இன்னதென்று தோன்றவில்லை; முன்நடந்த துர்ச் சம்பவங்களி லெல்லாம் இது, மிகச் சிறந்ததாய் விட்டது; ஆகவே அவன் மனதில் அளவற்ற கோபமுண்டானது; அவன் முகத்தில் மீசையில்லா விட்டாலும் அது இருந்த விடம் படபடவென்று துடித்தது; அவ்வாறுண்டான கோ பத்தால் அவன், 'இப்பொழுது இவளைச் சினந்தீரும் வரை அடிக்கலாமா' என்று நினைத்தான். நினைத்தும் அவனுக் குக் கெடுதிக்காலம் வந்திருந்ததால் அதற்குத் துணிவுண் டாகவில்லை. அவன், 'நமக்கோ இப்பொழுது கெட்டகிரகச் சித்திரம் நடக்கிறது; அதிகாரஞ்சென்ற நேரமெல்லாம் மாறிப்போ யிருக்கிறது; நாம் எப்பொழுதும்போல நல்ல நிலைமையி லிருந்தால் இவள் வந்து இப்படிப் பேசுவாளா! நமக்குத் திசைமாறி யிருப்பதைத் தெரிந்துதான் இவ்வாறு துணிந்து பேசுகிறுள்; இப்பொழுது, நாம் இவளை அடிக்க நினைப்பது பிசகு; அதனுல் நமக்குப் பெருந்தீங்கு விளைந் தாலும் விளையும்; நாம் சமாதான வார்த்தைகளைக் கூறி இவள் மனதைச் சந்தோஷப்படுத்தி இவளை அனுப்பிவிடு வதே நலம்; உலகத்தில் பரத்தையர் மிகவுங் கொடியவர்க ளென்பது தெரிந்திருந்தும் நாம் இவளோடு சிநேகஞ்செய் தது மிகவும் தகாதகாரியம்; இவர்களுடைய குணத்தை யறிந்தே புத்திமான்கள்,

"பட்டாலும் பொன்னுலும் பண்பா யலங்கரிக்கப்
பட்டாடும் வேடப் பரத்தையர்கைப்-பட்டார்நோய்ப்
பட்டார் துயர்ப்பட்டார் பாவப்பட் டாருலகிற்
பட்டா ரெனவே பகர்" என்றும்,

"பணமுடிப்பை யெண்ணிப் பலரைத் தினமும்
மணமுடித்துக் கொள்ளுகின்ற வஞ்சக்-குணமுடைய
வேசியரி னன்பையந்தோ மெய்யென்று நம்புவர்க்குக்
காசினியி லில்லைசுகங் காண்"

என்றும்,

"நித்தம் பலரை நிமிடத்தி லேமயக்கி
வைத்தபொருள் வாங்கு மகாமோசச்—சித்த
விலைமாதர் நேயமதை மேவுவர்க்கிங் கந்தோ
தொலையாது துன்பமெனச் சொல்"

என்றும்,

"காலையினு மாலையினுங் கண்டவரெல் லாஞ்சூட்டும்
மாலைகழித் துக்குவிந்த வாயிலுள—வேலையெழு
நஞ்சையொத்த தாசிகளா நங்கையரைக் கூடிநிதங்
கொஞ்சுபவர்க் கெய்துங் குறை."

என்றும் பலவிதமாக இவர்களை நிந்தித்து நீதி கூறி யிருக்கின்றனர்; இவள் நல்ல குலஸ்திரீயாயிருந்தால் இந்தக் கஷ்ட நிலையிலுள்ள நம்மை இவ்வாறு நிர்த்தாக்ஷணிய மாகப் பேசுவாளா? எஃதெப்படியானுலும் நாம் இவளை நிந்திப்பதிற் பயனில்லை; நம்மீதும் தப்பிதமிருக்கிறது; அப்படி யிருக்க நாம் இவளை வெறுப்பதும் நியாயமில்லை; இவள் நம்மிடம் பணத்தைக் கொடுத்துவிட்டுத்தானே கேட்கின்ருள்" என்று பலவாறு யோசித்துத் தனக்குத்தானே நியாயஞ்சொல்லி, முடிவில் அவளைப்பார்த்து, "அடியே வாயடிச் சுப்பி! அதற்கு இதுதாஞ சமயம்? என்னிடம் கடன் கேட்பதற்கு உனக்கு வேறு சமயம் கிடைக்கவில்லையா? நான் உனக்குப் பணத்தைக் கொடுக்காமல் எடுத்துக் கொள்ளவா போகிறேன்; எப்பொழுது உன்னிடம் தருகிறதாக ஒப்பி நான் பணம் வாங்கி வந்தேனே அப்பொழுதே என்றைக்கா ஞலும் கொடுத்துவிடுதற்குப் பாத்தியப்பட்டவன்ருனே; அப்

படி யிருந்தும் நீ இக்கூட்டத்தில் வந்து என்னிடம் அதைக் கேட்டு என்மானத்தைக் கெடுத்துவிட்டாயே; நான் தனித்திருக்குஞ் சமயத்தில் வந்து கேட்கலாகாதா? நீ எனக்குக் கடன் கொடுத்தது எல்லோருக்கும் தெரியவேண்டுமென்று இவ்வாறு பேசுகிருயோ? இப்படிக் கேட்டால்தான் நீ கொடுத்தது எல்லாருக்குந் தெரியுமோ? உனக்கு என்னைப் போன்றவர்களுடைய பழக்கமிருந்தும் உன் ஜாதிக்குணம் போகவில்லை யல்லவா; நீ கொஞ்சமாவது மரியாதை யில்லாமல் இங்கே நாலுபேர் கூடியிருக்குஞ் சமயத்தில் வந்து இப்படித் தாறுமாருகப்பேசி என் மதிப்பைக் கெடுக்கலாமா; சரி! சரி!! நீபோ; நான் சாயங்காலம் வீட்டிற்குப் போகும்போது பணத்தைக் கொண்டுவந்து உன்னிடம் கொடுத்துவிட்டுப் போகிறேன்." என்று சாந்தமாகச் சொன்னுன். சொல்லியும் பயனில்லை. அவள் அவ்வார்த்தைகளைக் கொஞ்சமும் சட்டை பண்ணுமல், "ஓய்! நீர் நாவைக்காத்துப்பேசும்; ஜாதிக்குணம் ஜாதிக்குணம் என்று பேசுகிறீரே! உங்கள் ஜாதியிலும் எங்கள் ஜாதியென்ன குறைந்ததா! ஜாதியைப்பற்றி நீர் பேசவேண்டாம்; அவரவர்களுக்கு அவரவர்கள் ஜாதி உயர்வுதான்; நீசனுங்கூட தன்ஜாதி எல்லாவற்றினும் மேலானதென்றுதான் நினைத்துக்கொண்டிருப்பான்; ஜாதியைக் கண்டதார்? மதத்தைக் கண்டதார்? ஐந்து ரூபா கடன் கொடுக்கமுடியாத உமக்குப் பேச்சு எதற்கு? இனி என்னுல் சகிக்கமுடியாது; இப்பொழுது நீர் பணத்தைக் கொடுக்காவிட்டால் உமது மரியாதை கெட்டுவிடும்" என்று முன்னிலும் அதிகமாகத் துடிதுடித்துப் பேசினுள்.

அதன்மேல் சுப்பையன், "இதேது மகா சங்கடமாயிருக்கிறது; நாம் எவ்வளவோ சாந்தமான வார்த்தைகளைச் சொல்லியும் இவள் துடுக்கு ஒடுங்கவில்லையே; சோனைமாரி

பொழிவது போல் விடாது பேசுகின்றாளே; இவளுடைய வாயடியை யறிந்துதானே இவளுக்கு 'வாயடிச்சுப்பி' என்று ஊரார் பட்டப்பெயர் வைத்து இவளை அழைத்து வருகின்றார்கள்; நாம் என்னசொன்னாலும் இவள் போகிறவழியைக் காணவில்லையே; இந்த முண்டை பேசும் ஒவ்வொருவார்த்தையும் பீரங்கிச்சப்தம்போன்று நம் மனத்தைக் கலக்குகின்றதே; நாம் இன்று காலையிலிருந்து படாதபாடெல்லாம் பட்டு நம் மனம் அலைகடற்றுரும்புபோல ஊசலாடும் சமயத்தில் இந்த ஏழரை நாட்டுச் சனியனுமாவந்து நம்மைப் பிடித்துக் கொள்ளவேண்டும்; இதை நான் எப்படிப்போக்குவேன்; அட பாழுந்தெய்வமே! எனக்கு ஏன் இப்படிப்பட்ட துன்பங்களை யெல்லாம் வருவித்தாய்?" என்று அடங்கா விசனத்துடன் கண்கலங்கிப் பக்கத்திலிருந்த மற்ற சேவகரை முகவாட்டத்தோடு பார்த்தான். அவன் அவ்வாறு பார்த்த குறிப்பானது, 'நீங்களாவது இவளுக்குச் சமாதான வார்த்தைகூறி என் துன்பத்தை நீக்கலாகாதா?' என்று சொல்வதுபோன் றிருந்தது. அவர்கள் அக் குறிப்பை யுணர்ந்து வாயடிச்சுப்பிக்கு வேண்டிய சமாதான வார்த்தைகளைக்கூறிக் கோபம் அடங்கும்படி செய்து அவளை மிருதுவாக வீட்டிற்கு அனுப்பினார்கள். அவளும் பல தூஷணையான வார்த்தைகளைத் தெருவில் வருபவரெல்லோரும் கேட்கும்படி பேசிச் சுப்பையனைத் திட்டிக்கொண்டே வீட்டிற்குப் போய்விட்டாள். அவளை அவர்கள் அரண்மனை வாசலிலிருந்து போகச்செய்தது பகீரதப் பிரயத்தனமாயிருந்தது.

7-வது அத்தியாயம்.

சுப்பையன் உத்தியோகத்தில் இடிவிழுதல்.

இவ்வாறு அவள் சென்றவுடன் சுப்பையத்தேவன் தனக்குண்டான விசனத்திற்கு எல்லை காணாதவனாய்க் கவ

லைப்பட்டு அந்தத் தாசியைப் பலவிதமாக நிந்தித்து "ஆ! கடவுளே! இன்றைக்கு நான்பட்ட துன்பம் போதும்; என்னுடைய கிரகசாரம் இம்மட்டோடு என்னை விட்டுவிடுகிறதோ, இனிமேலும் என்னிடம் எதையாவது கொண்டுவந்து சேர்க்கிறதோ தெரியவில்லை; எது வந்தாலும் நான் அனுபவிக்கத்தானே வேண்டும்; எனக்கு வருவதெல்லாம் வரட்டும்" என்று, தன் மனம் ஒருநிலைக்கொள்ளாமல் ஊசலாடிக் கொண்டிருந்தபடியால் ஓரிடத்திலுமிராமல் அங்குமிங்கும் உலவித்திரிந்தான். அத் தருணத்தில், அந்தோ! சுப்பையனுக்குநேர்ந்த கேடுகாலத்தைப்பற்றி என்சொல்வது! இராஜ சமுகத்திலுள்ள ஓர் சேவகன் விரைந்தோடிவந்து எழுத்தாலாகிய இராஜகட்டளை யொன்றை அவன் கையிற்கொடுத்து அவனை நோக்கி, "சரி! சரி!! நீர் சீக்கிரம் டவாலியைக் கழற்றிக் கீழே வையும்" என்று துதரிதப்படுத்தினன். சுப்பையன் ஆச்சரியமும், ஆகுலமு முடையவனுய், "இஃதென்ன இவனிடத்தில் இவ்வளவு கடினவார்த்தை பிறக்கிறது!" என்று படபடப்புடன், அந்தக் கட்டளையை வாசிக்கத்தெரிந்த ஒருவரிடம் கொடுத்து, 'இதைப் படியுங்கள்' என்று சொன்னுன். அவர், "டபேதார் சுப்பையத் தேவனுக்குச்சமஸ்தானமானேஜர் பிறப்பித்த கட்டளையாவது:-நீ அரண்மனைவாயிலில் நின்று, உத்தியோக கெர்வங்கொண்டு, நல்லோர், பெரியோர்களை மதியாமலும், அவர்கள் அரண்மனைக்குட் செல்லாதபடி அவர்களைத்தடுத்து அவர்களிடம் பொருள்பறித்தும், குடிகளை ஹிம்சைப்படுத்திப் பணஞ்சம்பாதித்தும், மகாதருமகுண சீலராகிய மகாராஜா அவர்களுக்கு வீண் அபவாதத்தை உண்டாக்கிவருவது சிலவித்வான்களாலும், பெரியோர்களாலும், உன்னைப்போன்ற பல சேவகராலும் வெளியாகி யிருப்பதால், விசாரணையின்றியே உன்னை டபேதார் உத்தியோகத்திலிருந்து நீக்கிவிடும்படி

இராஜகட்டளை பிறந்திருக்கிறது. ஆதலால் நீ எவ்வித மறு மொழியுமின்றி டபேதார்க்குரிய சின்னங்களை யெல்லாம் இந்தக் கட்டளையைக் கொண்டுவருபவனிடம் ஒப்பித்து உன் வேலையை இவன்பார்க்கும்படி செய்து அங்கு அரை நிமிஷமும் தாமதிக்காமல் போய்விடுவாயாக; மீறுவையேல் தக்க தண்டனைக்குள்ளாவாய். இங்ஙனம் சம்ஸ்தான மானேஜர்" என்று அதனை வாசித்தார்.

அடடா! இந்தக் கட்டளையைக் கேட்டவுடன் சுப்பைய னுக்கு உயிர்போனதுபோ லாய்விட்டது. அவன் என்ன செய்வான்! பைத்தியம் பிடித்தவன்போ லாய்விட்டான்; செய்வது இன்னதென்பது அவனுக்குத் தோன்றவில்லை; முடிவில் அவன் இராஜ சமுகத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாமென்று கருதினான். அவ்வாறு நினைத்தும் அந் தக் கட்டளை மிகக் கடுமையாய் அவன் அங்கே நிற்பதுங் கூடாதென்பதை விளக்கியபடியால், அஃது அவனால் முடி யாமற் போயிற்று. மேலும் அவன் அவ்வாறு நினைப்பதற் குள்ளாகவே அங்குநின்ற மற்ற சிப்பாய்கள் அவனை நோக்கி, "அண்ணா! இனிமேல் நீ இங்கே நில்லாதே; சீக்கிரம் உத்தி யோக சின்னங்களைக் கொடுத்துவிட்டுப் போய்விடு!!" என்று தூத்தினார்கள். ஒருவன், தன் கௌரவ நிலைமைகெட்டால் அவனுக்குக் கீழ்ப்பட்டவரும் அவனை மதியாமல் பேசுவது உலகவியற்கைதானே! அப்போது சுப்பையனுக்கு உத்தி யோகம் போய்விட்டதா லுண்டாகிய விசனம் அவ்வளவு துன்பத்தைச் செய்யவில்லை; தனக்குக் கீழ்ப்பட்டிருந்த சேவகர் முடுக்கியதனாலுண்டான விசனமே அவனுடைய நெஞ்சை வாட்டிவிட்டது. அதனால் அவன், "ஆகா! இஃ தென்ன கொடுங்காலம்! நாம் இங்கே நின்று பலரைத் தூத் தியதுபோக, நம்மையே மற்ற சேவகர் தூத்தும் படியான காலமும் நேர்ந்துவிட்டதே; மனிதர்க்கு 'வாழ்வொருகாலம்

தாழ்வொருகாலம்' என்பது சரியே; ஆனாலும் நாம் இந்த உத்தியோகத்துக்குவந்ததுமுதல் செய்துவந்தனவெல்லாம் பெரிய அக்கிரமங்களே; அவற்றுள்ளும் சில பெரியோர் மனத்தையெல்லாம் நோகும்படி செய்தோம். நமக்கு உத்தியோக கெர்வத்தால் நியாயமென்பதே தெரியாமற் போயிற்று; நாம் காசு பறிக்குந் தொழிலை முக்கியமாகக் கருதினோமேதவிர மனிதர்களுடைய தாரதாத்தை ஒரு சிறிதும் நினைக்கவேயில்லை; எல்லோரும் விரோதமாகத் தக்க காரியங்களை யெல்லாம் செய்துவந்தோம்; சிலமாதங்களுக்கு முன் நாம் தீபாவளிச்செலவிற்குப் பணமின்றி மிகவும் தரித்திரப்பட்டு வந்த வசைகவி மாணிக்கப் புலவரை இரக்கமின்றிப் பிடித்துத் தள்ளியதும், நமக்கு மிகவும் பழக்கமான விகடக்குருசாமியைத் தடுத்துவிட்டதும் சிறிதேனும் நலமில்லாக் காரியங்கள்; விகடக்குருசாமி நம்மிடத்தில், 'உன்னை நான் கெடுக்கிறேன்' என்று சபதமிட்டுப் போனதும், புலவர் நம்மீது வசைபாடிச் சென்றதும் இப்பொழுதுதான் நம்முடைய ஞாபகத்திற்கு வருகின்றன. அவ்விருவர் மனஸ்தாபங்களுமே ஒருவாறு நமக்கு இவ்வித துன்பங்களை விளைவித்திருக்கலாம். நமக்கு அப்பொழுது ஒன்றுமே தெரியவில்லை; நாம் எல்லோரையும் கெர்வத்தால் பரிகசித்துப் பேசினோம்; கஷ்டம் வந்த இப்பொழுதுதான் அவையெல்லாம் அநியாயங்களென்பது நமக்குத்தெரிகின்றது; எஃதெப்படியானாலும் நமக்கு இப்பொழுது நல்லகாலமில்லை; நம்பிழைப்பிலும் மண் விழுந்துவிட்டதே; இனிமேல் நாம் எதைக்கொண்டு ஜீவிப்போம்; நம் கையிலும் ஒன்றுமில்லையே; நமக்கு வேறே வேலையும் செய்யத்தெரியாதே; அட ஆண்டவா! ஆண்டவா!! நான் என்ன செய்வேன்? எனக்கு ஊரெல்லாம் பகையாயிற்றே; நான் எவரைப் போயடுப்பேன்; எங்கே சென்றாலும் மனிதர்கள் என்னு

டைய முகத்திற் காறி உமிழ்வார்களே; எவரும் எனக்கு ஒத்தாசை செய்யமாட்டார்களே" என்று எண்ணாத வைகளையெல்லா மெண்ணி மனம் புண்ணாயினான். 'கெடுவான் கேடுநினைப்பான்' என்றதற்கிணங்கி அவன் கெட்டுப் போவதற்கு முன்னே நடத்திய அக்கிரமங்களெல்லாம் அப்பொழுது தான் அவனுக்குத் தோன்றின.

"பெருத்த செல்வமும் பெற்ற போதுகண்
உருத்தெரி யாமலே யொளி மயங்கிடும்
மருத்துள தோவெனில் வாகடத்திலே
தரித்திர மென்னுமோர் மருத்திற் சாகுமால்"

என்றபடி செருக்கினால் முன்னே நல்லோர் பெரியோர் இயல்புகளைத் தெரிந்து கொள்ளாமலிருந்த அவன் கண்ணும் மனமும் துன்பம்வந்த அக்காலத்திற்றான் அம்மயக்கம் நீங்கித் தெரிந்துகொண்டன. அவன் முகம் நெருப்பிற் சுட்ட காஞ்சிரம் பழம்போலாயிற்று. அவன் அப்போது என்ன நினைத்தாலும், எப்படியானாலும் என்ன பயன்? உத்தியோகம் அவனுக்கு மீண்டுவருமா? சேவகர் அவன் அவ்விடத்தை விட்டுப் போகும்படி 'சீக்கிரம்! சீக்கிரம்!!' என்று முன்னிலும் கடுமையாய் அவனை முடுக்கினார்கள். அப்போது சுப்பையன் கண்கலங்கி மெலிந்த குரலோடு அவர்களைப்பார்த்து, 'ஆசை வெட்கம் அறியாது' என்றபடி ஆசையால் மானமிழந்து "தம்பியரே! என் உத்தியோகமோ போய்விட்டது; இனி அந்த நிலைமையை நான் அடைவது கஷ்டமாகும்; ஆனாலும், நான் முடிவாக அரண்மனையைவிட்டுப் பேவதால், இராஜ சமுகத்தைக் கண்டு அங்கே நின்று ஒரு கும்பிடு போட்டு விட்டு வருவதற்கு மட்டும் நீங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்" என்று கேட்டான். (தான் இராஜசமுகத்திற் சென்றால் உத்தியோகத்தை மீண்டும் பெறுவதற்கு, கெஞ்சிக் கதறிப் பார்க்கலா

மென்பது அவனுடைய நோக்கம்.) அப்போது கட்டளை கொண்டு வந்த சேவகன், சுப்பையனுடைய வார்த்தைகள் செவியுட்புகுவதற்கு முன்னரே கடுஞ்சினமடைந்து, "சுப்பண்ணு! உனக்குச் சிறிதேனும் புத்தியில்லை. உத்தியோகம் போனவுடன் புத்தியும் கூடவே போய்விட்டது; இராஜாங்கத்தில், நீ இவ்விடத்தை விட்டுப் போய் விடும்படி கடுங்கட்டளை பிறந்த பின்னரும் உள்ளே செல்வதற்கு நீ அனுமதி கேட்கிருயே; இதனுல் ஆகுங்காரியமென்ன? சீ!. சீ!! நீ கெட்டாய்" என்று சொல்லி அவன் சமீபத்தில் நெருங்கி அவன் கையிலிருந்த பிரம்பையும், இடையிற் செருகியிருந்த சமுதாட்டையும் வெடுக்கென்று பிடுங்கிக் கீழேபோட்டான். அதன்மேல் சுப்பையன், 'இனி நாம் தாமதித்தால் நமக்கு உள்ள மரியாதையும் போய்விடும்' என்று கருதி அவனிடத்தில் "என்ன தம்பி! நீ இவ்வளவு நிர்த்தாக்ஷணியமாய்க் காரியங்களை நடத்துகின்ருயே; நம்முடைய பழைய சிநேகிதத்தையாவது சிறிது பார்க்கக் கூடாதா; என் உத்தியோகம் போனவுடன் உன் புத்தி இவ்விதம் மாறினது மிகவும் ஆச்சரியம்! அரண்மனைச்சாப்பாடு எனக்கு இன்று வரை தான் இருந்தது போலும்; இந்த இடம் என்னை வெறுத்து விட்டது; உன்மீது குற்றமில்லை; நான் உன்மேல் மனஸ்தாபம் கொள்வதில் என்னபயன்?" என்று சொல்லிக் கொண்டே டவாலி, வெள்ளிப்பூண் கட்டிய பிரம்பு, சமுதாடு ஆகியவைகளை அவன் கையிற் கொடுத்து விட்டுக் காலுங்கையும் ஓய்ந்தவனுய்த் தாலியை அறுத்துப் போட்டுச் செல்லும் கைம்பெண்போல தன்னுடைய உத்தியோகத்தையு மிழந்து, "சிவ சிவா! இன்னும் எனக்கு என்ன கெதி வருமோ; இந்தச் சம்பவத்தை என்மனைவி கேட்டால் எவ்வாறு வருந்துவாளோ; உத்தியோக கெர்வத்தால் நல்லோர்க்குத் தீங்குசெய்யும் பாவிகளுக்கெல்லாம் இந்தக் கெதிதான்

நேரும்போலும்" என்று சொல்லிக்கொண்டே, உத்தியோக ஆசை நன்னைப் பின்னேயிழுக்க, 'பலர் நம்மை வீதியிற் பார்த்து நகைப்பார்களாகையால் நாம் விரைந்து வீட்டிற்குப் போய்விடவேண்டும்' என்னும் எண்ணம் முன்னே யிழுக்கக் கள்ளுண்டவனைப் போன்று கால் தடுமாறி, உடல் தள்ளாடிப் படபடப்போடு வீட்டை நோக்கிச் சென்றான்.

இவனுடைய உத்தியோகம் ஒழிந்த சமாச்சாரம் அதற்குள் ஊரெங்கும் பரவி விட்டது. இவன் ஊருக்கே மிகவும் கொடிய விரோதியாகையால் இவனுடைய நிலைமையை அறிந்தவர்கள் இவன் சென்ற வீதியில் வந்து கூடி இவனைப் பார்த்து நகைக்கத் தலைப்பட்டனர். அவர்களுட் சிலர் நடந்ததை அவனிடம் விசாரிப்பார் போன்று, 'என்ன ஐயா! உத்தியோகம்போய் விட்டதாமே' என்று நகைத்தார்கள்; சிலர் அவனைமுன்னே போகவிட்டுப் பின்னே நின்று, 'அடடா! உங்கள் அதிகாரமும் போய்விட்டதே' என்று சொல்லி நகைத்தார்கள்; சிலர் பக்கத்தில் நிற்பவர்களிடம் கண்ணைச் சிமிட்டியும், உதட்டை நெளித்தும், கையை நீட்டியும் அவனைச் சுட்டிக்காட்டி, 'ஐயோ! தடபுடல் செய்யும் டபேதார் போகிற போக்கைப் பாருங்கள்; இன்றைக்கு ஐயா கட்டியிருந்த தாலி அறுபட்டுப் போயிற்று' என்று சொல்லி விழுந்து விழுந்து சிரித்தார்கள்; இன்னும் அவனுக்குத் தெருவில் நடந்த அவமானங்கள் அளவிடற்கரியனவாயிருந்தன. இவற்றிற்கெல்லாம் காரணம் அவன் ஊரார்க்கு நடத்திவந்த கொடுமையே. இந்த அவமான வெள்ளத்தை நீந்திச் செல்வது அவனுக்குப் பெருங்கஷ்டமாயிருந்தது. அதனால் அவன் 'எப்படியாவது நாம் மனிதர் கண்களிற் படாமல் சீக்கிரம் போய் வீட்டிற்குள் நுழைந்து கொள்ளவேண்டு' மென்று அவசரப்பட்டு எவரையும் பாராமல் ஒருவரோடும் வார்த்தையாடாமல் ஓடினான். இத்துன்பங்களையும், அவனிடத்தே

மேல் நடந்தனவாகச் சொல்லப்படுந் துன்பங்களையும் விகடக் குருசாமியினுடைய சபதமும், வசைகவி மாணிக்கப் புலவருடைய வசைப்பாட்டுமே உண்டாக்கின. இவ்விஷயம் இப்புத்தகத்தை வாசிப்போர்க்குப் பின்னே விளங்கும்.

முத்துக்கருப்பிக்கு அபாயமுண்டாதல்.

மேற்கண்டவாறு சுப்பையன் அவமானத்திற்கஞ்சி ஓடும்போது, "பட்டவிடமே படும் கெட்டகுடியே கெடும்" என்றதற் கேற்ப அவன் வீட்டு வேலைக்காரியாகிய சுப்பு என்பவள் கண்ணீர்வடியக் கைகளை நெறித்துக்கொண்டு தலைவிரி கோலமாய் அவனுக்கெதிரே ஓடிவந்தாள். அவள் அப்படிவந்தது சுப்பையன் வீட்டில் அபாயம் உண்டாகியிருக்கிறதென்பதை விளக்கிற்று. அதனால் அவன், அவளைக் கண்டவுடன் "ஐயோ! வீட்டிலும் ஏதோ அபாயம் நடந்திருப்பதாகத் தெரிகிறதே!" என்று படபடத்து "என்னடி பாவி! வீட்டில் என்னநடந்தது?" என்று அவளைக்கேட்டான். அவள் "ஐயா! தள்கள் மனைவிக்கு ஏதோ வலிப்புப்போல வியாதி உண்டாகி அவர்களுடைய தேகத்தை யெல்லாம் சுருட்டி வளைக்கிறது; வாயில் நுரைவருகிறது; உடம்பெங்கும் வியர்வை ஆறாய்ப் பெருகி யோடுகிறது; அவர்களுக்குச் சிறிதும் பிரக்ஞையில்லை; சுவாசம் ஒடுங்கிப் போயிற்று; இதுவரை உயிர் இருக்கிறதோ இல்லையோ; தங்கள் குழந்தை ஒருபக்கம் கதறுகிறது; நீங்கள் சீக்கிரம்போய் எவரேனும் ஒரு வைத்தியரை யழைத்து வாருங்கள்" என்றாள். கனவான்களே! அத்தருணம் சுப்பையன் மனம் 'இன்னபாடு பட்டிருக்கும்' என்பதை நீங்களே யோசித்துணர்ந்து கொள்வீர்களாக. எப்பொழுது மில்லாத அந்த நோயானது கெட்டகாலத்தால் அவளுக்குண்டானதாகச் சுப்பையன் அவ்வாறு கேள்விப்படவே அவன், மற்ற சங்கடங்களை யெல்லாம் மறந்து தன் மனைவி துன்பத்திற் புத்தியைச் செலுத்தி

ஒன்றும் பேசாமல் தன்வீட்டிற்கு எப்பொழுதும் வழக்க மாக வைத்தியம் பார்த்து வந்த கந்தசாமிப் பரதேசியைத் தேடி அவனிருக்குமிடத்திற்கு ஓடினான்.

சுப்பையனுடைய வைத்தியர் வாந்திபேதியால் மயானஞ் செல்லல்.

ஐயோ! இவனுடைய துரதிர்ஷ்டத்தை என்னென்று சொல்லலாம்! இவன் அவ்வாறு தேடிச் செல்வதற்கு முன் அந்தக் கந்தசாமிப் பரதேசி வாந்திபேதியால் இறந்துபோனான். அதனால், அவனுடைய சுற்றத்தார் அவனைச் சுடு காட்டிற்குக் கொண்டுபோவதற்குத் தூக்கிக்கொண்டு, சங்கு கூட ஊதாமல், சுப்பையனுக் கெதிரே வந்தார்கள். அந்தக் கந்தசாமிச்சாமியாரின் பிணக்கோலத்தைப் பார்த்தவுடன் சுப்பையன், 'ஐயோ! நம்முடைய துரதிர்ஷ்டம் வைத்தியரை யும் சுடுகாட்டுக்கு அடித்துக்கொண்டுபோகின்றதே!" என்று விசனித்து, தனக்குத்தெரிந்த மற்றொரு நடுத்தரவைத்திய னாகிய பெரியண்ணன் என்னும் நாவிதனைத்தேடி அவன் வீட்டிற்கு ஓடினான்.

அம்பட்டனுக்கும் சுப்பையனுக்கும் ஆச்சரியச் சண்டை.

அவன், வைத்தியம், தன் ஜாதித்தொழில் ஆகிய சௌ ரம் ஆகிய இரண்டு தொழில்களையும் கைவிடாமல் அநுச ரித்து வந்தபடியால் அந்தச் சமயத்தில் அவனிடம் சௌ ரத்துக்குப் பதினைந்து ஆசாமிகளுக்குமேல் காத்திருந்தார் கள். அந்த நாவிதனால் செய்யப்பட்ட சௌரவேலை ஒருவ னுக்கு நடந்து கொண்டிருந்தது. நாவிதன் இந்தத் திருக் கோஷ்டியி லிருக்கும்போது சுப்பையன் அவனிடம்சென்று தன்னுடைய அவசரகாரியத்தைத் தெரிவித்து, 'நீ சீக் கிரம் என் வீட்டிற்கு வரவேண்டும்' என்று கூறினான். இத் தனை கிராக்கியில் இவன்சொல் அவன் காதுக்கேறுமா? அதனோடு இவனுடைய உத்தியோகம் போய்விட்ட சமாச்

சாரமும் அவனுக்குத் தெரியும்; முந்தி இவன் நடத்திய அதிகார விஷயத்தில் அவன் விரோதங் கொண்டிருந்தான். ஆகையால் அப்பண்டிதன் இவனைச் சிறிதும் மதியாமலும், இவன்மனைவி உயிர்போகும் நிலைமையிலிருப்பதைக் கருதாமலும், இவனுக்கு மறுமொழி கூறாமலும் தன் வேலையை நடத்திக்கொண் டிருந்தான்; அப்போது,

சுப்பையன்:—என்ன அப்பா! என் வீட்டுக்காரிக்கு உயிர் போகுந்தருணமா யிருக்கிறது; நீ, நான் சொல்வதைக் கவனிக்காம லிருக்கிறாயே.

பேரியணன்:—நான் என்ன செய்கிறதையா? கைவேலையா யிருக்கும்போது அதை நிறுத்திவிட்டு வரலாமா?

சு:—என்ன அப்பா! உயிரைக்காட்டிலும் வேலை என்ன அவ்வளவு பெரிதா?

பே:—ஆமையா, உங்களுக்கு உங்கள் காரியம் பெரிது; எனக்கு என்காரியம் பெரிது; ஆனாலும் ஆபத்தை உத்தேசித்து நான் இக்காரியத்தை விட்டு உங்களுடன் வாலாமென்றாலும் இங்கே சௌரத்துக்குக் காத்திருப்பவர்கள் அதற்குச் சம்மதிக்கமாட்டார்களே.

சு:—அவர்கள் சம்மதிக்காமலிரார்கள்; இந்த ஆபத்து வேளையில் மயிர்போக்குங் காரியத்தைப் பெரிதாக நினைக்கவே மாட்டார்கள்; நீ செய்வதுதான் அக்கிரமம்; உனக்கு என்னுடன்வா இஷ்டமில்லை; அப்படிப் பிரியமில்லாதிருந்தால் நீ உன் அபிப்பிராயத்தைச் சொல்லிவிடலாமே; நான் வேறே யாரையாவது அழைத்துப் போவேனே.

பே:—ஐயா! "ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு" நீங்களென்ன செய்வீர்கள்.

சு:—என்னடா நாவிதப்பயலே! 'காரன்கீரன்' என்றுகூடே சேர்த்துப் பேசுகிறாயே! படவாமகனே! என் உத்

தியோகம் போய்விட்டாலும் ஜாதி மேன்மையுமா போய்விடும்? அம்பட்டக்கெர்வம் உன்னைவிட்டுப் போகவில்லை யல்லவா?

பே:—ஓய்! 'அம்பட்டன் கிம்பட்டன்' என்று பேசாதே; எல்லதெப்படி யிருந்தாலும் நீ அம்பட்டன் காலடியிற் ருனே இப்போது வந்து காத்திருக்கிருய்; நான் 'கைவேலையாயிருக்கிறேன், வரமுடியாது' என்று சொல் லியும் நீ கழுதைபோல போகாமல் என்னேடு சண்டை தெடுக்கிருயே; உன் முடுக்கெல்லாம் இங்கே செல் லாது; சீ போ.

அம்பட்டப் பெரியணன் இவ்வாறு சொன்னவுடனே, சுப்பையனுக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது; அவன் விசனத்தைவிட்டுக் கோபத்தின் மயமாகிவிட்டான்; உடனே பல்லைக்கடித்து, "அம்பட்டப் படவாமகனே! நான் அடங் காத வயிற்றெரிச்சலோ டிருக்கும்போது நீயுமா என்னைத் துன்பப்படுத்துகின்றுய்? ஆபத்துக்காலத்தில் நீ என்னு டன் வராமலிருப்பதோடு என்னை மரியாதை யில்லாமலும் பேசுகிருயே!" என்று சீறிப் புலிபோல் பாய்ந்து அந்தப் பெரியணன் முதுகிற் காலால் பன்முறை உதைத்தான். ஐயோ! சுப்பையனுடைய கஷ்டகாலத்தை நாம் யாதென்று சொல்வோம்? மேற்கண்டவாறு அவன் உதைக் கவே அச்சமயத்தில் அம்பட்டப் பெரியணன் ஒரு மனி தன் தலையைச் சிரைத்துக்கொண் டிருந்தபடியால் அந்த உதையின் அதிர்ச்சியால் அந்நாவிதனுடையகை ஆட்டங் கொடுத்துச் சௌரஞ் செய்து கொண்டிருந்த அந்த மனித னுடைய மண்டையிலழுந்தி மிகுந்த காயமுண்டாகிவிட் டது; அம்மண்டையிலிருந்து முகத்தின் வழியாய் இரத் தம் பெருகியோடிற்று. அதைக்கண்டவுடனே பெரியணன், சுப்பையனை நோக்கி, "அடா பாவி! நீ என்னை உதைத்தது

மன்றி என்னிடம் சௌரம் பண்ணிக்கொண்டு போகவந்த வருக்கும் பெருங்காயமுண்டாகும்படி செய்துவிட்டாயே; உன்னை இனி நான் இலகுவில் விடுவேனு; நியாயஸ்தலத் திற்குக் கொண்டுபோய், நீதவான் உனக்கு மிகுந்த தண் டனை விதிக்கும்படி செய்கிறேன்பார்" என்று துடிதுடித் துப் பாய்ந்து, அவனைக் கீழேதள்ளி அவன் குடுமியைப் பிடித்துச் சக்கரம்போலச் சுழற்றித் தன்சினந் தீருமட்டும் உதைத்தான். அம்பட்டன் அந்த மனிதனுக்குக் கத்திக் காயம் பட்டதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு, 'இந் தச் சமயத்தில் நாம் என்ன செய்தாலும் செய்யலாம்' என்று நினைத்தே சுப்பையனை அவ்வாறு 'போடு போடு' என்று போட்டுவிட்டான். சுப்பையன் செய்தது மிகவும் தகாதகாரியமாதலாலும், அங்குக் கூடியிருந்த எல்லோரும், சுப்பையன் டபேதார் உத்தியோகத்தி லிருக்கும்போது செய்த அக்கிரமங் காரணமாக அவன்மீது பகை கொண் டிருந்தபடியாலும், கத்தியினுல் வெட்டப்பட்டவனும், மற்றவர்களும் ஒன்று சேர்ந்து, அந்த அம்பட்டனிலும் மும்மடங்கதிகமான ஆங்காரத்தோடு சுப்பையனை அடித்து நொறுக்கிவிட்டார்கள். சுப்பையன் அவர்களுடைய அடி களைத்தாங்கமுடியாமையினுல் மெத்தவும் கிறுகிறுத்துப் போனுன். அவனுடைய மனைவி, வியாதியினுல் மிகவும் வேதனை யடைந்து கிடக்கும்போது, அவனுக்கு அம்பட்ட ஞல் இந்தச் சங்கடமும் ஏற்பட்டுவிட்டது. அவனுக்கு இதன்பொருட்டு உண்டான துக்கத்தினுல் அவன் பைத்தி யங் கொண்டவனைப்போ லாகிவிட்டான். அதன்மேல் அம்பட்டப் பெரியணன் அங்கே இருந்தவர்களைச் சாக்ஷி யாக ஏற்படுத்திக்கொண்டு, நியாயாதிபதி முன் சுப்பையன் மீது வழக்குத் தொடுப்பதற்கு அவனை நியாயஸ்தலத்திற்கு இழுத்தான். அப்போது அவன், "நமக்குக் கெட்ட

காலம் வந்திருப்பதை நாம் சிறிதும் கருதாமல் வயிற்றெரிச்சல்கொண்டு இந்தக் காரியத்தை நடத்தியது மிகவும் தகாத வேலை” என்று யோசித்து, அம்பட்டன் தன்னை விட்டுவிடும்படி அவனுக்கு அளவற்ற சமாதானங்கள் கூறினான். அவ்வாறு சொல்லியும் அம்பட்டன் சமாதானமடையவில்லை. முன்பின் யோசியாமல் அந்தப் பெரியணன், அவனைப் பிடித்தபிடியோடு இழுத்துக்கொண்டுபோய் நியாயஸ்தலத்தில் நிறுத்தி, நீதவானிடம் அவன் நடத்திய அக்கிரம விஷயத்தைத் தெரியப்படுத்திச் சாக்ஷிகளையும் காட்டினான்.

சுப்பையன் தண்டம் கொடுத்தல்.

நியாயாதிபதிக்குச் சுப்பையனுடைய அடாவடித் தன்மை தெரியுமாதலால், அவர், அவன் செய்கையை அதிகமாக விசாரிக்காமலே இரண்டு சாக்ஷிகளை மாத்திரம் விசாரித்துக்கொண்டு, சுப்பையனைப் பார்த்து, “அடே! உனக்கு உத்தியோகம் தொலைந்துங்கூட அக்கிரமம் போகவில்லையே; எஃதெப்படி யிருந்தாலும் அம்பட்டன் சௌர வேலையிலிருக்கும்போது நீ அவனை அடித்துச் சும்மா இருந்த மனிதனுக்குக் காயம்படச் செய்யலாமா? கத்தி இன்னும் சிறிது அழுந்தியிருந்தால் அவன் இறந்துபோயிருப்பான்; நீ செய்தது மிகவும் அக்கிரமமான காரியமாயிருக்கிறது; ஆயினும் நீ ‘அரண்மனை வேலையிலிருந்தவன்’ என்பதை உத்தேசித்து நாம் உனது பெருங்குற்றத்தில் சிறிது மன்னித்து நீ இருபதுபணம் அபராதம் கொடுக்கும்படி உனக்கு விதியேற்படுத்தி யிருக்கிறோம்” என்று தீர்ப்பளித்துவிட்டார். சுப்பையன் அம்பட்டனாலும், மற்றையராலும் அடிக்கப்பட்டதும் போதாமல் தான் செய்த அக்கிரமத்தால் அந்தத் தண்டப்பணமும் கொடுக்க ஏதுவுண்டாயிற்று. அதைக் கொடுப்பதற்கு அப்போது அவன்

கையில் பணமில்லை. அதனால் அவன் தன்கையிலணிந் திருந்த மோதிரத்தை அவ்விடத்திலேயே ஓருவரிடம் விற்று அந்த அபராதத்தைக் கட்டிவிட்டு, "இதுவரை மனைவி என்ன நிலைமையிலிருக்கின்றாளோ!" என்று கலக் கங்கொண்டு வேறொரு வைத்தியரைத் தேடுதற்கு ஓடினான். அதற்குள் நாழிகையும் பதினைந்தாய் விட்டது.

சுப்பையனுக்கு ஓர் வைத்தியர் கிருபைசெய்தல்.

மேற்கண்டவாறு சுப்பையன் கலக்கங்கொண்டு ஓடும் போது ஏதோ தெய்வகிருபையால் வைத்தியம் சின்னக் கருப்பவேளார் என்பவர் எதிர்ப்பட அவரைக்கண்டான். அவ் வாறு பார்த்தவுடன் அவரிடமோடித் தனது பரிதாபமான நிலைமையைத் தெரிவித்து, அவர், தன் மனைவியைப் பார்க் கும்பொருட்டு அவரை வீட்டிற்கழைத்தான். இந்தச் சுப் பையனுடைய கொடுஞ்செயல்களைப்பற்றி, அவர் இவன்மீது வெறுப்புற்றிருந்தாரெனினும், அவர், மிக்க சாதுவும், பொ றுமை யுள்ளவரும், அறிவீனத்தாற் பலர்செய்யும் அகிருத் தியங்களைப்பற்றி அவர்களை வெறுக்காதவரும், ஜீவதயையுள் ளவருமானபடியால் சுப்பையனுக்குத் தடைசொல்லாமல் அவனுடன் சென்று, அவன் மனைவியாகிய முத்துக்கருப்பி யின் நோய்க்குச் சிறிது பரிகாரஞ்செய்து அவளைச் சௌக் கியப் படுத்தினார். என்றாலும் அவளுக்குக் கொஞ்சங்கொஞ் சம் மயக்கமிருந்தது. சின்னக்கருப்ப வேளார் அவளுக்கு வைத்தியம் செய்ததற்காகச் சுப்பையன் மூன்று ரூபா பக் கத்துவீட்டிற் கடன்வாங்கி அவருக்குக் கொடுத்தான். அவர் அவன் அன்று காலையிலிருந்து அந்நேரம்வரை அடைந்த துன்பத்திற்கு மனமிரங்கி அவனிடம் அத்தொகையை வாங் காமல் 'இதை நீயே வைத்துக்கொள்' என்று சொல்லிப் போய்விட்டார்.

8

அதன்மேல் சுப்பையன் மனவாட்டத்தோடு, மயக்கம் தெளிந்திருந்த தன் மனைவியிடத்தில், தன் உத்தியோகம் போனதையும், மற்ற துன்பங்கள் நேர்ந்த விவரங்களையும் தெரிவித்தான். அவற்றைக் கேட்டவுடன் முத்துக்கருப்பி அடைந்த துக்கத்திற்கு அளவேயில்லை; அதனால் அவள், "நாம் பிழைப்பதற்கு வேறுவழியில்லையே; இந்தப்பாவி அரண்மனைவேலையையும் தொலைத்து விட்டானே; இனி இவனிடத்தில் நாம் பெண்டா யிருப்பதில் என்ன பிரயோசனம்? நம்மிடம் ஒரு ஆண்குழந்தை யிருப்பதல்லவா சங்கடமாயிருக்கிறது; இல்லாவிட்டால் நாம் இப்பொழுதே வேறெங்காவது போய்விடலாமே; பெண்ணாய்ப் பிறந்த நமக்கென்னபயம்; நம்மைப்போன்ற பெண்கள் எங்கே சென்றாலும் அவர்களின் காரியம் பலிக்குமே; நம்மை ஏற்றுக்கொள்ள எத்தனையோ புண்ணிவான்களிருக்கிறார்கள்; அப்படியிருக்க நாம் இந்த உத்தியோக மிழந்த பீடையிடம் ஏனிருந்து சங்கட்டப்படவேண்டும்" என்று பலவாறு தன் கணவனை நிந்தித்துப் பேசித் தனது மூர்க்க சுபாவத்திற் கேற்ப அப்பொழுதே அவனைவிட்டு நீங்கி வேறொரு இடம் பப் பேர்வழியிடம் சேர்ந்துகொள்ளக் கருதிவிட்டாள். ஆயினும், வெளிக்குமட்டும் புருஷனுடைய பரிதாப நிலைமைக் குச் சிறிது கவலையுடையவள் போன்று விம்மிவிம்மி அழத் தொடங்கினாள். கெட்ட சுபாவமுடைய பெண்களுக்கு இஃதியற்கையன்றோ? அவள் அழுவதைக்கண்டு சுப்பையனும் அழுது அவள் கண்ணீரைத்துடைத்து அவளுக்குத் தேறுதல்சொல்லி அவளுடைய அழுகையை நிறுத்தினான்.

சுப்பையனை ஊரார் பரிகசித்தல்.

பின்பு சுப்பையனும் அவன்மனைவியும் வேலைக்காரியால் சமைக்கப்பட்டிருந்த சிறிது ஆகாரத்தை உட்கொண்டு, 'இனிமேல் பிழைப்புக்கு நாம் என்னசெய்யலாம்?' என்னும்

ஆலோசனையிலிருந்தார்கள். பின்னர் சுப்பையன், 'வெளியே றிச்சென்று ஜீவனத்திற்கு வேறு ஏதேனும் ஓரு முயற்சியைத் தேடலாம்' என்று உத்தேசித்தான். அந்தச் சமயத்தில் சுப்பையனுக்குத் தரித்திரம் வந்து சூழ்ந்ததுபோல பகலிலேயே எங்கணும் இருள்வந்து மூடி ஆகாயத்தில் மேகம்படர்ந்து மின்னியிடித்து, அந்த முத்துக் கருப்பியின் பேச்சைப்போன்று சோனைமாரி பெய்யத் தலைப்பட்டு விட்டது; மழையோ இலகுவானமழையன்று. அதனால் கடலே புரண்டு வந்தாற்போன்று மதுரைவீதிகளில் தண்ணீர் திரண்டோடியது. அவ்வாறு மழைபெய்துகொண் டிருந்தபடியால், சுப்பையன் நினைத்தபடி ஜீவனமார்க்கந் தேடுதற்கு வெளியே போகக்கூடவில்லை. அவன் வீட்டிற்குள்ளேயே ஆந்தை விழிப்பதுபோன்று விழித்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில், யாதொரு வேலையுமின்றி ஊராருடைய தவறுகளைப் பிரயாசைப்பட்டேனும் விசாரித்தறிந்து, ஒவ்வொருவரிடமும் சென்று அவற்றைச் சொல்லி அவர்களைப் பரிகசித்துத் திரியும் முழுமூடர்களாகிய குமாரசாமி, நாகலிங்கம் முதலிய வாலிபர்கள், மழைக்குக் குடையைப் பிடித்துக்கொண்டு, திரண்டோடும் ஜலத்திற் கஞ்சாமல் அதில் இறங்கி வஸ்திரங்களெல்லாம் நனைய நீந்திவந்து சுப்பையனைக் கண்டு, "என்ன அண்ணு! உத்தியோகம் போய்விட்டதாமே" என்று துக்கம் விசாரிப்பவர்போன்று விசாரித்துப் பரிகசித்துக் கொண்டிருந்தார்கள். சுப்பையனுக்கு அவ்வூரில் விரோதிகள் பலரிருந்தாராதலால், இந்த மழையிலும் அவனிடம் இத்தகைய பரிகாசக் கூட்டமே மிகுத்திருந்தது. அப்போது மழையில்லாவிடில் சுப்பையனை ஒருவரும் காணவே மாட்டார்கள். அவன் அவமானத்திற் கஞ்சி எவர்கண்ணிலும் அகப்படாமல் எங்கேனும் ஓடிப்போய் மறைந்திருந்து இரவிற்றான் வீடுவந்து சேருவான்.

மழை அவ்வாறு அவன் வெளியேற முடியாதிருக்கும்படி அவனுக்குப் பெருஞ்சனியனைப் பிடித்துக்கொண்ட படியால் வீட்டிற்குட் சிக்கி அங்கேவரும் போக்கிரிகளின் பரிகாசத்துக் குள்ளானன். அவர்கள் பரிகசிப்பது சுப்பையனுக்கு அளவற்ற விசனத்தை உண்டாக்கிற்று. எனினும் அவன் என்செய்வான் பாவம்! அவனுக்குக் காலம் கெட்ட காலமா யிருந்தபடியால் அவன் தன்னுடைய பழைய முறுக்கையெல்லாம் ஒடுக்கிக்கொண்டு ஒவ்வொருவருக்கும் தாழ்ந்த வார்த்தைகள் கூறி மழைவிட்டவுடன் வெளியே ஓடுவதற்கு ஆயத்தமா யிருந்தான். சிறிதுநேரஞ்சென்றபின் இந்தப் பரிகாசக் கூட்டமெல்லாம் ஒழிந்தது.

கடன்காரரால் சுப்பையனுக்கு நேர்ந்த தொல்லை.

அதன்மேல் சுப்பையனுக்குப் பலநாள்களிலும் கடனகப் பணம்கொடுத்திருந்த கூட்டத்தார், "சுப்பையனுக்கு உத்தியோகம் போய் விட்டபடியால் அவன் எங்கேயாவது ஓடிவிடுவான்" என்று கருதி அவனிடம் கடனைக்கேட்டு வாங்கும் பொருட்டு வரத் தலைப்பட்டு விட்டார்கள். இந்தக் கூட்டத்தாரைப் பார்த்தவுடன் புண்ணிற் கோலிட்டது போல அவன்மனம் முன்னிலும் அதிகமாக வேதனையடைந்தது; முகம் மிகச் சுருங்கி விட்டது; கடன்பட்டவர், கடன் கொடுத்தவரைக் காணும்போது இவ்வாறு வேதனைப்படுவது இயற்கை; இதைக்குறித்தே "கடன் கொண்டார் நெஞ்சம்போல கலங்கின னிலங்கை வேந்தன்" என்றார் பெரியாரும். "ஐயோ! இந்தச் சமயத்தில் இவர்களுமா வரவேண்டும்" என்று அவன் வந்தவர்களுக்கு இதஞ்சொல்லி அவர்களை யனுப்புவதிற் புத்தியைச்செலுத்தினன். அந்தச் சமயத்தில், முன்னே அவனுக்குக் கடன்கொடுத்துப் பலநாளும் அவனைக்கேட்டு, அவன் அதைக் கொடாமல் காலங்கடத்தியபடியால் அலைந்த ஒருவன் அவன்முன்வந்து,

அடிக்கடி யிங்கே நான்வந்
தலைந்தது போது மிந்தப்
படிக்குநீ சாக்குச் சொன்னால்
பணத்துக்கு வழிதா னென்ன
அடுக்குமோ வுனக்கிச் செய்கை
யறிவுண்டா இல்லை யாநான்
தொடுக்கின்றேன் வழக்கின் றென்று
சொல்லிப்பின் சீறி னானே.

சுப்பையன் சோற்றுக்கு வழியின்றி ஒருவனிடம்கடன் வாங்கிப் பின்னே கொடுப்பதாகச் சொல்லிவந்து அத் தவணையிற் பணம்கொடாமல் மேலும் பல தவணைகள் வைத்து அவைகளிலும் கொடாமல் தவறிப்போய் விட்ட தற்காக அவன் வந்து,

நாட்டமா யன்று வந்து
நண்பனே சோற்றுக் கில்லை
வாட்டம தொழிப்பீ ரென்று
மகிழ்பொருள் வாங்கி வந்தீர்
கேட்டபோ ததைக் கொடாமல்
கெடுவுகள் வைக்கின் றீரே
மாட்டினுக் குள்ள புத்தி
வாய்த்ததே யுமக்கென் றானே.

மற்றொருவன் வந்து சுப்பையனிடம் தான் கொடுத்த பணத்தைக் கேட்டான். சுப்பையன் அவனுக்குச் சமாதான வார்த்தைகள் கூறினான். அவன் அந்தச்சமாதான வார்த் தைகளை யெல்லாம் கேளாமல்,

அதிகமாய்ப் பேசா தேநான்
அரைக்கணஞ் சகிக்கே னீயோ
மதிகெட்டுப் போனா யென்ன
வம்பிதென் பணத்தை யந்தோ

விதிவசத் தால்நா னீந்து
வெம்பியே யலைந்தே னிந்தத்
ததிகொடுக் காயேல் மெத்தச்
சங்கட நேரு மென்றான்.

மற்றொருகடன்காரன் வந்தான். சுப்பையன் அவனுக்கு உபசாரவார்த்தைகள் கூறினான். அந்தக் குணமான வார்த்தைகளையும் அவன் ஏற்காமல், சுப்பையனைக் கடுகடுப்புடன் பார்த்து,

வாங்கின கடனைத் தீர்க்க
மனமில்லா துணவை யுண்டு
தூங்கிநீ கொடுத்தா ரோடு
சுகுணமாய்ப் பேசி னாலுந்
தாங்குவ ரோநீ செய்யுந்
தந்திரந் தெரியு மிந்தப்
போங்குசெல் லாது நானே
பொறுக்கனென் றுரைத்திட் டானே.

பின் ஒரு கடன்காரன் வந்தான். சுப்பையன் அவனுக்குத் தாம்பூலம் கொடுத்து மிக்க உபசாரம் செய்தான். அவன் அதையுங் கருதாமல் கடுஞ்சின மடைந்து, சுப்பையனை நோக்கி,

வெற்றிலை வேண்டா முன்றன்
விருப்பமும் வேண்டா நீதான்
கற்றதந் திரங்க ளெல்லாங்
கருத்தினிற் கண்டு கொண்டேன்
சற்றுநா னினிமேற் றுங்கேன்
தழுவுமுன் மனைவி தாலி
விற்றுடன் கடனைத் தீர்க்க
வேண்டுமென் றுரைத்திட் டானே.

மற்ருெருவன் வந்து, சுப்பையன் தன்னிடம்வாங்கின கடனைக் கொடாமல் நாணயந் தவறினதைப்பற்றி மிகவும் விசனங்கொண்டு அவனை நோக்கி,

சொன்னது போல நீயுந்
தொகைதனைக் கொடுத்து விட்டால்
பின்னையு மொருகா லத்தில்
பிணக்கின்றி வாங்கலாமே
சொன்னது தவறி னுன்பால்
தூஷணை சேர்வ தன்றி
என்னதான் மதிப்புண் டாமென்
றிடியென விரைந்திட் டானே.

பின்னு மொருவன் வந்து, சுப்பையன் தன்னிடம் வாங்கின கடனைக் கொடுக்கா திருந்தபடியால் அவனைக் கடிந்து பேசினுன்; அதற்குச் சுப்பையன் சாக்குப்போக்கான வார்த்தைகளை விரைந்து பேசினுன். அதனுல் அந்தக் கடன்காரன் அவனுடைய அயோக்கியத்தன்மையைப் பற்றிக் கோபித்து அவனை நோக்கி,

எத்தனை பேசி னுலு
மிழிவில்லை யுமக்கு மானஞ்
சுத்தமா யில்லை வெட்கஞ்
சொல்லுமெய் சிறிது மில்லை
மெத்தயோக் கியரைப் போன்று
விரைந்துநீர் பேசு கின்றீர்
இத்தனை யெதற்குக் காசை
யெடுமென விரைந்திட் டானே.

இந்தவிதமாகக் கடன்காரர்கள், சுப்பையன் கேட்டிற்குள்ளாகியிருந்த சமயமறிந்து ஒருவர்பின் ஒருவராய் அவனிடம் வந்து புண்ணில் சிற்றெறும்புகள் சூழ்ந்து குடைந்து உபத்திரவஞ்செய்வது போன்று அவனைத் துன்பப்படுத்தி

ஞர்கள். சுப்பையன், அவர்களைச் சமாதானப்படுத்தி யனுப் புதற்குத் தான் கற்றவித்தைகளை யெல்லாம் அவர்களிடம் ஓதி எவ்வளவோ முயற்சிகள் செய்தான். அவற்றுள் எது வும் பலிக்கவில்லை. அவன் சமாதானம் சொல்லச் சொல்ல அவர்கள் கோபம் அதிகரித்துப் படபடப்பாகவும் தூஷணை யாகவும் அவனைப் பேசிக்கொண் டிருந்தார்களேயன்றி ஒடுங்கவில்லை. முன்வந்து அவனைப் பரிகசித்துச் சென்றவர்க ளால் அவனுக்கேற்பட்ட உபத்திரவத்தைக் காட்டிலும், இவர்கள்செய்த உபத்திரவம் பதின்மடங் கதிகமாயிருந்தது. முடிவில் சுப்பையன், "நம்முடைய உத்தியோகம் போய் விட்டபடியால் இனி இவர்கள் நம்மிடம் தாக்ஷணியம் காட்டமாட்டார்கள்; இப்பொழுது பணம்வாங்காமல்போகவு மாட்டார்கள்; நாம் எப்படியாவது பணம்தேடிக் கடனுக் குக்கொடுத்து இவர்களை யனுப்புவதுதான் நலம்" என்று ஆலோசித்து, உடனே தான் முன் கொள்ளையடித்த ஊரார் பணத்தைக்கொண்டு செய்து தன்கையிற் போடப்பட் டிருந்த தங்கத்தோடா ஒன்றைக் கழற்றித் தன் வீட்டிற் குப் பக்கத்திலிருந்து, ஏழையர் நகைகளைப் பாதிவிலைக்குப் பேசி வாங்கி வாயிற்போட்டுக் கொள்ளும் ஒரு வட்டிக் கடைக்காரனிடத்தில் அந்த மழையில் நனைந்துகொண்டே போய்த் தனக்கிருந்த தாங்கவொண்ணு அவசரத்தை முன் னிட்டு அதைக் கால்விலைக்கே விற்று, அந்தக் கடன்காரர்க ளுக்குக் கொடுத்து அவர்களை யனுப்பிவிட்டு வீட்டிற் குந்தி ஞன். அப்போது சூரியாஸ்தமனமாயிற்று. சுப்பையன் துக் கத்தைப் போன்ற இருள் அதிகமாய்வந்து மூடிற்று.

8-வது அத்தியாயம்.

சுப்பையன் வீடு இடிந்து வீழ்தல்.

அவ்வாறு இரவாகவே, மழை முன்னிலும் அதிகமாய்ப் பெய்யத் தொடங்கிற்று; எங்கும் தேன்வண்டுகள் கலைவதா லுண்டாம் இரைச்சல் போன்ற இரைச்சலா யிருந்தது. அவ்விரவில் சுப்பையனும், அவன் மனைவியும், வேலைக்காரி யாகிய சுப்பும் அதிக துக்கத்தி லாழ்ந்திருந்தபடியால் சிறிது சிறிது போசனமுண்டு சயனித்துக் கொண்டார்கள். அப்போது முத்துக்கருப்பியும், சுப்பியும் தூங்கினார்கள். சுப்பையனுக்கு மாத்திரம் விசாரமிகுதியால் உறக்கம் வரவில்லை; அதனால் அவன், "இன்னும் நமக்கு என்ன தீங்குவருமோ" என்னும் கலக்கத்தோடு விழித்துக்கொண் டிருந்தான்; பாதிச்சாமமாயிற்று; அந்தோ! என்னென்று சொல்லுவோம் சுப்பையனுடைய கஷ்டகாலத்தை! அவனுடைய வீட்டுச்சுவரானது மிகவும் பழையகாலத்துச் சுவராய் இற்றுப்போ யிருந்தபடியாலும், இடைவிடாமல் மழைபெய்ததாலும் இரண்டு பக்கங்களில் படபடவென்றிடிந்து சுப்பையனுடைய நெஞ்சந்திடுக்கிட வீழ்ந்தது. அவ்விரண்டு பக்கங்களிலும் வீட்டின் மேற்கூரையும் சரிந்தது. உடனே சுப்பையன் பதைபதைத் தெழுந்து மனைவியையும் வேலைக்காரியையும் எழுப்பி, பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வாசற்படியோரத்தில் சுவர் இடியாமலிருந்த விடத்திற்கு அவர்களை அழைத்துப்போய் அங்கே உட்காரவைத்துத் தானும் உட்கார்ந்து, "இங்கும் எங்கே சுவர் இடிந்து விடுமோ" என்று திகிற்பட்டுக்கொண்டிருந்தான். அவன், அப்போது வேறொருவர் வீட்டிற்சென்றிருக்கலா மென்று நினைத்தும், ஊரார் எல்லோரும் அவனுக்கு விரோதிகளா யிருந்தபடியாலும், வீதியெல்லாம் வெள்ளமா யிருந்தபடியாலும், அவனுக்கு விரோத மில்லாதவர்களும் மழைக்கஞ்சி வீடுகளைக் கெட்டி

யாகமூடி வெளியிலிருந்து கூப்பிடுகிறவர்களுடைய சப்தம் தங்களுக்குக் கேட்காதபடி அறை வீடுகளுக்குட் படுத்துக் கொண்டிருந்தபடியாலும், அது கூடாமையாயிருந்தது.

சுப்பையன் வீட்டில் திருடர் புகுதல்.

மழையின் ஆரவாரத்தால், சுப்பையனுடைய வீடு இடிந்து வீழ்ந்த சப்தம் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களுக்குக் கேட்கவேயில்லை. அதனால் ஒருவரும் சுப்பையனிடத்தில் துக்கம் விசாரிக்க வரவுமில்லை. இம்மூவரும், பயத்தினால் நடுநடுங்கிக் கலவரங்கொண்டிருந்தனர். இவ்வாறு இவர்கள் விழித்திருந்தும், அவ்விரவில் வீடிடிந்து வெளியாயிருந்தபடியாலும், இருளும் மழையும் திருடருக்கு அச்சத்தை நீக்கிய படியாலும் ஐந்தாறு திருடர்கள் அச்சமின்றிச் சுப்பையன் வீட்டிற்புகுந்து அவனுக்கு ஆஸ்தியாயிருந்த சில துணிமணிகளையும், பாத்திரபண்டங்களையும் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். ஐயோ! சுப்பையன் விடிந்தவுடன் வீட்டைப் பார்த்தான், வீட்டிலொன்றுமில்லை; அதனால் அவனுக்குண்டான வயிற்றெரிச்சல் கணக்கிடக் கூடாததாயிருந்தது. ஊராரெல்லோரும் அவன் வீட்டில் திருட்டு நடந்ததைக் கேள்விப்பட்டு அங்கே வந்து அவனைப்பார்த்து அவர்களுட் சிலர், "ஐயோ பாவம்!" என்று அவனுடைய நிலைமைக்குத் துக்கித்தார்கள்; சிலர் அவனைப் பரிகசித்து நகைத்தார்கள்.

சுப்பையன் பசுவுக்கும் வேலைகாரிக்கும் அபாயம்.

அந்தச்சமயத்தில் 'அடிமேல் அடி விழுந்தது' போன்று அவன் வீட்டிலிருந்த சினைப்பசுவொன்று பிரசவவேதனையடைந்து கன்று அதன் வயிற்றில் குறுக்கே மாட்டிக் கொண்டபடியால் கதறிக்கொண்டு கட்டுத்தறியிலேயே கிடந்து புரண்டது. அதைக்கண்டு சுப்பையன், துக்கித்து ஒரு மாட்டு வைத்தியனை அழைத்துவர உத்தேசித்தான்.

அதற்குள் அவன் வீட்டு வேலைக்காரியாகிய சுப்பு என்பவளுக்கு நான்கைந்து முறை பேதியாகி அவள் படுக்கையிற் சுழன்று விழுந்தாள். சுப்பையனுக்கு இந்தச் சம்பவம் முன்னுண்டான துக்கத்திற்கு மேற்பட்ட துக்கத்தை யுண்டாக்கிவிட்டது.

சுப்பையன் விதை விதைக்கப்போதல்.

இராமுழுதும் மழை பெய்து விடிந்ததும் நின்றுவிட்டபடியாலும், அக்காலம் புன்செய்ப்பயிர் செய்தற்கு நல்ல பட்டமா யிருந்தபடியாலும் அன்று காலையில் ஊரரெல்லோரும் புன்செய்களில் சோளம் விதைப்பதற்குச் சோள வித்துக்களை யெடுத்துக்கொண்டு ஏருடன் ஓடினார்கள். அவர்கள் அவ்வாறு ஓடியதைக்கண்டவுடன் சுப்பையன், தனக்கும் புன் செய் இருந்தபடியால், அதில் உழுது விதை விதைப்பதற்குப் பக்கத்துத் தெருவிலிருந்த தன் பண்ணைக் காரனைக்கூப்பிட்டான். அவன் சுப்பையனுக்கு வேலை போய் விட்டதை யுணர்ந்து 'இனி இவனிடத்தில் பண்ணைக் குழுவதுதகாதென்று கருதி, "என்னால் வேலைக்கு வாமுடியாது" என்று சொல்லிவிட்டான். அதனால் சுப்பையன் "ஐயோ! இந்தச்சமயம் தவறினால் புன்செயில் ஈரம் போய்விடுமே; பின் சோளம் விதைப்பதற்குப் பட்டம் கிடைக்க மாட்டாதே; ஆதலின், சோளவித்தைக் கொண்டு போய் விதைத்துவிட்டு வந்து பின்னர் நாம் இந்தச் சங்கடங்களுக்கு ஓர் பரிகாரத்தைத் தேடலாம்" என்று நினைத்து, உடனே சோளவித்தை யெடுத்துத் தலையிலும், கலப்பை நுகத்தடி முதலியவற்றை யெடுத்துத் தோளிலும் வைத்து உழவுமாடுகளையும் ஓட்டிக்கொண்டு புன்செய்க்குச் சென்றான். அவன் அவ்வாறு வெளியேறிச் சென்றவுடன், அவனெதிரில் நல்ல சகுனமுண்டாவதற்குப் பதிலாகக் கெட்ட சகுனங்களே யுண்டாயின: ஒற்றைப்

பிராமணன் எதிரே வந்தான்; அம்பட்டன் அடைப்பையுடன் சந்தித்தான்; அறுதலி அழுகுரலோடு அவனுக் கெதிரானாள். சுப்பையன் இச்சகுனங்களைப்பார்த்து "அடடா! நம்முடைய காலத்திற்குத் தக, சகுனங்களும் திவ்யாமாயிருக்கின்றன; நமக்கினி என்னவந்தாலும் வரட்டும்; இதுவரை வந்திருக்கின்ற துன்பங்களுக்கு மேற்பட்ட துன்பம் வரப்போகிற தில்லை; 'நிறையக் குளித்தவனுக்குக் குளிரில்லை' என்றபடி துன்பக் கடலிலேயே மூழ்கியிருக்கும் நமக்குப் புதிய சங்கடங்கள் வந்து செய்வதொன்றுமில்லை" என்று மனதிடங் கொண்டு நடந்து தானிருக்கும் தெருவைக் கடந்தான்.

கடன்காரன் சுப்பையனை வழிமறித்தல்.

இவ்வாறு அவன் துணிந்து அத்தெருவைத் தாண்டி விசனமும் வெட்கமும் தன் மனத்தைவாட்ட விரைந்தோடி அடுத்த தெருவில் திரும்பினான். அப்போது, இரண்டு வருடங்களுக்குமுன் அவனுக்குப் பத்து வராகன் கடனாகக் கொடுத்த சங்காலிங்கமென்னும் வட்டிக் கடைக்காரன், எதிரில் வந்து நின்று அவனைமறித்து, "சுப்பையத் தேவா! நீ பரமயோக்கியன்றான்; இரண்டு வருடமாக வாங்கிய கடனைக்கொடாமல் நான் சந்திக்கும் ஒவ்வொரு சமயத்திலும் சாந்தமான வார்த்தைகள் சொல்லி என் கோபத்தை யடக்கிக் காலத்தைக் கடத்தி வருகிறாய்; முந்தியாவது உனக்கு உத்தியோகமிருக்கிறது என்னும் தைரியத்தைக் கொண்டு நான் உன் விஷயத்தில் சிறிது சகிப்போடிருந்தேன்; இனி அப்படியிரேன்; இப்பொழுது நீ பணத்தைக் கொடுத்து விட்டு அப்பால் நட" என்று கடுஞ்சினமாய்ப் பேசினான். சுப்பையன் திடுக்கிட்டு அவனை நோக்கி, "சங்காலிங்கம்! நான் இப்போது முதல் முதல் விதை விதைக்கப்போகிறேன். எனக்கு எத்தனையோ சங்கடங்களெல்லாம் நேர்ந்தும் நான் அவற்றைக்கவனியாமல் தள்ளிவிட்டு இந்த நல்ல

காரியத்தைச் செய்யப்போகிறேன்; நீ இப்பொழுது என்னைத் தடுப்பது நியாயமாகாது; இன்னும் சற்றுப் பொறுமையோ டிருப்பாயானால் நான் விதையை விதைத்து விட்டுத் திரும்பிவந்து விற்காததை விற்றுவது பணம் தேடிக் கட்டாயம் இன்று உன்கடனைக் கொடுத்துவிடுகிறேன்" என்று அவனுக்குச் சமாதானங்கூறினான். அவ்வாறு சொல்லியும் அவன் அதனைக் கேட்கவில்லை. என்ன செய்வான் சுப்பையன்! "இதேது மகா சங்கடமாய்விட்டது" என்று தான் காதிலணிந்திருந்த கடுக்கனைக் கழற்றி அவன் கையிற் கொடுத்து அவனை நோக்கி, "சங்காலிங்கம்! இது என் கடனுக்குச் சரிப்பட்டாலும் சரி; காணுவிட்டாலும் சரி; இதையே நீ அதற்கு ஈடாக வைத்துக்கொள்; இனிமேல் என்னிடம் கடன் கேட்டுத் தொந்தா வுண்டாக்காதே" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைக்கடந்து விரைந்தோடினான். அந்தக் கடுக்கன் கடனுக்கு மேற்பட்ட தொகை பெறக்கூடியதா யிருந்தபடியால் சங்காலிங்கம் அதற்குச் சம்மதித்துக்கொண்டான்.

சுப்பையனுக்குத் தள்ளாத விருந்தும் சாவோலையும் வரல்.

அதன்மேல், சுப்பையன் மேற்கண்டவாறு ஓடிச் சிறிது தூரங் கடந்து செல்லும்போது அவனுடைய சொந்தகாரனாகிய விருந்தினனொருவன் வேற்றூரிலிருந்து அவனுக்கெதிரே வந்தான். அவனைகண்டதும், சுப்பையன், "அடடா! இந்தச் சமயத்தில் நமக்கு விருந்தொன்றுமா வந்துசேரவேண்டும்; வெகுலக்ஷணம்! வெகுலக்ஷணம்!!" என்று சொல்லி அந்த விருந்தினன் சமீபத்தில் வந்தவுடன், அவனைநோக்கி "வாருங்கள்! வாருங்கள்!! நீங்கள் போய் வீட்டிலிருங்கள்; நான் இதோ விதையை விதைத்துவிட்டு ஓடி வருகிறேன்" என்று சொல்லி அவனை வீட்டிற்கனுப்பி விட்டு அப்பாற் சென்றான். அவ்வாறு சென்ற அவன்

மேலே பத்துக்கெஜதூரம் போவதற்குள் ஒருதோட்டி சிவ கெங்கையி லிருந்து ஒரு ஓலையைக் கொண்டுவந்து அவனைக் கும்பிட்டுவிட்டு அவனை நோக்கி, "கும்பிடப்போன தெய் வம் குறுக்கே வந்ததுபோல நீங்கள் எதிரே வந்துவிட்டீர் கள்" என்று சொல்லிக்கொண்டே அவன் கையிற் கொடுத் தான். சுப்பையன், அதனை வாங்கி "ஏதேனும் சுப காரி யத்தைக்குறித்து நம்முடைய பந்துக்களில் எவரேனும் இந்த ஓலையை எழுதி நமக்கனுப்பி யிருப்பார்கள்" என்று நினைத்துத் தனக்குப் படிக்கத் தெரியாதாகையால் மடியில் வைத்துக்கொண்டு, பறையனிடத்தில் "சிவகெங்கையில் என்ன விசேஷம் நடந்தது?" என்று கேட்டான். அவன் திடீரென்று, "சுவாமி! தங்கள் தமக்கையார் தனேஸ்வரி யம்மாள் இறந்துவிட்டார்கள்" என்றுசொல்லிப் பெரிய இழவைச் சுப்பையன் செவியிற் புகவிட்டான். அந்தத் தனேஸ்வரியம்மாள் அவனோடு கூடப்பிறந்த சகோதரி; ஆதலால் அவளிறந்த செய்தியைக்கேட்கவே அவனுக்கு மிகுந்த துயரமுண்டாகிக் கண்களில் ஜலம் பெருகியோ டிற்று. உடனே அவன் இந்த இழவுக்குப் புறப்படவேண் டியவனாயிருந்தான். எனினும், பண்ணைக்காரன் அவனிடம் வேலை செய்யமாட்டேனென்று நீங்கிக்கொண்டபடியாலும் அவனே விதைப்பு வேலையைச் செய்யவேண்டியவனாயிருந்த படியாலும், அந்தச்சமயம் தவறினால் புன்செயில் ஈரங் காய்ந்து விதை விதைத்தல் முடியாமற் போகக்கூடிய தாயிருந்ததாலும், விவசாயம் தவிர அவனுக்கு வேறு ஆதாரமில்லாம லிருந்தபடியாலும், அவன் "விதையை விதைத்து உழுதுவிட்டுப் பின்னுவது நாம் இழவுக்குப் புறப்பட்டுப்போவோம்" என்று கருதி அந்தப் பறைய னிடத்தில் "அப்பா! நீபோய் என் வீட்டில் ஏதாவது பழையசாதமிருந்தால் என் மனைவியிடம் வாங்கிச்சாப்பிட்டு

விட்டு ஊருக்குப்போ; நான் என் மனைவியையும் அழைத்துக்கொண்டு உனக்குப் பின்னே என் தங்கையின் இழவுக்கு வருகின்றேன்" என்று சொல்லி அவனை வீட்டிற் கனுப்பிவிட்டுப் பைத்தியங் கொண்டவன்போன்று முன்னிலும் அதிகவிரைவாய் மாட்டை ஓட்டிக்கொண்டு புன்செயை நோக்கி ஓடினான்.

வரிக்காரர் சுப்பையனைத் துன்பப்படுத்தல்.

இவ்வளவு தடைகளையும் நீக்கிச் சுப்பையன் விதை விதைப்பதொன்றையே முக்கியமாகக் கருதி ஓடியும், அதன் மேலும் அவனைத் தொடர்ந்த சனியன் விடவில்லை. அவன் சிறிதுதூரங் கடந்து அப்பாற் செல்வதற்குள் அரசருக்குச் சேரவேண்டிய நிலவரி வசூலிப்பவர்கள் வந்து, அவன் ஒரு வருஷத்து நிலப்பாக்கி கொடாமலிருந்தபடியால், 'நீ நிலவரியைக் கொடுத்துவிட்டுத்தான் அப்பாற் செல்லவேண்டும்' என்று அவனைத் தடுத்துக் கொண்டார்கள். அவன் அவர்களிடம் "நான் விதையை விதைத்துவிட்டு வந்து வரியைத் தருகிறேன்" என்று எவ்வளவோ ஹிதமான வார்த்தைகளைக் கூறினான். அவ்வாறு கூறியும் பயன்படவில்லை. அந்த வரிச்சேவகர் அவனைநோக்கி "இப்பொழுது நீ பாக்கியைக் கொடுத்தால் வாங்கிக்கொள்வோம்; கொடாவிட்டால் உன் மாட்டை ஓட்டிக்கொண்டு செல்வோம்" என்றார்கள். அப்போது சுப்பையன், இடுக்கியிலகப்பட்ட எலியைப் போன்று ஒருபக்கமு மசைவதற்கியலாமல் விழித்தான். முடிவில் ஒரு வகையில் தெளிந்து தன்காதிலணியப்பட்டிருந்த பொன் முருகைக்கழற்றி அவர்கள் கையிற்கொடுத்து, "ஐயா! பாக்கிக்கு இது ஏறக்குறையச் சரியாயிருக்கும். இரசீது கொடுங்கள்" என்று அப்பொழுதே இரசீதையும் வாங்கிக்கொண்டு அப்பாற்சென்றான். இதுவரை சுப்பையன் அணிந்திருந்த நகைகள் யாவும் ஒழிந்தன.

குருக்கள் சுப்பையனிடம் தக்ஷிணைக்குக் குறுக்கிடல்.

அதன்மேல் "நகைகள் தொலைந்தாலும் தொலையட்டும்; நமக்குச் சங்கடம் ஒவ்வொன்றாக நீங்குவதே சிரேஷ்டம்" என்று சுப்பையன் ஒருவாறு திருப்தியடைந்தவனாய், "இனிமேல் நமக்கு ஒன்றும் வாராது, வந்தாலும் பெருஞ் சங்கடமா யிராது" என்று அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே தெற்குக் கோட்டை வாசலுக்குச் சமீபத்தில் போய்ச் சேர்ந்தான். முன்னொரு சமயம் அவன் தன் தாயாருக்குச் சிரார்த்தம் நடத்திவைத்த குருக்களுக்குத் தக்ஷிணை கொடாமல் கடன் சொல்லி யிருந்தான். அவர் அப்போது கிருதமா நதியில் ஸ்நானஞ் செய்துவிட்டுத் திரும்பிவந்தார். அப்படி வந்தவர், அவ்விடத்தில் சுப்பையனைக் கண்டு கொண்டார். கண்டதும் அவனைப் பார்த்து, "என்ன சுப்பையத் தேவரவாள்! நீங்கள் செய்தது உங்களுக்கே நியாயமா யிருக்கிறதா? நீர் பிராமணனுக்குக் கொடுக்கும் தக்ஷிணைக்குக் கூடக் கடன் சொல்லலாமா? அப்படிச் சொல்லியும் அதை எனக்குக் கொடாமல் ஏமாற்றி வருகிறீரே; இஃதென்ன ஒழுங்குகாணும்? இதைக் கேட்டவர்கள் சிரிக்கமாட்டார்களா!" என்று கடுகடுப்போடுபேசினார். இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன், இரண்டு தினங்களாக இடைவிடாத துன்பங்களையே அனுபவித்த சுப்பையனுடைய மனம் 'இன்ன நிலைமையை யடைந்திருக்கும்' என்பதை இதை வாசிப்போர்களே யூகித்தறிந்து கொள்க. அவ்வார்த்தைகளால் அவனுக்குமிகுந்த வேதனை யுண்டாய்விட்டது. அதனால் அவன் அடங்காத கோபத்தையடைந்து புலிபோலச் சீறி அந்தப் பிராமணர் முகத்தைப் பார்த்து, "சீ! சீ!! அயோக்கியப் பிராமணா!!! உனக்குக் குருதக்ஷிணை கேட்பதற்கு இது தானா சமயம்? நான் அடைந்திருக்கும் துன்பங்களை நீ ஒரு சிறிதும் கவனியாமல் இந்தச் சமயத்தில் வந்து கடுகடுப்

பாய்ப் பேசுகின்றாயே; 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்பதை நான் உன்னிடத்திற்றான் கண்டேன்; நீ இவ்வளவு முடுக்காய்க் கேட்டபடியால் நான் உனக்குத் தக்ஷிணை கொடுக்க மாட்டேன்; நீ செய்கிறதைச் செய்; தக்ஷிணை கொடுப்பது மனிதரின் இஷ்டத்தைப் பொறுத்ததா யிருக்கிறது; எனக்கிப்போது அதைக்கொடுக்க இஷ்டமில்லை; நீ இங்கே நில்லாதே; போ! போ!! நின்றால் உன் பல்லை நான் உதிர்த்துவிடுவேன்; மறுபேச்சுப் பேசாதே" என்று கடிந்து சொல்லிவிட்டு விரைந்து சென்றான். அவர் ஏழைப் பிராமணராதலால் அவரால் எதுவுஞ் செய்தல் இயலாதென்று கருதியே அவரிடத்தில் மட்டும் அவன் இவ்வாறு முறுக்காகப் பேசினான். ஐயோ! அந்தப் பிராமணர் என்ன செய்வார் பாவம்! சுப்பையன் அடைந்திருந்த சங்கட நிலைமையை அவர் எப்படி யறிவார்? அவன் அப்பொழுது அடைந்திருந்த நிலைமை அவருக்குத் தெரியாமலிருந்தபடியால் அவர், தம் விஷயத்தைச் சாதாரணமானதாக நினைத்து எப்பொழுதும்போல அவனிடம் குருதக்ஷிணை கேட்டார். சுப்பையன் சங்கதி தெரிந்திருந்தால் அவர் அதை அவனிடம் கேட்கவே மாட்டார். அவர் தக்ஷிணை கேட்டதற்குச் சுப்பையன் பேசினபேச்சு அவருக்குப் போதும் போதும். அவர் "இந்த மட்டில் அவன் கை நீட்டாமல் நம்மை விட்டுவிடும்படி செய்தது நம்முடைய நல்லகாலமே" என்று மௌனமாக நடுக்கங் கொண்டு வீட்டிற்குப் போய்விட்டார்.

சுப்பையன் விதைப்போட்டி நழுவி விழுதல்.

அதன்மேல் சுப்பையன், "அப்பப்பா! இந்த ஒற்றைப் பிராமணன் வந்ததோடு நம் துன்பங்களெல்லாம் ஒழிந்தன" என்று சொல்லிக்கொண்டே மதுரையை விட்டு வெளியேறி வில்லா புரத்துத் திடலிலுள்ள தன் புன்செயிற்

போய்ச் சேர்ந்தான். இதற்குள் மூன்றுபனை உயரம் சூரியன் மேலேகிளம்பி நாழிகை அதிகமாய் விட்டது. அதனால் அவன் மிகுந்த அவசரத்தோடு மாடுகளை நுகத்தடியிற் பிணைத்துக் கலப்பையிற் கயிறு சுற்றி நுகத்தடியின் மத்தியிற் பூட்டி நிறுத்திவிட்டு விதைப்பொட்டியை எடுத்துக் கையில்வைத்து வடக்கு முகமாகத் திரும்பிக் குலதெய்வத்தைக் கும்பிட்டு அப்போது பக்கத்துப் புன்செயில் ஒருவன் விதை விதைத்துக்கொண் டிருந்தபடியால் அவனைப் பார்த்து, "அண்ணே! * விளைய; விளைய" என்று சொல்லி, அவனும் எதிர்மொழியாக "விளைய; விளைய" என்று மங்கல மொழி கூறியபின் விதையை வலக்கையால் அள்ளி விதைப்பதற்காக அக்கையை நீட்டினான். அந்தோ! சுப்பையனுக்கு என்ன கஷ்டகாலம்! இடக்கையிலிருந்த விதைப் பொட்டி நழுவிப் பொத்தென்று கீழே வீழ்ந்தது. அதைக் கண்டவுடன் சுப்பையன் அடைந்த விசனத்திற்களவில்லை. எனினும் "பக்கத்தில் உழுபவர்கள் இதைப் பார்த்தால் நகைப்பார்கள்" என்று கீழே வீழ்ந்த பொட்டியை ஒருவருக்கும் தெரியாமல் விரைந்தெடுத்து "எதுவும் உள்ளபடிதான் நடக்கும், நம் செயலால் நடப்பதொன்று மில்லை" என்று சொல்லிக்கொண்டே புன்செயில் விதைகளை யெல்லாம் விதைத்து விட்டான்.

சுப்பையனுடைய உழவுமாடு திடீரென்று மடிதல்.

பின்பு விதை மண்ணுக்குள் மறைவதற்காக, தான் எருதுகளைப் பூட்டி நிறுத்தியிருந்த ஏரைக் கையிற்பிடித்தோட்டி உழத்தொடங்கினான். அவ்வாறு அவன் உழும் போது உழவிற் சிந்தையைச் செலுத்தாமல், தன் தமக்கை

* பயிர்த்தொழில் செய்வோர் விதை விதைக்குங்காலத்தில் மங்கலமுண்டாதற் பொருட்டு ஒருவரைப்பார்த்தொருவர் இவ்வாறு சொல்லிக்கொள்வது மரபு.

யிறந்ததிலும், வீட்டுவேலைக்காரி பேதியாகிக் கிடப்பதிலும், மனைவி நோயா யிருப்பதிலும், பசு பிரசவ வேதனைப்பட்டுக் கிடப்பதிலும், விருந்தாளி வந்திருப்பதிலும், வீடு இடிந்து கிடப்பதிலும், வீட்டில் களவு போனதிலும் செலுத்தி, இவைகளை யுத்தேசித்து "விரைந்து வீட்டிற்குப் போக வேண்டும்" என்னும் கருத்துடன் அடிக்கடி மாடுகளை அடித்து அடித்துத் தூத்தி உழுதான். அதனால் அந்த மாடு களிரண்டும் மருண்டு நேரே போகாமல் அங்கு மிங்கும் ஓடத்தலைப்பட்டன. அவற்றின் செய்கையைக்கண்டு அவன் அடங்காக் கோபங் கொண்டு, "பாவி மாடுகளே! நீங்களுமா இந்தச் சமயத்தில், என்னைச் சங்கடப் படுத்துகிறீர்கள்?" என்று சொல்லி அவற்றை அடிமேல் அடியாக அடித்தான். மாடுகளிரண்டும் அந்த அடிகளைத் தாங்காமல் கலப்பையை யும், அவனையும் சேர்த்திழுத்துக்கொண்டு மிகுந்த வேகத் தோடு ஓடி எதிரே நின்ற வோர் வேலாமரத்தில் நுகத்தடி யின் மத்தியானது பட்டுத் தடையுறும்படி சாடின. அவ்வாறு சாடவே நுகத்தடி படீ ரென்று முறிய வலது புறத்தில் கட்டியிருந்த எருது முன் புறமாய்த் திருகிக்கொண்டு கீழே வீழ்ந்தது. நுகத்தடிக்கும் அந்த மாட்டின் கழுத்திற்கும் சேர்த்துப் பூட்டப்பட்டிருந்த தும்பு அந்த மாட்டின் கழுத்து இருதுண்டாகப் போகும்படியான விதமாக இறு கிக்கொண்டது. அதனால் மாடு, தன் கண்கள் வெளியிற் பிதுங்கக் கால்களை உதறி மாணுவஸ்தையை அடைந்தது. அது சிறிது நேரத்திற்குள் இறந்து விடக் கூடியது போல தோன்றிற்று. அதன் நிலைமையைப் பார்த்ததும், சுப்பை யன், "ஆகா! ஆபத்தாகி விட்டதே! நாம் என்னவேலை செய்தோம்! மாட்டின் கழுத்து இறுகுகிறதே! இந்தக் கயிற்றை நாம் அறுக்காத வரையில் சிறிது நேரத்திற்குள் மாடு மடிந்து விடுமே; ஐயோ! நான் என்ன செய்வேன்"

என்று சொல்லிக்கொண்டே இறுகின கயிற்றை அவிழ்க்க முயன்றான். அஃதவனால் முடியவில்லை. பின் அவன் அதனை அறுக்க உத்தேசித்தான்; அதற்கு அவனிடம் ஆயுதம் ஒன்றும் அகப்படவில்லை. அதன்மேல் அவன் ஒன்றுஞ் செய்ய இயலாதவனாய் "தெய்வமே! இது பணம்பெற்ற மாடாயிற்றே! இது போனால் என் குடி கெட்டுவிடுமே" என்று துக்கித்துத் துடிதுடித்துப் பக்கத்துப் புன்செய்களில் உழுது கொண்டிருந்தவர்களை நோக்கி "அண்ணே! அண்ணே!! ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்!!" என்று கூவினான். உடனே அவர்கள் எல்லோரும் மாட்டின் அபாய நிலைமையைப் பார்த்து அதனைக் காப்பாற்றுவதற்கு அங்கே ஓடிவந்தார்கள். அதற்குள் அந்தமாடு சுப்பையன் வயிற்றில் நெருப் பெரியக் கால்களைப் 'படீர் படீர்' என்ன உதறிக்கொண்டிறந்து போயிற்று.

சுப்பையன் பசுமாடு மடிதல்.

எல்லோரும் அங்கே வந்து சேர்ந்ததும் அவசரமாகத் தும்பை அவிழ்த்துவிட்டு மாட்டை அங்குமிங்கும் புரட்டிப் பார்த்து, அது மடிந்ததைக்கண்டு "அடடா! எருது இறந்தே போய்விட்டது" என்று சொன்னார்கள். சுப்பையனுக்கு இதற்குமுன் நடந்த சம்பவங்களைக் காட்டிலும் இது மிகச் சந்தோஷமான சம்பவமல்லவா? இதனால், அவனுக்குத் தன்னையறியாமலே கண்களினின்றும் ஜலம் தாரை தாரையாய்ப் பெருகியோடிற்று. இந்தச் சமயத்தில் அவன் வீட்டில் பிரசவவேதனைப் பட்டுக்கொண் டிருந்த பசுவும் இறந்து போயிற்று. சுப்பையனைக்கண்டு பேசிவிட்டு அங்கே சென்ற விருந்தினன் அதைக்கண்டு விரைந்தோடி வந்து, சுப்பையனிடத்தில் இடிமேல் இடிவிழுந்ததுபோல, "ஐயா! வீட்டில் பிரசவவேதனைப் பட்டுக்கொண்டிருந்த பசு இறந்து விட்டது" என்று சொல்லிவிட்டு அங்கு இறந்து கிடந்த

உழவெருதைப் பார்த்துத் தானும் துக்கப்பட்டான். அப்போது அங்கு நின்றவர்கள், சுப்பையனைப் பார்த்து, "அண்ணே! உனக்கு இப்போது நல்ல காலமில்லை; நீ வீட்டிற்குப்போய் மற்ற காரியங்களைப்பார்; நீ சோளம் விதைத்த புன்செயை, நாங்களெல்லோரும் எங்கள் வேலை முடிந்தவுடன் உழுதுவிடுகிறோம்; இறந்ததுபோக மிஞ்சியிருக்கும் ஒற்றை மாட்டையும் ஓட்டிக்கொண்டு வீட்டுற்குப் போ" என்று சொன்னார்கள். இவர்கள் எல்லோரும் சுப்பையனோடு உட்பகைக்கார ரானபடியால் அவனுக்கு இத்தகைய சங்கடங்கள் வந்ததைப்பற்றி மனத்திற்குள் சந்தோஷமே கொண்டிருந்தார்கள். எனினும் வெளி உபசாரமாகவே இந்த வார்த்தைகளைச் சொன்னார்கள். சுப்பையன், "இனிமேல் நம்மாலாவதொன்றுமில்லை" என்று துக்கப்பட்டுக்கொண்டே ஒடிந்த நுகத்தடி, கலப்பை முதலியவற்றையெடுத்துத் தோளில் சேர்த்து, அங்கு நின்ற ஒற்றைமாட்டையும் ஓட்டிக்கொண்டு வந்த விருந்தினனோடு, "நான் எல்லாத் தடைகளையும் மீறி விதை விதைக்க வந்தது நன்றாயிருந்தது! நன்றாயிருந்தது!!" என்று சொல்லிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தான். அப்போது அவன் தன் வீட்டிலிருந்து வந்த விருந்தினனிடம் வீட்டு வேலைக்காரியினுடைய சிக்கைப்பற்றியும் தன் மனைவியின் நிலைமையைப் பற்றியும் விசாரித்துக்கொண்டே போனான். அவ்வாறு சுப்பையன் சென்றவுடன் பொய் உபசாரவார்த்தைகள் கூறி அவனை யனுப்பிய மற்ற உழு தொழிலாளிக ளனைவரும் ஒன்றுகூடி, "சுப்பையன் அரண்மனை உத்தியோகத்திலிருந்து கொர்வங்கொண்டு நடத்திய அக்கிரமங்களுக்குப் பிரதிபலனாக அவனிடத்தே நடக்கும் காரியங்களைப் பார்த்தீர்களா? இந்த இரண்டு நாளைக்குள் அவன் என்னபாடு படுகிறான்! மனிதர் செய்யும் அநியாயம் வீண்போகாது" என்று பேசி, அவ

னிடம் சொன்னபடி அவனுடைய புன்செயை உழாமலும் போட்டுவிட்டார்கள். அதனால் சிறிது நேரத்திற்குள் சுப்பையன் விதைத்த விதைகளையெல்லாம் புல ஜெந்துக்கள் பொருக்கித் தின்றுவிட்டன. பின் அடுத்த நிலமெல்லாம் பயிரேறிய காலத்தில் சுப்பையன் புன்செய்மாத்திரம், விஷய ஞான மில்லாமல், நல் விஷயங்களடங்கிய நூல்களைப் பழிப் போரது நெஞ்சம்போல அழகற்றுக்கிடந்தது. அவன் உத்தி யோகத்தோ டிருக்கும்போது குடிகளுக்கு நன்மை செய் திருந்தால், இவ்வித சம்பவங்களில் ஒன்றுகூட அவனிடம் நேராது. இறந்த எருது அப்பொழுதே பறையர்உணவுக் குபயோகமாயிற்று.

சுப்பையனுடைய வேலைக்காரி மடிதல்.

இவை நிற்க, மேற்குறித்தவாறு சுப்பையன் விருந்தின னோடு விசனித்து வீட்டிற்குச் செல்லும்போது அவன் வீட்டு வேலைக்காரி இறந்து போய்விட்டாள். அப்போது சிவகெங்கையிலிருந்துவந்து சுப்பையனிடம் இழவு கூறி விட்டு ஆகாரம் வாங்கிச் சாப்பிடுதற்கு அவன் வீட்டிற்குச் சென்றிருந்த தோட்டி அவளிறந்ததைக் கண்டு, "இஃ தென்ன வந்த இடத்திலும் பேரிழவா விழவேண்டும்" என்று சாப்பாடின்றித் திரும்பிவந்து நடுவழியில் சுப்பை யனைக்கண்டு அவனிடத்தில் "சுவாமி! நம்ம வீட்டு வேலைக் கார அம்மா போயிட்டுது; நான் நாச்சியாளிடத்தில் கூழு கீழு வாக்கிக் குடிச்சுவிட்டுப் போகலாமென்று தங்கள் பேச்சைக் கேட்டு வீட்டுக்குச் சென்றதற்கு இந்தச் சாப்பாடு தான் எனக்குக் கிடைத்தது" என்று சொன்னான். இதை வாசிக்கும் நண்பர்களே! இந்த இடத்தில் சுப்பையன் மனம் பட்டபாடு சொல்லுந்தரத்ததன்று. அவன் விம்மலும் பொருமலுமுடையவனாய் உடனே தன்னோடு வந்த விருந்தி னனிடம் நான்கு அணுவாங்கி அந்தத் தோட்டிக்குக்

கொடுத்து, "எங்கேனும் நீ இதைக்கொடுத்து ஆகாரமுண்டு விட்டுப்புறப்பட்டுப்போய் என்னுடைய நிலைமையைச் சிவ கெங்கையிலுள்ள என் பந்துக்களிடத்திற்சொல்; நானும் அங்கே சீக்கிரம் வருகிறேன்" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு வீட்டிற்போய்ச் சேர்ந்தான். அங்கே வேலைக்காரி ஒரு பக்கத்தில் இறந்து கிடந்தாள். பசுவொரு பக்கத்தில் செத்துக் கிடந்தது. அவன் மனைவி ஒருபக்கத்தில் பொங்கிப் பொங்கி அழுதுகொண்டிருந்தாள். அங்கே நடந்திருந்த சம்பவங்களைக்கண்டு அவனும் அழத்தொடங்கினன். இச்செய்கைகளையெல்லாம் அக்கம் பக்கத்திலிருந்த வீட்டுக்காரர்கள் பார்த்து அவர்கள் சுப்பையனுக்கு விரோதிகளாதலால் மனதிற்குள் சந்தோஷமடைந்தார்கள். ஆயினும் வெளிக்கு விசனமுள்ளவர்களைப்போல நடித்து உலகாசாரப்படி தாங்களும் அங்கே வந்து கண்ணைக்கசக்கிக் கொண்டு அவர்களுக்குத் தேறுதல் சொன்னர்கள். அப்போது இறந்த வேலைக்காரியை மயானத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்து வருவதற்குரிய செலவிற்குச் சுப்பையனிடம் பணமில்லாதபடியால் அதன் பொருட்டேற்பட்ட கவலை யொருபக்கம் அவன் மனதை வாட்டிக்கொண்டிருந்தது. இறந்துபோனமாடுவெளியே கொண்டுபோகப்படாமற் கிடந்ததும் அவனுக்குத் துன்பமாயிருந்தது. அத்தருணத்தில் பறையர்கள் வந்து அந்தப் பசுவைத் தூக்கிச்சென்ருர்கள். அதனல் அந்தச் சங்கடமொன்று சுப்பையனுக்குத் தொலைந்தது. பின்னர், பிணத்தின் செலவிற்கு என்னசெய்யலாமென்று சுப்பையன் யோசித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு அதற்குத் தக்க மார்க்கம் ஒன்றும் புலப்படவில்லை. முடிவாகத் தன்னிடம் வந்திருந்த விருந்தினனிடத்தில் ஏதாவது கேட்டுப் பார்க்கலாமென்று நினைத்து அவனை நோக்கி, "ஐயா! பிணம் வீட்டில் விழுந்து

கிடக்கிறது; என்கையிலோ இதன் செலவுக்கு ஒன்று மில்லை; இங்கே எனக்கு ஒருவரும் உதவி செய்யவு மாட்டார்கள்; எப்படியாவது இந்தப் பிணம்போய்ச் சுடு காடு சேரவேண்டும்; இதற்கென்னயோசனை செய்யலாம்? உங்களிடத்தில் ஏதாவது பணமிருக்கிறதா?" என்றுகேட் டான். அவனிடத்திலோ பணமில்லை. அதனால் அந்த விருந் தினன், "ஐயையோ! இதென்ன தருமசங்கடம்! 'அலுத் திளைத்து அம்பட்டன் வீட்டுக்குப் போனவனை அவன் இழுத்து வைத்துத் தலையைச் சிரைத்தது' போல இங்கே சந்தோஷங் கொண்டாடிப் போவதற்கு விருந்தினனாகி வந்த நம்மிடத்தில் இவன் 'பிணமெடுக்கப் பணமிருக்கிற தா?' என்று கேட்கின்றானே! இருந்திருந்து நாம் நல்ல மனிதனிடத்தில் விருந்தினனாகி வந்தோம்; வந்த விடத்தில் நாமும் இவனோடு சேர்ந்து துக்கப்படும்படி அநேக சங்க டங்களெல்லாம் நேர்ந்திருக்கின்றன; இன்னும் நாம் ஆகா ரம் சாப்பிடுதற்கு வழியே காணவில்லை; இங்கே பிணம் விழுந்து கிடக்கும்போது எங்கே நமக்குச் சாப்பாடு கிடைக் கப் போகிறது!" என்று பலவாறு மனத்திற்குள் யோசித் தவனாய்ச் சுப்பையனைப் பார்த்து "நண்பரே! என்னிடத் தில் பணம் ஒன்றுமில்லையே" என்றான். ஆனால் அவனிடத் தில் பணமில்லாவிட்டாலும் அவன் காதில் கடுக்கன் அணிந்திருந்தான். சுப்பையன், 'இனி நாம் என்ன செய் வோம்?' என்று அவன் முகத்தைப் பார்த்தான். காதில் கடுக்கன் கிடந்தது. அதைக்கண்டதும் அவன், "காதில் கிடக்கும் கடுக்கனையாவது நீர் கழற்றித் தரவேண்டும்; நான் அதை எங்கேயாவது குதுவை வைத்துப் பணம் வாங்கிக் கொள்கிறேன்; காரியம் நடக்கவேண்டி யிருப்பதனால் உமக்கு இவ்வாறு நான் சிரமங் கொடுக்கிறேன்; நீங்கள் ஊருக்குப்போவதற்குள் இதைத் திருப்பிக்கொடுத்து விடு

வேன்; சீக்கிரம்! சீக்கிரம்!! கடுக்கனைக் கழற்றுங்கள்" என்றான்.

சுப்பையன் பிணமேடுக்கும் செலவிற்கு விருந்தாளியின் கடுக்கனைக் கழற்றிக் கோள்ளல்.

விருந்தினன், "ஐயோ! இஃதென்ன 'இழவுக்கு வந்தவள் தாலியறுத்தது' போல நாம் விருந்திற்கு வந்தவிடத்தில் இவனுக்குக் கடுக்கனைக் கழற்றிக்கொடுக்க ஹேது வுண்டாய் விட்டதே! 'தாக்ஷணியம் தனநாசம்' என்றபடி நாம் தாக்ஷணியப்பட்டு இவனிடம் கடுக்கனைக் கொடுத்தால் அது திரும்பி நம் கைக்கு வராது; ஆயினும், இது தொலைந்தாலும் தொலையட்டும்; நாம் புறப்பட்டது நல்ல நேரமில்லைபோலிருக்கிறது. இனிமேல் இவனுடைய சிநேகிதமும் நமக்குத் தேவையில்லை; இப்போதுநாம் இவனைச்சந்தித்தது கடைசி" என்று தனக்குள் தானே பேசிக்கொண்டு அரை மனதோடு கடுக்கனைக் கழற்றி அவனிடம் கொடுத்தான். சுப்பையன், அதை வாங்கினவுடன் அவ்விருந்தினனைப் புகழ்ந்து பேசிவிட்டு ஒரு வட்டிக் கடைக்காரனிடத்தில் அடகு வைத்துப் பத்துரூபா வாங்கிப் பிணத்துக்குவேண்டிய சாமான்களையெல்லாம் சேகரித்து அதைத் தூக்கிச்செல்ல முயன்றான். அதற்குமுன் சுப்பையன் ஊராருக்கு வெறுப்பாகும்படி நடந்தபடியாலும், அந்தப் பிணம் கால்ராவில் இறந்ததாதலினும் அங்குக்கூடியிருந்த எல்லோரும் தூரத்தில் நின்று, "சரி! சரி! நேரமாய்விட்டது; பிணத்தைத் தூக்குங்கள்! தூக்குங்கள்!!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்களேயன்றி, அவர்களுள் ஒருவரேனும் பிணத்துக்குச் சமீபத்தில் வரவில்லை; வந்த விருந்தினனும் சுப்பையனுமே சமீபத்தில் நின்றார்கள். சுப்பையனுக்கு அப்பொழுது தான் புத்தி வந்தது. அதன்மேல் அவன், "ஆகா! நாம் உத்தியோகக் கெர்வத்தால் ஜனங்களுக்குச் செய்த அக்கிரமங்களெல்லாம் இப்

பொழுது நம்முடைய பிணத்தைத் தூக்குவதற்கும் ஒரு வரும் கிட்டவராமற் செய்து விட்டன; நாம் செய்தன வெல்லாம் மிகவும் ஒழுங்கீனமானவைகளே; இனிமேல் என்னசெய்கிறது? நாம் இப்பொழுது ஊரார்க்கு எவ்வளவு சமாதானங் கூறினபோதிலும் அவர்களின் செவியிலேறுமா? ஓகோ! இந்த அலங்கோலமான சமயத்தில் நம் சிநேகிதராகிய மலையாளத்துக் கோடங்கிகூட வரவில்லையே. அவ ரிருந்தால் இப்பொழுது நாம் பிணந்தூக்குவதற்கு ஒத்தாசை செய்வாரே" என்று பக்கத்து வீட்டிற்குப் போய் அங்கிருந்த கோடங்கி மலையாளபகவதியைப் பார்த்தான். அவன், சுப்பையன் வீட்டில் பிணம் விழுந்ததை யுணர்ந்து, தான் அங்கே யிருந்தால் அவனுக்குதவி செய்யப் போய்ச் சங்கடப்பட ஏது வுண்டாகுமென்று கருதி முந்தியே பக்கத்து ஊருக்குக் கம்பிநீட்டி விட்டான். அதனல் சுப்பையன் அவ்வீட்டிற்குப் போனவுடன், அங்கிருந்தவர்கள் 'அவர் பக்கத்து ஊருக்குக் குறிபார்க்கப் போய்விட்டார்' என்று சொல்லிவிட்டார்கள். மலையாளபகவதி அவ்வாறு பக்கத்து ஊருக்குப்போகும்போது சுப்பையனுக்கு நேர்ந்த துன்பங்களுக்கு மனதிற்குள் சந்தோஷித்தவனய், அங்கே இருந்தவர்கள் மேற்கண்டவாறு சொல்லும்படி ஏற்பாடு செய்திருந்தான். அதனலேயே அவர்கள் சுப்பையனைக் கண்டவுடனேயே அவ்வார்த்தைகளைக் கூறிவிட்டார்கள். தான் முதலில் மறைந்திருந்து சுப்பையனுக்கு எல்லாத் துன்பங்களும் வந்துபோய் முடிந்தபின், வந்து அவனுடன் கலந்து உடுக்கைத் தட்டி மும்முரமாய்ச் சுவாமிகளைக் கூப்பிட்டு அவனுக்கும் அவன் மனைவிக்கும் திருப்தியை உண்டாக்கி, அவர்களை மேலும் பல துன்பங்களில் சிக்கவைத்துத் தன் மனதிலிருந்த சிலவற்றை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்பது கோடங்கியினுடைய எண்ணம். அதனு

லேயே அவன் அப்போது அடுத்த ஊருக்குப் போய்விட்டான்.

விருந்தாளி சொல்லாமல் ஓடுதல்.

இதுநிற்க; மேற்கூறியவாறு அவர்கள் கோடங்கி இல்லையென்று கூறியதே "அடடா! இந்தச் சமயத்தில் சிநேகிதர் கூடவா இல்லாமற்போய்விடவேண்டும்!" என்று சுப்பையன் விசனித்துத் திரும்பி வந்து விருந்தினனிடத்தில், "நாமிருவருமே பிணத்தைத் தூக்கிச் செல்லவேண்டும்; என்னசெய்யலாம்; இந்த ஊரினுடைய மாதிரி இப்படியிருக்கிறது" என்றான். இதைக்கேட்டு விருந்தினன், "ஓகோ! நமக்கு இந்தச் சங்கடமுமா வந்து சேரவேண்டும்? நல்லமனிதன் வீட்டுக்கு நாம் விருந்தினனாக வந்தோம்; பிணம் தூக்குவதற்குக்கூட ஒருவரும் கிட்ட வாராதிருக்கும்படி ஊரார்க்குத் தீங்கு செய்த இந்தப் பாவி சகவாசம் நமக்குக் கிட்டவந்தாலும் ஆகாது; இவன் இத்தன்மையுள்ளவனென்று தெரிந்திருந்தால் நாம் இங்கு வந்திருக்கவே மாட்டோம்; இப்பொழுது வகைதெரியாமல் வந்தகப்பட்டுக்கொண்டோம்; நாம் கடுக்கனையு மிழந்து பிணத்தைச் சுமக்கவும் ஏது வுண்டாயிற்று; கடுக்கன் இனி நமக்கு வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி; நாம் பிணத்தைத் தூக்கிக் கொண்டுபோய்ச் சுடுகாட்டிற் போட்டுவிட்டுச் சொல்லாமல் நம் ஊருக்கு ஓடி விடவேண்டும்" என்று நிச்சயப்படுத்திக் கொண்டு சுப்பையனோடு சேர்ந்து பிணத்தைத் தூக்கினான். இருவரும் அதனைச் சுடுகாட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். இதற்குள் பிற்பகல் நேரமாய் விட்டது. இருவரும் பிணத்தைக் கீழே யிறக்கியவுடன் விருந்தினன் ஜலபாதைக்குச் செல்பவன் போன்று மெதுவாய் அவ்விடத்தை விட்டு நழுவி "பிழைத்தேன்! பிழைத்தேன்!!" என்று தன்னூரிற் போய்ச்

சேர்ந்து விட்டான். சுப்பையன் அவனைத் தேடிப்பார்த்து, அவன் அங்கில்லாமையால் 'வீட்டிற்குப் போயிருப்பான்' என்று நினைத்து, பிணத்துக்குச் சுடுகாட்டிற் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் செய்துவிட்டுத் தன் வீட்டிற்குப் போய் அங்கே விருந்தினனைப் பார்த்தான். அங்கும் அவனில்லை. அதன்மேல் சுப்பையன் "அவன் போனதே நல்லது; இனிக் கடுக்கனைப் பற்றிய தொந்தரவு நமக்கு இல்லை" என்று மிகவும் மயக்கமாயிருந்தபடியால் தன் மனைவி சமைத்து வைத்திருந்த ஆகாரத்தை அவளுக்குங் கொடுத்துத் தானும் உட்கொண்டான்.

9-வது அத்தியாயம்.

சுப்பையன் தமக்கையின் இழவுக்குப் போதல்.

அதன்மேல் சுப்பையன், தன் தமக்கை இறந்த இழவுக்குப் போகவேண்டுமென்று கருதி, தன் மனைவி குழந்தையைப் பார்த்துக்கொண்டு பத்திரமா யிருக்கும்படிக்கும், தான்போய் மறுநாள் உதயத்தில் திரும்பி வந்துவிடுவதாககவும் அவளிடம் சொல்லிவிட்டுச் சிவகெங்கைக்குப் புறப்பட்டான். அப்பொழுது பகல் இருபத்தைந்து நாழிகைக்கு மேலாய்விட்டது. எப்படியும் அவன் முன்னிரவு நேரத்திற்குள் சிவகெங்கைக்குப் போய்விட வேண்டுமென் றுறுதி கொண் டோடினன். பாதிவழி போவதற்குள் இருட்டாய் விட்டது. நல்ல இருள் வந்து மூடியசமயத்தில் அவன் சிவகெங்கைக்கும் மதுரைக்கும் நடுவேயுள்ள பூவந்தியென்னு மூர்க்கருகே போய்க்கொண் டிருந்தான். அப்பொழுது சிவகெங்கையிலிருந்து மதுரைக்கு வந்து இராஜசமுகத்தில் உத்தியோகம் பெற்று நூதனமாய்க் கௌரவமடைந்த சிங்காரம்பிள்ளை யென்பவர் ஏதோ ஒரு அவசரகாரியமாகச் சிவகெங்கைக்குப் போவதற்கு விரைவான குதிரை பூட்டின

வண்டியிலேறிப் புறப்பட்டு அவ்விடத்தில் வந்து சுப்பைய னைச் சந்தித்தார். இவர் எத்தகைய ரென்றால், மகாகர்வம் பிடித்தவர்; எப்பொழுதும் தம்மையே புகழ்ந்து பேசுவார்; தம்முடைய பந்துக்கள் தமக்குச் சரியான அந்தஸ்துள்ள வர்களில்லை யென்று அவர்களை யிகழ்ந்து பேசுவார்; புறங் கூறுவதிற் பேர்போனவர்; சாதுக்கள், பெரியோர், உண் மைச் சிநேகிதர் ஆகியவர்களைக் கண்டவிடத்திற் புகழ்ந்து காணாதவிடத்தில் இகழ்ந்து பேசுவார்; கெட்டவர்களை நேய ராகவும் நல்லவர்களைப் பகைஞராகவும் கருதும் இயல்பினர்; எந்தநேரமும் குடி வெறியிலேயே கண் சுழன்றிருப்பார்; சில பெரியோர்களை நிந்தித்ததால் பற்பல விடங்களில் அள வற்ற துன்பங்களையும் மனக்கிலேசத்தையும் அடைந்தவர்; வஞ்சகமின்றி நேசித்தவரோடு வஞ்சகமாய்ப் பேசுபவர்; பெண்கள் கூட்டத்திலேயே தம்முடைய பிரதாபத்தைக் கூறிக்கொண்டு திரிபவர்; தெய்வச்செயலால் தமதில்லத்தில் நடந்த திருட்டை, தமக்கு எப்பொழுதும் நலம் செய்து கொண்டிருந்த ஒரு நண்பர் நடத்திவிட்டார் என்று மதியீ னத்தால் கருதி மங்கையர்க்கிடையில் மகிழ்ச்சியோடு அந்த மகா சாதுவாகிய நேயனை நிந்தித்துப் பேசக்கூடிய வர்; இஃதொன்றுமே இவருடைய மதியீனத்தை விளக்கு தற்கு நற்சாக்ஷியாகும். இத்தகைய பாமயோக்கியரைக் கண்டவுடன் சுப்பையன், "இந்த இருட்டு நேரத்தில் நமக்கு இவ் வண்டியிற் சிறிது இடங்கிடைத்தால் நாம் விரைவிற் சிவகெங்கையிற் போய்ச் சேரலாம்" என்று கருதி அவர் தனக்குத் தெரிந்தவரானபடியால் தன்னு டைய சங்கடங்களையும், தான் சிவகெங்கைக்குப் போகுமாறு தனக்கு நேர்ந்த அவசரத்தையும் அவரிடம் சொல்லித் தன்னையும் அவர், வண்டியிலேற்றிக் கொள்ளும்படி வேண் டினான். அவர் சுப்பையனோடு ஒரூரிற் பிறந்து இளமை

முதல் நேயமாகி யிருந்தும், ஊர் அபிமானத்தைக் கூடக் கருதாமல் தமக் கேற்பட்டிருந்த கொர்வத்தால் அவன் துக் கத்திற்குச் சிறிதும் இரக்கமின்றி, "தேவரே! இவ்வண்டி யில் பூட்டப் பட்டிருக்கும் குதிரையோ மிகவும் மெலிவுற் றிருக்கிறது; என்னோடு நீங்களும் வண்டியில் ஏறினால் இது ஒரு அடி கூட எடுத்து வைப்பது அரிதாகும்; ஏதோ நான் தங்கள் விருப்பத்தைத் தடை செய்து விட்டேனென்று நீங்கள் மனஸ்தாபப் படலாகாது" என்று சொல்லி, சாரதி குதிரையை விரைந்தோட்டும்படி அவனுக்குச் சைகைசெய் தார். அவன் வண்டியை வேகமாகத் தூத்திக்கொண்டு போய்விட்டான். அச் செய்கையைக் கண்ட சுப்பையன், "அடடா! நம்முடைய சிநேகிதர்கூட நமக்கு ஒத்தாசை செய்ய மறுத்துவிட்டார். இதற்கெல்லாம் காரணம் நாம் ஜனங்களுக்குச் செய்த ஹிம்சை தான்" என்று கருதித் தன்னைத் தானே நிந்தித்துக்கொண்டு இருளை உத்தேசித்து மிகுந்த பயத்தோடு நடந்தான். (இந்தச் சுப்பையன் மகா பாதக முடையவனா யிருந்ததனாற்றான், இவ்வாறு அவன் மீது இரக்கமின்றி அவனுடைய வேண்டுதலைத் தடைசெய்து சென்றவரைச் சந்தித்தான்; நற்செய்கை செய்தவனா யிருந் தால் நல்லவரையே சந்தித்திருப்பான்.)

சுப்பையன் திருடரிடம் அடிபடல்.

இவை நிற்க, மேற்கண்டவாறு நடந்த சுப்பையன், "நம்முடைய கெட்ட காலத்திற்கேற்பத் திருடர் வந்து நம் மைத் துன்பப் படுத்தினாலும் படுத்துவார்களே" என்றஞ்சி யஞ்சி அங்கு மிங்கும் பார்த்த வண்ணமாய் நெஞ்சந் துடிக் கக் குதிக்கால் பிடரியி லடிபடவோடி, இப்பொழுதும் இராத்திருடர் வழிமறித்து மனிதரிடம் கொள்ளை யடிப்ப தற் கிடமாயிருக்கும் பனையூர் மேட்டிற் போய்ச் சேர்ந்தான். இவ்விடம் சிவ கெங்கைக்கு மேற்கே ஐந்தாவது மைலிலுள்

ளது; இவ்விடத்திற்குச் சமீபத்தில் ஊர் ஒன்றுமில்லாதபடி யால் இது திருடர் தொழிலுக்குரிய இடமாயிருந்தது. அடடா! அந்த க்ஷாமதேவதையாற் பிடிக்கப்பட்ட சுப்பை யத்தேவன் இவ்விடத்திற் சேர்ந்தவுடன் இரண்டு மூன்று திருடர்வந்து இவனிடத்தில் பணமிருக்குமென்று நினைத்து அவர்கள் வழக்கப்படி முதலில் அவனைப் பிடித்தவுடன் நெஞ்சங் கலங்கும்படி, தங்கள் கைகளிலிருந்த பெரிய பெரிய தடிகளால் "அடி அடி" என்று அடித்து நொறுக்கி விட்டார்கள். ஐயோ! சுப்பையன், "நினைத்தபடியே துன் பம் சம்பவித்ததே; போதாதகுறைக்கு இது வேறே நடக்க வேண்டுமா?" என்று அடி பொறுக்க முடியாமல் 'கூவே கூ' என்று கதறி, அவர்களிடத்தில் "ஐயா! என்னிடத்தில் ஒன்று மில்லை; வீணாக என்னை ஏன் துன்பப்படுத்துகிறீர் கள்? என்னிட மிருப்பதை நான் ஒளிக்காமல் கொடுத்து விடு கிறேன்; அடியைமட்டும் நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!!" என்று பெருங்கூச்சலிட்டான். அதன்மேல் திருடர்கள் அடியை நிறுத்தி அவனைப் பரிசோதித்து அவனிடத்தில் பணமொன்று மில்லாதபடியால் அவன் உடுத்தியிருந்த வேஷ் டிகளையும், காலிலணியப்பட் டிருந்த வெள்ளிமிஞ்சிகளையும் கவர்ந்துகொண்டு, கௌபீனத்தோடு அவனைத் துரத்தினார் கள். அதன்மேல் அவன் துணியுமின்றிப் பைத்தியக்கார னைப் போன்று, "அப்பப்பா! பிழைத்தேன்!! பிழைத் தேன்!!!" என்று சொல்லிக்கொண்டே ஓடிப் பொன்னுகுள மென்னும் ஊரைத் தாண்டிச் சிவகெங்கைக்குச் சமீபத்தி லுள்ள பெருங் காட்டிடைச் சென்றான்.

சுப்பையனைச் சர்ப்பம் தீண்டல்.

அப்போது அவன் "ஐயோ! இடுப்பிலும் துணியில் லாமல் நான் எப்படி மைத்துனன் வீட்டுக்குச்செல்வேன்" என்று விசனித்தான். இப்படி விசனித்துக்கொண்டே

மிகுந்த இருட்டில் போகும்போது வழியின் மத்தில் குறுக் காய்க் கிடந்த பெரிய சர்ப்பமொன்றை மிதித்து விட்டான். அந்தமிதி அதன்மீது படுவதற்குள்ளாகவே அந்நாகமானது பெருங்கோபங்கொண்டு சிறிச்சீறி மாறிமாறி இரண்டு மூன்று முறைகள் சுப்பையனுடைய வலது காலிற் கடித்து விட்டு மிகுந்த விரை வோடு காட்டிற்குள் ளோடிற்று. சுப்பையன் அப்பொழுது அடைந்த திகிலை இன்னவிதமென்று சொல்லல் முடியாது. பாம்பு கடித்த வுடனே அவன் பயத்தால் உளறிக்கொண்டு கீழே வீழ்ந்து உடம்பெல்லாம் செம்மண்படியப் புரண்டு விரைந் தெழுந்து, "நாம் சீக்கிரம்போய் இவ்விஷத்திற்குப் பரி காரம் செய்யாவிடில் இறந்துபோவது நிச்சயம்; அப்படி யானுல் நம்முடைய மனைவிக்கும் குழந்தைக்கும் துணை செய்வாரெவர்?" என்று சிறிதுநேரம்கூடத் தாமதிக்காமல், அரையில் துணியில்லாததையும் நினைக்காமல் வாயுவேக மனோ வேகங்கொண்டு ஓடிச் சிவகெங்கைக்குட் பிரவேசித் துத் தனது மைத்துனன் வீட்டைநோக்கிப் போனுன். அப் படி ஓடும்போது அவனைப் பார்த்தவர்களெல்லோரும் 'இவன் பைத்தியக்காரன்' என்றே நினைத்தார்கள். முடிவாக அவன் மைத்துனன் வீட்டிற்குள் நுழைந்து, அங்கிருந்தவர்க ளிடத்தில், "நானிருக்கும் கோலத்தைப்பற்றி விசாரிக்க நீங்கள் இப்பொழுது நினைக்கவேண்டாம்; நான் அதன் விவரத்தைப் பின்னே தெரிவிக்கிறேன்; வந்தவழியில் என் னைச் சர்ப்பந்தீண்டி அதன் விடம் என் தலைக்கேறிவிட்டது; ஆதலின் நீங்கள் ஒரு வைத்தியனையழைத்துச் சீக்கிரத்தில் விடத்தை யிறக்கும் முயற்சியைச் செய்யுங்கள்" என்று சொல்லிக் கீழே வீழ்ந்து மூர்ச்சித்துவிட்டான்.

அவனுடைய நிலைமையைக் கண்டவுடன், அவன் மைத் துனன் முதலிய எல்லோரும், அப்பொழுதுதான் சுப்பை

யன் தமக்கையைச் சுடுக்காட்டிற்குக் கொண்டுபோய் அங்கே தகனஞ் செய்துவிட்டு வந்திருந்தார்களாதலின், அதே சமயத்தில் இந்த ஆபத்தும் நேர்ந்ததைப்பற்றிப் பெருந் திகிலடைந்து, "ஐயோ! இப்பொழுதுதானே இவர் தமக்கையைக் கொண்டுபோய்ச் சுடுகாட்டில் வைத்துவிட்டு வந்தோம்; அதற்குள் அந்த இழவுக்குவந்த இவர்பாடு பேரிழவாய் விட்டதே! இவர் சாவாரோ பிழைப்பாரோ தெரியவில்லையே? இவரைப் பாம்பு கடித்திருந்தாலும் இவர் இடுப்பில் துணியில்லாமல் ஓடிவந்ததற்குக் காரணம் தெரியவில்லையே; எல்லாச் சங்கதிகளையும் பின்பு இவரிடம் விசாரித்துக் கொள்ளலாம்; இப்பொழுது நாம் தாமதம் செய்தால் இவருக்கு மோசம் சம்பவிக்கும்" என்று யோசித்து மிகுந்த விரைவில், விடவைத்தியத்தில் மிகவும் தேர்ச்சி பெற்று அவ்வூரிலிருந்த ஆறுமுக சுவாமியை அழைத்து வந்து, அவர் அவனைப் பார்க்கும்படி செய்தார்கள். அந்தச் சமயத்தில் சுப்பையனுக்கு விடம் தலைக்கேறிக் கண் பஞ்சடைந்து, நினைவு தடுமாறியிருந்தது. என்றாலும், நம்முடைய சுவாமிகள் தமது வல்லமையினால் சிறந்த மருந்தை அவன் வயிற்றிற்குள்ளே செலுத்தி மந்திரித்தார்கள். ஐந்து நிமிஷத்தில் அவன்மீதேறியிருந்த விஷமிறங்கி அவன் நன்றாய்ப் பேசஆரம்பித்தான். அதன்மேல் எல்லோரும் 'நடந்த விசேஷமென்ன?' என்று அவனைக்கேட்க, அவன் தன்னைத் தேள் கொட்டினது முதல் பாம்பு கடித்ததுவரை நடந்த சங்கதிகளையெல்லாம் ஒன்றொழியாமற் சொன்னான். அவற்றைக் கேட்டவுடன், "ஒரு மனிதனுக்கு இவ்வளவு துன்பம் நடந்ததை நாங்கள் இதுவரை பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை" என்று அங்குள்ளவர்களில் நெருங்கிய பந்துக்களாயிருந்தவர்கள் விசனிக்கத் தொடங்கினார்கள். சொந்தமில்

லாத சிலருக்கு அவனுடைய அவஸ்தைகள் விநோதமான வைகளா யிருந்தனவாதலால் அவர்கள் மனதிற்குள்ளேயே சிரிக்கலானார்கள்; சிலர், "இவன்செய்த அக்கிரமத்திற்கா கவே கடவுள் இவனுக்கு இவ்வளவு துன்பங்களைக் கொண்டு வந்துவிட்டிருக்கிறார்" என்று அவனை நிந்தித்தார்கள். முடி வில் விடவைத்தியஞ் செய்யவந்த சாமியார் மகா புத்திமானா கையால் எல்லாவற்றையும் ஆலோசித்துச் சுப்பையனிடத் தில் "அப்பா! நீ அரண்மனையி லிருக்கும்போது பலபெரி யோர்களுக்குத் துன்பஞ் செய்திருக்கக் கூடும்; அதனாற் பல வித்வான்களின் சாபம் உனக்கேற்பட்டிருக்கலாம்; அதனா லேயே இவை நேர்ந்திருக்கின்றன. அவை இல்லையென்றால் இவ்வளவு துன்பம் உன்னிடம் நடப்பதற்கேதுவில்லை; அந் தச் சாபத்திற்கு நீ தக்க பரிகாரஞ் செய்துகொள்; அப் படிச் செய்யாவிடில் உன் உயிருக்கே மோசம்வரும்" என் றுரைத்தார். அதற்குச் சுப்பையன், "ஆம் சுவாமிகளே! தாங்கள் சொன்னபடியே இவை நேர்ந்திருந்தாலு மிருக்க லாம்; நான் ஊருக்குப்போய், மலையாளத்துக் கோடங்கி யைக்கொண்டு குலதெய்வத்தைக் கூப்பிட்டு அதனிடத் தில், 'இவை என்ன குறையால் வந்தவை?' என்று கேட்டு, அதற்கு ஒரு பூஜையும் போடலாமென்று நினைத்திருக்கி றேன்" என்றான். "சுப்பையன் நல்ல தருமங்களைச் செய் வானாகில் அவனுக்கு வித்வான்கள் முதலிய பேரியோர்களா லிடப்பட்ட சாபமிருந்தாலும் தீர்ந்து சிறிது சுகமுண்டாகக் கூடும்" என்று உத்தேசித்தே சாமியார் மேற்கூறியபடி சொன்னார். அதற்குச் சுப்பையத்தேவன், "கோடங்கி மூலம் குலதேவதைக்குப் பூஜைபோட உத்தேசித்திருக்கி றேன்" என்றது அவருக்கு மிகுந்த அருவருப்பைக் கொடுத் தது. அதனால் அவர் ஒன்றும் பேசாமல், "இவன் மெத் தப் புத்திசாலிதான்; இன்னும் கொடிய துன்பங்களை யடை

வான்" என்றெண்ணிக்கொண்டு இருந்தவர்களிடம் விடைபெற்றுப் போய்விட்டார்.

பின்பு சுப்பையன் தமக்கையிறந்ததற்காகச் சிறிது துக்கங் கொண்டாடினன். அதன்மேல், அங்குள்ளார் அவனை நோக்கி, "இப்போது உமக்கு விஷமேறியபடியால் நீர் ஆகார முட்கொள்வதும், தூங்குவதும் ஆகா" என்று சொல்ல, அவன் அதுவரை அடைந்த துன்பங்களுக்கு வட்டியாக ஆகாரமும் நித்திரையுமின்றி அவற்றாலேற்பட்ட துன்பத்தையும் அனுபவித்துக்கொண் டிருந்தான். விடிந்தவுடன் அவனுக்குத் தன்மனைவி மீதும் பிள்ளைமீதுமே ஞாபக மிருந்தபடியால் அவன் தமக்கைக்குச் செய்யப்படும் மறுநாட் சடங்குக்குக்கூட இருக்கச் சம்மதியற்றவனாய் மைத்துனனிடத்தில் தன் வீட்டின் நிலைமையைச் சொல்லி விடைபெற்று, அவன் ஆடையை வாங்கித்தரித்துக்கொண்டு புண்பட்ட மனத்தோடு, "இதுவரை வீட்டில் என்ன நடந்திருக்கிறதோ" என்னும் சந்தேகமானது ஒருபக்கம் வாட்டப் பட்டினியாய்ப் பதறி உடனே மதுரைக்குப் புறப்பட்டான்.

சுப்பையன் பிள்ளையிறந்து மாடும் களவு போதல்.

அவ்வாறு புறப்பட்டு அவன் காற்றிலும் கடிய வேகங்கொண்டு நடந்து, தன்னைப் பாம்புகடித்த இடம், திருடர் உபத்திரவப் படுத்தியவிடம் ஆகியவற்றைக்கண்டு அவ்வவ் விடங்களில் திகிற்பட்டு மதுரையை நோக்கி ஓடினன். அப்பொழுது சூரிய வெப்பமானது அவனுடைய முதுகில் நெருப்புச் சுட்டதுபோல காய்ந்தது; பசியினால் வயிற்றில் வடவாக்கினி பற்றி யெரிந்தது; முகமெல்லாம் வியர்வை சிந்திற்று; கண்கள் இருண்டன; கால்கள் தடுமாறின; நாவறண்டது; அவனுக்கு மயக்கம் அதிகரித்தது. என்றாலும் அவன், அடிக்கடி குளிர்ந்தஜலத்தைப் பருகி முகத்தைக் கழுவிக்

களைப்பை நீக்கிக்கொண்டு தன்மனையாள்மீதும் பிள்ளைமீதும் இருந்த ஆவலால் நில்லாது சென்றான். அவ்வாறு சென்று பல்லைக் கடித்துக்கொண்டு பாதிவழிக்குமேல் நடந்து மதுரைக்குக் கிழக்கே எழாவதுமைலி லிருப்பதும், ஆதியிற் சில பாண்டியர்களிருந்து அரசு புரிந்ததுமாகிய மணலூருக் கருகே சென்றான். அந்தச் சமயத்தில் கூலிக்கு ஓலை கொண்டு செல்லும் பறையனொருவன் அவனுக் கெதிரில் விரைவாய் ஓடிவந்தான். அப்படி வந்தவன் யார்? எதற்காக அங்கு வந்தான் எனில், சுப்பையன் சிவகெங்கைக்குச் சென்ற அன்றிரவு அவனுடைய ஆண்குழந்தை தெற்கித்தி நோயென்னும் கணை நோயினால் திடுமென இறந்து விட்டது; உழவுமாடுகளில் மிஞ்சி நின்ற ஒரு எருதையும் புறமலை நாட்டுத் திருடர் திருடிக் கொண்டு போய் விட்டார்கள். இந்தச்சமாசாரங்களைச் சுப்பையனுக்குத் தெரிவிப்பதற்கு அவன் மனைவி இந்தப் பறையனை அனுப்பியிருந்தாள். அதனாலேயே அவ்வாறு இவன் விரைந்து வந்தான். இவன் சுப்பையனை எதிரில் கண்டதும், வேகந்தணிந்த நெருப்பில் மண்ணெண்ணெயை வார்த்து மீண்டும் அஃதெரியச் செய்ததுபோல, பாம்பு கடித்ததற்குமேல் ஒருதுன்பமும் வாராதென்று கருதி யிருந்தஅவனிடத்தில், அவற்றைச் சொல்லி விட்டான். என்னசெய்வான் சுப்பையன்! அவன் பெருங் கலக்கங்கொண்டு ஒன்றும் பேச வியலாமையால் திடீரென்று மயங்கிக் கீழே வீழ்ந்து விட்டான். அந்தப் பறையன், முன் சுப்பையன் நடத்திய அக்கிரமங்களை நினைத்து அவனிடத்தில் உட்பகை கொண்டவனா யிருந்தான். ஆயினும் அவன் மயங்கி விழுந்ததற்கு மனம் பொறாதவனாய் ஜலத்தைக்கொண்டுவந்து அவனுடைய முகத்திற்றெளித்து மயக்கத்தை நீக்கினான். அந்தப் பறையன் சிறிது பொறுமையுடையவனாதலால் தக்ககூலி வாங்கிக்கொண்டான்; வது

சுப்பையனுக்கு இழவு சொல்வதற்கு வந்தான். மற்றையர்களானால் வரவே மாட்டார்கள். சுப்பையன் இத்தகையரும் பகைகொள்ளத்தக்க அவ்வளவு அயோக்கியனா யிருந்தான்.

இது நிற்க; மேற்கண்டவாறு வந்தவன், மயக்கத்தை நீக்கியதால் சுப்பையத் தேவன், தெளிந்தெழுந்து தான் செய்த பாதகங்களைச் சிறிதும் எண்ணாமல் மகா யோக்கியன் போன்று, "ஆ தெய்வமே! நான் யாருக்கு என்ன பாதகஞ்செய்தேன்? எனக்கு அருமருந்து போன்றிருந்த ஒரு பிள்ளையும் உயிரிழந்து போகச் செய்தாயே; நான் மனமறிய ஒரு பாதகத்தையும் செய்யவில்லையே" என்று பொங்கி வயிற்றிலும் மார்பிலு மறைந்துகொண்டு ஓவென்றலறினான். சுப்பையத்தேவன், அளவற்ற பாதகங்களைச் செய்தவனாயிருந்தும், இவ்வாறு "நானொரு பாதகமுஞ்செய்யவில்லையே" என்று சொல்லி யழுததைப்பற்றிப் பறையன், "ஆகா! இவர் பூரண யோக்கியர் போன்று ஏதேதோ சொல்லி யழுகிறார்; உலகத்தில் மனிதர் தாங்கள் செய்த குற்றத்தை நடு நிலைமையோடு உணர்வதில்லை? சில அறிவுடையோர்கள் தவிர மற்ற எல்லோரும் எவ்வளவு பாதகங்களைச் செய்திருந்தாலும் சமயத்தில் இல்லை யென்று சொல்லி யழுவது கலிகாலத் தியற்கைதானே" என்று புன்சிரிப்புக்கொண்டவனாய் அவன் மீது அருவருப்புக்கொண்டு வெளிக்குமாத்திரம் உபசாரமாக அவனுக்கு, "ஆண்டே! நடந்து போனவைகளுக்கு இனிமேல் என்ன செய்கிறது? நீங்கள் அழுகாமல் சீக்கிரம் போய்க் காரியத்தைப் பாருங்கள்" என்று சமாதானங் கூறினான். அதன்மேல் சுப்பையன் சீக்கிரம் போய் இறந்த தன் குழந்தையைப் பார்க்கவேண்டு மென்னும் ஆவலால், பறையனை நோக்கி, "நீ சிவகெங்கை முதலான இடங்களுக்குப் போய் என் பந்துக்களுக்கும் இந்த இழவைச் சொல்லிவிட்டுவா" என்று அவனை யனுப்பிவிட்டுப் பாத்தையர் அநி

யாய வழியிற் சம்பாதித்த பொருள் ஓடுவது போன்று ஓடி அரைமணி நேரத்தில் வீட்டிற் சேர்ந்து இறந்துபோன தன் குழந்தையைக் கண்டு அதன்மேல் விழுந்து அழத்தொடங்கினான். அவனைக் கண்டவுடன், அவனுடைய மனைவி முத்துக் கருப்பி, பெண்களுக் குரிய வழக்கம் போலவே, முன்னிருந்ததைக் காட்டிலும் சற்று அதிகமான விசனத்தை யடைந்து வயிற்றிலும் மார்பிலும் அடித்துத் தரையிற் புரண்டுருண்டு தலை மயிரைப் பிடுங்கி யெறிந்து, "ஐயையோ! தெய்வமே! தெய்வமே!! நான் என்ன செய்வேன்! என்ன செய்வேன்!!" என்று அழுது கூக்குரலிட்டாள். அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து வந்த சுப்பையனுடைய பந்துக்களும் அக்குழந்தை இறந்ததற்கு மனதிற்குள்ளே வருத்தமடையவில்லை. எனினும் உலகாசாரத்தைக்கருதி இறந்துபோன தங்கள் சொந்தக்காரர்களை நினைத்து அவர்களுக்காகவே மனமுருகி அழத்தொடங்கினார்கள். உள்ளூரார்களிற் சிலரும் அவ்வாறே பொய்யழுகை யழுதனர்; முதல் நாள் சுப்பையன் வேலைக்காரி யிறந்தபோது அவள் காலாவி லிறந்தபடியாலும், சொந்தக்காரி யில்லாதபடியாலும் அவனுடைய வீட்டில் ஒரு சப்தமு மில்லாதிருந்தது. இப்போது அவன் சொந்தக் குழந்தை யிறந்ததனாலும் வேறு நோயாலிறந்தபடியாலும் ஜனங்கள் மிகுந்து கூடிவிட்டார்கள். அதனால் அழுகைக்குரலும் அதிகரித்திருந்தது.

சுப்பையன் இறந்தபிள்ளையை அடக்கம்செய்ய மனைவியின் காப்பைக் கழற்றுதல்.

எல்லோரும் சிறிது நேரம் அழுது முடிந்தவுடன் சுப்பையனுடைய உறவினருட் சிலர் அவனிடத்திற் சென்று, "இப்படி எல்லோரும் அழுதுகொண் டிருந்தால் காரியம் நடப்பதெப்படி? 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தில்' குழந்தையோ

நேற்றிரவு இறந்தது; இதை அதிகநேரம் வைத்திருப்பது கூடாது; நமக்குள் ஜீவித்திருப்பவர் எவர்? எல்லோரும் ஒரு நாளில் இறப்பவர்கள்தாமே. எழுந்திருங்கள்! எழுந் திருங்கள்!! குழந்தையைத் தூக்கி அடக்கஞ் செய்ய முயற்சி செய்யுங்கள்" என்று சொன்னார்கள். அதன்மேல் அவன், காரியத்தைக் கவனிக்கத்தொடங்கிப் பிணத்தை யெடுத்துச் சுடுகாட்டுக்குக் கொண்டு போகும் விஷயத்திற் பிரவேசித்தான். ஆனால் அவன் கையில் செலவுக்கு ஒரு காசு மில்லை; அதனால் அவன் "நம்மிடம் இருந்த ஒரு மாட் டையும் திருடர் கொண்டு போய் விட்டார்களே; அது இருந்தாலும் இப்பொழுது அதை விற்றுவது பணந்தேடிச் செலவு செய்யலாமே; நடந்து போனதைப்பற்றி இனிமேல் நாம் சிந்திப்பதில் பிரயோசன மென்ன?" என்று பலவாறு எண்ணுது மெண்ணிப் பணத்திற் கொருமார்க்கமுங் காணு மல் முடிவாகப் பிள்ளையை யிழந்து அழுதுகொண் டிருக்கும் தன் மனைவியினிடத்திற் சென்று 'இப்போது பிணமெடுக்கப் பண மில்லை; உன்கைக்காப்பைக்கழற்றி விற்றுத் தான் நாம் பணம் சேகரிக்கவேண்டும்; அதற்கு வேறு மார்க்கமில்லை." என்றுசொன்னன். இதை அவள் கேட்டதும், அவளுக்குக் குழந்தை இறந்ததனு லுண்டாகிய விசனம்போய் நகை போகிறதே என்ற விசன மேலிட்டு விட்டது; அதனால் அவள் "இந்தப் பீடையிடம் இனி எதற்காக நாம் பெண் டாயிருக்க வேண்டும்? நம் குழந்தையும் போய்விட்டது; ஆதலால் நாம் இனி வேறே எங்காவது ஓடிப்போய் விட்டா லும் நலமாயிருக்கும்" என்று மனதிற்குள்ளே யோசித்துச் சுப்பையனைத் திட்டி மொறு மொறுத்தாள். எனினும், அச் செய்கையை அங்கேவந்திருக்கும்பந்துக்களறிந்தால் தன்னை அவமதிப்பார்களென்று கருதி மனக் கொதிப்பை யெல் லாம் அடக்கிக்கொண்டுபேசாமற் காப்பைக் கழற்றிக்கொடுத்

தாள். உடனே அவன் அதைக் கொண்டுபோய் ஓரிடத்திற் பாதிவிலைக்கு விற்று அதன் விலைப் பணத்தை வாங்கிக்கொண்டு வந்து அதைச் செலவிட்டுப் பிணத்தை யெடுப்பதற்கு ஆகவேண்டிய காரியங்களைச் செய்து முடித்தான். முதல்நாள் சுப்பையனுடைய வேலைக்காரி யிறந்தபோது அப்பிணச்செலவிற்குத் தன் கடுக்கனைக் கழற்றி அவனுக்குக் கொடுத்த விருந்தினனைப்போன்ற ஆசாமிகள் இந்தச்சமயத்தில் அகப்படவில்லை. அதனாலேயே அச்சுப்பையன் இப்போது விற்பனைக்கு நகைவாங்கத் தன் மனைவியினிடத்திற் பிரவேசித்தான். முத்துக்கருப்பிக்கு நகையில் மாத்திரம் அதிக விருப்பமுண்டு. ஆதலால் அவன் எதற்காவது அவளிடம் நகையைக் கேட்டால் அவள் அவனைத் திட்டுவாள். அந்தப் பயத்தினால் அவன் தனக்கு என்ன ஆபத்து வந்தாலும் அவளிடம் நகையைக் கழற்றிக் கொடுக்கும்படி எப்பொழுதுமே கேட்கமாட்டான். எனினும் இப்பொழுது அதற்கு வேறு வழி யில்லாமையால் அவன் இவ்வாறு துணிந்து கேட்க நேரது வுண்டாயிற்று. இச் சமயத்திலும் அவள் மனதிற்குள்ளாவது அவனைத் திட்டினதிற் குறைவில்லை. குழந்தை யிறந்துகிடக்கும் சமயத்தில் அதன் செலவுக்குப் பணம்சேகரிக்கும் பொருட்டுக் கணவன் தன்னிடம் நகையைக் கேட்டதற்கு இவ்வாறு வேறெங்கேனும் ஓடிப்போக வேண்டுமென்று நினைத்த இந்தப் புண்ணியவதியின் புத்தி விசேஷத்தை இதை வாசிக்கும் நண்பர்களே உய்த்துணர்ந்து கொள்வார்களாக.

இது நிற்க; இறந்த குழந்தைகளை மனிதர் சுடுகாட்டிற்குக் கொண்டு போகும்போது அக்குழந்தைகட்கு மாமனாயிருப்பவனே கையிற்றூக்கிச் செல்வது நாட்டின் வழக்கமாதலால், அதற்காகப் பந்துக்கள் சுப்பையனுடைய மைத்துனன் வரவை எதிர் பார்த்தார்கள்; பின்பு அவன் நெடுந்தூரத்

திலுள்ள சிவகெங்கையிலிருப்பதாலும், மனைவியைப் பறி கொடுத் திருப்பதாலும் வந்துசேருவது அசாத்திய மென் றும், அவன் வரும்வரை பிணத்தை வைத்திருப்பது கூடா தென்றும் நினைத்து அக்குழந்தைப் பிணத்துக்கு நீராட்டி அலங்காரம்செய்து சுப்பையன் பந்துக்களில் அதிக நெருக்க மில்லாமல் அக்குழந்தைக்கு முறைக்குமாத்திரம் மாமனுயி ருந்த ஒருவன் அதனைத் தூக்கும்படிசெய்து சுடுகாட்டுக்குக் கொண்டு சென்றார்கள். அப்போது முத்துக்கருப்பி "மகனே! போகிறாயா!! போகிறாயா!!!" என்று வயிற்றி லடித்துக்கொண்டு குழந்தையோடு உடன்கட்டை யேறு பவள்போல புலம்பிச்சென்றாள். நாட்டுப்புறத்தார் வழக்கப் படி சிலர் அவளை, அவளிருக்கும் தெருக்கடைசி மட்டும் விட் டுப் பின்னர்ப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் வீட்டிற் சேர்த்தார்கள். சுப்பையனும் மற்ற ஆடவர்களும் முறைப் படியே பிணத்தினோடு கூடச் சென்றார்கள். அப்போது சுப்பையத்தேவன், தலைப்பிள்ளையை யிழந்தவனாதலால், தலையை விரித்துப்போட்டு மார்பிலறைந்து, இறங்கின முகத் தோடு ஆ வென்று வாயைத் திறந்தபடியே, கண்களைச் சுழற்றிச் சுழற்றி விழித்துக்கொண்டு சென்றான். அக் கோலத்தைக் கண்ட நகரஜனங்களுட் சிலர், "அடடா! சுப் பையத்தேவனுக்கு மூன்று நாட்களுக்குள் எவ்வளவு கஷ் டங்கள் வந்து விட்டன!" என்று சொல்லி யிரங்கினார்கள்; சிலர் "உத்தியோகத்தால் கெர்வங்கொண்டு பலர்க்குத் துன் பஞ்செய்பவர்க்கெல்லாம் இதுதான் கெதி" யென்று அவனை நிந்தித்துப்பேசினார்கள்; சிலர், "எவரும் ஊரார்வாயி லிருக் கக் கூடாது" என்றார்கள்; சிலர், "பெரியோர் நிந்தை ஆகாது" என்றார்கள்; சிலர், "வித்வான்களைப் பகைத்தல் கூடாது" என்றார்கள். 'சிலர், 'அக்கிரமக்காரர்களை அடக்கு தற்குத் தெய்வமுமா இல்லாமற் போய்விடும்?" என்றார்கள்;

சிலர், "ஊரார் சொத்தைக் கொள்ளையடிப்பது வீண் போகாது" என்றார்கள்; சிலர், 'ஏழையழுத கண்ணீர் கூரிய வாளோ டொக்கும்' என்பதைச் சுப்பையத்தேவனிடத் திற்றான் கண்டோம்" என்றார்கள். இப்படியே அக்ரகாரத்தா ரெல்லோரும் "சுப்பையன் அக்கிரமங்களைச் செய்ததனா லேயே இத்தகைய துன்பங்களை அனுபவிக்கிறான்" என்பதைச் சுட்டிப் பற்பல விதங்களாய்ப் பேசத் தொடங்கினர். சுப்பையனுக்காக வருத்தப்படுவோர் கணக்கு மிகவும் சொற்பமாகவே யிருந்தது. (இதற்குக் காரணம் இதை வாசிக்கும் நேயர்களுக்குத் தெரியுமாதலால் அதை அடிக்கடி யெடுத்துக் கூறுதல் அனுவசியம்.)

பின்பு சுப்பையன், மேற் குறித்தவாறு ஜனங்கள் பேசிக்கொண்ட நிந்தனை யென்னும் சோனைமாரியினூடே சென்று குழந்தையை மயானத்தி லடக்கஞ்செய்து அதற் குச் செய்யத்தக்க எல்லாச் சடங்குகளையும் குறைவற முடித் துக்கொண்டு திரும்பி எல்லோரோடும் குளத்தில் ஸ்நானஞ் செய்து, முத்துக்கருப்பி தீட்டுக்கழியும் பொருட்டு ஜலமுத வியனதெளித்துச் சுத்தப்படுத்தி வைத்திருந்த தன் வீட் டிற்கு வந்துசேர்ந்தான். அதன்மேல் இழவுக்கு வந்த பந் துக்களெல்லோரும் அவனுக்கும் அவன் மனைவிக்கும் தேறு தல் சொல்லிவிட்டு உடனே அவரவர்களுடைய ஊர்களுக் குச்சென்று விட்டார்கள். இவன் பந்துக்கள் விஷயத்திலும் உத்தியோகக் கெர்வத்தால் நன்மைசெய்யவில்லை யாதலால் அவர்களெல்லோரும் இவன் விஷயத்தில் மெய்யான துக் கங் கொண்டு வரவில்லை; உலகாசாரத்துக்காகவே வந்தார் கள். ஆதலால் அவர்களுள் மிக்க நெருக்கமானவர்கள் கூட இங்கு இரண்டு நாளிருந்து சுப்பையனுக்குத் தேறுதல் சொல்லுதற் கிசையாமல் போய்விட்டார்கள். பந்துக்களுள் ளும் பலர் வரவு மில்லை.

சுப்பையனை மைத்துனன் கோபித்தல்.

அப்படி எல்லோரும் சென்றபின்பு சூரியன் அஸ்தமித்தது. சுப்பையனுடைய மைத்துனன், நெடுந் தூரத்திலுள்ள சிவகெங்கையிலிருந்தாலும் முன்னே சொல்லியவாறு பந்துக்கள் நினைத்தபடி வாராமலிருக்கவில்லை. அவன், தானே குழந்தையைத் தூக்கும் கடமையுடையவனாதலால் அச்சமயத்தில் மிகுந்த அவசரத்தோடு ஓடிவந்து வீட்டிற்குள் நுழைந்தான். அப்படி வந்தவன், சுப்பையனுடைய வீட்டில் எல்லாக் காரியங்களு முடிந்து அவ்வீடு சுத்தியாகி யிருப்பதைக்கண்டு மிகுந்த கோபங் கொண்டு, சுப்பையனைப்பார்த்து, நாட்டுப் புறத்தாரின் மூடமாகிய கொள்கைக்கேற்ப, "ஓய்! என்ன காரியம் செய்தீர்? உமக்கிது நன்றாயிருக்கிறதா? குழந்தைக்கு மாமனாகிய நான் வருவதற்குள் அதை யெடுத் தடக்கஞ் செய்யலாமா? நான்வருவதற்கு எட்டு நாளானாலும் அதை அப்படியே யல்லவா வைத்திருக்கவேண்டும்; சீ நீர் கெட்டீர்; இன்றோடு உம்முடைய உறவு போய் விட்டது" என்று சொல்லிவிட்டுக் குடி முழுகிப் போனதுபோல அரை நிமிஷமும் அங்கே நில்லாமலும், அவனிடம் துக்கத்தை விசாரியாமலும் உடனே திரும்பி ஊருக்குப் புறப்பட்டுவிட்டான். சுப்பையனுக்கு நேர்ந்த எல்லாச் சங்கடங்களோடு இதுவும் ஒரு சங்கடமாய் முடிந்தது. உடனே அவன், தனக்கிருந்த விசனத்தை விட்டுவிட்டு, "ஐயையோ! மைத்துனர் கோபித்துக்கொண்டு போகின்றாரே; நாம் இவரை எப்படியேனும் சமாதானப் படுத்தி அழைத்துவர வேண்டுமே" என்று கருதி எழுந்தோடி அவனுக்கு என்னூ என்னவோ தக்க காரணங்களைச் சொல்லி அவனைச் சமாதானப் படுத்தினான். அவன் அவற்றைக் கேட்கவேயில்லை; முத்துக்கருப்பியும் அவனைத் தொடர்ந்தோடி அவனிடம் இரக்கமாகிய பலவார்த்தை

களைப் பேசினுள். அவைகளும் அவன் செவிக்கேறவே யில்லை. அவர்கள் கற்ற வித்தைகளை யெல்லாம் ஓதியும் அவன் ஒரே மூர்க்கமாய், "இனி என்ன வந்தாலும் உங்கள் முகத்தில் நான் விழிப்பதில்லை" என்று உறுதிமொழி கூறிச் சிவ கெங்கைக்கு ஓடியே போய் விட்டான். முத்துக்கருப்பி யும் சுப்பையனும் "எல்லாக் கவலைகளோடு இதுவும் வந்து சேர்ந்தது" என்று விசனித்துக்கொண்டு வீட்டிற்குப்போய் விட்டார்கள்.

இங்கே சுப்பையனுடைய மைத்துனன் கோபித்துக் கொண்டு போனதுபோல இக்காலத்தும் பற்பலவிடங்களில் அநேகர் கோபித்துக் கொண்டு போவதைக் காணலாம். இந்த மதியீனர் வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒரு கலியாணக் காருக்கு மிகவும் சொந்தக் காராயிருந்தால் அக்கலியா ணத்தில் முகூர்த்தம் தவறிப் போவதாயிருந்தாலும் தாங் கள் வருமுன் தாலிகட்டக்கூடா தென்கிறுர்கள்; இழவு நேர்ந்த வீட்டுக் காருக்கு உறவினரா யிருந்தால் பிணம் நாறிப் போவதாயிருந்தாலும் தாங்கள் வர எட்டு நாட்கள் சென்றாலும் தாங்கள் வரும் வரை அதை எடுத்து அடக்கஞ் செய்யக் கூடாதென்கிறுர்கள். இவர்கள் அப்பேர்ப்பட்ட வர்க்குச் சொந்தக்காரர் என்னும் இறுமாப்பினுல் காரியம் நடக்கவேண்டிய நேரத்துக்குச் சரியாய் வருவதில்லை; வேண்டுமென்றே சிறிது தாமதமாய் வருவார்கள். காரி யத்திற்குரிய நேரந் தவறுவதையாவது அக்காரியங் கெட் டுப் போவதையாவது இவர்கள் சிறிதும் கவனிப்பதில்லை. பந்துக்கள் எது எப்படியானுலும் சகித்துக்கொண்டு இவர் கள் வரவுக் கெதிர்பார்த்திருப்பதே இவர்களுக்கு மிகவும் திருப்தியாகும். இத்தகையர் தமிழ்நாடு முழுவதிலும் நிறைந் திருக்கிறுர்கள். என்றாலும், தென்னுட்டிலேயே மிகுதியா யிருக்கின்றுர்கள். இவர்களைப் பந்துக்களாக உடையவர்

கள் அடையும் மனக்கவலைக்கு அளவே கிடையாது; இவர்கள் அறிவீனருள்ளும் அறிவீனரென்பது சொல்லவும் வேண்டுமோ?

10-வது அத்தியாயம்.

சுப்பையன் கோடங்கியால் சீரழிதல்.

இதுநிற்க, மேற்கூறியபடி வீட்டிற்குச் சென்ற சுப்பையனும் அவன் மனைவியும் அங்கே தனிப்பட்டிருந்தார்கள். அப்போது இவர்களுக்குத் தேறுதல் சொல்வார் ஒருவருமில்லை; தென்னாட்டில் இழவு நேர்ந்த வீட்டார்க்கு அக்கம்பக்கத்து வீட்டுக்காரர், சிநேகிதர் ஆகியவர் சாவுண்டான அன்றிரவு ஆகாரம் கொண்டுவந்து கொடுத்து அவர்களை உபசரிக்கும் பழக்கமுண்டு. ஆயினும் இவர்களுக்கு ஊரெல்லாம் பகையாதலால் அப்போது ஒருவரும் உணவு கொண்டு வந்து கொடுக்கவில்லை. அதனால் இவ்விருவரும் இரவு நெடுநேரம்வரை, 'யாராவது ஆகாரம் கொண்டுவருவார்கள்' என்று பசியோடு காத்திருந்து ஏமாந்துபோய்த் தங்களைப் பசி மிகவும் வாட்டியபடியால், கோபமாயிருப்பவன் தன்னை ஒருவரும் கூப்பிடாதபோது தானே வீட்டிற்குப் போவது போல, அவ்வாறு உபசரிப்பாரில்லாமற் போகவே, தாங்களே சிறிது ஆகாரம் சித்தப்படுத்திப் புசித்துவிட்டுத் தங்களுக்கு வந்த கணக்கிலடங்கா ஹிம்ஸைகளைக் குறித்துப் பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது சுப்பையன், தான் சிவகெங்கைக்குப் போனபோது நடந்த ஆபத்துக்களையும் மனைவியிடம் சொன்னான். அதைக் கேட்டு முத்துக்கருப்பி பெருமூச்சு விட்டவளாய், "நமக்கு நடந்த துன்பங்கள் மிகவும் அதிசயமானவைகளும், எங்கும் நடக்காதவைகளுமா யிருப்பதால் இவற்றிற்குக் காரணம் தெய்வகுறையென்றே தெரிகிறது; ஆதலால் நாம் சிக்கிரம்

கோடங்கியை அழைத்துக் குறிபார்க்கவேண்டும்" என்று சொன்னாள். சுப்பையன், "ஆம்; அவ்விஷயத்தைப்பற்றி நாம் முந்தியே மலையாளத்துப் பூசாரியோடு பேசியிருக்கிறோம்; ஆயினும் நமக்கு இந்த மூன்று நாட்களாக இடைவிடாமல் துன்பங்கள் நடந்துகொண்டிருந்ததால் நாம் அவற்றிற் சிக்கிக்கொண்டு குறிபார்க்கும் காரியத்தைக் கவனிக்க முடியாதவர்களாயிருக்கிறோம். எல்லாக் கஷ்டங்களும் நம் குழந்தை இறந்ததோடு ஒழிந்தன; இனிமேல் வரவேண்டியது ஒன்றுமிராது; ஆதலால் இனி நாம் குறிபார்க்கத் தொடங்கலாம்; ஆனால், கோடங்கி ஊரிலில்லை; இருந்தால் நமக்கு நேர்ந்த இந்தக் கலவரங்களுக் கெல்லாம் இங்கே வாராமலிரார்; எதற்கும் நான் அவர் வீட்டிற்குப்போய் அவரை விசாரித்து வருகிறேன்" என்று சொல்லி அவ்வாறே போய் மலையாளத்துக் கோடங்கியைத் தேடினான். அப்போது அவன் வீட்டிலிருந்த அவனுடைய சிஷ்யர்கள் 'அவர் நாளை உதயத்தில் வருவார்' என்று அவனிடம் சொன்னார்கள். அதைக் கேட்டுச் சுப்பையன் திரும்பிவந்து வீட்டிற்சேர்ந்து கோடங்கியிடம் குறிகேட்கவேண்டியதைப்பற்றித் தன் மனைவியோடு பேசிக்கொண்டும், கோடங்கியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டுமிருந்தான்.

"ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தினள்நோய் தனில்வருந்த அடிமை சாக
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவ னெதிரே செல்லத்
தள்ளவெண்ணா விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்தர் பெறத்தமது பகுதி கேட்பக்
குருக்கள்வந்து தக்ஷணைக்குக் குறுக்கிட்டாரே"

என்னுஞ் செய்யுளிற் கண்ட துன்பங்களினும் பதின்மடங்

கதிகமான துன்பங்கள் அடுக்கடுக்காய் இடை விடாமல் ஒன்றின்மே லொன்றுய்ச் சுப்பையனுக்கு இங்கே நடந்ததற்குக் காரணம்:—அவனை ஆதியிற் சந்தித்த வசைகவி மாணிக்கப் புலவருடைய வசைப்பாட்டும், விகடக் குருசாமியின் சபதமுமேயன்றி வேறென்றின்று. இந்த உண்மையை உணராத மூடமிகுந்த சுப்பையத்தேவன் அவை யுண்டானதற்குக்காரணம் தெய்வகுறையென்று கருதி இவ்வாறு கோடங்கியிடம் குறி பார்க்க முயன்றான். 'கேடுவரும் பின்னே மதிகெட்டுவருமுன்னே" என்றபடி சுப்பையனுக்கு இன்னும் சில கெடுதிகள் வரவேண்டியதற்கே அவன் மதி இவ்வாறு முந்தியே கெட்டு மகா பொய்த்தொழிலாகிய கோடங்கித்தொழிலை விரும்பிற்று. மேற்கூறியபடி சுப்பையனும் அவன் மனைவியும் பூசாரியைச் சந்திப்பதற்கு 'எப்பொழுது விடியும் விடியும்' என்று விழித்துக்கொண் டிருந்தார்கள். பெரும்பான்மையும் விசனத்தினாலும் அவர்களுக்கு நித்திரை வரவில்லை.

சுப்பையன் கோடங்கியிடம் குறி கேட்பது.

இவர்கள் செய்கை இப்படியிருக்கச் சுப்பையத் தேவனிடத்தில் நடந்த வேடிக்கைத் துன்பங்களைப் பார்க்கவருபவன் போன்று சூரியன் கிழக்குத்திக்கில் உதயமாயினான். அவ்வாறு விடிவதற்குள்ளாகவே இரண்டு தினங்களாக அடுத்த ஊருக்குப்போய் ஒளிந்திருந்த கோடங்கி மலையாள பகவதி எழுந்து,"சுப்பையத்தேவன் கிறுகிறுத்துப்போகும்படி அவனுக்கு அளவற்ற துன்பங்கள்வந்து அவனை மயக்கி இப்போது ஓய்ந்திருக்கிறபடியால் நாம் அவனிடம் நம்முடைய மாயவலையை வீசுவதற்கு இது நல்ல தருணம்; இனிமேல் நாம் அவனோடு கலப்பதில் துன்பமொன்றுமிராது; உடுக்கை தட்டும் விஷயத்தில் நாம் எதைச்சொன்னாலும் அவன் தடையின்றிக் கேட்பான்; நாம் என்ன செய்தாலும் அதற்கவன்

சம்மதமாயிருப்பான்; நாம் எல்லாவற்றையும் பேய்கள் தலையிலேற்றி விடுவதற்கு அவனிடத்தில் நடந்த துன்பங்கள் மிக்க ஏதுவாயிருக்கின்றன; நாம் குறிப்பிட்டிருக்கும் காரியங்களையும் இனி இலகுவில் முடித்துக்கொள்ளலாம்; இன்று அவன் நம்மைத் தேடிவருவதற்குள் நாமே அவனிடம் போய் நேர்ந்த துன்பங்களை விசாரித்து இன்றிரவு உடுக்கையடிப்பதற்கு வழி செய்துவிட வேண்டும்" என்று கருதி உடனே புறப்பட்டுவந்து சுப்பையத்தேவன் வீட்டிற்குள் நுழைந்து அவனைக் கண்டான். அப்பொழுது சுப்பையன், இவன் வரவுக்கெதிர் பார்த்திருந்தபடியால் இவனைக் கண்டவுடன், 'தான் கும்பிடத்தேடிப்போன தெய்வத்தை எதிரில் கண்டவன்' போல மகிழ்ந்து, "அண்ணு! வா! வா!! நான் உன்னைத் தேடித்தேடி உன் வீட்டிற்குப் பலதடவைகள் வந்ததால் என் காலுங் கடுத்துப்போய் விட்டதே; இந்தச் சமயத்தில் நீ எங்கே போய்விட்டாய்? எனக்கு நீ அவசியமில்லாத சமயங்களிலெல்லாம் இங்கேயிருந்துவிட்டு மிகவும் அவசியப்பட்ட இச் சமயத்தில் மறைந்து அகப்படாமற் போய் விட்டாயே! தொழிலாளிகளுடைய சமாச்சாரமெல்லாம் இப்படித்தான்; எனக்கு இந்த மூன்று நாட்களாக நடந்த துன்பங்களுக்கு அளவில்லையே; அவை எடுத்துச் சொல்லுதற்கு மியலாவே; என் பிள்ளைகூட இறந்து போய் விட்டதே" என்று சொல்லித் துக்கித்தான். முத்துக்கருப்பியும் அவன் சமீபத்தில் வந்து நின்று அந்தக் கோடங்கி தனக்கு மிக்க சிநேகிதனுதலால் அவனை நோக்கி, "நீங்கள் இச்சமயத்தில் வந்து துக்கம் விசாரியாமல் இப்படி இருக்கலாமா?" என்று கண்ணைக் கசக்கினுள். உடனே அந்தப் புரட்டுக்காரப் பூசாரி அன்புள்ளவன் போல அவர்களை நோக்கி, "அடடா! இந்த இரண்டுமூன்று நாட்களுக்குள் உங்களுக்கு இவ்வளவு துன்பங்களா நடந்து விட்டன?

நான் உங்கள் சமீபத்திலிருந்து உங்களுக்குத் தேறுதல் சொல்வதற்கும், உதவிபுரிவதற்கும் ஏது வில்லாமற் போய் விட்டதால் பாவியாகி விட்டேன். என்ன செய்வேன்; ஊரார் என்னை ஓரிடத்தில் தங்கியிருக்க விடுகிறார்களில்லையே; சமயத்தில் எங்கேயாவது அழைத்துக்கொண்டு போய்விடுகிறார்களே; போனவை போகட்டும்; இனிமேல் நாம் சும்மா விருக்கலாகாது; உங்களிடத்தில் ஒன்றின் மேலொன்றாய் அடுக்கடுக்காய் நடந்த துன்பங்களை நான் உத்தேசிக்கும்போது அவை யெல்லாம் குலதெய்வத்தின் குறையினாலேயே நடந்தன வென்று தோன்றுகின்றன; உங்களுக்கு வேறு எச்சிப்பிசாசுகளின் தோஷமுமிருக்கலாம்; இவற்றோடு ஏழரைநாட்டுச் சனியும் பிடித்திருக்கிறது; எல்லாம் குறிமுகத்தில் பார்த்தால் தெரிந்து போகும்" என்று புளுகித் தன் மாயவலையைச் சமயத்துக்குத் தக்கபடி அவர்களிடம் வீசினான். கோடங்கி இவ்வாறு தன்னுடைய நோக்கம்போல பேசினதற்குச் சுப்பையன் மிகவும் சந்தோஷித்து அவனை நோக்கி, "அண்ணா! நீ சொன்னது சரிதான்; குலதெய்வத்தை நாங்கள் கும்பிட்டு வெகு நாட்களாயின; எப்படியாவது அதை இன்று கோடங்கி முகத்தில் அழைத்து எங்களுக்கு நேர்ந்த குற்றங் குறைகளை அதனிடம் கேட்டு அதன் கோபந்தீரும்படி அதற்கு ஒரு பூஜை போடவேண்டும்" என்றான்.

குலதெய்வத்தைச் சமீபத்தில் கும்பிட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் துன்பம்வந்த சமயத்தில் 'சுவாமியைக் கும்பிட்டு நெடு நாட்களாயின; அதனாற்றான் இத்துன்பம் வந்தது' என்று பேதைச்சனங்கள் சொல்லிக் கொள்வது வழக்கமாதலின், இங்குச் சுப்பையனும் அவ்வழக்கப் படியே இவற்றைக் கூறினான். பேதைகளுடைய தீர்மானங்

களுக்கு அளவுமில்லை, விவஸ்தையுமில்லை; எதையும் அவர்கள் தாங்களே சிருஷ்டி செய்துகொண்டு அதற்குப் பரிகாரமும் தாங்களே செய்து கைப்பொருள் முதலியவற்றை இழந்து கெடுவார்கள்.

பின், கோடங்கி மலையாளபகவதி ஓரிடத்தில் உட்கார்ந்து தன் மடியிலிருந்த பனிரண்டு முத்துக்களை யெடுத்து வடக்குமுகமாகத் திரும்பிச் சுப்பையனைப் பார்த்து, "அண்ணு! எதற்கும் நான் ஒருகை முத்துப்போட்டுப் பார்க்கிறேன்; இதில் எல்லாம் தெரிந்துவிடும்" என்று இஷ்ட தெய்வத்தை வணங்கி, மூன்று முறைகள் அவற்றைக் குலுக்கிக் குலுக்கிப் போட்டுப் பார்த்தான்; அந்த மூன்று முறைகளிலும் தவறுமல் எட்டே விழுந்தது; உடனே கோடங்கி முகத்தைச் சுழித்துக்கொண்டு, "என்ன மூன்று முறைகளிலும் எட்டே விழுந்தது; எட்டாம் வீடு விருச்சிகத்துக்குடையதாதலால் விருச்சிகமாகிய தேள் மிகவும் கெட்டது; அது, தான் மனிதரைக் கொட்டியகாலத்தில் அவர்களுக்கு எவ்வளவு துன்பத்தை யுண்டாக்குமோ அவ்வளவு துன்பத்தைச் சாதாரண காலத்திலும் செய்வது; இந்தக் குறிப்பிஞலே உனக்கு இப்பொழுது அளவற்ற துன்பங்கள் நடந்திருப்பது தெரிகிறது; இப்பொழுது முத்துக்குறியால் தேள்ராசிவந்ததற்கிணங்கவே உனக்குத் துன்பம் தொடங்குகிறபோது முதன் முதல் தேளுங்கொட்டி யிருக்கிறது; அப்படித் தேள் கொட்டியது காரணமாக அப்பொழுதே உனக்கு அளவற்ற தீங்குகள் நேர்ந்து மீசையிலும் நெருப்புப் பிடித்தெரிந்தபடியால் இவையெல்லாம் தெய்வகுறையினுல் நடந்திருக்கின்றன வென்பது தெரிகிறது; மேலும் உன் கிரகசித்திரப்படி உன்னை ஏழரை நாட்டுச் சனியும் பிடித்திருக்கிறது; இப்பொழுது நீ இவ்வாறு உனக்கு நேர்ந்த துன்பங்களுக்குக் காரணங் கேட்கிறுய்; இது மெய்யா

பொய்யா?" என்று சொன்னன். சுப்பையன், முத்துக்குறிக்கும் கோடங்கி சொல்லியபடி தனக்குத் தேள்கொட்டியதற்கும், மற்ற சங்கடங்கள் நேர்ந்ததற்கும் பொருத்தமாயிருந்தபடியால், 'கோடங்கிக்குத்தான் முன் நடந்த விஷயங்களெல்லாம் தெரியுமே' என்பதைக் கிஞ்சித்தும் கருதாதவனுய், அவனை நோக்கி, "அண்ணே! நீ சொல்வதெல்லாம் சரிதான்" என்ருன். அதற்குக் கோடங்கி, "சரி! நாம் இன்றிரவு கோடங்கி யடித்துக் குலதெய்வத்தைக் கூப்பிட்டு அதனிடத்தில் உள்ள குறைகளைக்கேட்டுத் தெரிந்துகொண்டு எல்லாச் சங்கடங்களுக்கும் பரிகாரஞ் செய்வோம்; இவைகளைப்பற்றி நீ யோசிக்கவேண்டாமண்ணே; பகவதி வந்து உடுக்கையைத் தட்டினல் எல்லாம் பறந்து போகும்" என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

இந்த முத்துக்குறி பார்க்கும் விஷயத்தில் பூசாரிகள் மிகவும் தேர்ச்சிபெற்றவர்கள்; எத்தனைமுறை முத்துக்களைப் போட்டாலும் தங்களுக்கு எந்தத்தொகை வேண்டுமோ அந்தத் தொகையே வரச்செய்து அந்த எண்ணுக்குத் தக்க இராசியை எடுத்துக்கூறி அதற்குத்தக்கபடி கட்டுப்பாடான பலனைச் சொல்வதில் மிகுசமர்த்தர்கள்; இவர்கள் வைத்திருக்கும் பனிரண்டு முத்துக்களுள் ஒருமுத்து வெள்ளித் தகட்டால் இருபுறமும் மூடப்பட்டிருக்கும்; முத்துக்களை இவர்கள் கீழே போடும்போது அந்த வெள்ளித்தகட்டு முத்து விழுந்தவுடனே மேலே முத்துக்களைப் போடாமல் நிறுத்திக்கொண்டு கீழே கிடக்கும் முத்துக்களைக் கணக்கிடுவது வழக்கம்; முத்துக்களை ஒவ்வொன்ருகப்போட்டுத் தங்களுக்கு வேண்டிய தொகை வருமட்டும் வெள்ளித்தகட்டு மணியை நெருடிப் பார்த்துத் தள்ளிவைத்துக்கொண்டிருந்து குறித்த தொகைக்கு ஒன்று குறையாயிருக்கும்

போது அதனைப் போட்டுக் கணக்கைச் சரிப்படுத்திக்கொள் வார்கள்; அவர்கள் இவ்விதம் செய்வது, தெய்வச் செய லால் தானே விழுந்த முத்துக்குறியென்று சொல்வதற்கும், சமயத்துக்குத் தக்கபடி நல்லது கெட்டதாகிய பலன்களை இராசிக்கணக்கால் சொல்வதற்கும், மிகுந்த ஏதுவாயிருத்த லால் அந்தப் பூசாரிகள் இதனை வெகு தந்திரமாய்ச் செய் வார்கள்; இங்கே, தேள் கொட்டினதற்குத் தக்கபடி குறி சொல்ல வேண்டியதற்கு விருச்சிகராசியைக் காட்டவேண்டு மென்று நினைத்தே மலையாள பகவதி மும்முறையும் முத் துக் குறியில் எட்டே வரும்படி செய்தான். பூசாரிகள் இதைப்போல எவ்வளவு வெளிப்படையான தந்திரங்கள் செய்தாலும் பேய்ப் பைத்தியங்கொண்ட பேதைச்சனங் கள் அவற்றைக் காணவே மாட்டார்கள்; எல்லாவற்றையும் மெய்யென்றே கருதிப் பொருளைச் செலவிட்டு நஷ்டமடை வார்கள்; நம்மிந்திய ஜனங்களுக்கு எப்பொழுது இத்தகைய மயக்கங்கள் தீருமோ தெரியவில்லை.

சுப்பையன் வீட்டில் கோடங்கிக் கூத்தின் ஆரம்பம்.

இதுநிற்க; சுப்பையனிடத்தில் விடைபெற்றுச் சென்ற மலையாளத்துக் கோடாங்கி, தன் வீட்டில் தனது மோசத் தொழிலுக்குத் துணைக்கருவிகளாகும் பொருட்டுச் சேர்த்து வைத்திருந்த சிஷ்யர்களோடு சுப்பையன் வீட்டில் கோடங்கி யடித்துக் குறி பார்க்கவேண்டிய விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது சுப்பை யன் குறிபார்ப்பதற்குரிய சாமான்களைச் சேகரிக்கவேண் டுமேஎன்று நினைத்துக்கொண்டு தன் வீட்டிலிருந்து மிகுந்த அவசரமாய் ஓடிவந்து பூசாரியிடம், "அண்ணே! இராத் திரிக்கு உடுக்கடித்துக் குலதெய்வத்தைக் கூப்பிடுவதற்கு நான் என்ன என்ன சாமான்கள் சேகரிக்கவேண்டும்? நீ

அவற்றைச் சொன்னால் இப்பொழுதே எல்லாவற்றையும் நான் சேகரித்து வைத்து விடுவேன்" என்றான்.

இவற்றைக்கேட்டவுடனே பூசாரி, தன்னுடைய சிஷ்யர்கள் முகத்தையும் ஆகாயத்தையும் பார்த்துச் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்து விட்டுப் பின் சுப்பையத் தேவனைப் பார்த்து முன்பின் யோசியாமல், "இராத்திரிக்கு நாம் குலதெய்வத்தைக் கூப்பிடுவதற்கே ரூபாய் இருபத்தைந்துக்குமேற் செல்லும்; அதற்குமேல் நாம் எத்தனையோ தேவதைகளுக்குப் பூஜைபோட வேண்டியதாயிருக்கும்; கிரகசாந்தி வேறே செய்யவேண்டும்; எல்லாவற்றிற்கும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற் செலவாகக் கூடுமென்று நான் நினைக்கிறேன்; ரூபாய் செலவாவதைப்பற்றி நீ மனக் கவலைப் படலாகாது; அப்படியானால் உன் காரியம் கெட்டு விடும்; நீமட்டும் சுகமாயிருந்தால் எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் தேடிக்கொள்ளலாம்; முதலில் நீ ரூபாயைத் தேடிக்கொண்டாலல்லவா மற்ற காரியங்களைப் பற்றி நாம் யோசிக்கலாம்; இதற்கென்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான். சுப்பையன், 'செலவு இவ்வளவு தொகைமட்டும் ஓடாதென்று நினைத்திருந்தவனாதலால், ரூபாய் ஐந்நூறு என்றவுடன் பிரமித்துப்போனான். எனினும், அவன், கோடாங்கியால் எல்லாத் துன்பங்களும் நீங்கிவிடுமென்றுறுதி கொண்டிருந்தபடியால், "ரூபாய் போனால் போகிறது; நமக்குச் சுகங்கிடைத்தால் அதுவே போதும்; நாம் இந்தப் பரிகாரங்களையெல்லாம் செய்துகொண்டால் நம்மை விட்டுப் போன உத்தியோகமும் நம்மிடம் திரும்பிவந்து விடக்கூடும்; அவ்வாறு உத்தியோகம் வந்தால் நாம் இந்தப்பொருளை ஒரே மாதத்திற் சம்பாதித்துக் கொள்ளலாம்; இப்பொழுது நம்மிடத்தில் சிறிது நிலம் தவிர வேறொரு பொருளுமில்லை; அதை நாம் இப்பொழுது பாதிவிலைக்கு விற்றாலும் நமக்கு

ஐந்நூறு ரூபாய் கிடைக்கும்; அதைக்கொண்டு நாம் காரியத்தை முடித்துக்கொள்ளலாம்" என்று தீர்மானித்துக் கோடங்கியை நோக்கி, "அண்ணே! இப்பொழுது கொஞ்சம் நிலந்தான் என்னிடத்திலிருக்கிறது; அதை நான் விற்றுக் காரியத்தை முடித்து விடுகிறேன்; ஆனால், எல்லாப் பரிகாரங்களையும் நாம் செய்தவுடன் என்னைவிட்டுப் போன உத்தியோகம் எனக்குக் கிடைக்குமா?" என்று கேட்டான். அதற்குப் பூசாரி, "என்ன அண்ணே! உனக்கு இன்னம் மலையாளபகவதியினுடைய சாமர்த்தியம் தெரியவில்லை; நான் செய்யும் பரிகாரத்தால் நீ எவ்வளவோ நன்மையடையப் போகிறாய். உத்தியோகத்தைத் தள்ளு; அது ஒரு பெரிதல்ல; நீ இரண்டு மாதத்திற்குள் மெத்தை வீடு கட்டி வாழாவிட்டால் நான், என் உடுக்கையை இரண்டாக உடைத்தெறிந்து விடுகிறேன்" என்று மீசைமேற் கையைப்போட்டு அதை முறுக்கினான். அதைப்பார்த்தவுடன் சுப்பையன், எல்லாப் பாக்கியமும் தனக்கு வந்துவிட்டதாகவே நினைத்து மகிழ்ந்து மறுவார்த்தை பேசாமல் ஓடிச் சூரியன் அஸ்தமிப்பதற்குள் தனக்குள்ள நிலமுழுவதையும் பாதிவிலைக்கு விற்று ஐந்நூறு ரூபாய் சேகரித்துக்கொண்டு வந்து வீட்டில் வைத்துவிட்டுப் பூசாரியிடம் திரும்பி வந்து, "ரூபாய் சேகரமாய்விட்டது; இனி நீ இராத்திரிக்குவேண்டியசாமான்களைச் சொல்லு" என்றான். அதைக்கேட்டதும் பூசாரி, "தெய்வங்களில் ஒவ்வொன்றையும் புதிதுபுதிதாகக் கூப்பிடும்போதெல்லாம் வைப்பதற்காக ஐந்து ரூபாய்க்குத் தேங்காய், பழம், சூடம், சாம்பிராணி, வெற்றிலை, பாக்கு, புஷ்பம், சந்தனம் ஆகியவைகளும், எனக்கு ஐந்து ரூபாய் விலையுள்ள இரண்டு வேஷ்டிகளும், சிஷ்யர் இருவருக்கும் இரண்டு இரண்டு ரூபாய் விலையுள்ள வேஷ்டிகளும், எனக்கு ஐந்து ரூபாய் தக்ஷிணையும், சிஷ்யருக்கு இரண்டு இரண்டு

ரூபாய் தக்ஷிணையும், குறிமுகத்துத் தெய்வத்துக்கு ஆறு ரூபாய் விலையுள்ள பட்டுக்கரைவேஷ்டியும் சேகரித்து வைக்க வேண்டும்” என்று சொல்லி முதலில் இருபத்தைந்து ரூபாய்க்குச் செலவுவைத்தான். அந்தப்பேதையும் வீட்டிற் குப்போய்ச் செலவுக்குச் சிறிதும் அஞ்சாமல் அவை எல்லா வற்றையும் சேகரித்து வைத்துவிட்டான். பின்னர் அவனும் முத்துக்கருப்பியும் குலதெய்வத்தைக் கூப்பிட்டு வணங்கும் பொருட்டு ஸ்நானம் முதலியன செய்து மிகவும் பரிசுத்த முடையவராய்த் தீபமேற்றியவுடன் மலையாளத்துக் கோடங்கியின் வரவுக் கெதிர்பார்த்திருந்தார்கள்.

கோடங்கியும் சூரியன் அஸ்தமித்தவுடனே சுப்பை யன் வலையில் அகப்பட்டதைப்பற்றி “பயல் வகையோடு நம்மிடம் சிக்கிக்கொண்டான்” என்று சந்தோஷங்கொண்டு மகா பக்திமான் போல ஸ்நானஞ்செய்து, பரமசிவக்கடவுள் போலவே, தேகமுழுவதிலும் வெண்ணிறமான விபூதியைப் பூசி, கழுத்தில் சங்குமணி, வில்வமணி, தங்கச்சூடாமுதலிய வற்றையும், இரண்டு முன் கைகளிலும் முழங்கை வரை பேதைச் சனங்களால் செய்து போடப்பட்ட தங்கவளை யல், வெள்ளிவளையல்களையும், விரல்களில் சங்குமோதிரம், செப்புமோதிரம், தங்கமோதிரம், வெள்ளி மோதிரம், ஆகிய வற்றையும் அணிந்து, இடையில் பட்டுக்கரை வேஷ்டிகட்டி, தலையில் ஜரிகைத் தலைப்பாகை வைத்துத் தேகத்தில் பீதாம் பரம் போர்த்தி, வெங்கல உடுக்கு, விபூதிப்பை, ஒற்றை முளிப் பிரம்பு, முத்துக்குறி பார்க்கும் முத்துக்கள், * குறிமுகத்தில்

---

* பூசாரி உடுக்கடித்துத் தெய்வத்தைக் கூப்பிடும் சந்தர்ப்பத் தைக் குறிமுகமென்று சொல்வது தென்னாட்டுவழக்கம். குறி முகம், குறிபார்த்தல், குறிகேட்டல், கோடாங்கி பார்த்தல், கோ டாங்கி கேட்டல் ஆகியவை ஒரு பொருட்சொற்கள். கோடாங்கி யென்பது பூசாரிக்கும் உடுக்கைக்கும் பெயர்.

வைக்கும் விநாயக விக்கிரகம் ஆகியவற்றோடு, தன்னைப் போன்று வேடந்தரித்திருந்த சொக்கன், பெரியண்ணன் ஆகிய இரண்டு சிஷ்யர்கள் பின்தொடர்ந்துவரப் புறப்பட்டுச் சுப்பையத்தேவன் வீட்டிற்குள் நுழைந்தான். சுப்பைய னும், அவன் மனைவியும் அந்தப் பூசாரியைக்கண்டவுடன், தங் கள் குலதெய்வமே பிரத்தியக்ஷமாய் வந்து நுழைவதாக எண்ணி அவனுக்கும் சிஷ்யர்களுக்கும் தக்கமரியாதைகள் செய்து அவர்களை அழைத்துப்போய் உடுக்கடிப்பதற்கென்று மெழுகிச் சுத்தி செய்துவைத்திருந்த நடுவீட்டில் உட்காரு வித்தார்கள். பின்னர்ச் சுப்பையன் பூசாரியிடத்தில், "என்ன அண்ணே! நம்முடைய வீட்டில் இதுவரை இந்தமாதிரிச் சங்கடமுண்டானதே கிடையாது; இந்த மூன்று நாட்களுக் குள் என் உத்தியோகம் போய், மாடிறந்து, வேலைக்காரி யிறந்து, பிள்ளையுமிறந்ததன்றி, இன்னும் எத்தனையோ எண்ணத் தொலையாத துன்பங்கள் அடுக்கடுக்காய் நடந்து விட்டன; இவற்றுள் எதனாலும் எனக்கு விசனமில்லை; என் உத்தியோகம் போனதைப் பற்றித்தான் மிகுந்த விசனமா யிருக்கிறது; நீ மற்றவர்களுக்குக் குறிபார்ப்பதுபோல மேற் போக்காகப் பார்த்து என்னை ஏய்த்துவிடாமல் கொஞ்சம் அழுத்தமாக உடுக்கையடித்து எனக்குள்ள குற்றங் குறைக ளைக் கண்டுபிடித்து அவற்றிற்குத்தக்க பரிகாரஞ்செய்து எப்படியாவது எனக்கு உத்தியோகம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்" என்று எல்லாம் பூசாரி கைக்குள்ளிருப்பன வாகவேவேண்டினான். அதற்குப் பூசாரி, "என்ன அண்ணே! இது நமது சொந்தவீட்டுக் குறியாச்சுதே; இதையா நான் இலேசில் விட்டுவிடுவேன்; நீ எனக்கு அதிகமாகச் சொல்ல வேண்டாம்; ஆனால், நீ வேறேயாரும் இங்கு வந்து நடுவே அவர்களுக்கும் குறிசொல்ல வேண்டுமென்று என்னிடம் கேட்டுத் தொந்தா வுண்டாக்காமலிருக்கும்படி, நாம் இருக்

கும் இந்த உள் வீட்டுக்கதவைக் கெட்டியாக மூடிவிட வேண்டும்'' என்றான். அவன் அப்படியே எல்லாக் காரியங் களையும் சித்தப்படுத்திக் கொண்டு, தான் தன் மனைவி முத் துக்கருப்பி, கோடங்கி, சிஷ்யர்கள் ஆகியவர்கள் தவிர வேறேயாரும் உள்ளே வராதபடி அந்த அறையின் கதவை மூடிவிட்டான். (இவன் இங்கே கதவை மூடச்சொன்ன தின் காரணம் பின்னே விளங்கும்.)

அதன்மேல் பூசாரிமலையாளபகவதி, சுப்பையனையும் அவன் மனைவியையும் எதிர்ப் புறத்திலும், இரண்டு சிஷ்யர் களையும் தனக்கு இடப்புறத்திலும் வலப்புறத்திலும் உட் காருவித்து, முதலில் குறிமுகத்தில் வைக்கப்பட்டிருக்கும் விநாயக விக்கிரகத்துக்குத் தூபதீபநைவேத்தியங்க ளெல் லாம் செய்து முடித்து, உடுக்கைக்குச் சாம்பிராணிப் புகை காட்டித் தனது சிஷ்யர்களை நோக்கி, "அப்பா தம்பிமாரே! நாம் இப்போது நம்முடைய வழக்கம்போல் விநாயகமூர்த்தி, சுப்பிரமணியசுவாமி, மீனாட்சியம்மை, சொக்கலிங்கசாமி, வீரபத்திரசாமி, கோவிந்தன் ஆகியவர்களை வணங்கிக் கொண்டு, அதன்மேல் நமது குறிமுகத்துத் தெய்வமாகிய மதுரைவீரனைக் கூப்பிட்டுக் கேட்டு அவனிடம் எல்லாச் சங் கதிகளையும் தெரிந்துகொண்டு, அதற்குமேல் சுப்பையா அண் ணனுடைய குலதெய்வத்தைக் கூப்பிடவேண்டும்; நம்மைப் போல முறைப்படி சாமிகளையழைப்பவன் இந்தவூரில் எவ னிருக்கிறான்? எல்லாப் பயல்களும் பூசாரிகளென்று கையில் உடுக்கை வைத்துக்கொண் டிருக்கிறார்கள்; என்ன பிரயோ சனம்? நீங்கள் மட்டும் எனக்குத் துணையாய்ச் சுவாமியழைக் கும் பாட்டுப் பாடுவதில் பின் வாங்காதீர்கள்; நான் ஒருகை பார்த்துச் சுப்பையா அண்ணனுடைய சிக்கலைத் தீர்த்து விடுகிறேன்" என்று சொல்லி ஆதியில் உடுக்கைக் 'கனகன' வென்று சப்திக்கும்படி தட்டிச் சுவாமிகளை

வணங்கத் தொடங்கி விட்டான். (பூசாரி, முதலில் தெய்வணக்கங்கூறி முடியுமட்டும் மேற்சொல்லியபடி உடுக்கைக் கனகன வென்னும்படி தட்டி மெதுவாகத் தான் மாத்திரம் துதிப்பாட்டுக்களைப் பாடிக் குறிமுகத்துத் தெய்வத்தைக் கூப்பிடுவதிலிருந்து சற்று உரத்த தொனியோடு ஒய்யாரமான பாட்டுப்பாடி அதற்கிசைய உடுக்கை "டுண்டுண் டுண்டுண் டுண்டுண் டுண்டுண் டுண்டுண்—டுண்டுண்—டுண்டுண் டுண்டுண் டுண்டுண் டுண்டுண் டுண்டுண்" என்று தட்டுவான். அப்போது சிஷ்யர்களும் துணையாய் அவன் பாட்டின் கடைசியிற் சொல்லும் சொல்லை மாத்திரம் சொல்லிப் பாடுவார்கள். தெய்வம் பூசாரிமீது வந்து விட்டதாக நடிக்கும்போது மாத்திரம் உடுக்கடியும், பாட்டொலியும், முகச்சுழிப்பும், பற்கடிப்பும், தேகநடுக்கமும், கண்விழிப்பும், கைநெரிப்பும் கோடங்கியிடம் பலமாயிருக்கும்)

பூசாரி முதலிற் பலதெய்வங்களை வணங்குதல்.

அம்மானை போன்ற பாட்டு.

(இது தென்னாட்டுப் பூசாரிகளாற் பாடப்படுவது.)

கண்ணிகள்.

ஆதிக் கணபதியே ஐங்கரனே முன்னடப்பாய்
சோதிக் கணபதியே சுந்தரனே வா வா வா—டுண்டுண்டுண்.
பச்சைமயில் வாகனு பன்னிரண்டு கையோனே
இச்சையுடன் நான் பணிந்தேன் ஏழைதனைக் காத்திடுவாய்—
[டுண்டுண்டுண்.
அங்கையற்கண் ணம்மணியே ஆதிபர மேஸ்பரியே
எங்களை நீ காத்திடுவாய் என்னம்மா மீனாட்சி—டுண்டுண்டுண்.
சுந்தரமா மூர்த்தி சொக்கலிங்க ஆண்டவனே
மைந்தனை நீ யிச்சமயம் வந்துடனே காத்திடுவாய்-டுண்டுண்டுண்.
தக்கனது வேள்விதனைச் சங்காரஞ் செய்யவந்த
உக்கிரனே வீரபத்திரா ஓடியிங்கு வா வா வா—டுண்டுண்டுண்.

ஓம்காளி தேவி உருத்திரன்றன் நாயகியே
பாங்காக வந்துடனே பாலனைநீ காத்திடுவாய்—டுண்டுண்டுண்.
அச்சுதனே கோவிந்தா அரிநாராணு ஐவர்
மைத்துனு ஏழைமுன்னே வந்திடவே வேணுமையா—டுண்டுண்
[டுண்.
நீண்ட சடைமுனியே நேரிலங்கை வாழ்முனியே
ஆண்டி முனியே அடிமையை நீ ஆண்டிடுவாய்—டுண்டுண்டுண்.
சுத்தக் கருப்பா சுடுகாட்டு மாடா நீர்
இத்தினமே வந்து இருதயத்தி லேயிருப்பீர்—டுண்டுண்டுண்.
கன்னிமார்ப் பெண்டுகளே காட்டண்ணன் மாரேயிம்
மண்ணின் முனிவர்களே மகிழ்ச்சியுடன் வந்திடுவீர்—டுண்டுண்
[டுண்.
கடற்கன்னிப் பெண்டுகளே கண்மணியே ஏகாத்தாள்
அடக்கமில்லா மாரி அடியேனை ஆதரிப்பீர்—டுண்டுண்டுண்.
ஆற்றங் கரைப்பேயே அடுப்படியில் வாழ்பேயே
மாற்றமுள்ள காட்டேறி வாடாமல் வந்திடுவீர்—டுண்டுண்டுண்.
சந்தித் தெருப்பேயே தண்ணீர்க் கரைப்பேயே
அந்தி வழிப்பேயே ஆதரவாய் முன்வருவீர்—டுண்டுண்டுண்.
தெய்வலோ கத்திலுள்ள தேவர்களே இன்னுமுள்ள
மெய்யான சாமிகளே வேண்டி வரந்தருவீர்—டுண்டுண்டுண்.

மேற்குறித்தபடி பூசாரி, பல தெய்வங்களை வணங்கிக் கொண்டபின் தன்னுடைய * குறிமுகத்துத் தெய்வமாகிய மதுரைவீரனுக்கு நிவேதனம் முதலியனசெய்து அந்தத் தெய்வத்தைக் கூப்பிடத் தொடங்கினுன்.

அப்போது பாடிய மேற்கண்ட மெட்டுள்ளபாட்டு

அடங்கா நெருப்பே என் ஆசையுள்ள வீரா
மடங்காமல் குறிமுகத்தில் வந்துகுறி சொல்வாயே—டுண்டுண்
[டுண்.

---

* குறிமுகத்துத் தெய்வம்-பூசாரி தன் தொழிலுக்கு முக்கியமாகவைத்து வழக்கமாய் முதலிற் கூப்பிடுந்தெய்வம்; அதாவது இஷ்டதேவதை.

வந்தபடை வெட்டியொரு மாதைச் சிறையெடுத்து
வந்த மதுரைவீரா வழக்கதனைத் தீர்த்திடவா—டுண்டுண்டுண்.
மதுரை தனைக்காக்கும் வைரியே அடியருக்கு
விதிவசத்தால் வந்த விசனத்தைத் தீர்த்திடவா—டுண்டுண்டுண்.
இன்ன விதத்தாலே இவ்வளவு விக்கினங்கள்
முன்னமே வந்ததென்று மொழிந்திடநீ வா வா வா-டுண்டுண்டுண்.

மேற்கூறியபடி குறி முகத்துத் தெய்வத்தைக் கூப்பிடத் தொடங்கிய பூசாரி, இவ்வாறு இப்பாடல்களை முதலில் மெதுவாகப் பாடி மதுரை வீரனை யழைத்துப் பின்பு, வழக்கப்படியே வேறு சந்தத்தில் தடபுடலாகப் பாட்டுப் பாடித் தன் சிஷ்யரும் தன்னுடன் கூடித் துணைச்சொற் கூறும்படி மும்முரமா யழைக்கத் தொடங்கி விட்டான்.

அப்போது பாடிய வேறுமெட்டுள்ள பாட்டு.

(இதற்கு உடுக்கைச் சப்தத்துக்குத் தக்கபடி சந்தம் கீழே அமைக்கப்பட்டிருக்கிறது. பாடும் பொழுது கூடவே இவ்வித உடுக்கொலி பிறக்கும். பாட்டின் ஒவ்வொரு அடியின்கடைசிச் சொல்லைச் சிஷ்யர்கள் தாளத்துக்கிசையச் சொல்லிக் கதறிக் கொண்டு வருவார்கள். ஊடே பயங்கரமான சப்தமு மிடுவார்கள். இந்தச் சந்தம் பெரும்பான்மையும் பட்டணத்துப் பக்கம் வழங்குவது.)

சந்தம்.

டுண்டுண்டுண்டுண் டுண்டுண் டுண்டுண்டுண்டுண்—டுண்டுண்
டுண்டுண்டுண்டுண் டுண்டுண் டுண்டுண்டுண்டுண்

பூசாரி		சிஷ்யர்.
கச்சைதனை வீராநீ வரிந்துகட்டி	—	வரிந்துகட்டி
சரியகச்சை வீராநீ தொங்கவிட்டு	—	தொங்கவிட்டு
கோணக்கொண்டைநீ போட்டுக்கொண்டு	—	போட்டுக்கொண்டு
குணமான மகுடந் தான்சூட்டி	—	தான் சூட்டி
வீரதண்டை காலில் போட்டுக் கொண்டு	—	போட்டுக்கொண்டு

வெட்டரிவாள் சாமி கைப்பிடித்து — கைப்பிடித்து
நீலவர்ணக் குதிரை மேலேறி — ,, மேலேறி
நேராக ஓடி வருவாயே — வருவாயே
கோபுரத்தி னடியை விட்டு நீயும் — விட்டு நீயும்
குடிசைக்குள்ளே இங்கே வந்திடுவாய் — வந்திடுவாய்

மேற்கூறியபடி மதுரை வீரனை அழைக்கத் தொடங்கிய பூசாரி, இந்தவிதமான பாட்டைப் பாடி மிகுந்த உக்கிரத்தோடு கூப்பிட்டு, அத்தெய்வம் கோபுரத்தடியிலிருந்து புறப்பட்டு விட்டதாகவும், தெருக்களெல்லாம் தாண்டி விட்டதாகவும், முடிவாகத் தாங்களிருக்கும் குடிசைக்குள் வந்து புகுந்து விட்டதாகவும் பாட்டில் சேர்த்துப் பாடிக் கோடங்கிகள் வழக்கப்படியே நடித்து முகத்தைச் சுழித்து, மயிர் சிலிர்க்கத் தேகத்தைக் குலுக்கித் தலையை ஆட்டி வாயைக் கோணவைத்து உடுக்கையை மேலும் மேலும் பலமாயடித்தான். முடிவில் மதுரை வீரன் ஏதோ குறையினால் தன்மீது வாவில்லை யென்று நடித்து உடுக்கைக் கீழே வைத்து விட்டான்.

பூசாரிகள், அதிகத் துன்பமடைந்து வந்தவர்களுக்குக் குறிபார்க்கும்போது, அவர்கள் மனக்குழப்பத்திற்குத் தகுந்தபடி 'அவர்கள் மீது குற்றம் பலமாயிருப்பதால் தம் மீது ஒரு சாமியும் வாவில்லை' என்று சொல்லி முடிவில் தங்களுடைய பிரயாசையால் ஒரு தெய்வம் வந்து குறிசொல்வதாக நடிப்பது வழக்கமாதலால் அந்தப்படியே செய்யப் பகவதியும் அடிப்போட்டுக் கொண்டான். இதனால் அதிகத் துட்டுப் பறிக்கலாமென்பதும், பின்பு, தான் நடத்த உத்தேசித்திருக்கும் காரியத்துக்குச் சௌகரிய முண்டாகு மென்பதும் அவனுடைய கருத்து.

இவை நிற்க, மேற்கண்டவாறு உடுக்கையைக் கீழே வைத்தவுடன் கோடங்கி, சுப்பையனைப்பார்த்து, "என்ன

அண்ணே! உடுக்கைத் தட்டு முந்தி ஓடிவருகிற குறிமுகத் துத் தெய்வங்கூட மாறிப்போச்சு; உன்னை ஏதோ ஒரு துஷ்ட தேவதை பிடித்துக் கொண்டு இவ்வாறு வருகிற தெய்வத்தைத் தடுக்கிறதென்று நான் நினைக்கின்றேன்” என்றான். இதைக் கேட்டு,

சுப்பையன்:—“என்ன அண்ணே! ‘பிர்மா நினைத்தால் ஆயுசுக்குப் பஞ்சமாமா ?’ நீ ஒரு தெய்வத்தை வா வழைக்கவேண்டுமென்று நினைத்தால் அஃதுன்னால் முடியாமலும் போகுமா ? ஒருதெய்வம் வாாவிட்டால் நீ மற்றொரு தெய்வத்தையாவது வாவழைத்துவிடு வாய்; இது வாாவிட்டால் நீ இன்னமொரு தெய்வத் தைக் கூப்பிட்டுக் கேட்டுப்பாரே; ஏதாவது வந்து நடந்திருப்பதைச் சொன்னாலல்லவா அது நமக்குத் தெரியும்; வேறே பிசாசுக்கோளாறு யிருந்தாலும் நாம் அதற்குத் தக்க பரிகாரம் செய்வோம்”

முத்துக்கருப்பி:—“ நீங்கள் இராக்காயி அம்மனைக் கூப்பிடுங் கோ; எந்தப்பிசாசு தடுத்தாலும் அது அந்தப்பேயை ஒரேதள்ளாகத் தள்ளிப்போட்டு வந்துவிடும்; நடந்த சங்கதிகளையும் ஒளிக்காமல் சொல்லிப் போடும் ”

மேற்கண்டவாறு இருவரும் சொன்னவுடன், கோடங் கியின் சிஷ்யர்களாகிய சொக்கன், பெரியண்ணன் ஆகிய இருவரும், “ சுடலைமாடனைக் கூப்பிடலாம்” என்றார்கள்.

எல்லாருடைய அபிப்பிராயத்தையும் மலையாள பகவதி கேட்டு, “நல்லது; நீங்கள் சொல்கிற தெய்வங்களைப் பின் கூப்பிடலாம்; இப்போது நான் அழகர் கோவில் பதினெட் டாம்படிக் கருப்பணசாமியைக் கூப்பிட்டுப் பார்க்கிறேன் ” என்று நெடுநேரம்வரை வருந்தி அதைக் கூப்பிட்டுப் பார்த் தான்; அது வாவில்லை; பின், முத்துக்கருப்பி சொன்ன

இராக்காயி அம்மனைக்கூப்பிட்டான்; அந்த அம்மன் இருந்த விடத்தை விட்டுச் சிறிதும் அசையவில்லை; அதன்மேல் சிஷ்யர்கள் சொன்னபடி சுடலை மாடனை அழைத்தான்; அந்த மாடனும் படுத்துக் கொண்டான். பின்னும் கோடாங்கி, அதிக ஊக்கத்தோடு தனக்கு எத்தனை தெய்வங்கள் தெரியுமோ அத்தனை தெய்வங்களையும் கூவிக் கூவிப்பார்த்தான்; ஒன்றும் வரவேயில்லை. இதைவாசிப்பவர்கள், அந்தத்தெய்வங்கள் இயற்கையில் வரவில்லை யென்று நினைக்கவேண்டாம்; கோடங்கி அவை வரவில்லை யென்று அங்கிருந்தவர்கள் நம்பும்படி ஒரு நடிப்புச்செய்கையைச் செய்தான். முடிவில் அவன் மிகவும் அலுத்துப் போனவன்போல் உடுக்கையைக் கீழேவைத்துவிட்டுக் கொட்டாவி விட்டுக்கொண்டு, "என்ன ஒன்றும் வரவில்லையே! எல்லாம் படுத்துப் போச்சே; இங்கே எந்த எச்சிப்பிசாசு குடியிருக்கிறதோ தெரியவில்லையே" என்று மயங்கினான்; சுப்பையன் முதலியோர் முகவாட்ட மடைந்தார்கள்.

அந்தச் சமயத்தில் பூசாரி பகவதியாசாரி ஆகாயத்தைப் பார்த்துச் சிறிதுநேரம் யோசித்துக்கொண் டிருந்து, எதையோ கண்டறிந்தவன்போன்று முகமலர்ந்து, "நான் இப்போது மதிகெட்டுப்போனேன். எனக்குச் சமயத்தில் கைகொடுக்கும் வீரபத்திர சாமியைக் கூப்பிட மறந்துவிட்டேன்; எது எப்படியிருந்தாலும் அது தடையில்லாமல் வரும்; அதை இப்பொழுது நான் கூப்பிடுகிறேன்" என்று தக்க வஸ்துக்களை அதற்கு நிவேதனஞ்செய்து அதனை வணங்கி மீண்டும் உடுக்கையெடுத்து உக்கிரமாய்த் தட்டி நெடுநேரம் வருந்தி அந்த வீரபத்திரனைக் கூப்பிட்டான். அதன்மேல் அவன், 'இனிமேலும் காலத்தை வீணாக்கக் கூடாது; சாமிவந்ததாக நடித்துக் காரியத்தை நடத்த வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டான். உடனே

வீரபத்திரசாமி அதிகக் கஷ்டப்பட்டுத் தன்மேல் வந்து விட்டதாக நடிக்கத் தொடங்கிவிட்டான்.

அவ்வாறு தொடங்கியதும் அவன் முள்ளம்பன்றி தன் தேகத்திலுள்ள முட்களை விரித்துக் கொண்டதுபோல தேகத்தைச் சிலிர்த்துக்கொண்டு இரண்டு கைகளாலும் மார்பிலும் தரையிலும் ஓங்கியடித்து, இடிபோல பெருஞ் சத்தமிட்டு, வாயையும் உதட்டையும் நெளித்து, தலையைக் கோணவைத்து, பற்களை நெறநெற வெனக் கடித்துக் கண்ணைச் சிமிட்டி, புருவத்தை நெரித்து, தலைமயிரை விரித்துப் போட்டு, அங்கே உள்ள எச்சிப் பிசாசுகளை அடித்துத் துரத்துவதுபோல நான்கு பக்கத்துச் சுவர்களிலும் ஓடிச் சாடி, தேய்ந்த துடைப்பத்தை யெடுத்துத் தரையிலடித்துக் கொண்டு வாசற்படி வரையிற்போய்த் திரும்பிவந்து உட்கார்ந்து சுப்பையனைப்பார்த்து, "அப்பாமகனே! என்னை வேண்டியழைத்த விருப்பமென்ன சொல்லு" என்று வீர பத்திரசுவாமி கேட்பதுபோலவே கேட்டான்.

சுப்பையன் உடனே எழுந்து அவன்முன் தன்மனைவியோடு அடியற்ற மரம்போல சாஷ்டாங்கமாகத் தரையிற் சாய்ந்து எழுந்துநின்று "எங்களை ஆண்டவனே! அடிமைக்கு இவ்வித துன்பங்கள் வந்தவழியை விவரமாக நீ எடுத்துச் சொல்லவேண்டும்" என்று வேண்டினான்.

நடிப்பாய் வந்த வீரபத்திரசாமி, அவ்வாறு கும்பிட்டு விழுந்து எழுந்து நின்ற சுப்பையனைப் பார்த்து, ஓங்கி தலையசைப்பதுபோல ஆட்டிக்கொண்டு, "மகனே! நான் கயிலாசமலையிலே பரமசிவக்கடவுள் பக்கத்தி லிருக்கும்போது எனது அருமைப் புதல்வன் பூசாரி மலையாளபகவதி, மன திரங்கிக் கூப்பிட்ட சத்தம் என் வலக்காதில் விழுந்தது; அவ்வாறு விழுந்தவுடனே, நான் என்பிள்ளைகளாகிய உங்கள் துயர்தீர்க்க எழுந்திருந்து, நான் புறப்பட்டதை 'பார்வதிக்

குஞ் சொல்லாமல் பாமனுக்குஞ் சொல்லாமல், நற்கணங்கள் தங்களுக்கும் நந்திக்குங் கூருமல், காற்றினு மிக்க கடிய தொரு வேகங்கொண்டு, மனத்தினு மிக்க மகாவேகந் தன்னைக்கொண்டு, தவறி விழுந்தவென்றன் தலைமுடியு மெடுக்காமல், நழுவி விழுந்த வென்றன் நல்லணியு மெடுக்காமல், மேலே பறந்தவென்றன் வேஷ்டியையு மெடுக்காமல், சிவ கணங்க ளெனையழைத்தும் திரும்பி நான் பாராதென், காலி டறி யெனக்குவந்த கஷ்டங் கருதாமல், தென்றிசையை நோக்கித் தீரமுடனேடிவந்து, சப்தநதிதாண்டிச் சாகாங்களுந்தாண்டி, மதுரை புகுந்து வளமான தெருக்கடந்து, இங்கேயிருந்த எச்சிப்பேய் களைத்தூரத்தி, உன் வீட்டில் வந்து உட்கார்ந்தேன் என்மகனே, சங்கடம் நீ கேட்டதனுல் சாற்றுகிறேன் நான்மகனே, உள்ளது உள்ளபடி உரைக்கிறேன் கேள்மகனே, மறைக்காமலிங்கே வழுத்துகிறேன்கேள்மகனே, எள்ளுக்காய் பிளந்ததுபோல் இசைக்கிறேன் கேள்மகனே, தேங்காய் உடைத்ததுபோல் செப்புகிறேன் கேள்மகனே, புலவாது வாக்குப்போல் புகலுகிறேன் கேள்மகனே, ஆதிமுதல் அந்தம்வரை அழகாகச் சொல்லுகிறேன், உனதுகுலதெய்வம் உண்மையுள்ள தெய்வமப்பா, அதன் பலத்தைக்கொண்டு நீ ஆதியிலே இங்கு வந்து, மனைவிமுத்துக் கருப்பியுடன் மகிழ்வாகக் குடியேறி, அரண்மனையில் சேவகனு யமர்ந்துநெடு நாளாக, சம்பாத்தியம் புரிந்து தலைமைச்சேவகனுகி, வாழ்ந்துவந்தா யந்நாளில் மகனே நீ செருக்கடைந்து, சில நாட்களுக்குமுன்னே தீனரண்மனையின், வாசலிலே நின்றங்கே வந்தவரைத் தடுத்தவரின், காசுபறித்துக் கலகங்களைநடத்தி, வீரமுடனிருந்தாய் விகடக்குருசாமி, அரண்மனைக்குட் சென்றிட நீ அவனைத் தடுத்துடனே, திருப்பிவிட்டாய் அவன் கோபம் செய்து

12

போய் விரைவிலுன்னை, மடிக்கநினைத்து மலையாள மந்திரத்தால், பலபேய்கள் வந்துன்னைப் பற்றிடச்செய்தா னதன்மேல், வசைபாடு மோர்புலவர் வந்தாரே நீ யவரைச், சினங்கொண்டு பேசித் திருப்பிவிட்டா யன்னவரும், மனக்கொதிப்போடுன்மேல் வசைபாடி யோடிவிட்டார், அவர் வாக்கினாலுமுனை அடுத்த பேய்களினாலும், உன்றனக்கு நித்தம் வந்த ஊர் நிந்தையாலுமுன்றன், குலதெய்வதோஷம் வந்து கூடியதாலும் கிரக, பெருந்தோஷம் நேர்ந்த பிழையாலும் சீக்கிரத்தில், நீ தொலையும்நாளும் வந்து நேர்ந்துவிட்டதாலு மெமன், உன்னுயிரைப் போக்க உரிமையுடனே நினைத்து,வரும் நாளைப்பார்த்து மகிழ்ந்திருப்பதாலு மிங்கே, சிலநாட்களுக்கு முன்னே தீமையுன்பால் வாத்தொடங்கித், தேள்வந்து கொட்டவுன்மேல் தீப்பற்றிட நீயும், மீசையிழந்து வெளியேறிப் பல்விழந்து, உத்தியோகந் துறந்து ஒருகால் பிசகலுற்று, சிரசிலே காயமுற்றுத் தேவடியாள் நிந்தைகொண்டு, கடன்காரர் துன்பக் கவலைகொண்டே யுன்மனைவி, பிணியால் வருந்தப் பெரியவொரு வீடிடிய, வீட்டடிமை மாண்டிட நீ விதை விதைக்கப் போகையிலே, சாவோலை யுன்முன்வாத் தள்ளா விருந்துவா, உன்மாடிறந்திட நீ உற்ற இழவுக்காகச், சிவகெங்கை போகையிலே சீறியொரு நாகம், ஓங்கி யுனைக் கடிக்க உடன் நீ திரும்பிவந்து, வீட்டிலே சேர விருப்பமுள்ள வுன் குழந்தை, இறந்துவிட வேயின்னும் எண்ணிலடங்காத் துயர்கள், வந்துன்னை யென்மகனே வாட்டிவிட்ட வாகையினால், குலதெய்வங்கொண்டமனக் கோண லெல்லாந்தீர்ந்திட நீ, பூசனையதற்குச்செய்து பொறுமையுட னதையழைத்து, மன்னிப்பதனிடத்தில் வணங்கிக்கே ளென் மகனே, குருசாமி யுன்மேல் குறித்தேவிய பேய்கள், உனக்குச் செய் தீமை யொதுங்குதற்கு மோர்புலவர், சாபத்தா

லுங்கிரக சாரத்தாலும்பெருகி, உனக்கு வந்த சங்கடங்கள் ஒழிவதற்கு உடனே நீ, தக்க கழிப்பென்ற சாந்தியொன்றைச் செய்துவிடு, உனக்கு வந்த எமவாதை ஒதுங்குதற்குப் பொன்தானம், கோடாங்கி தன்னைக் கொண்டே நீ செய்துவிடு, இவ்வளவுதான் மகனே என்கடமை நான் போறேன்" என்று வசனப்பாடலாய் முன் நடந்தது பின் நடப்பது மேல்நடக்க வேண்டியது ஆகிய எல்லாவற்றையும் பூசாரியின் எண்ணத்துக்கு அனுசரிப்பாகச் சொல்லிப் போகத் தொடங்கிற்று. இங்கே நடந்த சங்கதிகளெல்லாம் பூசாரிக்குத் தெரியுமாகையால், தெய்வம் வந்ததாக நடித்த அவன் தாராளமாகச் சொல்வதற் கேதுவாயிற்று.

கோடாங்கியிடம் குறிகேட்கும் பேதைகள், அவன் மேல் வந்த தெய்வம் விஷயங்களையெல்லாம் சொல்லி முடித்தவுடன், தங்கள் தங்கள் குலதெய்வத்தின் பெயரை அறிந்து சொல்வது எந்தத் தேவதைகளாலும் முடியாதென்றும், கோடங்கியின்மேல் வந்த தேவதை அதைச் சொல்லிவிட்டால் மெய்யானதாகுமென்றும் கருதிக் கோடாங்கியின்மேல் வந்த தெய்வத்தின் வல்லமையைப் பார்ப்பதற்கு, அதனிடம் "நீ எங்கள் குலதெய்வத்தின் பெயரைச் சொல்லிவிட்டுப்போ" என்று கேட்பது வாடிக்கை. அஃதப்படியிருந்தும் சுப்பையன் அதை, கோடாங்கியின்மேல் வந்த சாமியிடம் கேட்க மறந்துவிட்டான். குறிகேட்பவர்க்கு அஃதொரு பெருங் குறையாகுமாதலால், முத்துக்கருப்பி, அப்படி அதை அச்சமயத்தில் கேட்கத்தவறிய அச் சுப்பையனைக் கோபித்துவிட்டு, கோடாங்கியின்மேல் நடிப்பாக வந்து மேற்கண்டபடி போகத்தொடங்கிய வீரபத்திர சுவாமியைப் பார்த்து, "எங்களை ஆண்டவனே! நீ சீக்கிரம்போய் விடக்கூடாது; வந்தது வந்தாய்; சொல்லவேண்டியவற்றையெல்லாம் சொன்னாய்; ஆனாலும், நீ வந்தது மெய்யென்று

காட்டுவதற்காக எங்கள் குலதெய்வத்தின் பெயரைச் சொல்லிவிட்டுப் போகவேண்டும்; இதிலேதான் உன்னுடைய வல்லமைதெரியும்" என்று வெகு விநயமாகக் கேட்டுக்கொண்டாள். அச்சமயத்தில் அவள் அவ்வாறு அக்காரியத்தில்சோர்வுறுமலிருந்ததற்காகச் சுப்பையன் அவள்மீது மிகவும் சந்தோஷத்தை யடைந்தான்.

சுப்பையனுடைய குலதெய்வத்தின் பெயர், பகவதி பலமுறை குறிபார்க்கும் போதெல்லாம் சொல்லிச் சொல்லி அவனுக்கு ஞாபகத்திலிருந்தது. ஆயினும், அந்த விஷயம் சிறிது கஷ்டமுள்ளதுபோல் அதைக் காட்டி முடிவில் பெரும் பிரயாசையுடன் சொல்வதுபோல் நடிப்பது பூசாரிகளுடைய இயற்கையாதலால் அந்தப்படியே இவனும் அதைச் சொல்வதற்குச் சிறிது கஷ்டத்தை யடைபவன் போ லபிநயித்து முடிவில் "மொட்டைக் கோபுரத்து முனி" என்று தன்மீது வந்திருக்கும் வீரபத்திரசுவாமி சொல்வதுபோலச் சொல்லிவிட்டான். அதைக் கேட்டவுடனே சுப்பையனும், அவன் மனைவியும், "இது மெய்யான தெய்வம்" என்று சந்தோஷ சாகரத்தில் மூழ்கினார்கள். பகவதியின்மேல் வந்த சுவாமியும் போய்விட்டது; பூசாரியும் உடுக்கையைக் கீழே வைத்துக் கொட்டாவி விட்டான்.

இந்தப் பூசாரிகள் தங்கள்மீது சுவாமி வந்து விட்டதாக நடித்துப் பாமரர்க்குக் குறிசொல்லும்போது, தெரிந்த விஷயங்களைச் சொல்வதில் தங்களுக்குச் சங்கட மில்லாதிருக்குமாதலால் அவற்றைமாத்திரம் சொல்லும்போது மிகவும் உக்கிரத்தோடு சுவாமி வந்துவிட்டதாக நடித்து வீராவேசத்துடன் கூறுவார்கள்; தெரியாத விஷயங்களை அரைக்கால் வார்த்தை, கால் வார்த்தை, அரை வார்த்தை, முக்கால் வார்த்தையாகச் சொல்லி கேட்போர் அதற்குச் சம்மதிப்பதையும், சம்மதிக்காததையும்

அவர்களின் முகக்குறிப்பினு லறிந்து அவர்கள் சம்மதிக்கும் வார்த்தைகளையே தொடர்பாகக் கொண்டுபோய், அவர்கள் குறித்ததில் முக்காற்பாகம் வந்ததும், அவர்கள், "அட இழவு தெய்வமே! உன் வாயில் முக்கால்வாசி வந்து விட்டதே; மீதியையும் சொல்லுவே" என்று கூற முழுப் பாகத்தையும் சொல்லிப் புகழ் பெறுவார்கள். தமக்குத் தெரியாத சிலருடைய குலதெய்வங்களின் பெயரைச் சொல்லும்போதும் இந்த முறையைத்தான் அனுசரிப்பார் கள். அவர்களுக்குப் பின் நடக்கும் சங்கதிகளைச் சொல்லும் போது எந்தவிதமாகவும் சொல்லலா மாகையால் வாய்க்கு வந்தவற்றையெல்லாம் சொல்லித் தலையசைப்பார்கள். இவ் வாறு பின் வருவதைச் சொல்லும்போதுதான் சுவாமி தங் கள்மீது மும்முரமாய் வந்து விட்டதாக நடிப்பார்கள். இதற்குமுன் சொல்லியபடி தெரியாத விஷயங்களை எவ்வாறு சொல்லிப் பூர்த்தி செய்வார்களென்றால், "முனிச்சாமி" என்ற ஒரு குலதெய்வத்தின்பெயர் கோடாங்கிக்குத் தெரி யாமலிருந்து, அதை அவன் சொல்லவேண்டிய சமயம் நேர்ந்தபோது, பல தேவதைகளுடைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பாதி வெளியில் வந்தும் வாாமலு மிருக்கும் படி அவற்றை "ம-வீ-ச-தா-" என்று சொல்லி நீட்டுவார் கள். அவற்றுள் முனிச்சாமி பெயரின் முதலெழுத்தாகிய 'மு—' வாவில்லையாதலால் அவற்றைக் கேட்டோர் அதிருப் தியைக்காட்டி முகத்தைச் சுழிப்பார்கள். அதனால் குறித்த பெயர் வாவில்லையென்று பூசாரிகள் தெரிந்துகொண்டு, மே லும் பலபெயர்களின் முதலெழுத்துக்களைக் கூறுவார்கள். அவ்வாறு பன்முறை கூறும்போது எப்படியாவது-மு-என்ற எழுத்து அவர்கள் வாயில் வரும். அது வந்தவுடன் எதிரி லிருப்பவர் எல்லோரும் முகமலர்ந்து, "ஊம், ஊம், நீ ஏன் விழுங்குகிறாய்; சொல்லு, சொல்லு; வந்துவிட்டதே, வந்து

விட்டதே; நீ மனஸ்தாபமில்லாமல் சொல்லு" என்று அத் தெய்வம்; அப்பெயர் தனக்கு தெரிந்திருந்தும் அதைச் சொல்வதற்குத் தடை செய்வதாகவும், அதை மறைக்காமற் சொல்லும்படி அதனிடம் தாங்கள் கெஞ்சிக் கேட்பதாகவும் மூடத்தீர்மானங்கொண்டு தங்கள் வாயினாலேயே அந்த 'முனிச்சாமி' என்ற பெயரை வெளிப்படுத்திவிடுவார்கள். இவ்வாறு வெளிப்பத்டுதியதன் மூலம் பூசாரிகள் அதைத் தெரிந்துகொள்வார்கள். அவ்வாறு அறிந்துகொண்டவுடன் அவர்கள் மேலும் சுவாமி அதைச் சொல்லத் தடை செய்வதுபோல அபிநயித்து முடிவில் குளறிக் குளறிச் சொல்லி விடுவார்கள். இவ்வாறு சொன்னவுடன் குறிகேட்போர், "அப்பா! இந்த இழவு தெய்வம் இந்தப் பெயரைச் சொல்லுவதற்கு இவ்வளவு நோத்தைப் போக்கி விட்டதே" என்று சொல்லி அதனைப் புகழ்ந்து கொண்டாடுவார்கள். இந்தப்பேதைகள், "பூசாரிகளே எதையும் சொல்லட்டும், நாம் பேசாதிருந்து அவர்களின் சாமர்த்தியத்தைப் பார்ப்போம்"என்று வாயை மூடிக்கொண்டிருப்பதில்லை. எப்படியாவது அவர்களின் வாய்மொழியால் தங்கள் குலதெய்வத்தின் பெயரைக்கேட்டுத் திருப்தியடைய வேண்டுமென்னும் மூடக்கருத்துக் கொண்டு தங்கள் வாயினாலும் முகத்தினாலுமே தாங்கள் குறித்ததை வெளிப்படுத்தி அதையே அவர்களும் சொல்லக்கேட்டு ஆனந்திப்பார்கள். மேலும் பூசாரிகள் பலமுறை இந்தத் தந்திரத்தின்படி தங்கள் குல தெய்வங்களின் பெயர்களைச் சொல்லித் தெரிந்துகொண்டிருந்தாலும் மீண்டும் அவர்களிடம் குறி கேட்கும்போதெல்லாம் மூடத்தன்மையால் புது புதிதாகக் கேட்பது வழமை. "நாம் சொல்வதைத் தெரிந்துகொண்டுதானே இந்தப் பூசாரிகள் சொல்லுகிறார்கள்; இதிலென்ன பிரயோசனம்?" என்று சிறிதேனும் இந்த அறிவீனர்கள் கருதுவ

தில்லை. இவர்கள் கோடங்கி பார்க்கும் விஷயத்தில் இப்படியே எல்லாக் காரியங்களும் இவர்களிடம் மூடமாகவே நடக்கும். இந்தக் கூட்டத்தில் நல்ல அறிவாளிகள் போயிருந்து இவர்களுடைய செய்கைகளைப் பாத்தால் அவை மிகவும் வேடிக்கையாயிருக்கும். இங்கே கூறியவேடிக்கை விஷயங்கள் தென்னாட்டில் மிகுதியாக நடப்பதை இப்பொழுதும் காணலாம். இவ்விஷயங்களை நேரில் பார்த்தோ ரெல்லோரும் இங்கெழுதியிருப்பதைப்பற்றி ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் அடைவார்கள். வெளிநாட்டில் சஞ்சாரம் செய்து ஒவ்வொரு இடத்திலும் நடக்கும் விசேஷங்களைப் பார்த்தறியாமல் ஓர் நகரத்திலேயே இருந்து கொண்டு அங்குத் தாம் கண்டவைதாம் உலகத்திலெல்லா மிருக்குமென்றெண்ணியுலாவும் சிலர் "இக்கதையில் என்ன என்னவோ உபயோகமற்ற விஷயங்களெல்லாம் எழுதப்பட் டிருக்கின்றன" என்று குறை கூறுவார்கள். இவர்களுக்குத் தெய்வந் தான் புத்தி கூறவேண்டும். இவ்வாறு சிறுகதைகள் மூலமாக ஒவ்வொரு இடங்களிலும் நடக்கும் விசேஷங்களையெடுத்து ஆங்காங்கே விரித்துக்கூறிப் பாமாருக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின் இடையில் இவ் விஷயங்களை நான் விரித்தெழுதினேன். இவற்றை விவேகிகள் வெறுக்காரென்பது திண்ணம்; அவர்களின் நல்லபிப்பிராயம் இவற்றிற்குக் கிடைக்கவேண்டு மென்பதே எனதெண்ணம்.

இது நிற்க; மேற்குறித்த ஒழுங்கீன முறைப்படியே பூசாரி, தெய்வம் வந்ததாக நடித்துக்கூறிய எல்லாவற்றையுங்கேட்டுச் சுப்பையனும், முத்துக்கருப்பியும் ஆனந்தமடைந்தபின், "அடடா! வீரபத்திரசுவாமியே சரியான தெய்வம்; இது நடந்த சங்கதிகளையெல்லாம் மறைக்காமல் பிட்டுப் பிட்டு வெளியாக்கி வைத்துவிட்டதே; நமது குல

தெய்வத்தின் பெயரைச் சொல்ல எந்தத் தெய்வமும் தடுமாறும்; இது அப்பெயரை மயக்கமில்லாமற் சொல்லிவிட்டதே” என்று பலவாறு அத்தெய்வத்தைக் கொண்டாடினார்கள்.

பின்பு பூசாரியாகிய பகவதி, சுப்பையனைப் பார்த்து, “என்ன அண்ணே! நமது வீரபத்திரசுவாமி சொல்லியபடி உன்னிடம் இவ்வளவு சிக்கலிருக்கும்போது சுகமெங்கேயிருந்துவரும்? இப்போது எல்லாச் சங்கதிகளையும் நாம் தெரிந்துகொண்டோம்; இனி நடக்கவேண்டியதென்ன?” என்று கேட்டான். அதற்குச் சுப்பையன், “வீரபத்திரசுவாமி சொன்னவைகளெல்லாம் சரிதான்; அது சொல்லியபடியே எல்லாச் சங்கதிகளையும் நாம் நடத்துவோம்; ஆனாலும், குலதெய்வத்தினுடைய மனநோக்கம் எப்படியிருக்கிறதென்று அறிவதற்கு அதையும் கூப்பிட்டு அதன் வாய்ப்பிறப்பையும் அறிந்துகொள்ள வேண்டாமா?” என்று கூறினான். உடனே பூசாரி, “அது சரிதான்; உன்னுடைய மொட்டைக் கோபுரத்து முனியோ மூட்டுப்பயல் தெய்வமாச்சுதே; அது வரும் வேகத்தில் என் உடுக்கையெல்லாம் உடைத்துத் தூளாக்கிவிடுமே;எதிரே நிற்பவர்களையும் கண்டபடிசாடுமே; அது விஷயத்தில் எனக்கு மிகவும் பயமாயிருக்கிறதே” என்று பின்னாலே தான் செய்ய உத்தேசித்திருக்கும் ஒரு காரியத்துக்கு அனுசரிப்பாகச் சொல்லி அவனைப் பயமுறுத்தினான். தங்கள் தங்கள் குலதெய்வம் மூட்டுத் தேவதையென்று எவரும் சொல்வது இத்தகைய பேதைகளுக்கு ஒரு பெருமையாதலால், சுப்பையன், அந்தப் பூசாரி அவ்வாறு பயமுறுத்தியதற்குப் பயப்படாமல், தன் தெய்வம் மூட்டுத் தெய்வமென்று அவன் சொன்னதற்காக மிகவும் சந்தோஷித்து அவனிடத்தில், “பூசாரி அண்ணே!

நீ சொன்னபடி என் குலதெய்வமாகிய மொட்டைக் கோபுரத்து முனி முரட்டுத் தெய்வந்தான்; அதனிடத்தில் எந்தத் தேவதையும் எதிரிடல் முடியாது; அது எத்தனையோ சந்தர்ப்பங்களில், நான் எச்சிப்பிசாசுகளின் கையில் அகப்பட்டிருக்கும்போது வந்து அவற்றை ஒரே அடியாக அடித்துத் துரத்தி என்னைக் காப்பாற்றியிருக்கிறது; அதனாலேயே நான் மிகவும் சுகமாக வாழ்ந்து வந்தேன்; அது எப்போதும் எனக்குக் கை கொடுத்துவந்த தெய்வந்தான்; இப்பொழுது என்னமோ இடக்குச் செய்துகொண் டிருக்கிறது; அது சரியாய் மனங்கோணுதிருந்தால் எனக்கு இவ்வளவு கஷ்டம் நேர்ந்திருக்க மாட்டாது; ஆனால், அதன்மேல் குற்றமில்லை; என்மீதுதான் குற்றம்; இரண்டு வருடங்களாக நான் அதைத் தேடவில்லை; அதுதான் என்னசெய்யும்; என் குற்றத்தைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு இப்போது சகிக்க முடியாமல் எச்சிப் பிசாசுகளுக்கும், கெட்ட கிரகங்களுக்கும் என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டது; நீ எதற்கும் அதனைக் அழைத்துப்பாரு; அது வந்தாலும் கொஞ்சம் கோபத்தோடேதான் வரும்; ஆனாலும் பாதகமில்லை; அது என்னசெய்தாலும் இந்தச்சசமயம் நாம் அதன் கொடுமையைப் பொறுத்துக்கொள்வோம்" என்று கூறினான். இவற்றைக் கேட்கவே பூசாரி, தன்னுடைய நோக்கப்படியே அவன் சொன்னதற்காக மிகவும் சந்தோஷித்து, தான் உத்தேசித்ததை நிறைவேற்றி விடலாமென்னும் உறுதிகொண்டு, "அப்படியானால் இதோ மொட்டைக்கோபுரத்து முனியை அழைக்கிறேன்" என்று சொல்லி, அதற்குவேண்டிய தூபதிப நைவேத்தியங்களெல்லாம் செய்து, உடுக்கைக்கும் சாம்பிராணித்தூபம் திருப்பித் திருப்பிக்காட்டி அதனைக்காய்ச்சி அதை, "டுண் டுண்" என்னும் சப்த முண்டாகப் பலமுறை தட்டிப் பார்த்து முடிவில் அந்த உடுக்கைத் தூக்கித் தலைக்குமேல்

வைத்துக் கும்பிட்டுவிட்டு முனிச்சாமியைக் கூப்பிடத் தொடங்கினான்.

அப்படி அழைக்கத்தொடங்கி,

"மாமதுரைக் கோவில் வடக்குக்கோபுரந்தனிலே
வாழ்ந்திருக்கும் பெருமுனியே மைந்தன் முன்னே வா வா வா—
அடங்காப் பொலியெருதே ஆதிசடாமுனியே [டுண்டுண்டுண்
அடிமைதனைக் காக்க அப்பனே வா வா வா—டுண்டுண்டுண்
ஆதிமுத லுன்னை யடுத்தகுடிப் பிள்ளைகளை
ஆதரிக்க மாமுனியே அன்புடனே வா வா வா—டுண்டுண்டுண்
என்றுமுனை நம்பி யிருக்கின்ற சுப்பையன் மேல்
என்னகுற்ற மிருந்தாலு மெண்ணாமல் வா வா வா—டுண்டுண்டுண்
குற்றமிருந் தாலும்நீ குலதெய்வ மாகையினால்
மற்றபேய்க் கிடமின்றி வா வா வா—வா வா வா—டுண்டுண்டுண்"

என்ற அம்மானை மெட்டுப் பாட்டுக்களைப்பாடி உடுக்கையை ஓங்கி ஓங்கி யடித்து முழக்கினான்.

பூசாரி பழைய விரோதத்தால், சுவாமிவந்து சுப்பையனை உதைப்பதுபோல் நடித்து நன்றாக உதைத்தல்.

பூசாரி இப்படியே பலவிதமாகப் பாடி உடுக்கையைத் தட்டி முனியையழைத்து நெடுநேரம்வரை அந்த முனிச்சாமி கோபித்துக்கொண்டு வாராமலிருப்பதுபோல நடித்தான். அதைக்கண்டு முத்துக்கருப்பியும் சுப்பையனும், அவன் முன்னே நின்று "எங்கள் குலதெய்வமே! நாங்கள் என்ன குற்றம் செய்திருந்தாலும் நீ அதை மன்னிக்க வேண்டும்; நீ வேறே எச்சிப் பிசாசுகள் எங்களைத் தொடரும்படி அவற்றிற்கு இடங்கொடுக்கலாகாது; இங்கே நீ வந்து உன் மனதிலிருப்பதைச் சொல்லவேண்டும்; இனிமேல் நீ என்ன சொன்னாலும் நாங்கள் அதைச் செய்கிறோம்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண் டிருந்தார்கள். அவர்கள் அவ்வாறு கெஞ்சியதன்மேல், கோடாங்கி பகவதியாசாரி, "இனிமேலும் நாம் தாமதிக்கக் கூடாது"

என்று கருதி உடனே மொட்டைக் கோபுரத்து முனி, மும்முரமாய் வருவதாக நடிக்கத்தொடங்கி விட்டான். அடடா! நாம் என்னென்று சொல்வோம் அந்தப் பூசாரி, தன்மேல் சாமிவந்ததாக நடித்த விதத்தை! அவன் உடுக்கையை விசை கொண்டு தட்டினான்; முகத்தைச் சுழித்துக்கொண்டு சீறினான்; பற்களை நெறநெறவென்னும் சப்தமுண்டாகக் கடித்தான்; மீசைகளை முறுக்கினான் உதட்டை மடித்துக் கடித்தான்; கண்ணைச் சுழற்றிச் சுழற்றி விழித்தான்; தலையை விரித்துப்போட்டுக்கொண்டு சுற்றிச்சுற்றி ஆடினான்; உடுக்கையைக் கீழே வைத்துவிட்டு இரண்டு கைகளினாலும் தரையில் மோதியடித்தான்; சாம்பிராணிபோட வைத்திருந்த நெருப்பை அள்ளிக் கையால் பிசையப்போவதுபோல அதனருகில் கையைக் கொண்டு போனான்; (பூசாரிகள் சுவாமி வந்ததாக நடித்துக் கோபங்கொண்டு செய்யத்தகாத காரியங்களைச் செய்யப் புகும்போது பக்கத்திலிருப்பவர்கள் சுவாமிக்குச் சமாதானஞ் சொல்வதுபோல், "தெய்வமே! மன்னிக்கவேண்டும்" என்று கையைப்பிடித்துக் கொள்வது வழக்கம்; அதைப் போலவே சுப்பையன் இச்சமயத்தில் பூசாரி கையைப் பிடித்துக்கொண்டான்.) மேற்கண்டவாறு பூசாரி தடபுடல் செய்தவுடனே, சுப்பையனும் முத்துக்கருப்பியும், "நம்முடைய குலதெய்வம் கோபத்தோடு வந்துவிட்டது; அதற்குச் சமாதானஞ் சொல்லவேண்டும்" என்று கருதி உடனே கோடாங்கியின் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, "எங்களை நெடுங்காலமாகக் காப்பாற்றி வந்த தெய்வமே! நீ எங்கள்மீது கோபப்படக் கூடாது; நாங்கள் செய்தது தப்பிதந்தான்; நீ அதை மன்னித்து எங்களை ஆட்கொள்ளவேண்டும்" என்று முனிச்சாமியை ஸ்தோத்திரம் செய்தார்கள்.

அப்பொழுது பூசாரி பகவதி, "இதுதான் நாம் உத்தேசித்ததை நிறைவேற்றுவதற்கு நல்லசமயம்" என்று கருதி, முன்னிலும் அதிகமாகக் கையால் தரையிலடித்து மோதிக் கழுத்திலணிந்திருந்த மாலைகளையெல்லாம் அறுத்தெறிந்து, சிம்மத்தைப்போன்று கதறி, உடுக்கையைப் படார் படாரென்னும் தொனியுண்டாக அடித்துடைத்துச் சிதறிக் கைகால்களை உதறி, நெஞ்சம்பதறி வீராவேசத்தோடு சுப்பையனை நோக்கி, "அடேபயலே! நீ இரண்டு வருடங்களாக என்னைத் தேடாமல் விட்டுவிட்டு, ஒரு மூலையில் அன்ன ஆகாரமின்றி ஒடுங்கிக் கிடந்த என்னை இப்போது எதற்காகக் கூப்பிட்டாய்? உன்னை அடியோடு தொலைக்கவல்லவா நான் கருதி யிருந்தேன்; கஷ்டம் வந்த பிறகுதான் உனக்கு என் ஞாபகம் வந்ததோ? இத்தனை நாளாக உன் எண்ணம் எங்கே சென்றிருந்தது? நீ பயமில்லாமல் என்னை எப்படிக் கூப்பிடலாம்; உன்னை நான் இலகுவில் விடுவேனு கழுதாய்" என்று கோபித்துப் புலிபாய்வது போன்று பாய்ந்து, திகிலோடு கிடந்த சுப்பையன் குடுமியைக்கெட்டியாகச் சுற்றிப் பிடித்துக்கொண்டு, மொட்டைக் கோபுரத்து முனி கோபித்து அடிப்பதாகவே பாவனைகாட்டி, அவன் முதுகில் பலங்கொண்டு திடீர்திடீரென அறைந்தும், கையை மடித்துக்கொண்டு ஓயாமல் குத்தியும், குடுமியைப் பம்பரம் போலக் கையாற் சுழற்றியும், காலால் அவனை மிதித்தும், கையால் அவன் கன்னத்திலறைந்தும், மீசையைப் பிடித்து வெடுக்கு வெடுக்கென்னும் சப்தமுண்டாக பிடுங்கியும், அவன் உடலைச் சின்னபின்னப் படுத்தினதுமின்றி, மேலும் சினங்கொண்டு அவனை விடாமலடித்தான். அப்போது சுப்பையன், தன்மீது குற்றமிருப்பதாகவும், குலதெய்வம் நியாயமாகத் தன்னைக்கண்டிக்க வேண்டியதுதா

னென்றும் மூடத்தனமாகக் கருதி, மெய்யாகவே மொட்டைக் கோபுரத்து முனி பூசாரிமீது வந்து தன்னை அடிக்கிறதென்று தீர்மானித்துக் கொண்டு அந்த அடியைச் சகிக்க முடியாமையால், "அட பாழுந் தெய்வமே! என்மீது என்னகுறை யிருந்தாலும் நீ என்னை இப்படி அடிக்கலாமா? நான் உனக்குப் பிள்ளையில்லையா? நீ இதற்கு முன் பல சமயங்களில் எவ்வளவோ கோபத்தோடு வந்திருக்கிறாய்; ஆனாலும் நான் அக்காலங்களில் உன்னிடம் இவ்வளவு அடிபட்டதில்லையே" என்று மனதிற்குள்ளாகவே நினைத்துக்கொண்டு மேலுக்கு, "எங்களை வழி வழியாக ஆண்டுவந்த மாமுனியே! என்மீது நீ கோபம் செய்யவேண்டாம்; நான் இனி உன் அடியைச் சகிக்கமாட்டேன்; இவ்வளவு அடி எனக்குப்போதும்; இனிமேல் நான் சரியாய் நடப்பேன்; நீ என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்; உனக்கு நான் இரட்டைக் கிடாய்வெட்டிப் பொங்கலிடுகிறேன்; நீ அன்னிய தேவதைகள் என்னைத் தொடர்வதற்கு இடங்கொடாமல் என்னைக் காப்பாற்று" என்று பலவிதமாகக் கெஞ்சி, தான் முனியென்று நினைத்திருக்கும் கோடாங்கியிடம் கேட்டுக்கொண்டான்; முத்துக் கருப்பியும் அவன் பக்கத்தில் நின்று, "ஐயோ! இஃதென்ன ஒருநாளுமில்லாத திருநாளா யிருக்கிறதே; இதுவரை இவர் பட்ட அவஸ்தைகளெல்லாம் போதாவென்று இப்போது குல தேவதையும் இவ்வாறு கோபங்கொண்டு இவரை அடிக்கிறதே" என்று கையை நெரித்துக்கொண்டு அவன் குற்றத்தை மன்னிக்கும்படி பூசாரியாகிய முனிச்சாமியைப் பன்முறை வேண்டினாள்.

அதன்மேல் பூசாரி, தன்மனம் திருப்தியாகும் வரை சுப்பையனை அடித்துவிட்டுப் பின்னர் அவனையும் முத்துக் கருப்பியையும் நோக்கி, "சரி! நீங்கள் எப்படியிருந்தாலும்

என் பிள்ளைகள்; நீங்கள் உங்கள் குற்றத்தை நான் மன்னிக்கும்படி என்னிடம் மிகவும் கேட்டுக்கொள்வதால் இம்மட்டோடு நான் உங்களை விட்டுவிடுகிறேன்; ஆனாலும் நீங்கள் எனக்குச் செய்த தப்பிதத்துக்காக இருபத்தைந்து ரூபாய் முடிப்புக் கட்டிக் காணிக்கை வையுங்கள்; நாளையே எனக்குச் செய்யவேண்டிய பூசையையும் செய்துவிடுங்கள்; இனிமேல் உங்களுக்கு யாதொரு குறையும் வாாமல் நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்; இப்பொழுது நான், என் இருப்பிடத்துக்குப் போகிறேன்" என்று சொல்லி முனிச்சாமி போய்விட்டதுபோல நடித்துத் தனது ஆடம்பாங்களையெல்லாம் அடக்கிக்கொண்டு சாதாரண மனிதனாகி, "அப்பா! இந்த இழவு தெய்வம் வந்து மனிதனை என்ன பாடு படுத்திவிட்டது!" என்று தானும் மிகச்சங்கடப்பட்டவன் போன்று கூறினான். உடனே சுப்பையன், அவனைப் பார்த்து, "பூசாரி அண்ணே! அது நம்மை என்ன சங்கடப் படுத்தினாலும் அதன் விஷயத்தில் எனக்குச் சந்தோஷந்தான்; கடைசியில், என்னிடத்தில் 'உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்று அது சொன்ன ஒரு வார்த்தையே நமக்குப் போதும்" என்று அவனுக்குச் சமாதானங் கூறித் தெய்வஞ் சொன்னபடியே இருபத்தைந்து ரூபாய் முடிப்புக் கட்டி அந்தக் கோடாங்கிக்கு முன்பு வைத்துவிட்டான். பூசாரி உடனே அதையெடுத்து, "முனிச்சாமிக்கு நான் இந்தப் பணமுழுவதையும் செலவிட்டு வெள்ளியினால் கண்மலாடித்து வைத்து விடுகிறேன்" என்று சொல்லி மடியிற்போட்டுக்கொண்டான். (இவன், கண்மலாடித்து வைப்பதாகச் சொன்னது ஏமாற்று; தொகையை இவனேதா னெடுத்துக் கொள்ளுவான்; இப்பொழுதுள்ள பூசாரிகளும் இப்படியே தான் மனிதரிடம் பணம் கவர்ந்து ஏமாற்றுதல் செய்வார்கள்.)

இங்கே கூறியபடி குறிகேட்க வருபவர்கள் மீது பூசாரிக்குப் பகையிருந்தால் அவர்கள் குலதெய்வம் கோபத்தோடு தன்மேல் வந்து விட்டதாக நடித்து, அவன் அவர்களை அடித்தும், அவர்கள் செய்யக் கூடாத சங்கதியை இரகசியமாகச்செய்து அது தனக்குத் தெரிந்திருந்தால், அதற்காகவே தெய்வம் கோபிப்பதாக பாவனை செய்து அதனை வெளிப்படுத்தி அவர்களுக்கு அவமானத்தை யுண்டாக்கியும் போவது அவனுக்கு வழக்கம். அந்த முறையை அனுசரித்தே மலையாளபகவதியும் சுப்பையனிடத்தில் இத்தகைய செய்கைகளைச் செய்தான். இது தவிர, தங்கள்மீது சுவாமி வந்துவிட்டதென்னும் செருக்கைக் கொண்டும் தங்களுக்குப் பிடித்த திமிரால் மூடத்தனமாகச் சிலவெறியாட்டாளர்கள் பக்கத்தில் நிற்பவர்களைக் காரணமில்லாமல் அடிப்பதும் வழக்கம். (இவ்வாறு மதுரை ஜில்லாவில் ஒரூரில் ஒருசாமியாடி மனிதர்களை அடித்தான்; அப்படி அடிக்கும் போது அங்கு நின்ற விவேகியொருவன், அவ்வாறு அடித்த பூசாரியை முன்பின் யோசியாமல் கீழே தூக்கிப்போட்டுச் சினந்தீருமட்டும் அடித்து விட்டான். உடனே பூசாரி, வெறியாட்டைவிட்டு, அவனையும் ஒன்றும் செய்தற்கியலாமல் அவமானப் பட்டு நின்றான்). பூசாரி தன் மீது சுவாமி வந்துவிட்டதாக நடித்தவுடன் அல்லது மதியீனத்தால் திமிர்கொண்டு ஆடியவுடன் அவனுடைய ஆட்டத்தைப் பார்த்து நிற்கும் அறிவீனர்கள் மெய்யாகவே அவன்மீது சுவாமி வந்துவிட்டதாகவும், அச்சுவாமியின் மனங் கோணுமல் தாங்கள் நடக்கவேண்டு மென்றும் நினைத்துக் கொள்கிறார்கள். அதனாலேயே அப்பூசாரிகள் என்ன அக்கிரமம் செய்தாலும் அவர்கள் அதைப் பொறுத்துக் கொள்கிறார்கள். இன்னும் இம்மூடக் கொள்கையைப் பற்றி எழுதுவதானால் அது ஒவ்வொரு இடத்திலும் மிக

விரிவெய்துவதோடு, சில புது நாகரீகக்காரர்கள் "அனுவசிய மான விஷயங்கள் இதில் வளர்த்து எழுதப்பட் டிருக்கின் றன" என்று குறைகூறற் கேதுவுமாகும்.

இதுநிற்க, மேற்கூறியபடி முடிப்புப்பணத்தை எடுத்து மடியிற் போட்டுக்கொண்டவுடன் பூசாரி, சுப்பையனைப் பார்த்து, "அண்ணே! குலதெய்வமும் வந்து, இருக்கும் சங் கதிகளை எடுத்துச் சொல்லிப்போய் விட்டது; இனிநாம் தாமதித்தல் கூடாது; நாளையே அதற்குச் செய்யவேண்டிய பூசையையும், உன்னைப்பிடித்த பிசாசுகளும் கிரகதோஷங் களும் நீங்குதற்குச் செய்யவேண்டிய கழிப்புச் சுற்றுதலை யும் நடத்திவிடவேண்டும்" என்றான். அதற்குச் சுப்பைய னும் முத்துக்கருப்பியும் இசைந்தார்கள். அதன்மேல் பூசாரி, அப்போது கிடைத்த தக்ஷிணை முதலியவற்றையும், உடைந்த உடுக்கையையும் எடுத்துக்கொண்டு, "இழவு முனிச்சாமி வந்து உடுக்கையையும் உடைத்துவிட்டதே" என்று சொல்லிவிட்டுத் தன் சிஷியர்களுடன் புறப்பட் டான். அவன் சொன்ன வார்த்தையைக் கேட்டவுடன், சுப்பையன், "பூசாரி அண்ணே! உடுக்கை போய்விட்ட தென்று நீ வருத்தப்படாதே; என்னுடைய குலதெய்வமே வந்து அதை உடைத்துவிட்டபடியால் அதற்கு நானே ரூபாய் தருகிறேன்; நீ அந்தப் பணத்திற்கு உடுக்கை வாங் கிக்கொள்" என்று அவனிடம் ஐந்து ரூபாயை மரியாதை யோடு கொடுத்தான். அந்தப் பூசாரி இவ்வாறு அவனிடம் பணம் பறிப்பதற்காகவே மேற்கூறிய வார்த்தையைச் சொன்னான். ஆதலால் அந்தப்பணத்தை சந்தோஷத்தோடு வாங்கிக் கொண்டு சுப்பையனைநோக்கி "அண்ணே! நீ நாளைக் காலையில் என் வீட்டுக்கு வந்தால் நாம் நாளைக்கு நடத்தும் கிரியைக் குரிய சாமான்கள் வாங்கவேண்டிய விவரத்தைப் பற்றி நான் உன்னிடம் சொல்லுகிறேன்" என்று தான் மேல்

நடத்தவேண்டிய மோசத்துக்கு அடிப்போட்டுத் தன் வீட்டிற்கு போய்விட்டான். பின்பு சுப்பையனும் முத்துக்கருப்பியும் சிறிது ஆகாரம் சாப்பிட்டுவிட்டு இளைப்புத்தீரப் படுத்துக்கொண்டு, பூசாரியால் சுப்பையன் அடி பட்டதைச் சிறிதுங் கருதாமல் தங்கள் குலதெய்வம் வந்து ஆடிப்போன சிறப்பைப் பற்றியே சந்தோஷமாய் நெடுநேரம்வரை பேசிக்கொண்டிருந்து நித்திரை போய் விட்டார்கள். இவை யெல்லாம் இரவில் அவர்களின் வீட்டுக்குள் நடந்தனவாதலால் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு இவற்றுள் ஒன்றுமே தெரியாது; அவர்கள் சுப்பையன் வீட்டில் எழுந்த உடுக்கைச் சத்தத்தைக் கேட்டு "சுப்பையன் தனக்குவந்த சங்கடங்களைத் தீர்த்துக்கொள்ளக் கோடங்கியிடம் குறிகேட்கிறான் போலும்" என்று மட்டும் பொதுவாக, நினைத்துக் கொண்டார்கள். சுப்பையனும், அவன் மனைவியும் தங்கள் காரியங்கள் ஒருவருக்கும் தெரியக் கூடாதென்றே கருதியிருந்தார்கள். இப்போதும் இத்தைய மூடச்செய்கையால் பொருளைச் செலவிட்டுத் துன்பப்படும் பேதைகள் இவ்வாறே எதையும் இரகசியமாகச் செய்வது அவர்களுடைய வழக்கம். அத்தகைய செயல்களை அவர்கள் விட்டுவிடும்படி அவர்களுக்கு விவேகிகள் புத்தி சொன்னாலும் அவர்கள் அதைக் கேட்கமாட்டார்கள்.

சுப்பையனுக்குக் கோடங்கி கழிப்புக் கழித்தல்.

மேற்கண்டவாறு உறங்கின சுப்பையனும் அவன் மனைவியும் இரவெல்லாம் மறுநாள் செய்யவேண்டிய காரியத்தைப்பற்றி நினைத்துக்கொண்டே படுத்திருந்தார்கள். விடிந்தவுடன் சுப்பையன் மாத்திரம் எழுந்து ஆவலோடு கோடங்கி குருநாதனிடம் சென்று "அண்ணே! இன்றிரவு எனக்குக் கழிப்புச் சுற்றிப்போடுவதற்கும், மற்ற காரியங்

களுக்கும் என்ன என்ன சாமான்கள் வாங்கவேண்டுமோ அவற்றை "யெல்லாம் நீ சொன்னால் நான் விரைவில் சேகரித்து வைத்துவிடுவேன்; சூரியன் அஸ்தமித்தவுடன் நாம் தாமதிக்காமல் காரியத்தை நடத்தி விடலாம்" என்றுரைத்தான். இவ்வார்த்தைகளைக் கேட்ட பூசாரி மனமகிழ்ந்து, அவனிடத்தில் "அண்ணே! நானும் உன்வரவை எதிர்பார்த்துக் கொண்டுதானிருந்தேன்; நல்ல சமயத்தில் நீ வந்தாய்; வாங்கவேண்டிய சாமான்கள் உனக்குத் தெரியாதவையல்ல; உங்கள் வீட்டில் பலமுறை இந்தக் கிரியை நடந்திருப்பதால் உன் சமுசாரமாகிய என் மதினியாருக்குக்கூட இவை தெரியும்; ஆனாலும் இன்றைக்குச்செய்யும் கழிப்பு மற்றநாட்களில் செய்தவற்றைப் போன்றதில்லை; உன்குடியை அடியோடு கெடுத்திருக்கிற பலபேய்களை நீக்கவேண்டியதாதலால் இதை மிகவும் பெரிதாகச் செய்யவேண்டும்; இதற்குச் சாமான்களும் அதிகமாக வாங்கவேண்டும்; உன்னை எட்டுப் பேய்கள் பிடித்திருக்கின்றன; அவற்றுள் வெள்ளைப் பேய் ஒன்று, கருப்புப்பேய் ஒன்று. இவை இரண்டும் முக்கியமான பேய்களாதலால் இவற்றிற்குப் பெரிய கருப்பு ஆட்டுக்கடா ஒன்றும், வெள்ளை ஆட்டுக்கடா ஒன்றும், சுத்தக் கருப்புச் சேவல் ஒன்றும், வெள்ளைச் சேவல் ஒன்றும், மற்ற சில்லறைத் தேவதைகளுக்கு ஆறு ஆட்டுக்குட்டிகளும், ஆறு சேவல் குஞ்சுகளும் வாங்கவேண்டும்; இரண்டு ஜோடி உயர்ந்த வஸ்திரங்களும், ஆறுஜோடி சாமானிய வஸ்திரங்களும் வேண்டும்; இரண்டு பெரிய பாவைகளும், ஆறு சிறிய பாவைகளும் செய்யத்தக்க பச்சையரிசிமா வேண்டும்; இரண்டு பெரிய கும்பங்களும், ஆறு சிறிய கும்பங்களும் வேண்டும்; இரண்டு பெரிய சாராயப்புட்டிகளும், ஆறு சிறிய சாராயப்புட்டிகளும் வேண்டும்; இரண்டு பெரிய ஓமங்கள் வளர்ப்பதற்கும், ஆறு சிறிய ஓமங்கள்

வளர்ப்பதற்கும் உரிய சமித்துக்கள் வேண்டும்; இந்த எட்டுக் கும்பங்களுக்கும் எட்டு அடைகாத்த கோழிபறுத்துச் சமைத்து நுனிமுறியாத அரிசியால் சாதம் வடித்து அவற்றால் படையல் போட வேண்டும்; கழிப்புச் சுற்றுவதற்கு முதன்மை பெற்றனவாகிய ஊமத்தங்காய், எருக்கங்காய், எட்டிக்காய், பேய்க்குமிட்டிக்காய், பெரும்பூசணிக்காய், முதலியவைகளும் வேண்டும்; இவற்றோடு முக்கியமாய்க் கடைசியில் சுற்றிக் கழிப்போடு சேர்த்துப் புதைத்து விடுவதற்காக ஐம்பது ரூபாயும் வேண்டும்; பணமென்றால் பிணமும் வாயைத் திறக்குமென்றபடி இந்தப்பணத்தினாலேயே பேய்கள் முக்கால்வாசி வசப்படக் கூடுமாதலால் இது அவசியம் செய்யவேண்டும்; உனக்கு நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை; வாங்கவேண்டிய சாமான்களெல்லாம் உனக்கே தெரியும்; ஆனாலும் நீ மதினியையும் கேட்டுக்கொண்டு எல்லாவற்றையும் அந்தி நேரத்துக்குள் சித்தப்படுத்திவிடு; இவை தவிரக் குல தெய்வத்துக்குப் பூஜை போடுவதற்கும் வேண்டியவற்றைச் சித்தப்படுத்திக்கொள்; முதலில் நாம் கழிப்பைக் கழித்து விட்டுப் பின்பு உன் குல தெய்வத்தைக் கும்பிடலாம்; நாளைஇராத்திரிக்குச் சனீசுர பூசையையும், எமதருமராஜ வணக்கத்தையும் செய்து உனக்கு உயிர்ப்பிச்சை வாங்கிக்கொள்ளலாம்" என்று கூறினான்.

இவ்வாறு கூறவே சுப்பையனுக்கு உண்டான சந்தோஷத்திற் களவேயில்லை; அவனுக்குப் பூசாரி விஷயத்தில் சிறிதும் சந்தேகமேயில்லை; அதனால் அவன் "பூசாரி மற்ற சாமான்கள் வேண்டுமென்று சொல்வது சரிதான்; ரூபாவும் சுற்றிப் போடவேண்டுமென்கிறானே; இதென்ன அசம்பாவிதமாயிருக்கிறது" என்று ரூபா சுற்றிப் புதைக்கவேண்டுமென்று பகவதி சொன்ன விஷயத்திலும் அதிருப்தியடை

யாமல் அவன் சொல்லியவைகளெல்லாம் அவசியமுள்ளவை யென்றே கருதிப் பூசாரியிடம் விடை பெற்றுக்கொண்டு அவற்வைச் சேகரிப்பதற்கு ஓடினான். இவற்றை யெல்லாம் தான் செய்தால் வீரபத்திரசுவாமி சொன்னபடி சங்கடமெல்லாந் தீர்ந்து சுகப்படுவதோடு, தன்னுயிரைக் கொண்டுபோக வரும் எமனையுஞ் சாந்தப்படுத்தி உயிரோடு வாழலாமென்ற எண்ணத்தில் மட்டும் இவன் புத்தியைச் செலுத்திக்கொண்டிருந்தபடியால் எதையும் கவனியாமல் பூசாரி சொல்லியவைகளையெல்லாம் செய்யத்தொடங்கினான். இவனைப்போலவேபேய் மயக்கத்திற்சிக்கிய பேதைகளெல்லாம் மந்திரக்காரன் வேண்டியவற்றையெல்லாம் தடையின்றிச் சேகரித்து அவனுக்குக் கொடுப்பார்கள். "இவற்றால் பிரயோசனமுண்டா இல்லையா? இவற்றை நாம் எதற்காகச் செய்யவேண்டும்?" என்று ஒவ்வொன்றையும் ஆராயவே மாட்டார்கள். இத்தகைய பேதைகளுக்கென்றே, இவ்வகை உணர்ச்சிகளை உண்டாக்குதற்கு நூதனமாக உருவமின்றிஇவர்களே கற்பித்துக்கொள்ளும் ஒருசாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் கண்ணால் பார்த்துமிரோம், காதாரக்கேட்டுமிரோம்; இந்தக் கீழ் வகுப்பாரிடம் இவ்வகை அநாகரீக காரியங்களெல்லாம் சுருதி யுத்தி அனுபவங்களுக்கெட்டாமல் நூதனம் நூதனமாகப் பிறக்கும்; ஒரு வீட்டிற்குள்ளிருக்கும் சுண்ணாம்பை அவ்வீட்டார் வெளியாருக்குக்கொடுப்பதுதோஷம், ஒரு வீட்டில் விளக்கு வைத்ததற்குமேல் அவ்வீட்டார் அன்னியருக்கு வெந்நீர் கொடுப்பது மோசம்" என்பன போன்ற மூடச் செய்கைகளெல்லாம் இவ் வகுப்பாரிடத்திற்றான் மிகுதியுமுண்டு. சென்னை முதலிய இடங்களில் உள்ளவர்களிடம் இவ்வகை ஒழுக்கங்களை மிகுதியாகக் காணலாம்.

இதுநிற்க; முன்கூறியபடி ஓடிய சுப்பையன், "இன்

றைக்குத்தான் நம்மைப்பற்றிய துன்பமெல்லாம் தொலை யப் போகிறது" என்று கருதித் தன் மனைவியோடு வெளி யேறி ஆகாரம் சாப்பிடுவதையும் கவனியாமல் அதே வேலை யாகத்திரிந்து, சூரியன் அஸ்தமிப்பதற்குள் கழிப்புக்கும், குலசாமியைக்கும்பிடுவதற்கும் வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொண்டு வந்து வீட்டில் சேர்த்துத் தெய்வங் களுக்குப் படையல் போடுவதற்கு வேண்டிய போசன பதார்த்தங்களையும், பக்ஷணவர்க்கங்களையும் சித்தப்படுத்தத் தொடங்கி அவற்றிற்கான காரியங்களை நடத்திக்கொண் டிருந்தான். இரண்டு நாட்களுக்குமுன் துக்கமான சம்பவங் கள் நிகழ்ந்த இச்சுப்பையன் வீட்டில் அன்றைக்கு இக்காரி யங்கள் நடை பெறும்போது அவர்கள் மாவிடித்தல், பலகா ரஞ் சுடுதல், தெய்வங்களுக்கு வேண்டிய பதார்த்தங்களை வாங்கிவருதல் ஆகிய தடபுடலான வேலைகளைச்செய்வதைப் பக்கத்து வீட்டுக்காரர்கள் கண்டு ஆச்சரியப்பட்டு, "உன் வீட்டில் என்ன விசேஷம்?" என்று சுப்பையனைக் கேட்கத் தொடங்கினர்கள். இந்தப் பெருங்காரியங்களை ஒருவரும் அறியாதபடி நடத்தவேண்டுமென்று சுப்பையன் கருதி யிருந்தான். ஆதலால் இவ்வாறு அவர்கள் கேட்டது அவ னுக்கு மிகுந்த விசனத்தை யுண்டாக்கிற்று. அதனுல், அவன், "இதேது வீண் சங்கடமாயிருக்கிறது? நம்முடைய வீட்டில் விசேஷம் நடந்தால் இவர்களுக்கென்ன? நாம் இவற்றை இரகசியமாக நடத்த வேண்டுமென்று கருதி யிருக்கும்போது இவர்கள் வந்து, இவற்றின் விவரத்தை நம்மிடம் கேட்டுத் தொந்தரவை யுண்டாக்குகிருர்களே" என்று வயிற்றெரிச்சல் கொண்டு அவ்விதம் கேட்டவர் களுக்கு, "எங்கள் ஜாதிக்காரர்கள் இறந்தவர்களுக்குக் கரு மம் முடிவதற்குமுன் ஒரு பூஜை செய்வது வழக்கம்; அதன் படியே இறந்துபோன என் மகனுக்கு நான் சிறப்பு நடத்து

கிறேன்; இதற்கு அன்னியர் வரக்கூடாது" என்று கலப்பில்லாத பொய்கூறினன். எனினும், அவர்களுக்கு இது பொய்யென்பது தெரிந்துவிட்டது. அதனல் அவர்கள் "இவன், தனக்கு வந்த துன்பத்துக்கு ஏதோ பரிகாரம் செய்யப்போகிருன்," என்று கருதி, "இது என்ன நூதன வழக்கமா யிருக்கிறது; இறந்தவர்களுக்கு, மனிதர் இரண்டு நாட்களுக்குள் சிறப்புச் செய்வது நாம் எங்கும் கண்டதில்லையே!" என்று அவனைப்பரிகசித்துச் சென்ருர்கள். சுப்பையன் அவர்களுடைய பரிகாச வார்த்தைகளைச் சட்டை பண்ணவேயில்லை; "யார் என்ன சொன்னலும் சொல்லட்டும்" என்று தன்னுடைய காரியத்தை நிறைவேற்றுவதிலேயே கருத்தைச் செலுத்தி யிருந்தான்.

இவ்விதம், மந்திர தந்திரங்களை நடத்தும் பேதைகள், அவற்ருல் தங்களுக்கு அருமையான சித்திகள் கிடைக்குமென்றும், அன்னியருக்குத் தெரியாமல் அந்தப் பெரும் பாக்கியத்தைத் தாங்களே அடைய வேண்டுமென்றும் நினைத்து, அவற்றை இவ்வாறு இரகசியமாகச் செய்வதையும், அன்னியர்க்குக் கூருமல் மறைப்பதையும் இப்பொழுதும் பல விடங்களிற் காணலாம்.

இது நிற்க, மேற்கண்ட விதமாகச் சுப்பையன் வீட்டில் தெய்வகாரியங்கள் நடக்கும்போது முத்துக்கருப்பி, 'சுவாமிக்குப் படைக்கும் எந்த வஸ்துவிலேனும் எச்சில் தோஷமுண்டானல் சுவாமி கோபித்துக்கொள்ளும்' என்று கருதி ஸ்நானஞ் செய்து திரிகாணசுத்தியோடு அன்று முழுதும் பட்டினியிருந்து துணியினல் வாயைக் கட்டிக்கொண்டு மிகுந்த பயபக்தியுடன் ஒழுங்காக மாவிடித்தல், பலகாரஞ் சுடுதல், உணவுகளைச் சமைத்தல் முதலிய காரியங்களைச் செய்து முடித்தாள். இரவும் வந்தது. அதன்மேல் அவளும், சுப்பையனும் "எல்லாக் காரியங்களும் சித்தமாகிவிட்

டனவே; இராத்திரிகாலமும் வந்துவிட்டதே; பூசாரி இன்னும் வரவில்லையே" என்று ஆவலோடு அவன் வரவை எதிர்பார்த்திருந்தார்கள்.

அப்போது பூசாரி மலையாள பகவதியும் ஸ்நானஞ் செய்து சகலாலங்கிருதனாகி வெறியாட்டாளனுக் குரிய வேடத்தைத்தரித்துச் சீடர்களாகியசொக்கன், பெரியணன் ஆகிய இருவர்களையும் நோக்கித், "தம்பிமாரே! இன்றைக்கு நமக்கு நல்ல கிராக்கி அகப்பட்டிருக்கிறது; பலகாரத்திலும் மாமிச பக்ஷணத்திலும், போஜனத்திலும், துணிமணியிலும், தெக்ஷிணைகளிலும் யாதொரு குறைவுமிராது; உங்களுடைய பெருந்தீனியை உத்தேசித்தே நான் சுப்பண்ண வீட்டில் எட்டுக்கும்பங்கள் வைக்கும்படி ஏறபாடுசெய்தேன்; கழிப்புச்சுற்றும் சாமான்களில் ஒன்றையுமே அவர்கள் தொட மாட்டார்கள்; ஆகையால் நீங்கள் எல்லாவற்றையும் சேர்த்துச் சுற்றி எடுத்துக்கொள்ளுங்கள்; காரியத்தில கைசோர்ந்து விடாதீர்கள்,

"நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பாத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்"

என்ற ஔவையார் வாக்கின்படி இத்தகையார் பொருளெல்லாம் நம்மைப் போன்றவர்களுக்கே சொந்தம்; நாம் செய்யப்போகும் இந்த மாயா விநோதச் செய்கையில் சுப்பன் பொருளைக் கொள்ளையடிக்கும் விஷயத்தில் நீங்கள் சிறிதும் மனங்கூச வேண்டாம்; சமயத்துக்குத் தக்கபடி பார்த்துக் கொள்ளுங்கள்; இந்தச் சுப்பையனைப்போன்ற மூடர்களைப் பேய் பிசாசு மந்திரம் முதலியவற்றில் நாம் திருப்பி யிழுத்துக்கொண்டால் மாத்திரந்தான் இவர்கள் நமக்குப் பொருள் கொடுப்பார்கள்; வேறுவழியில் ஒருசெம்புக்காசுங் கொடார்

கள்; இது நல்ல சமயமாதலால் இவன் கையிலுள்ளவற்றை யெல்லாம் நாம் உறிஞ்சி யிழுத்துவிடவேண்டும்" என்று திவ்யமான போதனைகளைச் செய்து அவர்களை அழைத்துக் கொண்டு சுப்பையன் வீட்டிற்போய்ச் சேர்ந்தான். அவனைக்கண்டவுடன் முத்துக்கருப்பியும், சுப்பையனும் இந்திர பட்டம் பெற்றவர்களைப்போன்று மகிழ்ந்து தேகம் பூரித்து விட்டார்கள்.

உடனே அவர்களால் தெருக்கதவு மூடப்பட்டது. மலையாளபகவதியும் சிஷர்களும் சுப்பையனுடைய அறை வீட்டிற்குட் சென்று, தரையைச் சுத்தப்படுத்தி வரிசையாக எட்டுக் கும்பங்களை ஸ்தாபித்து, அவற்றிற்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து, முறைப்படி மாவினால் எட்டுப்பாவைகளும்செய்து ஒவ்வொருகும்பத்துக்கும் முன்னே வைத்து, அவற்றிற்கு வஸ்திரம் புஷ்பம் சந்தனம் முதலியவற்றை அணிந்து, ஓமகுண்டங்களைப் சீர்ப்படுத்திக் கொண்டார்கள். பின்னர், பகவதி, சுப்பையனை நோக்கி, "அண்ணா! நீ ஸ்நானஞ் செய்துவிட்டு வா" என்று அவனுக்குக் கட்டளை யிட்டான். அவ்வாறு கட்டளையிடவே அவன் அப்படியே ஸ்நானஞ் செய்துவிட்டு மிகுந்த பயபக்தியோடு வந்து பூசாரியின் எதிரில் உட்கார்ந்தான். அதன்மேல் தேவதைகளுக்குப் படைக்கவேண்டிய பக்ஷண வர்க்கங்கள், போஜனபதார்த்தங்கள், புஷ்பதாம்பூல சந்தனாதிகள், பழவர்க்கங்கள் முதலியவற்றை யெல்லாம் முத்துக்கருப்பி கொண்டு வந்து அங்கே சேர்த்தாள். யாவும் வந்து சேர்ந்தவுடன் பூசாரியும் சீடரும் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கும்பத்துக்குப் முன்னே ஒழுங்கு பெறப் படைத்துத் தூப தீப நைவேத்தியஞ் செய்து, பின்பு ஓமங்களை வளர்த்து, அதிகப் பிரயாசைப் பட்டு ஜெபிப்பவர்கள்போல நெடு நேரம்வரை மந்திர ஜெபம்

செய்து, அது முடிந்தவுடன் எழுந்து சுப்பையனுக்குக் கழிப்புச் சுற்றுவதற்கு ஆரம்பித்து, ஆடு கோழி முதலியவற்றை உயிரோடு தூக்கிச் சுப்பையன் தலையைச் சுற்றி ஒரு புதுச்சட்டியிற் போட்டு, முன் பூசாரி சொன்னபடி சுப்பையன் தயாரித்து வைத்திருந்த பணங்களையும் எடுத்துச் சுற்றி அதிற்போட்டு, எல்லாம் சுற்றிமுடிந்தவுடன் மாப்பாவைகளையும் எடுத்துப் போட்டார்கள். அதன்மேல் சொக்கனென்னும் சீஷன் பயபக்தியோடு அந்தச் சட்டியை எடுத்துக் கொண்டு சுப்பையனைப்பார்த்து, "உன்னைப் பிடித்த பேய்களெல்லாம் இவற்றோடு தொலைந்து ஓடுகின்றன" என்றுசொல்லி வெளியே போய்விட்டான். அப்போது பாதிச்சாமமாயிருந்தபடியால் அவன் அவ்வாறு கழிப்பை யெடுத்துக்கொண்டு போனதை எவரும் உணரவில்லை. அதனால் அவன் அதைக்கொண்டு செல்வதற்குச் சௌக்கியமாயிருந்தது. அச்சமயம் நடுச்சாமமாயில்லாமல் ஜனங்கள் நடமாடக்கூடிய நேரமாயிருந்தால் அவன் அதைக் கொண்டு செல்லும் விஷயத்தில் அவனுக்குச் சிரமுண்டாகும். அப்போது பூசாரி முன்னரே சென்று வழியிலுள்ளவர்களுக் கெல்லாம், "நாங்கள் கழிப்புக்கொண்டு வருகிறோம்; நீங்கள் எல்லோரும் வெளியே வாராமல் வீட்டிற்குள்ளேயே பத்திரமா யிருங்கள்" என்று தெரிவித்துவிட்டு வரவேண்டும்; அதன் பின்புதான் கழிப்புக் கொண்டுசெல்பவன் தெருவில் போகவேண்டும். இவ்வழக்கம் பட்டணத்தில் பெரும் பான்மையும் நிறைவேறி வருகின்றது. ஒருவனைப் பற்றியிருந்த பிசாசுகள், பூசாரி அவனுக்குக் கழிப்புச்சுற்றி யெடுத்துச்செல்லுங் காலத்தில் அவனை விட்டு நீங்கி அக்கழிப்புடன் செல்லுமென்பதும், அப்போது எதிர்ப்பட்டவர்களைப் பற்றிக்கொள்ளு மென்பதும் மந்திரப் பைத்தி

யங்கொண்ட பேதைகளுடைய அபிப்பிராயம். அதனால் பூசாரி கழிப்புச்சுற்றி வெளியிலெடுத்துச் செல்லும்போது மேற்கூறியபடி ஜனங்களுக்கு அதைத் தெரிவிக்காவிடில் அவர்கள் அவனோடு சண்டைக்குப் போவார்கள். மேற் கண்டவாறு சொக்கன் கழிப்பைக் கொண்டுபோனவுடன் மலையாளபகவதியும் பெரியண்ணனும் மீதியாயிருந்த சகல பதார்த்தங்களையும், "கழிப்புக்கு வைத்தவற்றில் ஒன்று மிருக்கக்கூடாது" என்று எடுத்துக்கொண்டு, சுப்பையன் குலசாமி கும்பிடுவதற்குள் பிரசாதம் சாப்பிடுவதற்கு எல் லோரும் திரும்பி வருவதாக அவனிடம் சொல்லிவிட்டுப் போய் எல்லாவற்றையும் வீட்டில் சேர்த்தார்கள். கழிப்புச் சட்டியை எடுத்துச்சென்றசொக்கன் ஓரிடத்தில் அதைப் போட்டுவிட்டுத் திரும்பிப் பூசாரி வீட்டிற்கு வந்தான். பின் எல்லோரும் சுப்பையனிடம் சென்று அவன் வீட்டுப் பொருள்களை மீண்டும் கொள்ளை யடிப்பதற்காக, உட்கார்ந் தார்கள்.

உடனே முத்துக் கருப்பியும், சுப்பையனும் அவர் களுக்குமுன் வந்து, அவர்கள், தங்கள்விஷயத்தில் எடுத்துக் கொண்ட பிரயாசைக்காக அவர்களை மிகவும் கொண்டாடிப் புகழ்ந்தார்கள். சுப்பையனுக்குப் பூசாரியின் மேலிருந்த திருப்திக்கு அளவேயில்லை. அவன் கழிப்புச் சுற்றியதனு லேயே தன்னைப் பிடித்திருந்த எட்டுப் பேய்களும் தொலைந்து விட்டதாக மிகவும் உறுதியாய் நினைத்து அந்த மலையாள பகவதியிடம், "அண்ணே! நீ இல்லாவிட்டால் இந்த எச்சிப் பிசாசுகளை எவராலும் ஓட்டவே முடியாது; என் வீட்டில் விளக்கெரியும்படி செய்தவன் நீதான்" என்று பலமுறை சொல்லிச் சந்தோஷித்தான். பூசாரியும், "இன் னும் நீ எங்கே தவறுனய்; உன் வீட்டை வோறப் பார்த்து விட்டல்லவா நான் போவேன்" என்று மனதிற்குள் நினைத்

துக் கொண்டு அவனுக்கு இதமான வார்த்தைகளைப் பேசி விட்டு, "சரி சரி; இனிக் குலசாமியைக் கும்பிடுதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள்; நேரமாய் விட்டது" என்றுரைத்தான்.

சுப்பையன் குலசாமிக்குப் பூஜையிடுதல்.

அவ்வார்த்தையைக் கேட்டவுடன் முத்துக்கருப்பியும் சுப்பையனும், "பூசாரி அண்ணன் சொன்னது சரிதான்; நம்முடைய குலதெய்வம் கெட்டபயல் தெய்வமாச்சுதே; அதை நாம் கவனியாமலிருந்தால் அதற்குக் கோபம் வந்தாலும் வந்துவிடும்" என்று திடுக்கிட்டெழுந்து மீண்டும் அறை வீட்டைச் சுத்திசெய்து, மேற்குப் பக்கத்துச் சுவரில் முனிச்சாமி உருவத்தை எழுதி அதன்முன் பெரிய இலைகளைப் பாப்பி அவற்றில் பலகாரங்களையும், அன்று குத்தின புழுங்கலரிசிச் சோற்றையும், அடைகாத்த கோழி முட்டைச் சமையலையும், தேங்காய் பழம் முதலியவற்றையும் நிரப்பி, கள், சாராயம் ஆகிய மதுவர்க்கங்களையும் வைத்து, 'இன்னும் வேண்டிய நிவேதனப் பொருள்களையும் பரப்பித் தூப தீப நைவேத்தியங்கள் செய்து "எங்கள் குலதெய்வமே! எம்மீது என்ன குற்ற மிருந்தபோதிலும் நீ அவற்றை மன்னித்து இவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்கள். அப்போது சுப்பையன் மாத்திரம், "இன்னும் ஒருமுறை இந்த இழவு தெய்வம் பூசாரியின்மேல் வந்து எங்கே நம்மைச் சாடிவிடுகிறதோ" என்று பயந்தே கும்பிட்டு விழுந்தான். ஆனால், அப்படி யொன்றும் நடக்கவில்லை; "அடுத்தடுத்து அடிக்கத் தொடங்கினால் குட்டு வெளியானாலும் ஆகிவிடும்" என்று நினைத்துப் பூசாரி அச்சமயத்தில் பேசாமலிருந்து விட்டான். முனிச்சாமி பூஜை இவ்வாறு நிறைவேறிற்று.

பின்னர் அவர்கள் வீட்டுக்கு மற்றொரு பெண்குலதெய்வ மாகிய இராக்காயி அம்மனுமிருந்தபடியால் அவளுக்கும் படையல் போடவேண்டியது சுப்பையனுக்கும், முத்துக் கருப்பிக்கும் அவசியமாயிருந்தது. அக்காரியத்தைச் செய்தற்குரியவள் முத்துக்கருப்பியே. ஆதலின் அவள், அந்த அம்மன் உருவமுள்ள வேறொரு வீட்டிற்குள் போய் வாயைக் கட்டிக்கொண்டு பயபக்தியோடு எல்லாப் படையல்களையும் இராக்காயிக்குப்போட்டுத் தூபதீபங் காட்டி அத்தேவதையைக் கும்பிடுவதற்குத் தன் புருஷன், பூசாரி முதலியவர்களைக் கூப்பிட்டாள். இந்தப் பெண் தேவதை முத்துக்கருப்பிக்கு மிகவும் வேண்டியதாதலாலும், அவளுக்கு இதனிடத்தில் மிகுந்த பக்தி யுண்டாதலாலும், புருஷர் அந்தத் தேவதையிடம் நெருங்கக் கூடாதென்று அவளே நினைத்துக்கொண் டிருப்பதாலும் இவ்வாறு தானே அதற்குரிய எல்லாக் காரியங்களையும் நடத்தினாள்.

முத்துக்கருப்பி மீது இராக்காயி வந்து தடபுடல் செய்தல்

அவள் கூப்பிட்டபடியே சுப்பையனும், கோடங்கியும், அவன் சிஷர்களும் வீட்டிற்குள்ளே போய் இராக்காயி அம்மன் சந்நிதியில் கும்பிட்டு விழுந்தார்கள். பூசாரிக்கும் அவன் சீடருக்கும் அடிக்கடி கீழே விழுந்து நமஸ்கரிப்பது சங்கடமாயிருந்தாலும் பிரசாதங்கள் அதிகமாகக் கிடைக்கக் கூடியனவா யிருந்தபடியால் அவர்கள் அவ்விஷயத்தில் சிறிதும் சலிப்பின்றி யிருந்தார்கள். இவ்வாறு எல்லோரும் கும்பிட்டு விழுந்தவுடன் முத்துக்கருப்பியின் மீது இராக்காயி அம்மன் வரத் தொடங்கி விட்டது; எப்பொழுதும் முத்துக்கருப்பி வீட்டில் குலதெய்வ பூஜை நடத்தும்போது இந்த இராக்காயி அவள் மீது வருவது வழக்கம். அவ்வாறு வந்தவுடனே முத்துக்கருப்பி, முகத்தைச் சுழித்தாள்;

கண்ணை உருட்டி உருட்டி விழித்தாள்; பற்களைக் கடித்தாள்; கோபங்கொண்ட எருதுகள் சீறுவதுபோல சீறினுள்; ஆங்காரமாகக் கூவினுள்; குரவை யிட்டாள்; முடிவில் தலையை விரித்துப் போட்டுக்கொண்டு ஓய்யாரமாக ஆடத்தொடங்கி விட்டாள். நெடுநேரம் வரை இந்த ஆட்டம் மும்முரமாக நடந்தது.

சுப்பையனுக்குத் துடைப்ப அபிஷேகம்.

அந்தச் சமயத்தில் கோடங்கியாகிய பகவதி, சுப்பையனைப் பார்த்து, "இராக்காயி அம்மன் தடபுடலாகவந்து விட்டது; நீ இந்தப் பெண் தேவதையின் காலில் விழுந்து இதனிடம் வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்; சீக்கிரம் இது போய்விடப் போகிறது" என்று கூறினுன். உடனே சுப்பையன் தன் மனைவி மீது இராக்காயி அம்மன் வந்து ஆடுவதை உத்தேசித்து முத்துக்கருப்பி தன்னுடைய மனைவியென்பதையும் கருதாமல் அவளுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, "எங்கள் குடும்பத்தை வழிவழியாக ஆண்டுவந்த இராக்காயி அம்மனே! நீ நெடுநாளாக இங்கே வராமலிருந்து இன்றைக்கு என்பேரில் கிருபை செய்து வந்திருக்கிறுய்; ஆதலால், நாங்கள் செய்யும் பூசையை ஏற்றுக்கொண்டு எனக்கு நல்லவரம் தரவேண்டும்" என்று இராக்காயி அம்மனை வேண்டினுன். அந்தோ! பரிதாபம்! அவன் அவ்வாறு கும்பிட்டு விழுந்த வுடனே முத்துக்கருப்பியின்மேல் வந்திருந்த இராக்காயி அம்மனுக்குக் கோபம் வந்து விட்டது. அதனுல் அவள் சுப்பையனை நோக்கி, "அடே விசுவாசங் கெட்ட பயலே! நீ எனக்குப் பல நாட்களாகக் கொஞ்சம் சாம்பிராணித் தூபங்கூடக் காட்டாமலிருந்து விட்டு, இப்போது துன்பம் வந்த சமயத்தில் மாத்திரம் மிகவும் விசுவாச முள்ளவன் போல் என்னிடத்தில் பாசாங்கு செய்கிறுயா?" என்று பக்கத்தில் கிடந்த

தேய்ந்த துடைப்பத்தை எடுத்துக்கொண்டு, கை ஓயாமல் அதனால் அவனுடைய முதுகில் படீர் படீரெனத் தாக்கி விட்டாள். சுப்பையன் துடைப்பக்கட்டை யடியைத் தாங்க முடியாமல் துள்ளித் துடித்துக்கொண்டு எழுந்து, முத்துக்கருப்பியின் முன்னே நின்று "அம்மா! நான் செய்த குற்றத்தை நீ பொறுக்கவேண்டும்; கோபம் செய்யலாகாது" என்று இராக்காயி அம்மனிடம் கெஞ்சினான். அதன்மேல் முத்துக்கருப்பியின் மீதேறியிருந்த இராக்காயி அம்மன் சிறிது கோபந்தணிந்து, சுப்பையனை நோக்கி "சரி, நீ செய்த குற்றத்தை நான் பொறுத்துக்கொள்கிறேன்; இனிமேல் நீ எனக்கு மாதம் ஒரு பூசை தவறாமல் நடத்திவர வேண்டும்; இது முதல் உனக்கு யாதொரு தீங்கும் வாராமல் நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்று சொல்லி விபூதி அள்ளி அவனுக்குக் கொடுத்தாள். சுப்பையன் அதை மிகவும் பத்தியோடு வாங்கிப் பூசிக்கொண்டான். அப்போது கோடங்கி மலையாள பகவதி சுப்பையனைப்பார்த்து, "அண்ணே! எந்தத் தெய்வம் வந்தாலும் உன்மேல் கோபமாய்த் தான் வருகிறது; இதற்குக்காரணம் நீ தெய்வங்களைக் கவனிக்காமல் விட்டு விட்டதே யாகும்; நீ இவ்வாறு தெய்வங்களைத் தேடாமலிருந்தது மிகவும் பிசகு" என்று கூறினான். முத்துக்கருப்பி மீது ஏறியிருந்த இராக்காயி அம்மன் போய் விட்டது. முத்துக்கருப்பி, சாதாரண முத்துக் கருப்பியாகி விட்டாள்.

இவள், இராக்காயி அம்மன் தன்மேல் வந்ததாக ஆடித் தன் புருஷனை விளக்குமாற்றால் அடித்தது மிகவும் கேவலமான காரியமாயிற்றே என்று சிறிதும் கருதவில்லை. இராக்காயி அம்மன் தன்மேல் வந்து விட்டதாக நினைத்து ஒரு வகைப் பிரமையடைந்திருந்தபடியால் இவள் தன்னை யறியாமலே மெய்ம்மறந்து அவ்வாறு துடைப்பத்தால்

அவனை அடித்தாள். மெய்யாக இவள்மீது தெய்வம் ஒன்று வந்து அடிக்கவில்லை. அல்லது இவள் வேண்டுமென்று தன் புருஷன்மீது உட்பகைகொண்டு அவனை இவ்வாறு அடித்தாளோ வென்றால் அதுவுமில்லை. இது மூடத்தனமான கொள்கையால் இவளுக்கு ஏற்பட்டது. இப்படியே இக் காலத்திலும் பலர், தங்கள் மீது தெய்வம் வந்து விட்டதாக நினைத்துக்கொண்டு அந்த நினைவு முற்றி உன் மத்தம் பிடித் தவர் போலாகிச் செய்யத்தகாத காரியங்களை யெல்லாம் நினைவு தடுமாறிச் செய்வதை நாம் பிரத்தியக்ஷமாக இந்துக் களிடத்தில் பார்த்து வருகிறோம். இன்னும் சிலர் வேண்டு மென்றே தங்கள் மீது தேவதை வந்துவிட்டதாக நடித்தும் இவ்விதசெய்கைகளை நடத்துவதுண்டு. இத்தகை யினர் தாங்கள் செய்யும் தகாத செய்கைகளை யெல்லாம் தங்கள்மீது வந்திருக்கும் தெய்வங்கள் செய்கின்றனவென்று பிறர் நம்பும்படி நடித்து அவற்றை அத் தெய்வங்களின்மே லேற்றி விட்டுத் தங்கள் பகையாளிகளைத் அத்தெய்வங்கள் அடிப்பதுபோல அடித்துத் தங்கள் பகையைத் தந்திர மாகத் தீர்த்துக் கொள்வார்கள். தன் புருஷனால் ஹிம்ஸிக்கப் பட்ட ஒருத்தி, அவனை எதிர்த்தடிக்க முடியாதவளா யிருந் தாலும் சாமர்த்திய முடையவளா யிருந்தால், சமயம் பார்த் திருந்து ஏதோ ஒரு சமயத்தில் தன்மேல் குல தெய்வம் வந்துவிட்டதாக நடித்துக் கையிலகப்பட்டதை எடுத்துக் கொண்டு அவனைச் சினந்தீருமட்டும் அடித்துத் தன் பகை யைத் தீர்த்துக் கொள்ளுவாள். அச் சமயத்தில் அப் புரு ஷன், அவள் மீது வந்த தெய்வமே தன்னை அடிப்பதாக நினைத்துஅவள் காலில் விழுந்து நமஸ்கரிப்பான்; இச்செய் கை சென்னை முதலிய விடங்களில் சிலரிடத்தில் நடக்கநாம் நேரில் பார்த்திருக்கிறோம். இச்செய்கைகள் பாமரர்களிடத் திற்றான் அதிகமாயுண்டு. இத்தகைய பேய்ப் பைத்தியங்

கொண்ட மூடர்களெல்லோரும் மனைவியிடத்திலும் அடி படுவார்கள், இன்னும் எத்தனையோ தகாதசெய்கைகளையும் ஏற்றுக்கொள்வார்கள். இங்கே சுப்பையன் தன்னுடைய மூடத் தன்மையினாலேயே இவ்வித துன்பங்களை யெல்லாம் அடைந்தான்.

இது நிற்க, மேற்கண்டவாறு இராக்காயி அம்மன் முத்துக்கருப்பியின்மேல் வந்து போனவுடன் எல்லோரும் மகிழ்ச்சியாகப் பிரசாதங்களை உண்டார்கள். மலையாள பகவதிக்கும் சீஷருக்கும் அன்று அங்கே நல்ல சாப்பாடு நடந்தது. அவர்களெல்லோரும் நடுச்சாமம் வரை சந்தோஷமாக இருந்து அங்குள்ளவற்றைச் சாப்பிட்டு விட்டுப் பின்பு, மறுநாள் சுப்பையன் சாகாமலிருப்பதற்குச் சனீசுர பூசையும் எமபூசையும் செய்ய வருவதாகச் சொல்லி அவனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தங்கள் வீட்டிற்குப் போய் விட்டார்கள். சுப்பையனும், முத்துக்கருப்பியும் சுவாமி காரியங்களை நடத்தி மிகவும் அலுத்துப் போயிருந்தபடியால் படுத்து நன்றாய் விடியு மட்டும் உறங்கினார்கள்.

சுப்பையன் எமனுக்கும் சனிக்கும் பூஜைபோடல்.

மறுநாள் விடிந்தவுடன் சுப்பையன் எழுந்து கோடங்கி வீட்டுக்கு ஓடி, அவனிடத்தில் "இன்று நாம் நடத்தவேண்டிய சனீசுர பூசைக்கும் எமபூசைக்கும் செய்யவேண்டியதென்ன?" என்று கேட்டான். அதற்குப் பூசாரி அவனை நோக்கி "சகோதரனே! இவ்விரண்டும் மற்ற பூசைகளைப் போன்றவையல்ல; எமனால் பிடித்துக் கொண்டு போகப் பட்ட உயிரை நிறுத்தக் கூடியவைகளான படியால் இவற்றை அதிக சிறப்பாகவே நாம் செய்யவேண்டும்; இவற்றுள் சனீசுர பூசையை வேண்டுமானால் சற்று இலகுவாக நடத்திக் கொள்ளலாம்; எமனுடைய பூசையில் மட்டும் ஒன்றும் குறையக் கூடாது; நீ இன்று சாயங்காலம் ஒரு அறை

வீட்டை நன்றாக மெழுகிச் சுத்திசெய்து, அதில் வேண்டிய அளவு தேங்காய், பழவர்க்கங்கள், சூடம், சாம்பிராணி, ஊது வர்த்தி, புஷ்பம், சந்தனம், தாம்பூலம், அவல்கடலை முதலிய சாமான்களை யெல்லாம் வாங்கி நிறைத்துவிட்டு என்னிடம் வா; எமனுக்கு எருமைக்கடா உகந்ததாதலால் வீட்டை மெழுகும்போது எருமைக்கடா; சாணியாலேயே மெழுகு; எமனுக்கு அர்ச்சனை செய்வதற்காக நானூற்றைம்பது ரூபா யும் சேகரித்து வைத்துக்கொள்; பணம் செலவாகிறதே என்று யோசியாதே; நீ பிழைத்திருந்தால் எவ்வளவும் சம் பாதித்துக்கொள்ளலாம்; சனீசுரனுக்கு வேண்டிய எள்ளு முதலிய நவதானியங்களடங்கிய பொட்டணங்களும், அவற்றைப் போட்டு விளக்கெரிப்பதற்கு எண்ணெ யும் சேகரித்து வைத்துக்கொள்; எமனும் சனியும் சகோ தரர்களானபடியால் இருவருடைய பூசையையும் சேர்த்தே ஒரே காலத்தில் முடித்து விடலாம்" என்று கூறினன்.

இவற்றைக் கேட்டவுடன் சுப்பையன் கோடாங்கி சொற்படி எல்லாவற்றையும் சேகரிப்பதற்கு வீட்டிற்குப் போனன். அவன் கையிலிருந்த பணங்களெல்லாம் முதல் நடந்த காரியங்களுக்கே செலவாகிவிட்டன. அவன் கையில் ஒன்றுமில்லை. அப்படி யில்லாதிருந்தும், தன்னிடம் மிஞ்சி யிருந்த சில சொத்துக்களை அன்றைக்கே அறுதிக்கிரய மாக ஒருவரிடத்தில் ஐந்நூறு ரூபாய்க்குவிற்று, அப் பணத்தை வாங்கி அதனல் ஆகவேண்டிய காரியங்களை யெல்லாம் சித்தப் படுத்திக்கொண்டு அன்று சாயங்காலம் கோடங்கியிடம் போய்த் தான் செய்தவற்றையெல்லாம் தெரிவித்தான். பூசாரி மலையாள பகவதி, தன் சிஷர்க ளுடன் இதோ வருகிறேனென்றெழுந்து நடந்தான். பின் னர் எல்லோரும் சுப்பையன் வீட்டிற் போய்ச் சேர்ந்தார்

கள். அவ் வீட்டில் குறிப்பிட்ட பூஜைக்குவேண்டிய எல்லா வஸ்துக்களும் சுப்பையனால் நிறைக்கப்பட்டிருந்தன.

அங்குப்போய்ச் சேர்ந்தவுடன் மலையாளபகவதி, பூஜைக் கென்று சுப்பையனால் ஏற்படுத்தப்பட்ட அறையில் சனீசுவரனுடைய உருவொன்று செய்து ஒரு பக்கத்தில் நிறுத்தி அந்தத் தேவதைக்கு வேண்டிய அர்ச்சனையைச்செய்து நவதானியப் பொட்டணத்தை அதற்குமுன்னே எண்ணெய்ச்சட்டியிற் போட்டெரித்துச் சுப்பையனும், முத்துக் கருப்பியும் அதைப் பலமுறை சுற்றி அதன்முன்னே கும்பிட்டு விழும்படி செய்துவிட்டு, பின்னர் எமபூஜையை ஆரம்பிக்கத் தொடங்கித் தெற்கு முகமாகத் தர்ப்பாசனத்திலிருந்துகொண்டு, சுப்பையன் தயாரித்து வைத்திருந்த மாவினால் எமதருமராஜன் எருமைக்கடா வாகனத்திலிருப்பது போல ஓர் உருவம்செய்து அதை வடக்குமுகமாக வைத்துப் புஷ்பங்களாலும் விபூதி சந்தனங்களாலும் அலங்கரித்து, உடனே அதன்முன் வாழையிலைகளைப் பரப்பி அவற்றில் அவல்கடலை முதலியவற்றைக் கொட்டி, வாழைப் பழங்களை உரித்தும் தேங்காய்களை உடைத்தும் வைத்துச் சுப்பையனைக் கூப்பிட்டு, அவனிடத்தில் ஒரு தாம்பாளத்தை ஏந்தி, “உன்னிடமிருக்கிற பணங்களில் நானூற்றைம்பது ரூபாய்களை இதிற் கொட்டு” என்று கூறினான். சுப்பையன் அவ்வாறே மனங்கூசாமல் அவன் கேட்டபணங்களை அந்தத் தட்டில் கொட்டினான். மலையாளபகவதி அப்பணத்தட்டைத் தனக்கு முன்னே வைத்துக்கொண்டு சுப்பையனை நோக்கி, “அண்ணே! இந்த ரூபாய்களில் நான் ஏதாவது எடுத்துக் கொள்வேனென்று நீ நினைக்கவேண்டாம்; இவற்றில் ஒரு பைசாவாவது நான் எடுக்கமாட்டேன்; உன் சௌக்கியத்தை உத்தேசித்தே நான் இந்தப் பெரிய வேலைக்கு உடன்பட்டேன்; உலகத்தில் என்னைப் போன்ற

பூசாரிகள் சாதாரணமான தேவதைகளையே மந்திர தந்திரங் களினால் வசப்படுத்துவது கஷ்டம்; அதுவே அப்படியிருக்க இந்த மகாதேவதையாகிய எமனை வசப்படுத்தல் யாவரால் முடியும்? இது உலகத்தில் எவராலும் முடியாத விஷயம்; ஆயினும் இதைவசப்படுத்த நான் ஒரு தந்திரங் கண்டுபிடித் தேன். அதாவது, பணத்தினால் அதனை வசியம் செய்து கொள்வதே. உலகத்தில் "பணமென்றால்பிணமும் வாயைத் திறக்கு'மென்பதை நீகேட்டிருப்பாய்; யாவும் பணத்திற்குள் ஒடுக்கமென்பது உலகறிந்தவிஷயம். அதற்காகவே நான்உன் னிடம் இந்த நானூற்றைம்பது ரூபாய்களைக் கேட்டேன். இவை எமார்ச்சனை செய்வதற்காகவே. மற்ற தேவதை களுக்கெல்லாம் புஷ்பத்தினால் அர்ச்சனை செய்வது போதும்; எமன் முரட்டுத்தேவதையா யிருப்பதோடு இது கொடுக்க வேண்டிய வரம் பெரியதாயிருப்பதினால், இதற்குப் பணத் தால் அர்ச்சனை செய்தல்வேண்டும்; இவ்விதம் அதைச் செய்யாவிடில் இது இலகுவில் நமக்கு வசப்படாது. இன் னும் எமன், நமக்காகச் செய்யவேண்டிய வேலையோ மிகவும் கஷ்டமானது. அதுயாதெனில், அதனால் பிடித்துக்கொண்டு போகப்படும் உன் உயிரை அதுவிட்டு விடுவதே. உன்னு டைய உயிரை யமன்கொண்டு செல்வதற்குப் பிரமாவினால் நாள் குறிக்கப்பட்டு அதில் அவன் தவறாமல் அக்காரியத்தை நிறைவேற்றுமாறு அவனுக்குக் கட்டளையும் பிறப்பிக்கப்பட் டிருக்கும். அப்படியிருக்க அந்தயமன் நம்முடைய வேண்டு தலுக் கிரங்கி உன்னுயிரை விட்டுவிடும் பக்ஷத்தில், பிரமா வுக்கு அவனே சமாதானம் சொல்லிக்கொள்ள வேண்டியவ னாவான். அங்ஙனம் சமாதானம் சொல்வது அவனுக்கு எவ் வளவோ கஷ்டமானவேலை; இஃதொன்றுக்கே நாம் அவ னுக்கு ஆயிரக்கணக்கான திரவியம் கொடுக்கவேண்டும், இதுபற்றியே நான் மேற்கண்டவாறு இதற்குப் பண அர்ச்

சனைபுரிந்து பெரிய உபசாரம்செய்யக் கருதினேன். இது சிறிது கஷ்டமான வேலைதான்; ஆயினும், நான் உன்னை உத்தேசித்து எப்படியாவது நிறைவேற்றி விடுகிறேன்; நீ ஒன்றுக்கும் யோசிக்காதே; நான் சொன்னதைச் செய்; இந்தப் பணங்களை முன்கூறியபடி நாம் எமனுக்கு அர்ச்சனை செய்தாலும் பின்பு எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த எமனுக்கே இவற்றைச் சேர்த்துவிடவேண்டும்; அப்படிச் சேர்க்கவேண்டிய விதத்தை நாம் அவனுக்குப் பூஜைசெய்யும் காலத்தில் அவனே வந்து சொல்லுவான்; அவன் சொல்கிறபடியே நாம் எதையும் செய்துவிடலாம்; அஃதிருக்கட்டும்; நீயும்உன் மனைவியும் எமவிக்கிரகத்துக்குமுன்னே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துக்கொண்டிருக்கவேண்டும்; அப்படி நமஸ்கரித்துக்கொண்டிருக்கும்போது நீ, "எம்பெருமானே! எனக்கு உயிர்ப்பிச்சை தாவேண்டும்" என்றும், உன்மனைவி, 'தென்றிசைச் தலைவனே! எனக்கு மங்கிலியப் பிச்சை தாவேண்டும்' என்றும் எமனைத் தியானித்துக் கொண் டிருக்கவேண்டும். நான் அவனுக்குச் சாம்பிராணித் தூபங்காட்டிச் சூட தீபாராதனை செய்து, அதன்மேல் பணங்களால் அர்ச்சனை செய்துகொண் டிருப்பேன். பண முழுவதும் அர்ச்சனைசெய்து முடிந்தவுடன் அந்த எமதரும ராஜன் எனக்குப் பிரசன்னமாகி என்பேரில் ஏறிக்கொள்வான்; அந்தச் சமயத்தில் நான் பெருங்கூக்குரலிட்டு ஆடத் தொடங்குவேன்; தடபுடலான காரியங்களை யெல்லாம் செய்வேன்; அப்போது என் செய்கைகளைப்பற்றி நீங்கள் ஒன்றும் பேசக்கூடாது; நான் எதைப்பேசினாலும் எதைச் செய்தாலும் அவையெல்லாம் என் செயல்களென்று நீங்கள் நினைக்கலாகாது; எமன் என்மேல் ஏறிக்கொண்டு என் மூலமாகவே அந்தச் செயல்களையெல்லாம் செய்வான். ஆகையால் அச்சமயத்தில் எந்தச் செய்கைகளையும் அவன்

செய்கைகளென்றே நீங்கள் நினைக்கவேண்டும்; அப்படி நினைத்து என்மேல் அவ்வாறு வரும் எமதேவின் என்ன செய்தாலும் நீங்கள் ஒன்றும் பேசாமல் மௌனமாய் வாய் பொத்தி அவன்முன்னே நின்று அவனுடைய உக்கிரமெல்லாம் சற்று ஒடுங்கியபின் உங்களுக்கு வேண்டிய வரங்களை அவனிடம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று பின்னே தான் செய்யப்போகும் கொடுங் காரியங்களுக் கனுசரிப்பாக அவனுக்குப் பெரிய உபதேசம் செய்தான். இவற்றைக் கேட்டுச் சுப்பையனும் முத்துக்கருப்பியும் பேரானந்தக் கடலில் மூழ்கினவர்களாய் மலையாளபகவதியை நோக்கி, "நீ எங்களுக்கு அதிகமாகச் சொல்லவேண்டாம்; மூர்க்க தெய்வங்களுக்குத் தக்கபடி நடந்துகொள்ளுதல் எங்களுக்கு நன்றாய்த் தெரியும்; நீ உன் இஷ்டம்போல காரியத்தை நடத்து" என்று கூறினார்கள்.

இதைக் கேட்டவுடன் பூசாரி பகவதி ஆசாரி, "இவர்கள் நம்முடைய வலையில் சிக்கிக்கொண்டார்கள்" என்று சந்தோஷித்து, எழுந்து நின்று எமன் உருவத்திற்குச் சாம்பிராணிப் புகைகாட்டிச் சூடதீபாராதனை செய்து பழையபடி உட்கார்ந்து,

"ஓம் எமராஜனே நம, ஓம் எமலோகாதிபனே நம, ஓம் சண்டப்பிரசண்டனே நம, ஓம் சனி சகோதரா நம, ஓம் சூரியபுத்திரா நம, ஓம் தென்றிசைத் தலைவனே நம, ஓம் சமதேவனே நம, ஓம் தருமதேவனே நம, ஓம் தருமன்றந்தையே நம, ஓம் கூற்றுவனே நம, ஓம் அந்தகனே நம, ஓம் செங்கோற்கடவுளே நம, ஓம் நமதேவனே நம, ஓம், வைவச்சுதனே நம, ஓம் நடுவனே நம, ஓம் அரியே நம, ஓம் எருமையூர்தியே நம, ஓம் காலதேவனே நம, ஓம் காலே நம, ஓம் மறலியே நம, ஓம் மடங்கலே நம, ஓம்

பாசத்தனே நம, ஓம் சிவந்தகண்ணே நம, ஓம் திடகாத்தி ரனே நம, ஓம் வீரப்பிரதாபனே நம, ஓம் வெற்றிக்கொடி யனே நம, ஓம் சகல ஜீவன்களையும் தாவிப்பிடிப்பவனே நம, ஓம் ஏழைகட்கிரங்குபவா நம, ஓம் என்னை யாண்ட வனே நம, ஓம் பரத்தையருயிரைப் பதைக்கப் பிடிப்ப வனேநம, ஓம் பழிசெய்வோரைப் படாதபாடு படுத்துபவா நம, ஓம் திருடர் முகத்தைத் தீயாற்சுடுபவா நம, ஓம் தரு மஞ் செய்யாதாரைத் தாவிப்பிடிப்பவா நம, ஓம் பொய் சொல்லுவோரைப் புலிநாகிற் றள்ளுபவா நம, ஓம் அன் பில்லாதாரை நெஞ்சைப் பிளப்பவா நம, ஓம் முறைகடந் தவர்களை மூச்சைப்பிடிப்பவா நம, ஓம் அங்கார முள் ளோரை அழுத்திக் கொல்பவா நம, ஓம் மோசஞ் செய்த வரை மூக்கிற் குத்துபவா நம, ஓம் வாங்கினகடன் கொடுக் காதவரை வயிற்றிலறைபவா நம, ஓம் நயவஞ்சகம் செய்ப வரை நாவி லடிப்பவா நம, ஓம் தெய்வபக்தி யில்லாதவரைச் சீரழிப்பவா நம, ஓம் பிறர்நிந்தை பேசுவோரைப் பெருமை கெடச் செய்பவா நம, ஓம் பொறாமை யுடையவரைப் பொன்றச்செய்பவா நம, ஓம் படித்தும் புத்தியில்லாதவரைப் பல்லைப் பிடுங்குபவா நம, ஓம் நூல்களைத் தப்பாக வெளி யிடும் தடியரைக் கொல்பவா நம, ஓம் புத்தகம் பிழைதிருத் திய புலவர்க்கொன்றும் கொடாமல் அவரை அவமதிக்கும் அயோக்கியரை அழிப்பவா நம, ஓம் ஒன்று மறியாவிடி னும் தற்பெருமை கொள்ளுவோரை ஓங்கியடிப்பவா நம, இந்தச் சமயம் நீ ஏழைக்கிரங்கி, என்றனை வேண்டி யிங்கே வணங்கும், சுப்பையன்றனக்கு நாள் சுருங்கியிருந்தாலும், நான் செய்யும் பூஜைக்கு நாடி நீயிரங்கி, அவர் பெண்டாட் டியின் அலங்கோலம் பார்த்துப், பிள்ளை யிறந்தபெருந்துயர் பார்த்து, அவர் நாடிக் கொடுத்த நற்பணக் காணிக்கையை, ஏற்றுக் கொண்டு நீ இப்பொழுதே வந்து, இவர்க்கு உயிர்ப்

பிச்சை கொடுப்பாய் ஓம் நமதேவனே, தாமதஞ் செய்யாது தாவியே வாவா ஓம்.''

என்னும் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு மிகவும் பக்தியுள்ளவன்போல் பணங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் போட்டு அர்ச்சனை செய்தான். இவற்றை யெல்லாம் கும்பிட்டு விழுந்தபடியே கேட்டுக் கொண்டிருந்த சுப்பையன், "நமது விஷயத்தில் பூசாரி அண்ணன் அதிக உழைப் பெடுத்துக்கொள்ளுகிறார்; வேறொருவருக் கானால் இவ்வளவு மந்திரங்கள் சொல்லமாட்டார்'' என்று சந்தோஷத்தை யடைந்து கொண்டிருந்தான்.

சுப்பையன் சாமான்கள் எமனால் நாசமாதல்.

இப்படி யிருக்குஞ் சமயத்தில், மலையாள பகவதி, மேற் கண்டபடி மந்திரங்கள் முழுமையும் சொல்லிப் பணங்களால் எமனுக்கு அருச்சனை செய்து முடித்தவுடன், வானம் இடிந்து விழுந்ததுபோல ஒரு பெருஞ்சப்தமிட்டு, உடம்பைக் குலுக்கிக் குலுக்கித் தேகமெங்கும் மயிர் சிலிர்க்க, அறுத்த கோழியின் தலை ஆடுவது போலத் தலையை அங்குமிங்குமாக அசைத்து, இரண்டுகைகளினால் ஓங்கித்தரையின் மீது ஓயாமல் படீர் படீரென்னும் சப்த முண்டாக மோதி, நெஞ்சிலும் ஒருவிதமான சப்தமுண்டாகும்படி அடித்துக் கொண்டு அவன் தலையிலிருந்த ஐந்தாறு மயிருள்ள குடுமி முடிப்பானது அவிழ்ந்து காற்றிற் பஞ்சு சுழல்வது போலச் சுழன்றுகொண்டிருக்க, அங்கிருந்த தாம்பிரத்தட்டு முதலியவற்றை யெடுத்துப் பக்கத்திலிருந்த மண்பானை சட்டிகளெல்லாம் உடைந்து நொறுங்கும்படி அங்கும்மிங்கும் எறிந்துதடபுட வென்ன உருட்டியும், எழுந்து நின்று துள்ளிக்குதித்தும், அதிகமான குளிர்சுரங் கண்டவனுக்குத் தேகமானது எப்படி நடுக்க முறுமோ அப்படியே தேகநடுங்குதலைக் காட்டியும், தங்கள் கழுத்தை யறுக்குஞ் சமயத்தில் ஆடு

கள் எப்படிச் சத்தமிடுமோ அப்படியே விகார சத்தங்களிட்டும், திடுதிடென்னும் சப்தமுண்டாகவோடி நான்கு பக்கத்துச் சுவர்களிலும் மோதியும், ஓவென்றலறியும், எமனுக்கு எருமைக்கடா வாகனமாதலால் அதன் குறிப்பைக் காட்டுவதற்கு எருமைக்கடா கனைப்பது போல் கனைத்தும், உடனே சமயல் வீட்டில் நுழைந்து அங்கிருந்த தண்ணீர்ப் பானைகளையும், மற்ற பாத்திரங்களையும் எடுத்து அவற்றுள் ஒன்றி லொன்றை மோதியுடைத்தும், சோற்றுப்பானை குழம்புச் சட்டி முதலியவைகளையும் எடுத்து ஆகாயத்தில் எறிந்தும், கதவுகளில் படீர் படீரென்னும் ஒலியுண்டாக மிதித்து அவற்றை யுடைத்தும், சுப்பையன் அரண்மனை முதலியவிடங்களில் சம்பாதித்து அங்கே அழகாக நிறைத்து வைத்திருந்த சில அருமையான கண்ணுடிப் படங்களை யெல்லாம் எடுத்துத் தூண்களில் மோதி உடைத்தெறிந்தும், அங்குள்ள பல வஸ்திரங்களையும் எடுத்து அடுப்பில் எரிந்து கொண்டிருந்த நெருப்பிற் போட்டுக் கொளுத்தியும், இன்னும் பல விதமான கொடுஞ் செய்கைகளைச் செய்தும் சுப்பையனுடைய எல்லாச் சாமான்களையும் நாசமாக்கி, வீட்டை வெறும் வீடாக்கித் தன்மேல் மும்முரமாய் எமன் வந்து விட்டதாக நடித்துக் கூத்தாடினன்.

அச் செய்கைகளைக் கண்ட சுப்பையனும், அவனுடைய மனையாளும் எழுந்து பதறிக்கொண்டு, "ஆஹா! நமக்கு வரங்கொடுக்க எமதருமராஜன், கோடங்கியின்மேல் வந்து விட்டார்; கோடங்கி அண்ணன் மிகுந்த பிரயாசையோடு இப்போது சொன்ன இந்த மந்திரங்களைக் கேட்டும் எமன் இங்கே வாராமலிருப்பாரா; உலகத்தில் இவைகளே உயர்ந்த மந்திரங்கள்; சில பேர் மந்திர மொன்றும் தெரியாமல் 'நானும் பூசாரி நீயும் பூசாரி' என்று சொல்லிக்கொண்டு திரிகின்றார்களே; அவர்களெல்லோரும் அண்ணன் பகவதியி

னுடைய தூசியிலே பெறுவார்களா? இவர் இங்கே செய்த வேலைகளை நாம் பார்க்கும்போது நமக்கு மிகுந்த ஆச்சரிய முண்டாகின்றது; மனிதனால் செய்ய முடியாத காரியங்களை யெல்லாம் இவர் இப்போது செய்திருக்கிறார்; எமதருமரா ஜன் இவர்மீது வராமலிருந்தால் இவைகளை யெல்லாம் செய் தல் இவரால் முடியுமா? இந்தச் செய்கைகளினாலேயே எமன் இவர்மீது வந்திருப்பது நிச்சயமாக விளங்குகின்றது, நாம் கேட்கும்படி இவரிடம் எருமைக்கடாச் சப்தமுமுண் டாயிற்று; எமன் அவ்வாறு வந்ததற்கு அதைக்காட்டிலும் வேறே சாக்ஷி வேண்டியதில்லை; நாம் செய்த தவமே தவம்" என்று சாமான்கள் நாசமானதையும் கவனியாமல், "எமன் மிகுந்த கோபத்தோடு வந்திருக்கிறார்; நாம் அவரை வணங் கிச் சமாதானப்படுத்த வேண்டும்" என்று யோசித்துச் சாரா யங் குடித்தவனைப்போற் குதிக்கின்ற மலையாள பகவதிக்கு முன்னே சென்று மிகவும் பயபக்தியோடு வாய்பொத்திக் கைகட்டி வஸ்திரத்தை ஒடுக்கிக்கொண்டு நின்று அவனே எமனென்று நினைத்து அவனை நோக்கி, "எங்கள் ஆண்ட வனே! நீ எங்கள்மீது கோபஞ் செய்ய வேண்டாம்; ஏழைக ளாகிய நாங்கள் உனக்கு என்ன குற்றம் செய்திருந்தாலும் நீ அவற்றை மன்னித்தருள வேண்டும்; நாங்கள் உன் பாதத் தையே நம்பியிருக்கின்றோம்" என்று துதித்தார்கள்.

சுப்பையன் எமனிடம் கும்பிட்டுவிழுந்து குடுமியை யிழத்தல்.

இந்தச் சமயத்தில் மலையாளபகவதி, "நாம் இப்போது என்ன அக்கிரமம் செய்தபோதிலும் அதை இவர்கள் கவ னிக்கவே மாட்டார்கள்; நாம் செய்பவற்றை யெல்லாம் எமன் செய்கைகளென்றே நினைத்துக் கொள்வார்கள்; ஆத லால் நாம் இவர்களுடைய சாமான்களை நாசமாக்கினவரை யில் இவர்களை விட்டுவிடக் கூடாது; இன்னும் சுப்பையனை

யும் ஒருகை பார்த்துவிடவேண்டும்" என்று நினைத்து, அந்தச் சுப்பையன் வணங்கினதற்கு எமன் மேலும் அதிக கோபம் அடைவதுபோல் நடித்துக் கூகூவென்று சப்தமிட்டுப் புலிபோலத் தாவி அவனுடைய குடுமியை இரண்டு கைகளாலும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தன்னுடைய பலத்தை யெல்லாம் சேர்த்து அப்படியும் இப்படியுமாக இழுத்துச் சடக்கென வளைத்தும், திரிகையைத் திரிப்பது போலக் கிறுகிறெனச் சுழற்றியும், அவன் முகத்திலிருந்த மீசை மயிர்களை இரண்டு மூன்றாகச் சேர்த்து இரத்தம் வரும்படி வெடுக்கு வெடுக்கெனப் பிடுங்கியும், மிக்க ஆங்காரங்கொண்டு இரண்டு கைகளினாலும் ஓங்கி அவனுடைய முதுகில் திடீர் திடீரென ஐந்தாறு அறை அறைந்து, பழைய படியும் குடுமியைப் பிடித்துக்கொண்டு சுழற்றினான். அவ்வாறு, சுழற்றவே, அந்தோ பரிதாபம்! சுப்பையனுக்கு மேகநீர் வியாபித்துத் தலையெல்லாம் பற்றுவிழுந்து மயிர்கள் வேரற்றுப் போயிருந்தபடியால் அவன் குடுமி அடியோடு பறிபட்டுப் பூசாரி கையில் வந்துவிட்டது. அப்பொழுது சுப்பையன் தலையில் மயிரில்லாமல் மொட்டையனாகி விட்டான். அவ்வாறு குடுமி போனதைப்பற்றி அவனுக்குண்டான விசனத்திற்களவேயில்லை. அதனால் அவன், "ஓகோ! மோசம் வந்துவிட்டது; நாம் இந்த வேதனையடைவதைக் காட்டிலும் இறந்துபோவது மெத்த நலமென்று தெரிகிறது; நேற்றுக் குலதெய்வத்தினிடம் நாம் வாங்கினஉதை நமக்கு நம் ஆயுள்வரைபோதும்; அதனாலேற்பட்ட வேதனையே இன்னும் நீங்கவில்லை; அதற்குள் இந்த இழவு எமனும் இப்படி நம்மை மோதுகிறானே; நமது அருமையான குடிமியும் போய்விட்டதே! குடுமிபோனாலும் பாதகமில்லை; இவன் இவ்வாறு அடிப்பதற்குத் தக்க காரணமுண்டு: அது யாதெனில், இவன் நம்முடைய உயிரைக்

கொண்டுபோதற்கு ஒருதினங் குறிப்பிட்டு அதில் கொண்டு போகக் கருதி யிருப்பான். அதை நாம் மாற்றப் பிரயத்தினப் படுகிறோம். அது இவனுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியிருக்கும். அதனாலேயே இவன், இவ்வாறு கோபிக்கின்முன். நாம் இந்தச்சமயம் இவன்செய் யும் வேதனைக்கு வருந்தக்கூடாது; எப்படியும் நாம் சாகாம லிருந்தால் அதுவே நமக்குப்போதும்; இந்தச் சமயம் இவ னுடைய கோபம் தணிவதற்கு நாம் இவனிடம் பணிவான வார்த்தைகளைச் சொல்லி இவனைத் துதிக்கவேண்டும்" என்று பலவாறு சிந்தித்துக் கோடங்கியின் அடியாலுண் டான வேதனையைச் சகிக்க முடியாமையால், "ஐயோ! அப்பா!" என்று கதறி, மீண்டும் எமன் வந்திருப்பதாக நடிக்கும் பூசாரி முன்நின்று வணங்கி அவனை நோக்கி, "கடவுளே! நீ என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்; நான் மிகவும் ஏழை; என்மீது நீ இவ்வளவு கோபஞ் செய்யலா காது; நான் என்னகுற்றம் செய்திருந்தாலும் நீ அதைப் பொறுத்து எனக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டும்" என்று கெஞ்சினுன். அப்போது அவன் மனைவியாகிய முத்துக் கருப்பி அவன்பட்ட அவஸ்தையைக்கண்டு திடுக்கிட்டு, "இத்தேவதை ஒருசமயம் நம்மீதும் பாய்ந்து மோதி விடுமோ" என்று பயந்து சற்றுதூரமாகவே நின்றுகொண்டு கோடங்கியை நோக்கி, "எங்கள் தருமதேவதையே! நீ கோபம் கொள்ளவேண்டாம்; கிருபைசெய்து எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று பரிதாபத்தோடு கூறினாள்.

இவற்றையெல்லாம் பூசாரி பகவதி கேட்டுச் சற்று மனமிரங்கினவன்போல் பாவனைகாட்டி, அவனால் வேரோடு பிடுங்கப்பட்டு அவன் கையில் அகப்பட்டிருந்த சுப்பைய னுடைய குடுமியைக் கீழே போட்டுவிட்டு அவனை நோக்கி, "அடா துஷ்டப்பயலே! என்னை நீ எதற்காக அழைத்தாய்?

நீ என்னைக் கூப்பிடத்தக்க யோக்கியதையுள்ள மனிதனா? நீதானா என்னை வசப்படுத்தக் கூடியவன்? உன்னை நான் பாசத்தினால் வீசிச் சூலத்தால்மோதி உன்நெஞ்சம் பதைக்கப் பதைக்கக் கொண்டு போகின்றவன் என்பதை நீ அறியாயா? நீயா என்னிடத்தில் உயிர்பெற்றுக் கொள்பவன்?" என்று பலவிதமான தூஷணை வார்த்தைகளைப் பேசி, "என்னை ஏன் அழைத்தாய்?! ஏன் அழைத்தாய் ?!!" என்று சப்தமிட்டான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சுப்பையன், அத்தூஷணைகளையும் கவனியாது, "இப்பொழுதுதான் எமனுக்கு நம் மீது சிறிது இரக்கம் வந்திருக்கிறது; அதனாற்றான் நம்மை நோக்கிச் சில வார்த்தைகளைப் பேசுகிறான்; இனி எப்படியும் நமது காரியம் சித்தியாகும்" என்று நினைத்து நடிப்பாக வந்திருக்கும் அந்த எமன் முகத்தை நோக்கி, "கடவுளே! எனக்கு ஆயுள் முடிந்துவிட்டதாகவும், என்னை நீ பிடித்துக்கொண்டு போகப்போகிறதாகவும், நான் கோடங்கியால் கேள்விப்பட்டேன்: அதற்காகப் பயந்தே நான் உன்னிடம் வணங்கி உயிர்ப்பிச்சை பெற்றுக் கொள்ளும் பொருட்டு உன்னை இப்பொழுது வரவழைத்தேன்; ஆதலால் நீ என்மீது கிருபைசெய்து, என் மனைவியுடைய பரிதாப நிலைமையையும் நோக்கி, இந்தச்சமயம் என்னைக் கொண்டுபோவதை நிறுத்திவிட வேண்டும்; எனக்கு இருந்த ஒரு குழந்தையும் தவறிப் போய்விட்டது. ஆதலின் இரண்டு மூன்று குழந்தை குட்டிகள் உண்டாகும் வரையிலாவது நீ என்னைக்கொண்டு போகாமலிருக்கவேண்டும்; இந்த வாத்தை மாத்திரம் நீ எனக்குக் கொடுக்கவேண்டும்" என்று தொழுது சாஷ்டாங்கமாகப் பூமியில் விழுந்து எமனாகிநடித்த பூசாரியின் இரண்டு பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். முத்துக்கருப்பியும்

அவ்வாறே வேண்டுதல் செய்துகொண்டு நின்றாள். (மனிதரின் ஆயுள் முடிந்தால் என்ன செய்தாலும் நிற்காது என்ற உண்மையை அறியாததனாலேயே இந்தப்பேதைகள் இத்தகைய மூடச் செய்கையில் அகப்பட்டுக்கொண்டு மயங்கினார்கள்; இத்தகையர் இப்போதும் பலவிடங்களில் இருக்கிறார்கள்.)

இவ்வாறு அவர்கள் கேட்டுக்கொண்டவுடன் எமன் தன்மேல் வந்திருப்பதாக நடித்த பகவதி சுப்பையனைப் பார்த்து, "அடா மூர்க்கா! நான் உன்னை ஒரு பொருட்டாக நினைத்து இப்பொழுது வரவில்லை; இந்தப் பூசாரியாகிய பகவதிசெய்த பூஜைக்கும், நீ அர்ச்சனைக்குப் பணம் வைத்ததற்குமே வந்தேன்; எஃதெப்படி யிருந்தாலும் சரி; இந்தச் சமயம் நான் உன்னுடைய வேண்டுதலுக்கிரங்கி உன்னிஷ்டப்படியே நீ கேட்ட வரத்தைக் கொடுக்கிறேன் ; நான் இவ்வாறு செய்வது உனக்கு ஆயுளை அளந்தேற்படுத்திய பிரமாவின் கட்டளைக்கு விரோதமாகும் ; அதனால் அவர் கோபித்துக்கொள்வார்; ஆயினும் நான் அவருக்குச் சமாதானம் சொல்லிக்கொள்கிறேன் ; இப்போதுன்னை நான் விட்டாலும் உன்னுடைய எழுபத்தைந்தாவது வயதின் முடிவில் கொண்டுபோக வருவேன்; அப்போது நீ தடை சொல்லாமல் என்னுடன் வரவேண்டும்; இது தவிர எனக்கு நீ அர்ச்சனை செய்த பணங்களை மயானத்திற் கொண்டுபோய்ப் புதைத்துவிட வேண்டும்; ஏனென்றால் யாருடைய உயிரையாவது நான் பிடிக்கவேண்டியகாலத்தில் பிடிக்காமல் இவ்வாறு விட்டுவிட்டால் அதற்குப் பிரமாவும் இசையும்படி அவருக்குக் கட்டளை யிடவேண்டுமென்று ஈசுரனிடத்தில் ஒரு காலத்திற் கேட்டுக்கொண்டேன்; அதற்கவர், 'உனக்குப் பூலோகத்தில் வரும் வரும்படிகளையெல்லாம் எனக்குக் காணிக்கையாகக்'கொடுத்து வருவாயானால் நான் இக்கட்ட

லேயைப்பிறப்பிப்பேன்' என்று என்னிடம்கூறினர். அதற்கு நான் இணங்கினேன்; அது முதல் அவ்வாறே என் வரும் படிகளையெல்லாம் அவ்வீசுரனுக்குச் சமர்ப்பித்து வருகிறேன்; அவ்வழக்கப்படியே இந்த ரூபாய்களையும் நான் ஈசுரன்பால் கொடுக்க வேண்டும். நீ இந்தப் பூசாரியைக் கூட்டிக் கொண்டுபோய் நான் சொன்னபடியே அவற்றை இடுகாட்டில் புதைத்து விடு; நான் அவற்றை ஈசுரனிடத்திற் சேர்த்து விடுவேன்; ஈசுரனிருக்குமிடம் மயானமாகையால் அங்கே தான் அந்தப் பணங்களைப் புதைக்கவேண்டும்; வேறிடத்தில் புதைக்கக் கூடாது; அவ்வாறு அவற்றைப் புதைத்து விட்டு வந்தபின்பு நீ எப்பொழுதும் அவ்விடத்தைத் திரும்பிப் பார்க்கலாகாது" என்று எமன் கூறுவது போலவே கூறினன். அவன், அந்த ரூபாய்களை அபகரித்துக்கொள்வதற்கே இவ்வளவு தந்திரம் செய்தான்.

இவற்றை யெல்லாம் கேட்டவுடன் பேதையாகிய சுப்பையன், போன தன்னுயிர் மீண்டும் தேகத்தில் வந்து விட்டதென்றே நினைத்துச் சந்தோஷித்து, ஆனந்தக் கூத்தாடித் தன் குடுமி போனதனுலேற்பட்ட மானக் கேட்டையும் கவனியாமல், "அப்பா! நாம் விரும்பிய காரியம் முடிந்தது! இனி எது எப்படியானலும் பாதகமில்லை" என்று பெரிய காரியத்தை நிறை வேற்றியவன் போல் திருப்தி யடைந்து உடனே தன் மனைவியோடு கோடங்கி பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து அவனை நோக்கி "கடவுளே! உன் கட்டளையை நான் நடத்துகிறேன்; என்னை மாத்திரம் நீ குடும்பத்தோடு கடைசிவரை காப்பாற்றவேண்டும்" என்று கூறினன். அதைக்கேட்டு எமன் போல நடித்த பூசாரி "அப்படியே நான் அதைச் செய்கிறேன்" என்று அவனுக்குத் தைரிய வார்த்தை கூறித் தட்டிலிருந்த விபூதியை எடுத்து

அவனுக்கும் அவன் மனைவிக்கும் கொடுத்தான். அதை இரு வரும் மரியாதையோடு வாங்கி, "இந்தப் பாக்கியம் யாருக் குக் கிடைக்கும்!" என்று சொல்லிக்கொண்டே நெற்றியிற் பூசி வாயிலும் போட்டுக் கொண்டார்கள். அச்சமயத்தில் பகவதி தன்மீது வந்திருந்த எமதருமராஜன் போகிறதாக நடித்துச் சுப்பையனை நோக்கி, "அப்பா! நான் போய்வருகி றேன்" என்று சொல்லி அந்த எமன் போய்விட்ட பாவ னையைக் காட்டித் தான் செய்த கோரமான செய்கைகளை யெல்லாம் நிறுத்திச் சாதாரண மனிதன் போலாகி, உடம்பி லுண்டான வியர்வையைத் துடைத்துக் கொண்டு, சுப்பை யனை நோக்கி, "அப்பா! இந்தத் தெய்வம் எவ்வளவு மூர்க்க மாய் வந்து விட்டது! இது செய்த தடபுடல்கள் என்னால் சகிக்க கூட வில்லையே; இதுவரை என் மீது எத்தனையோ மூர்க்கமான தெய்வங்களெல்லாம் வந்திருக்கின்றன; அவற் றுள் இதைப் போன்ற கொடூரமான தேவதையை நான் கண்டதில்லை; நானாகையினாலே இது செய்த வீரச்செய்கை களை யெல்லாம் தாங்கினேன்; வேறொருவனாயிருந்தால் இது அவனை இடுப்பை முறித்துத் தள்ளிவிட்டுப் போய்விடுமே" என்று தன்னுடைய பிரதாபத்தைச் சொல்லிக் கொண்டே உட்கார்ந்தான். அப்போது சுப்பையனும் அவன் மனைவி யும், "இன்றைக்குப் பூசாரி அண்ணனுக்கு மிகுந்த சிரமம் உண்டாய் விட்டது" என்று சொல்லிக் கொண்டு புன் சிரிப் போடு அவன் பக்கத்தில் நின்றார்கள். பகவதி, குடுமி யிழந்து மொட்டைத் தலையோடு நின்ற சுப்பையனைப் பார்த்து, மனதிற்குள், தான் நினைத்ததை நடத்தினதற் காகச் சந்தோஷித்து வெளிக்கு வருந்தினவன் போல நடித்து, தான் முன்னேசெய்தவைகளில் ஒன்றுமறியா தவன் போன்று "என்ன அண்ணே! பாழுந் தெய் வம் உன் குடுமியைக் கூடப் பிடுங்கி எறிந்து விட்

டதோ? நீ குல தெய்வத்தாலும், இந்த எமனாலும் இரண்டு மூன்று நாட்களாக அளவில்லாத கஷ்டத்தை அடைந்துவிட்டாய்” என்று அவனுக்கு உபசாரவார்த்தை கூறினான். அதற்குச் சுப்பையன், “அண்ணே! நான் என்ன கஷ்டப் பட்டாலும் பாதகமில்லை; நாம் எண்ணிய காரியம் முடிந்ததே; போகிற என்னுடைய உயிர் நிலைக்கும்படி தேவதை வரங் கொடுத்ததே; இதைப்பற்றி நான் சந்தோஷிக்கிறேன்” என்று மிகவும் திருப்தியாகப் பதில் கூறினான்.

சுப்பையன் பணத்தைச் சுடுகாட்டில் புதைத்தல்.

பின்பு பகவதி, சுப்பையனையும், முத்துக் கருப்பியையும், தன் சிஷர்களாகிய சொக்கன், பெரியணன் ஆகியவர்களையும் உட்காருவித்து எல்லோருக்கும் பிரசாதங்களை எடுத்துக் கொடுத்து விட்டுத் தானும் தின்றான். எல்லோரும் சாப்பிட்டு முடிந்தவுடன், பூசாரி சுப்பையனை நோக்கி, “என்ன அண்ணே! எமதருமன் சொன்னதை நடத்தவேண்டாமா? அதற்கு நேரமாக வில்லையா?” என்று கூறினான். உடனே சுப்பையன், “அதை நடத்திவிட்டுத் தான் மறுவேலை பார்க்கவேண்டும்; என்னால் அதற் கொன்றும் தடையில்லை; இதோ நான் புறப்படுகிறேன்” என்று எழுந்தான். அப்போது பகவதி, “சரி; அப்படியே நாம் செய்வோம்; இன்னுமொரு விஷயமும் நான் உனக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது; அதாவது: இந்த மாவினாற் செய்யப்பட்ட எமரூபத்தை நீ உன் நடுவீட்டில் வைத்து வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் இதற்குப் பூஜைசெய்து சாம்பிராணித் தூபம் காட்டி வரவேண்டும்” என்றான்; அதற்குச் சுப்பையன், “அண்ணே! அந்தப்படியே நான் அதைச் செய்கிறேன்; எனக்கு உயிர் கொடுத்த அத் தெய்வத்துக்குத் தினந்தோறுங் கூடப் பூஜை நடத்தி வருவேன்; தினமும் அதை

வணங்கி விட்டுத்தான் நான் சாப்பிடுவேன்; அதைப்பற்றி நீ எனக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை" என்று ரைத்தான். உடனே பூசாரி எமரூபத்தை யெடுத்துச் சுப் பையனுடைய நடுவீட்டுக்குள் வைத்து அவனைப் பார்த்து, "சரி; நீ பணங்களை எடுத்துக் கொண்டு வா; நாம் சுடுகாட் டுக்குப் புறப்படுவோம்" என்றான். உடனே சுப்பையன் பணங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அவ்வாறு புறப்பட்டவுடனே, பூசாரிபகவதி, சிஷ்யர்களை நோக்கி, "சுடுகாட்டுக்கு நாங்கள் இருவருந்தான் போகவேண்டும்; அது துஷ்ட தேவதைகள் வாசஞ் செய்யக் கூடிய இடமா கையால் சிறுவயதுள்ள நீங்கள் அங்கே வந்தால் பயப்படு வீர்கள்; ஆதலால் நீங்கள் வீட்டுக்குப் போய் விடுங்கள்" என்று சொல்லி அவர்களைத் தன் வீட்டிற்கு அனுப்பி விட்டுச் சுடுகாடு நோக்கிச் சென்றான். மேற் கூறியபடி புறப்பட்ட சுப்பையனும் தன் மனைவியிடம் கதவை மூடிக்கொள்ளும் படி சொல்லிவிட்டு அவனைப் பின் தொடர்ந்து சென்றான். அப்போது இரவு பாதிச் சாமமிருக்கும்.

இவர்களிருவரும் இவ்விதமாக வெளியேறி மயா னத்தை நோக்கிப் போகும்போது தெருக்களில் ஆளரவமே கிடையாது; இருட்டும் அதிகமாயிருந்தது. அப்போது பூசாரியாகிய மலையாள பகவதி, சுப்பையனை நோக்கி, "அண்ணே! இதுதான் நல்ல சமயம்; நீ விரைவில்வா; நம்மை யாருங் காணாதபடி நாம் ஊருக்கு வெளியே போய் விட வேண்டும்" என்று விரைந்து நடந்தான். சுப்பைய னும் அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டு அவனைத் தொடர்ந் தோடினான். கொஞ்ச நேரத்திற்குள் இவர்கள் ஊருக்கு வெளியிற் போய் விட்டார்கள். அவ்வாறு ஊரை விட்டுத் தாண்டினவுடன் சுப்பையன், பகவதியை நோக்கி,

"அண்ணே! என்ன! இந்தத் தேவதை இப்படி ஆர் பாடம் செய்து விட்டதே; நான் இதுவரை இவ்விதமான கொடுந் தேவதையைக் கண்டதே யில்லை; எனக்கு உடம்பு வலிதீர எட்டு நாள் செல்லும்; நான்வெளி யேறுவதற்கு யோக்கியதை யில்லாமல் சங்கடப்படும்படி அது என் குடுமியையும் பிடுங்கி எறிந்து விட்டது; இதனால் எனக்கு மிகுந்த மானக்கேடாயிருக்கிறது" என்று கூறினான். அதைக்கேட்டுப் பகவதி, "ஐயோ! இது மிகவும் கெட்ட தேவதை; இது தன்னுடைய செய்கைகளில் நூற்றிலொரு பங்கும் உன்னிடத்தில் காட்டவில்லை; முழுவதும்காட்டி யிருந்தால் உன்னால் அதனைச் சகித்தல் முடியாது; முன் னொரு மனிதனுக்காக நான் இவ்விதம் எமபூசை நடத்தும் போது இதனுடைய முழு ஆடம்பரத்தையும் பார்த்திருக்கி றேன்; அப்பொழுது இது வந்து அவனைப் படுத்தியபாடு சொல்ல முடியாது; இது அவன் வீடெல்லாம் இரத்தப் பிரவாக மாகும்படி செய்துவிட்டது; இது மிகவும் கொடுந் தேவதை; இதைப்பற்றி இப்போது நீ ஒன்றும் சொல் லாதே; மீண்டும் இது வந்து உன்னைச் சாடினாலும் சாடி விடும்" என்று அவன் அடிபட்ட விஷயத்தில் வருத்தப் படாம லிருக்கத்தக்க வார்த்தைகளைச் சொன்னான். அதைக் கேட்டதும் சுப்பையன் பயந்து வாயிலடித்துக்கொண்டு "ஐயோ! நான் அதைப்பற்றித் தூஷணையாக ஒன்றும் சொல்லவில்லை; அதனிடத்தில் நானடைந்த கஷ்டத்தைப் பற்றி மாத்திரம் சொன்னேன்; எனக்கு உயிர் கொடுத்த தெய்வத்தையா நான் தூஷிப்பேன்; எது எப்படியானாலும் நமக்குக் காரியம் முடிந்ததேபோதும்" என்று கூறினான். இவ்விதமாகவே இருவரும் பேசிக்கொண்டு மயானத்திற் போய்ச் சேர்ந்தார்கள்.

அவ்வாறு போய்ச் சேர்ந்தவுடன், பூசாரி, பின்னல்

தான் வந்து பார்த்தால், தனக்கு அடையாளந் தெரியும்படி யான ஓரிடத்தைப் பார்த்து, அவ்விடத்தில் சதுரமாகக் கோடுகீறி அந்த அளவில் ஒரு குழி தோண்டும்படி சுப் பையனிடம் சொன்னான். அப்படியே சுப்பையன், அங்குக் கிடந்த ஒரு கட்டையை எடுத்து மிக்க பிரயாசையோடு குழியைத் தோண்டினான். அவ்வாறு குழி தோண்டப் பட்டவுடன் பூசாரி, அந்த ரூபாய்களை ஒரு துண்டில் முடிந்து அதற்குள் போடும்படி சுப்பையனிடத்தில் கூறி னான். உடனே அவன் பயபக்தியோடு ரூபாய்களைத் துண் டில் முடிந்து அக் குழிக்குள் போட்டு விட்டான். பின்பு பூசாரி அதில் மண்ணைத் தள்ளி மூடிவிட்டு அக் குழியின் மீது சக்கரம் எழுதுவதுபோலக் கையால் சில கோடுகளைக் கீறிச் சுப்பையன் செவிகளில் கேட்கும்படி,

"ஓம் எமலோகாதிபனே!
இந்தச்சமயம் இவ்விடத்துள்ள
சுப்பையனுனது சொற்படி ரூபாய்
நானூற்றைம்பது நாடிப் புதைத்ததால்
எடுத்துக்கொண்டு நீ எப்பொழுது மவரை
ஆண்டருள வேண்டும் ஆதவன் மகனே!
சீக்கிரம் சீக்கிரம் திருவருள் புரி நான்
சொன்னபடி செய்வாய் துரிதம் துரிதம்
சிவன்மே லாணை சீக்கிரம் சீக்கிரம்
சுவாகா."

என்று பல மந்திரங்களை ஓதி முடித்து உடனே எழுந்து சுப் பையனை நோக்கி, "அண்ணே! நீ நில்லாதே! நில்லாதே!! விரைவில் திரும்பிப்பாராமல் என் கூடவே ஓடிவந்து விடு" என்று சொல்லிக்கொண்டே மிகுந்த வேகத்தோடு ஓடி னான். மேற்கண்டபடி பூசாரி மந்திரம் ஜெபிக்கும்போது சுப்பையன் முந்தி அடிபட்ட பயத்தினால் அவனுடைய

செய்கையைப் பார்த்ததும், "ஓகோ! மோசம் வந்து விட்டது; இவ்விடத்துமல்லவா அந்தத் துஷ்டதேவதையைப் பூசாரி அண்ணன் அழைக்கின்றார்; இங்குவந்து அது நம்மை என்னபாடு படுத்தப்போகிறதோ" என்று கலங்கிக்கொண்டிருந்தான். ஆதலால், பூசாரி மேற்கூறியபடி சொல்லிவிட்டு எழுந்தோடவே, "அந்தத் துஷ்டதேவதை பழையபடியும் எங்கே தம்மீது வந்துவிடுமோ என்ற அச்சத்தினாற்றான் இவர் இப்படி ஓடுகின்றார்; இவரே இவ்விதமாக ஓடும்போது நாம் மந்தமாயிருக்கலாகாது" என்று பயந்து மிகுந்த வேகங்கொண்டு பூசாரி, தனக்கு நான்கு கெஜதூரம் பிந்தி வரும்படியாக முந்தியே ஓடினான். இப்படியே இருவரும் ஊருக்குச்சமீபத்தில் போய்ச்சேரும்வரை ஓடிப் பெருமூச்சுவிட்டு திணறிக்கொண்டு பேசுதற்கு முடியாமல் ஊர் சமீபித்தவுடன் சிறிது நின்று மெல்ல நடக்கத் தொடங்கினார்கள். இவர்கள் ஓடிய இளைப்பினால் பதினைந்து நிமிஷம் வரை இவ்விருவரும் பேசமுடியவில்லை; இவர்களின் கால்களும் ஓய்ந்து போய்விட்டன; கொஞ்ச நேரஞ்சென்று இவர்களுக்கு இளைப்படங்கிற்று. அதன்மேல் சுப்பையன் பூசாரியை நோக்கி, "அண்ணே! இக்காரியத்திலும் எவ்வளவோ பிரயாசைதா னிருக்கிறது!" என்றுரைத்தான். அதற்குப் பூசாரி, "அண்ணே! போகிற உயிரைத் திருப்புவது இலேசான காரியமா?" என்று சொன்னான். உடனே சுப்பையன் "அது சரிதான்; இது இலேசில் முடியக்கூடிய காரியமில்லை; என்னை முன்னிட்டு உனக்கும் அதிக சிரமம் ஏற்பட்டது" என்றான். அதைக் கேட்டுப் பூசாரி, "நான் சிரமத்திற்கஞ்சினால் இந்தக் காரியம் முடியுமா? உன்னை முன்னிட்டே நான் இவ்வளவு பாடுபட்டேன்; மற்றவருக்கானால் இவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொள்ள மாட்டேன்" என்று மிகவும் விசுவாசிபோலக் கூறினான். இவ்வாறு பேசிக்

கொண்டே இருவரும் ஊருக்குள் போய்விட்டார்கள். சுப்பையன் வீடும் அவர்களுக்குச் சமீபித்து விட்டது. அப்போது பூசாரி, சுப்பையனை நோக்கி, "அண்ணே! இந்த இரகசியங்களை நீ எவருக்கும் சொல்லாதே; ஒரு சமயம் யாராவது இவற்றைப்பற்றி உன்னிடம் கேட்டால் நீ, 'நாங்கள் என் துன்பத்திற்கு ஒருவிதமான சாந்தி செய்தோம்' என்று அவர்களுக்குப் பொதுவாகக் கூறிவிடு; இது தவிர நீ சாகும் வரை இப்போது நாம் பணம் புதைத்த விடத்துக்குப் போகாதே; அவ்வாறு போனால் நீ பணத்தாசையால் வந்தாயென்று எமனுக்கு உன்மீது கோபம் வந்துவிடும்; அக்கோபத்தால் அவன் உன் உயிரைப் பிடித்தாலும் பிடிக்கக் கூடும்; ஆதலால் நீ அவ்விடத்தை மறந்துவிடு; நீ இறந்த அன்றைக்குத்தான் அந்தச் சுடுகாட்டுக்குப் போகவேண்டும்" என்று அவன் பணத்தை நினைத்துத் திரும்பிப்போகாமலிருக்கும்படி தந்திரமான வார்த்தைகளைக் கூறினான்.

இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் சுப்பையன், "பூசாரி அண்ணே! உன்னுடைய உத்தரவின்படியே நான் நடப்பேன்; நீ அதில் எள்ளளவும் சந்தேகம் கொள்ள வேண்டாம்; எனக்கென்ன அது தெரியாதா? நான் உண்கிற சோற்றில் மண்ணைப் போட்டுக்கொள்வேனா" என்றுரைத்தான். பின்பு பூசாரி அவனை நோக்கி, "சரி; நேரமாய்விட்டது; நீ போய் உன் வீட்டிற் படுத்துக்கொள்; நான் என் வீட்டிற்குப் போகிறேன்" என்று சொன்னான். அதைக்கேட்டுச் சுப்பையன் அவனை நோக்கி, "பூசாரி! இந்த நடுராத்திரி நேரத்தில் நீ தனியே போவதற்கு நான் சம்மதியேன்; உன் வீடுவரை உனக்குத் துணையாக வந்துவிட்டுப் பின்புதான் நான் என் வீட்டுக்குப் போவேன்" என்று அவன்மீதுள்ள தன்னுடைய நட்பின் மிகுதியைக் காட்டினான். அதற்குப் பூசாரி, "நீ வரவேண்டாம்; எனக்

குத் துணைவேண்டியதில்லை; மதினியார் தனியே அதிக பயந் தோடு படுத்திருப்பார்களாகையால் நீ விரைவில் வீட்டிற் குப் போ" என்று சொன்னான். அதன்மேல் சுப்பையன் அவனுடைய சொல்லைத் தடைசெய்யக் கூடாதென்று நினைத்து, அவ்வாறே அவனிடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டில் போய்ச் சேர்ந்து கதவைத் தட்டினான்; அவன் மனைவி ஓடிவந்து மிக்க ஆவலோடு கதவைத் திறந் தாள்; அவன் உள்ளே சென்றான்; மீண்டும் அவளால் கதவு மூடப்பட்டது.

இவ்வாறு சுப்பையன் வீட்டிற்குள் நுழைந்தபிறகு பூசாரி பகவதி, "சரி; பயல் போய்விட்டான்; நமது காரியம் சித்தியாகி விட்டது" என்று சந்தோஷித்து உடனே தன் வீட்டுக்குச் செல்பவனைப்போலப் போக்குக்காட்டி, வந்த வழியே திரும்பி மயானத்திற்குப்போய்ப் பக்குவமாகத் தான் வைத்த அடையாளப்படி, சுப்பையன் பணம் புதைத்த விடத்தைப் பார்த்து மிக்க ஆனந்தத்தோடு அப் பணத்தைத் தோண்டி யெடுத்துக்கொண்டு பழையபடி குழியை மூடிவிட்டுத் தன் வீட்டிற்குப்போய், தான் அதிக நேரம் உறக்கமில்லாமல் சிரமத்தை யடைந்திருந்தாலும் ரூபா நானூற்றைம்பது கிடைத்ததைப்பற்றி மிகவும் திருப்தியடைந்து, மேல் நடக்கவேண்டிய ஒரு பெருங் காரி யத்தைப்பற்றிய யோசனையோடு படுத்துக் கொண்டான்.

இவன் விஷயம் இப்படி யிருக்க, மேற்கண்டபடி வீட் டிற்குட் போன சுப்பையன், மிகவும் இளைப்போடு படுத்துக் கொண்டான். அவ்வாறு படுத்துக் கொண்ட அவனுக்கு அன்று முழுதும் நடந்த காரியங்களால் சிரமம் அதிகமா யிருக்கு மென்றும், அச் சிரமத்தைத் தணிக்க வேண்டு மென்றும் முத்துக்கருப்பி கருதி, அவனுடைய கால் கைக ளைப் பிடித்துச் சிரம பரிகாரஞ் செய்யத் தொடங்கினாள்.

அப்பிரசாதங்களை யெடுத்து மிகவும் திருப்தியோடு புசித்த தையும் நாம் நேரில் பார்த்திருக்கிறோம்.

சுப்பையனுக்குச் சோற்றுக் கவலை.

இவை நிற்க; மேற்கண்டவாறு சுப்பையனும், முத்துக்கருப்பியும் நித்திரை செய்துகொண்டிருக்கும்போது அவ்விரவு நீங்கிச் சூரியன் உதயமாயிற்று. அங்ஙனம் மறுநாள் விடியற்காலமாகியும் சுப்பையன் எழுந்திருக்கவேயில்லை. முதல் நாளிரவு முழுதும் அவன் மிக்க சிரமத்தை யடைந்தவனாதலால், நெடுநேரம்வரை தூங்கிவிட்டுப் பத்துநாழிகைக்கு மேல் எழுந்தான். அப்படி எழுந்தவுடன் தேவதைகளுக்குப் பூஜை நடத்திய விஷயங்களில் திருப்தியடைந்திருந்தாலும் அவன் மனதில் 'சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லையே' என்ற கவலைவந்து புகுந்துகொண்டது. அதனால் அவன் வீட்டில் நுழைந்து ஏதாவது உணவுக்கு அகப்படுமா என்று சாமான்களிருந்தவிடத்தைப் பார்த்தான். அவனுக்கங்கே ஒன்றும் அகப்படவில்லை. பின்னர் அவன், 'நகை ஏதாவது இருந்தால் அதை விற்றுப் பணம் சேகரித்து அதற்கு அரிசி வாங்கலா'மென்று யோசித்தான். அப்போது முத்துக்கருப்பி திருமங்கிலியம் தவிர அவனிடத்தில் வேறொன்றுமில்லை. அதனால் அந்த யோசனை பயனற்றதாகி விட்டது. அதன் மேல் அவன், 'வேறு யாரிடமாவது கடன் வாங்கலாமா' என்று யோசித்தான். அப்போது அவனுக்கு ஊரெல்லாம் பகையாயிருந்ததால் ஒருவரும் கடன் கொடுக்க மாட்டார்களென்பது விளங்கிற்று. அதனால் அவன் அந்த யோசனையையும் தள்ளிவிட்டான். இச்சமயத்திற்றான், அவன் முன்பு உத்தியோகத்திலிருக்கும்போது செய்தவை யெல்லாம் அக்கிரமங்களென்பதையும், அவற்றினாலேயே தான் எவரிடமும் கடன் வாங்குவதற்கும் ஏதுவில்லாமற் போயிற்றென்பதையும் தெரிந்து கொண்டான். இப்பொழுது அவ

னுக்கு இத்தகைய புத்திவந்ததனால் ஆவதென்ன? அவன் மேற்கூறியபடி உணவு தேடுதற்குப் பல யோசனைகளைச் செய்தும் எந்தவழியும் ஏற்படவில்லை. அவனுக்குப் பசி அதிகரித்து விட்டது. அந்தோ பரிதாபம்! அவ்வாறு பசி அதிகரித்தவுடன் அவன் தெய்வங் கும்பிட்டதினாலடைந்த திருப்தியெல்லாம் அவனை விட்டு எங்கேயோ பறந்துபோய் விட்டது; அதனால் அவன் "இந்த இழவு தெய்வங்களை நாம் கும்பிட்டுக் கையிலுள்ள பொருள்களை யெல்லாம் இழந்து இப்படிக் கஷ்டப்படுவதைக் காட்டிலும் இறந்து போயிருந்தால் அது மெத்த நலமாயிருக்குமே; இப்போது நாம் எமனிடத்தில் உயிர்ப்பிச்சை வாங்கியிருப்பதினால் என்ன சுகத்தை அடைகிறோம்" என்று எண்ணாததெல்லா மெண்ணினான். முதல்நாளிருந்த எண்ணங்களை யெல்லாம் மறந்து, "ஐயோ! இரண்டு மூன்று தினங்களில் நமது குடும்பம் சர்வநாசமாய்ப் போய்விட்டதே; இனி நான் ஜீவிப்பதற்கு எவர்காலில் விழுவேன்; எதைக்கொண்டு ஜீவிப்பேன்" என்று பரிதாபத்தோடு மனைவிமுகத்தை நோக்கினான். அச்சமயம் அவளுக்கும் இதேவிதமான கவலை அதிகரித்து விட்டது. ஆகையால் அவள் மனங்கலங்கிக் கண்ணீர்விட்டு அழத்தொடங்கினாள்; தன் புருஷன் தரித்திரம் பிடித்தவனாய் விட்டதைப்பற்றி அவன்மீது சிறிது வெறுப்பும் அடைந்தாள். (மூடர்களுடைய புத்தியெல்லாம் இப்படித்தான் நிமிஷந்தோறும் மாறும்.)

மேற்கண்டவாறு முத்துக்கருப்பி அழுதவுடனே சுப்பையயன் அவளுடைய வருத்தத்தைச் சகிக்காதவனாய் உடனே எழுந்து அவளை நோக்கி, "என்னடி பைத்தியக்காரி! நீ எதற்காக இப்படி அழுகிறாய்? 'கடுகு சிறுத்தாலும் காரம் போய்விடுமா?' நான் பொருள்களை யிழந்தாலும் என் சாமர்த்தியத்தையும் இழப்பேனா? நீ ஜீவனத்திற்கு வழி

யில்லை யென்று அதன் பொருட்டுப் பயப்படாதே; இதோ நான் போய் அரிசி கொண்டுவருகிறேன்" என்று அவளுக் குத் தைரியஞ் சொல்லிவிட்டு வெளியேறி முன்பு தனக் குச் சிநேகிதராயிருந்த இரண்டு மூன்று பேரிடம் சென்று "நான் சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லாமல் கஷ்டப்படுகிறேன்; ஆதலால் நீங்கள் எனக்கு ஏதாவது கொடுங்கள்" என்று கேட்டுப் பார்த்தான். அவர்களெல்லோரும் அவன் தன் நிலைமை கெட்டுவந்ததால் அவன்மீது வெறுப்புற்று அவனை நோக்கி, "போ போ! உனக்கு வேறே வேலையில்லையா? இங்கே வருகிறவர்களுக்கெல்லாம் காசு கொடுத்துக்கொண் டிருப்பதற்கு நாங்கள் ஒன்றும் சம்பாதித்து வைக்கவில்லை" என்று விரோதிகள்போலக் கடுகடுத்துச் சொல்லிவிட்டார் கள். அதன்மேல் சுப்பையன், "ஐயோ! கெட்டகாலம் வந்த தால் நம் சிநேகிதரும் நம்மை வெறுக்கிறார்களே!" என்று அளவில்லாத விசனத்தையடைந்து அடுத்த வூரிலிருந்த ஒரு சினேகிதனிடம் போயாவது ஏதாவது கேட்டு வாங்கி வரலாமென்று அங்கே போனான்.

11-வது அத்தியாயம்

கோடாங்கி, சுப்பையன் குடியை அடியோடு கெடுத்துவிடல்.

சுப்பையன் மேற்கூறியபடி பக்கத்து ஊருக்குப் போன சமயத்தில் பூசாரி மலையாளபகவதி, முத்துக்கருப்பியிடம் வந்து சேர்ந்தான். அவள் அவனைக் கண்டவுடன், தேவதை களுக்கு அவன் பூஜை நடத்திய விஷயங்களைப்பற்றித் திருப்தியடைய வேண்டியவளாயிருந்தும் அதைவிட்டுப் பசிக்கொடுமையால் கண்ணீர்விட்டுத் தேம்பித் தேம்பி அழு தாள். சுப்பையன் குடும்பத்தில் இந்த நிலைமை யுண்டாவ தைப்பார்க்கவே பூசாரி நெடுநாட்களாகக் காத்திருந்தவனாத லால் அவள் அவ்வாறு வருந்தியதற்கு மனதிற்குள் சந்

தோஷித்து வெளிக்கு மட்டும் அவள்மீ தன்புடையவன் போல் விசனக்குறிகாட்டி, உடனே கடைக்குப்போய்ச் சில உயர்ந்த பலகார வர்க்கங்களை வாங்கிக் கொண்டுவந்து அவ ளுக்குக் கொடுத்து அவளைத் தின்னும்படி செய்து சிறிது நேரம் அவளுக்குத் தேறுதலான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்து விட்டுப் பின்பு நெடுநேரம் வரை ஏதோ சில இரகசியமான வார்த்தைகளை அவள் செவிகளில் உபதேசித் தான். அவள் அந்த உபதேசத்தைக் கேட்டவுன் அவளு டைய முகம் சூரியனைக்கண்ட செந்தாமரை மலர்போல மலர்ந்து விட்டது; அவளுக்கு இருந்த விசனமெல்லாம் இருந்தவிடந் தெரியாமற் போயிற்று; அதனால் அவள், அடிக்கடி சிரித்த முகங்காட்டி அந்தப் பூசாரியோடு பேசிக் கொண்டிருந்தாள். அதன்மேல் மலையாளபகவதி, "நான் சொன்னதெல்லாம் உன் ஞாபகத்தி லிருக்கட்டும்" என்று அவளிடம் சொல்லி விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டான்.

சுப்பையன் வீட்டில் முத்துக்கருப்பியின் பேய்க்கூத்து.

அதன்மேல் அடுத்த ஊருக்குச்சென்ற சுப்பையன், தான் தேடிப்போன சிநேகிதனைக் கண்டு அவனிடத்தில் தனது தாவந்தத்தை யெல்லாம் சொல்லிக் கெஞ்சிப் பஞ்சை முகங்காட்டி அரைப்படி அரிசி வாங்கிக்கொண்டு கப்பலேறிப்போய் அளவற்ற திரவியம் தேடிக்கொண்டு வருபவனைப்போல அந்த அரிசி கிடைத்ததற்காக மகிழ்ச்சி யுற்றுத் திரும்பிவந்து முத்துக்கருப்பியினிடத்தில் அதைக் கொடுத்தான். அதை அவள் வாங்கியவுடன் கழுவி உலை யில் போட்டுச் சோறு வெந்தவுடன் அதனை வடிக்கும்படி சுப்பையனிடம் சொல்லிவிட்டுத் தண்ணீர் கொண்டுவருவ தற்குக் குடத்தை யெடுத்துக்கொண்டு குளத்திற்குப் போனாள். அந்தோ பரிதாபம்! நாம் என்னென்று சொல்

வோம் சுப்பையனுடைய கஷ்டகாலத்தை! அவ்வாறு குளத்திற்குப்போன முத்துக்கருப்பி திரும்பி வரும்போது குடத்தில் தண்ணீரைமொண்டு அதைத் தலையில் வைத்துத் தலையை விரித்துப் போட்டுத் தெம்பாங்கு பாடி வீதிதோறும் ஆடிச்சிரித்துக்கொண்டு, மேலாடை நழுவப் பைத்தியம் பிடித்தவள்போல வீடுவந்து சேர்ந்தாள். அவ்வூரார் சுப்பையன் வீட்டில் நடக்கும் எந்த விபரீதமான சங்கதியைக் கண்டாலும் அச்சமயம் மிகவும் சந்தோஷத்தோடு அதனைப் பார்க்கக்கூடியவர்களா யிருந்தபடியால், முத்துக்கருப்பி இவ்விதம் நாட்டியமாடி வந்ததைக்கண்டு, "ஓகோ! சுப்பையன் மனைவிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது; அவன் செய்த அக்கிரமங்களுக்குத் தக்கபடி கடவுள் அவனைப் பலவிதத்திலும் தண்டனை புரிந்து வருகின்றார்" என்று பலர் பேசிக்கொண்டு அவளைப் பின்தொடர்ந்துவந்து சுப்பையன் வீட்டு வாசலில் கூடிவிட்டார்கள்.

அவளுடைய கோலத்தைச் சுப்பையன் பார்த்தான். அவ்வாறு பார்த்தவுடன் அவனுக்குண்டான விசனத்துக்களவில்லை. அதனால் அவன், "ஐயோ! இப்போது சாதாரணமாகத் தண்ணீர் கொண்டுவாச் சென்ற இவள் இந்த விதமாக வருகின்றாளே! நாம் எவ்வளவோ பணங்களைச் செலவிட்டுத் தெய்வங்களை வணங்கியும் இன்னும் நம்முடைய துன்பம் தொலைந்த பாடில்லையே" என்று அவள் தலையிலிருந்த குடத்தை இறக்கி வைத்துவிட்டு அவளை வீட்டிற்குள் அழைத்துப்போய் உட்காரவைத்து, அவள் முகத்தைப் பார்த்து "உனக்கென்ன ஏற்பட்டது? நீ ஏன் இப்படி ஆடுகிறாய்" என்று வயிற்றெரிச்சலோடு கேட்டான். அதற்கவள் மேலும் அதிகமாகச் சிரித்துக்கொண்டு, "நான் சந்தோஷத்தினால் ஆடுகிறேன்; என்னுடைய கண்ணியில் நெடுநாளாக நான் நினைத்திருந்த மான் அகப்பட்டு விட்டது; அதற்

காகவே நான் ஆடுகிறேன்; இதை நீ ஏன் கேட்கிறாய்? போ போ பைத்தியம் பிடித்தவனே! நீ என் முன் நில்லாதே" என்று ஏதேதோ வாய்க்கு வந்தவற்றை யெல்லாம் சொல்லிப் பிதற்றினள்; பல்லைக் கடித்தாள்; அவனைக் கோபக் குறியோடு பார்த்தாள். வந்திருந்தவர்களிற் சிலர் இவற்றை யெல்லாம் கேட்டு "இவளுக்குப் பைத்தியமில்லை; இவள் மத்தியான நேரத்தில் தனியாகத் தண்ணீர்க்குப் போனபடியால் ஏதோ ஒரு எச்சிப் பிசாசு இவளைத் தொடர்ந்திருக்கிறது; இதைப்பற்றிக் கோடாங்கியிடம் குறிகேட்க வேண்டும்; நீ இவளுக்கு எதிரே போகக்கூடாது; ஒருத்தியைப் பிடித்திருக்கும் பிசாசு அவளுடைய புருஷனைக் கண்டால் அதற்கு அதிக கோபமுண்டாகும்" என்று பிரகஸ்பதிகள் போல சுப்பனிடம் தீர்மானம் கூறிவிட்டார்கள்.

இவ்விதமே சில திமிர்ப்பிடித்த பெண்கள், தங்களைப் பிசாசு தொடர்ந்திருப்பதாக நடித்து ஒருவித மூடமயக்கத்தால் ஆடுவதையும்; அப்போது அவர்கள், புருஷனைக் கண்டால் அந்தப் பிசாசுகள் கோபிப்பதுபோல் கோபிப்பதையும், அதற்காகப் புருஷர்கள் அவர்களைப் பிடித்த பேயை ஓட்டுவதற்கு அவர்களைப் பூசாரியிடம் ஒப்பித்து விட்டுத் தாங்கள் விலகியிருக்கும் மகாமூடமான செய்கையையும் இப்போதும் பலவிடங்களில் பிரத்தியக்ஷமாகக் காணலாம்.

மேற்கண்டபடி வந்தவர்கள் கூறியவுடன் சுப்பையன் "ஐயோ! இந்த இழவு பேய்களுக்கும் நான் நேற்றுத் தானே பணங்களைச் செலவிட்டு அழுது தொலைத்தேன்; அந்த அலுப்புத் தீர்வதற்குள் இந்தப் பிசாசும் இவளைத் தொடரவேண்டுமா? எதற்கும் நாம் சென்று கோடங்கியை அழைத்துக்கொண்டு வருவோம்" என்று முத்துக்கருப்பியிடம் நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு வெளியில் நின்ற ஜனங்களை நோக்கி, "நீங்கள் இங்கே என்ன

வேடிக்கை பார்க்கிறீர்கள்? போங்கள்! போங்கள்!! நான் சங்கடப்பட்டுக் கொண்டு திரிவது உங்களுக்கு வேடிக்கையா யிருக்கிறது” என்று சினந்து கூறித் தூரத்திவிட்டு உடனே பகவதி வீட்டுக்குச் சென்று அவனை யழைத்துக்கொண்டு வந்தான். பூசாரி, அவளுக் கெதிரில் போய் உட்கார்ந்தான். முத்துக்கருப்பி அவனைப் பார்த்து, “ஓகோ பூசாரியவர்களா! வாருங்கள்! வாருங்கள்!! என்னை விலக்கவா வந்தீர்கள்; நான் போகமாட்டேன்! போகமாட்டே!!’ என்று சொல் லிப் பெருஞ் சப்தமிட்டுச் சிரித்துக் கொண்டு பாட்டுப் பாடித் தலைசுற்றி ஆடினாள். பகவதி அச்செய்கைகளைப் பார்த்து விட்டுப் புன் சிரிப்புடன் தலையசைத்து, “சங்கதி தெரிந்து விட்டது. குளத்தங்கரைக் கருப்பண்ணசாமி பிடித்திருக்கிறது; இது ஏதாவது கேட்கும்; அதை நாம் கொடுத்துவிட்டால் இது போய்விடும்; இராத்திரிக்கு நாம் கோடாங்கி தட்டி அதைக் கூப்பிட்டுக் கொஞ்ச நேரம் அஃ திங்கே விளையாடுமாறு செய்து பின்பு அதற்குக் காணிக்கை கொடுத்து அதை அனுப்பி விடலாம்; இப்போது அது அடங்கி யிருக்கும்படி நான் அண்ணியார் மீது விபூதி போடு கிறேன்” என்று தன் பையிலிருந்த விபூதியை எடுத்துக் கண்மூடி மந்திரித்து, “எங்களை ஏழு தலை முறையாக ஆண்டுவந்த கருப்பண சுவாமியே! இராத்திரிக்கு உனக் கேற்பட்ட கடமையை நீ எங்களிடம் வாங்கிக்கொள்ள லாம். இப்போது ஒன்றும் செய்யாமலிரு” என்று முத் துக்கருப்பி தலையிற் போட்டான். உடனே அவளுடைய ஆடல் பாடல்களெல்லாம் நின்று விட்டன; வந்த ஜனங்க ளெல்லோரும் அவ்வாறு முத்துக்கருப்பியைப் பற்றியிருந்த கருப்பணசாமியின் சேஷ்டைகளை விபூதியால் அடக்கிவிட்ட பூசாரியின் சாமார்த்தியத்தைப் பற்றிப் புகழ்ந்து கொண்டு

16

போய்விட்டார்கள். அதன்மேல் பகவதி, சுப்பையனை நோக்கி "இராத்திரிக்கு நாம் பேயோட்டுவதற்காக நீ நாலைந்து ரூபாய்கள் தேடிவைத்துக்கொள்" என்று கூறினான். இதைக் கேட்டவுடன் சுப்பையனுக்கு வயிற்றில் நெருப்பு விழுந்ததுபோல வயிற்றெரிச்சலுண்டாய் விட்டது; அதனால் அவன் கலக்கங்கொண்டு, பூசாரியைப் பார்த்து "அண்ணே! என் கையி லொன்று மில்லை; இன்று நான் அரைப்படி அரிசிக்குப் பட்டபாடு கடவுளுக்குத்தான் தெரியும்; பணத்துக்கு நான் எங்கே போவேன்" என்று வாடிய முகத்தோடு கூறினான். அதைக்கேட்டு மலையாள பகவதி, "உனக்கு அப்படிக் கஷ்டம் ஏற்பட்டிருந்தால் இந்தச்செலவை நானே செய்துகொள்ளுகிறேன்; நீ ஒன்றுக்கும் அஞ்சாதே; மதினியாருக்கு இன்றைக்கு எந்தவேலையும் கொடுக்கவேண்டாம்; அவர்கள் பேசாமல் படுத்துக் கொள்ளும்படிசெய்; நீயே உணவுசமைத்து அவர்களுக்குப் போடு; நான் இன்று சாயங்காலம் இங்கே வருகிறேன்" என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக் கொண்டு தன் வீட்டிற்குப்போய் ஒரு காரியத்தை உத்தேசித்துத் தன் சிஷியர் இருவரும், சில சாமான்களுடன் வேற்றூர்க்குப் போகும்படி அவர்களைப் பிரயாணப்படுத்தி அனுப்பிவிட்டுச் சுப்பையன் வீட்டுக்குப் போவதற்காக 'எப்பொழுது சூரியன் மேற்கே சாய்வான்' என்று மாலைநேரத்தை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். சுப்பையனோ அன்று பகலில் விரைந்து ஆகாரம் சித்தப்படுத்தி அதனைத் தன் மனைவிக்குப்போட்டுத் தானும் சாப்பிட்டுவிட்டு, அவள் படுத்துக் கொள்ளும்படி செய்தான். அவ்வாறுசெய்யவே அவள்கவலையற்று உறங்கினாள். சுப்பையன் மாத்திரம் மல்லாந்து படுத்துக்கொண்டு, தன் குடும்பம் அடியோடு கெட்டதைப்பற்றியும், அதனோடு முத்துக் கருப்பியைக் கருப்பணசுவாமி

தொடர்ந்திருப்பதைப் பற்றியும், தன் பிழைப்புக்கு வழியில்லாம லிருப்பதைப் பற்றியும் யோசித்துக் கொட்டாவி விட்டு, மலையாளபகவதியின் வரவை எதிர்பார்த் திருந்தான்.

கோடாங்கி, முத்துக்கருப்பிக்குப் பேயோட்டுதல்.

இப்படி யிருக்கும்போது சூரியன் அஸ்தமிக்கும் சமயமாயிற்று; அப்போது பூசாரி தன்னை நன்றாக அலங்கரித்து உடுக்கையெடுத்துக்கொண்டு சுப்பையன் வீட்டைநோக்கிப் புறப்பட்டான். பேயாட்ட மென்றால், அதிலும் பெண்கள் பேயாட்டம் ஆடுவதானால், அது பாமர ஜனங்களுக்கு மிகவும் கொண்டாட்டமான காரியமாகையால், அவ்வாறு பேயோட்டுவதற்குப் பூசாரி சுப்பையன் வீட்டுக்குச் செல்வதையுணர்ந்து பேயாட்டு வேடிக்கை பார்ப்பதற்கு, அநேகம் மூடஜனங்கள் அவனைப் பின்தொடர்ந்தார்கள். கோடாங்கி சுப்பையன் வீட்டிற்போய்ச் சேர்ந்தவுடன் அங்கே ஜனங்கள் திரளாகக் கூடிவிட்டார்கள்; அவ்வீட்டில் காலி இடமில்லை. அதனால் சுப்பையன், வீட்டிற்குள் அடங்கினவர்கள் போக வெளியில் நின்றவர்களை நோக்கி, "நீங்கள் போங்கள்! போங்கள்!! நீங்கள் உட்கார இங்கே இடமில்லை" என்று சொல்லித் தூக்கித் தெருக்கதவை மூடிவிட்டான். அதன்மேல் கோடாங்கி, ஒரு தகுதியானவிடத்தில் உடுக்குப்பையை விரித்து அதன்மேல் பிள்ளையார் விக்கிரகத்தை வைத்துக் கிழக்குமுகமாக உட்கார்ந்து, சாம்பிராணியை நெருப்பிலிட்டுப் புகைத்துச் சுற்றியிருப்பவர் கண்களில் கண்ணீர் வடியும்படி செய்துவிட்டு, அங்கேவந்து நின்ற பெண்களைநோக்கி "பேய்பிடித்திருக்கும் பேர்வழியை நீங்கள் கொண்டுவாருங்கள்" என்றான். உடனே பக்கத்து வீட்டிலிருந்து வந்திருந்த இரண்டு பெண்கள், மேல்சீலையை இடுப்பில்சுற்றிக் கட்டிக்கொண்டுபோய் முத்துக் கருப்பியை எழுப்பி அவளுடைய சேலையை நன்றாக வரிந்துகட்டி நெற்

றியில் பட்டையாக விபூதியணிந்து மலையாளபகவதிக்கு முன்னே கொண்டுவந்து இருத்திஞர்கள். (இவ்வகைக் காரியங்களில் பிரவேசித்து விமரிசையாக வேலைசெய்வதில் பாமரப் பெண்களுக்கு மிகவும் திருப்தி.)

மேற்கண்டவாறு அவர்கள் முத்துக்கருப்பியை உட்காரவைத்தவுடன் பூசாரி மலையாளபகவதி, முந்தியே குளத்தங்கரைக் கருப்பணசாமி அவளைப் பிடித்திருக்கிறதென்று பலர் அறியச் சொல்லிவிட்ட படியாலும், இந்தச்சமயத்தில் தன் குறிமுகத்துத் தெய்வத்தை அழைத்து 'அவளைப்பிடித்திருக்கும் பேய் எது?' என்று அதனிடம் கேட்டு அப்பேயைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் தனக்கில்லையாதலாலும், தன்மீது ஒருசாமியையும் வரவழைக்க முயற்சி செய்யாமல் முத்துக் கருப்பியின்மீது கருப்பணசாமிவந்து ஆடும்படி அதனை அழைக்கத் தொடங்கிவிட்டான். அப்படித் தொடங்கியவன் முத்துக் கருப்பியின் முகத்தில் சாம்பிராணிப் புகையைக்காட்டி விதிபூயை அள்ளித் தலையில் போட்டு உடுக்கையை முதலில் கனகனவென்றும், பின் டும் டும் என்றும் தட்டிக் கருப்பணசாமியை அழைக்கும் பாட்டைப் பாடினன். அது இதன் கீழ்க் காட்டப்பட்டிருப்பது:-

கலிவெண்பாப்போன்ற ஒருவகைக்
கோடாங்கிப் பாட்டு.

"அடங்காத் தடியெருதே ஐயா கருப்பணனே
மடங்காத சிங்கமே வாவாவா—வாவாவா
கோலக்கருப்பா குளத்தாங் கரைக் கருப்பா
சீலக்கருப்பா திருக்கருப்பா வாவாவா
காட்டுக்கருப்பா கடுங்கருப்பா பேய்க்கருப்பா
மேட்டுக்கருப்பா விரும்பியிங்கு வாவாவா
ஆட்டுக்கருப்பா அழகிய கோழிக்கருப்பா
மாட்டுக்கருப்பா மடைக்கருப்பா வாவாவா."

பூசாரி இந்தப் பாட்டைப் பாடியதோடு இன்னும் அநேகவிதமான அலங்காரப் பாடல்களையும் பாடிக் கருப்பணனை அழைத்தான். சிறிதுநேரம் சென்றபின்பு அத்தேவதை முத்துக்கருப்பியின்மீது வந்து ஒன்றும்பேசாமலிருப்பதுபோல அவள் பாவனைகாட்டிக்கொண்டு ஒன்றும்பேசாமலிருந்தாள். பூசாரி இரவு எட்டுமணி வரையில் உடுக்கைதட்டிப் பாடி அவள்மீதுவந்த கருப்பணசாமியிடம், "நீ வாய் திறந்து உன்மனதிலிருப்பதைச் சொல்லவேண்டும்" என்று வேண்டிக் கொண்டிருந்தான். அவ்வளவுநேரம்வரை வேண்டியும் முத்துக் கருப்பியின்மேல் வந்த கருப்பணசாமி வாய் திறக்கவேயில்லை. அவள் மௌனமுற்றுச் சித்திரப் பதுமை போல அசைவற் றிருந்தாள். அவ்வாறிருப்பதைக் கண்டு மலையாளபகவதி "என்ன! இந்தப் பாழுந்தெய்வம் என் பிராணனை வாங்குகிறதே; இந்தப் பெண்பால்மீது வந்தும் ஒன்றும் பேசாமலும், தலைசுற்றி ஆடாமலும் அடித்தமுளைப் போல அசைவற்றிருக்கின்றதே" என்று வெறுப்போடு உடுக்கைக் கீழேவைத்தான். அங்குக் கூடியிருந்த ஜனங்களும், அவன் வார்த்தைகளை யனுசரித்தே "ஐயோ! நமது குளத்தாங்கரைக் கருப்பன், கோடாங்கியை இவ்வாறுதுன்பப்படுத்துகிறதே; இழவு தெய்வமே! நீ வாய்திறந்து உன் மனதிலிருப்பதைச் சொல்லேல; எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி உனக் கேற்பட்டதை வாங்கிக்கொள்ளேன்; பேசாமலிருந்தால் என்ன காரியம் நடக்கும்" என்று அது முத்துக்கருப்பியின் மேலிருந்து தன் காதினால் இந்தவார்த்தைகளைக் கேட்டுக்கொள்ளுமென்றே நினைத்துக் கொண்டு முத்துக்கருப்பியின் முகத்தைப் பார்த்துச் சொன்னார்கள். இவ்வாறு அவர்கள் சொன்னவுடனே முத்துக்கருப்பி தன் மீது கருப்பன் வந்ததாகப் பாவனைசெய்து சீறிக்கொண்டு சிறிது தலையாட்டத் தொடங்கினாள். அதைக் கண்டவுடன்

அங்கிருந்த எல்லோரும், "கருப்பன் வந்துவிட்டது! வந்து விட்டது! வந்துவிட்டது!!" என்று கைகொட்டிச் சப்த மிட்டார்கள். கோடாங்கியும் கீழேவைத்த உடுக்கை எடுத்துக்கொண்டு பலமாகத் தட்டி இரைந்து அவசரமாகக் கருப்பன் துதிப்பாட்டுக்களைப் பாடினுன். இவ்வாறு இரைச்சல் அதிகமாகவே முத்துக்கருப்பி தன்மீது கருப்பணன் மூர்க்கமாக வந்துவிட்டதுபோல நடித்துத் தலையை விரித்துப் போட்டுத் திரிகைபோலச் சுழற்றியாடியும், நான்குபக்கங்களிலும் திரும்பிக் கையால் தரையில் மோதியும், எழுந்து நின்று ஒய்யாரமாக ஆடியும், "கோடாங்கி! கோடாங்கி!! நான் போகமாட்டேன்! போகமாட்டேன்!!" என்று பூசாரியைப் பார்த்துச்சொல்லி மீண்டும் தலைசுற்றிஆடினுள்.

இவ்விதமாகச் சிலபெண்கள் ஏதேனும் ஒரு இரகசியமான காரியத்தை மனதில் வைத்துக்கொண்டு அதனைநிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டாகத் தங்களைப்பேய்பிடித்துக் கொண்டதாக நடித்தாடுவதும் உண்டு; இன்னும் சிலர் தங்கள் மதியீனத்தால் தங்களைப் பேய் பிடித்ததாக நினைத்துக்கொண்டிருந்து, அதற்கேற்ப மூடஜனங்கள் பேயிடம் பேசுவதுபோல் மேற் கூறியபடி தங்கள் முன் சில வார்த்தைகளைப் பேசினவுடன் மதிமயக்கங்கொண்டு பேய் பூரணமாய்த் தங்கள்மீது வந்துவிட்டதாக நினைத்து உடல்குலுக்கி ஆடுவதுமுண்டு. இவ்விரண்டுள் அவர்கள் மூடத்தால் ஆடுவதுதான் உலகத்தில் மிகுந்திருக்கும். அறிவுடையோரிடத்தில் எந்தவகைப் பேயாட்டமும் நடக்காது; இங்கே முத்துக்கருப்பி ஆடினது இன்னவகையைச் சார்ந்ததென்பது பின்னே விளங்கும். பெண்களின் பேயாட்டம் தென்னுட்டில் இப்போதும் மிகுதியாக நடந்து வருகின்றது.

மேற்கண்டவாறு முத்துக்கருப்பி ஆடவே அங்கிருந்த எல்லோரும் சந்தோஷித்து, அவள் முகத்தைப்பார்த்து,

"உன் பெயரென்ன? எதற்காக நீ இவளைத் தொட்டாய்? உள்ளதைச்சொல்லி உனக்குள்ளதை வாங்கிக்கொள்" என்று கூறினார்கள்.

ஒருத்தி பேயாடும்போது அவளைப் பிடித்திருக்கும் பேயை ஜனங்கள் அறிந்துகொண் டிருந்தாலும், அந்தப் பேயின் வாயினாலேயே அதன் பேர் முதலிய விவரங்களை அறிந்துகொள்ள விரும்பி அவற்றை அதனிடம் கேட்பதும், அதுதவற்றைச் சொல்லிவிட்டால் அவ்வாறு சொன்னதற்குத் திருப்தியடைவதும் அவர்களின் வழக்கம். அதன் படியே முத்துக்கருப்பியைப் பிடித்திருப்பது கருப்பணன் என்பது அங்கிருந்தவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அந்தத் தெய்வத்தின் வாக்கினாலேயே அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கருதி அதனிடத்தில் இவ்வாறு கேட்டார்கள். இப்போதும் ஜனங்கள், பேயாடும் பெண்களிடம் இத்தகைய வார்த்தைகளைக் கேட்பதை எங்கும் காணலாம்; இத்தகைய பெண்களின் பேயாட்டத்தில் மட்டும் கோடாங்கிக்கு அதிக வேலையிராது. அவர்கள்மீது வரும் பேய்களிடம் கேள்வி கேட்டல் முதலிய காரியங்களைப் பக்கத்திலுள்ளவர்களே நடத்திக் கொண்டு போவார்கள்; இக்காரியங்களில் பிரவேசிப்பது மூடருக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும்.

முன் சொன்னபடி ஜனங்கள் கூறியவற்றைக் கேட்டவுடன் முத்துக்கருப்பியின் மேல் வந்த கருப்பண்ணசாமி அவர்களை நோக்கி, நெடுநேரம்வரை "நீங்கள் கேட்டவற்றை நான் சொல்லமாட்டேன்! சொல்லமாட்டேன்!!" என்று சொல்லிக்கொண்டிருந்தது. அதன் பிடிவாதத்தைக் கண்டவுடன் அதன் முன்நின்றவர்கள் மீண்டும், "நாங்கள் கேட்டவற்றை நீ சொல்லத்தான் வேண்டும்" என்று மிகவும்

கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். அதன்மேல் அந்தக்கருப்பன் அவர்களை நோக்கி,

"மக்களே நீங்கள் வணங்கியிங்கு கேட்பவற்றை
இக்கணத்தில் சொல்வேனு *னெழுகடலில் வாழ்கரு
மத்தியான வேளையிந்த மாதுபய மில்லாமல் [ப்பன்
தண்ணீர்க்கு வந்ததுண்டு தவளை யிரைந்ததுண்டு
கண்டு பயந்ததுண்டு கருப்பன் தொடர்ந்ததுண்டு
நீண்டநாளாகவிந்த நேரிழையைப்பிடிப்பதற்குக்
காத்திருந்தேன் இன்றிவளென் கண்ணியிலேசிக்கிவிட்
ஆனபடியால் அணங்கைவிட்டுப் போகேனுன்." [டாள்

என்று சொல்லி மீண்டும் தலைசுற்றி ஆடியது. இவற்றைக் கேட்டுக் கோடாங்கியும், மற்றவர்களும் பேயாடும் முத்துக்கருப்பியின் முகத்தை நோக்கி, "ஐயோ! இந்தக் குடும்பம் மிகவும் கெட்டுப்போயிருக்கிறது; அதனேடு நீயும் இவளைப் பிடித்துக்கொண்டு ஆட்டினுல் இவர்கள் இத்துன்பத்தைச் சகிக்கமாட்டார்கள்; ஆதலால் நீ கேட்பவற்றையெல்லாம் நாங்கள் தருகிறோம்; நீ பெற்றுக்கொண்டு இப்பெண்ணைவிட்டு விலகிவிடவேண்டும்" என்று பலவாருக அக்கருப்பனைத் துதித்து அவனிடம் பன்முறை கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறு பலமுறை கேட்டுக்கொண்ட பிறகு முத்துக்கருப்பியின் மேலிருந்த கருப்பண்ணசாமி முகத்தைச் சுழித்துக்கொண்டு,

"எல்லோரும் கெஞ்சுவதால் இணங்குகிறேன் நான்
ஒருபுட்டி சாராயம் ஒன்பது கோழிமுட்டை [நீங்கள்
இட்டலியில் எட்டு இசைந்தெனக்குக் கொண்டுவந்து
வைத்துப்படைத்து வரிசையுடன் காணிக்கை
இருபத்தொரு பணமும் எடுத்து முடிந்தாக்கால்

---

* மதுரைக்கு நடுவே எழுகடல் என்ற குளமொன்றிருக்கிறது.

மெல்லியைவிட்டு விலகிடுவே னிப்போதே
பூவைதனைவிட்டுப் போய்விடுவே னிப்பொழுதே."

என்று சொல்லி ஆடாமல் நின்றுவிட்டது. உடனே எல்லோரும், "ஐயோ! சுவாமி முடியெடுத்துக் கொடுக்காமல் போகிறதே" என்று சப்தமிட்டார்கள். அதற்குக் கோடாங்கி அவர்களை நோக்கி, "நீங்களேன் அவ்விஷயத்தில் அவசரப்படுகிறீர்கள்? இவ்வளவும் சொன்ன அத்தெய்வம் முடியெடுத்துக் கொடாமல் போய்விடுமா; நாம் அதற்குப் படைப்புப் போடும்போது அது பழையபடியும் வந்து சந்தோஷமாக ஆடி நிவேதனங்கள் எல்லாவற்றையும் உண்டு முடியெடுத்துக் கொடுத்துவிட்டுப் பின்புதான் கல்லைத் தூக்கிக்கொண்டு போகும்" என்று அவர்களுக்குச் சமாதானங் கூறிவிட்டுச் சுப்பையனிடத்தில் ஒன்று மில்லாதபடியால் தான் ஒப்புக்கொண்டபடி அந்தச்சாமி படையலுக்கு வேண்டியவற்றை வாங்கிவருதற்கு இரண்டு ரூபாய்களை எடுத்து ஒரு மனிதனிடம் கொடுத்துச் சாராயமும், முட்டைகளும், தேங்காய் பழம் அவல் கடலை முதலியவைகளும் வாங்கிக்கொண்டு வரும்படி அவனை அனுப்பினான். அவன் உடனே கடைக்குச்சென்று அவற்றை வாங்கி வந்தான். அதன்மேல் மலையாளபகவதி அங்கிருந்தவர்களை நோக்கி,'முட்டைகளை யாராவது சிக்கிரம் அவித்துக்கொண்டு வரவேண்டும்' என்று சொன்னான். அதைக் கேட்டதும் ஒரு பெண் எழுந்து ஒன்பது முட்டைகளையும் எடுத்துக் கொண்டுபோய் ஒரு நிமிஷநேரத்தில் அவித்து மேல் தோடுகளைப்போக்கி எடுத்துக்கொண்டு வந்தாள்.

இங்கே சொன்னபடி முடியெடுத்துக் கொடுப்பதென்பது யாதென்றால், பிசாசு, தான் விட்டு நீங்குவதற்கு அடையாளமாகப் பேயாட்ட மாடிக்கொண் டிருக்கும் பெண்ணின் தலையில் சில மயிர்களை எடுத்துச் சடைபோலத்

திரட்டிக் கோடங்கிகையில் கொடுத்து, 'நான் நிச்சயமாகப் போய்விடுகிறேன்; நான் போவதற்கு இதுவே அடையாளம்' என்று கூறுவது. இப்படி முடியெடுத்துக் கொடுத்தவுடன் பூசாரி அதை முடிந்துவிடுவான். ஒரு பெண்ணைப் பல பேய்கள் பிடித்திருந்தால் ஒவ்வொரு பேயும் ஒவ்வொரு முடியெடுத்துக் கொடுக்கும். அவற்றை யெல்லாம் பூசாரி தனித்தனியாக முடிந்து விடுவான். இவ்வாறு பேய்கள் முடியெடுத்துக் கொடுத்ததன்மேல் அப்பைசாசங்கள் கேட்ட வஸ்துக்களை யெல்லாம் பூசாரி அவற்றின் முன்னே வைத்துப் படைப்பான்; அப்போது அவ்வாறு பெண்கள்மீது வந்து ஆடும் பேய்கள் அவற்றை யெடுத்துப் பூசாரிக்கும் கொடுத்துத் தாங்களும் உண்ணும். இவ்வாறு பேயின் பேரைச் சொல்லிக்கொண்டு பேயாடும் பெண்களும், பூசாரியுமே அத் தின்பண்டங்கள் எல்லாவற்றையும் உண்பார்கள். தங்கள்மீது பேய் வந்துவிட்டதென்று நினைத்துக்கொண்டு ஆடும் ஒருவகைத் திமிர் மயக்கத்தினாலும், நெடுநேரம் ஆடிக் களைத்திருப்பதாலும் சில பெண்கள் மனிதரால் சாப்பிடமுடியாத அளவற்ற தின்பண்டங்களைத் தின்பதும் உண்டு. அவ்வாறு தின்பதைக்கண்டு பக்கத்திலிருப்பவர்கள், 'இவர்கள்மீது பேய் வாராதிருந்தால் இவர்களால் இவ்வளவு தின்பண்டங்களைச் சாப்பிடல் முடியுமா' என்று பேய் விஷயத்தில் நம்பிக்கைவைத்து, தங்கள் மனதைத் திருப்திசெய்து கொள்வார்கள். இவ்வகைச் செய்கைகளை யெல்லாம் மதுரை மீனாக்ஷிகோவிலில், புரட்டாசி மாசம் திருவிழாவில் மிகுதியாகக் காணலாம். இவ்வாறு ஒரு பெண்ணின்மேல் வந்த பேய் தின்பண்டங்களைத் தின்று முடிந்தவுடன், அதன் பக்கத்தில் சூழ்ந்திருப்பவர்கள் அப்பேயை அதிக மும்முரமாக ஆட்டி அதன் முன்னே ஒரு மனிதனால் தூக்கமுடியாத பெருங்கல்லைக் கொண்டுவந்து போடுவார்

கள். உடனே பேயாடும் பெண் அதிக உக்கிரத்தோடு எழுந்து தனக்கு அப்போது ஏற்பட்டிருக்கும் ஒருவகைத் திமிரினால் அதை ஒரே தூக்கில் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு ஓடுவாள். அப்போது அவளைத் தொடர்ந்தோடுதல் எவராலுமியலாது. கோடாங்கியும் தைரியமான இரண்டு மூன்று மனிதர்களுமட்டுமே அவளுக்குப் பின்னே ஓடுவார்கள். மற்றவர்களெல்லோரும் தங்களை அந்தப்பேய் அடித்து விடும் என்ற பயத்தினால் நின்றுவிடுவார்கள். சிலசமயம் எல்லோரையும் நிறுத்திவிட்டுக் கோடாங்கி மட்டும் அப் பேயுடன் தனித்துப்போவதுமுண்டு. இவ்வாறு செல்லும் போது கல்லைத் தூக்கிக்கொண்டு ஓடிய அந்தப் பெண் ஊரைவிட்டு நெடுந்தூரம் சென்று நடுக்காட்டில் தனக்கிஷ்டமான விடத்தில், ஒரு மரத்தடியில் 'இதுதான் எனக்கிஷ்டமான விடம்' என்று பேய் அபிப்பிராயமுற்று நிற்பது போலக் கல்லைப் போட்டுவிட்டு நிற்பாள். உடனே பூசாரி அந்தமரத்தின் சமீபத்தில் சென்று அதில் ஒரு ஆணியை அடித்து அந்தப் பெண் தலையில் முடிந்து போட்டிருந்த மயிர் முடியை அறுத்து அவ்வாணியில் சுற்றி, அந்த மரத்தை அத்தேவதைக்குரிய ஸ்தானமாக்கி அதற்குப் புஷ்பஞ் சூட்டிச் சாம்பிராணிப் புகை காட்டிவிடுவான். பின்பு எல்லோரும் திரும்பி அந்தப் பெண்ணை அழைத்துப் போய் ஜலத்தில் முழுக்காட்டி அவளைப்பற்றிய பேய் போய்விட்டதாகப் பாவனை செய்துகொண்டு வீட்டிற்குப் போவார்கள். அக்காலமுதல் அவ்வாறு பூசாரி ஆணியறைந்த மரமும் பேய் நிற்கும் இடம் ஆகிவிடும். அங்கே சில பெண்கள் தனியே வரும்போது அந்த ஆணியையும் மயிரையும் கண்டால் "ஆ! பேய்நிற்கும் இடமல்லவா இது!" என்று பயந்தலறுவார்கள். அப்போது அவர்களுடைய மதியீனமாகிய மயக்கத்தினால் அவர்களையும் பேய்

பிடித்துக்கொள்வதுண்டு; பின்பு அவர்களுக்குப் பூசாரி பேயோட்டும் காலத்தில் அவர்களால் தனித்தனியே ஒவ்வொரு பிசாசுமரம் ஏற்பட்டுவிடும்; இப்படியே இந்துக்களிற் பல பாமரர் மதியீனத்தால் எங்கும் பேய்கள் வாழும் இடங்களை உற்பத்திசெய்து பேயாட்டத்தையும் அதிகப்படுத்தி உலகத்தில் தங்கள் மூடக்கொள்கையைப் பரவச் செய்வார்கள். ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒவ்வொரு கோவில் ஏற்பட்டிருந்தாலும் இவ்விதமாகவும் பலஸ்தானங்களைப் பாமரஜனங்கள் ஏற்படுத்தி விடுவார்கள். இந்தச் செய்கைகளும் நாம் மேலே கூறியபடி பெண்கள் வேண்டுமென்று செய்வதாலும் நடப்பதுண்டு; அவர்களுக்கு மதியீனத்தால் வந்த மருட்சியாலும் நடப்பதுண்டு. வேறு மதஸ்தரிடத்தில் இவ்வித மதியீனக் கொள்கை இல்லை.

முத்துக்கருப்பியும் கோடாங்கியும் காணமற் போதல்.

மேற்கண்டபடி எல்லாம் சித்தமானவுடன், மலையாள பகவதி முத்துக்கருப்பிக்கு முன்னே வாழையிலையைப் போட்டு அதில் யாவற்றையும் பரப்பிப் படைத்துச் சாராயப் புட்டியையும் கருப்பண சுவாமிக்கென்று பயபக்தியுடன் வைத்து, "குளத்தாங்கரைக் கருப்பா! உன் மனம் போல்நான் உனக்கு எல்லாவற்றையும் படைத்திருக்கிறேன்; நீ ஏற்றுக்கொண்டு முடியெடுத்துக் கொடுத்து விட்டுக் கல்லைத் தூக்கிக்கொண்டு புறப்படவேண்டும்" என்று சொல்லி உடுக்கை யெடுத்து வெகு துடுக்காக முழக்கினான். உடனே முத்துக்கருப்பியின் மீது கருப்பண சுவாமி ஆனந்தமாக வந்துவிட்டது. அதன்மேல் அவள், தலைசுற்றியும், பம்பையடித்தும், கைகொட்டியும், தில்லானா, டப்பா, தெம்பாங்கு, கொம்மைப் பாட்டு முதலியவற்றைப் பாடியும் ஒருமணி நேரம்வரை பெரு முழக்கமாக ஆடிவிட்டு, வாழைப்பழம் முதலியவற்றை யெடுத்து அவற்றில் வேடிக்கையாகக்

கோடாங்கிக்குச் சிறிது கொடுத்து விட்டுத் தின்ற பின்பு சாராயப்புட்டியையும் எடுத்துத் திறந்து அதில் ஒரு துளி சாராயம் கூட இல்லாதபடி சாராய முழுவதையும் குடித்து விட்டுமேலும் ஆடத் தொடங்கினாள். அப்போது பக்கத்தி லிருந்தவர்கள் "சாமிக்கு உகந்தவைகளை யெல்லாம் நாம் செய்துவிட்டோம்; இன்னும் அது முடியெடுத்துக் கொடுக் காம லிருக்கிறதே; நேரமாய் விட்டதே" என்று சொன்னார் கள். அதற்கு முத்துக்கருப்பியின்மேல் வந்திருந்த கருப் பண சுவாமி, "ஓகோ! எனக்கு எல்லாவற்றையும் நடத்தி விட்டீர்களோ? காணிக்கை முடிந்தீர்களா? அதை முடிந்தா லல்லவா நான் முடியெடுத்துக் கொடுப்பேன்" என்று சொல்லிற்று. அதைக்கேட்டவுடன், பூசாரி மலையாளபகவதி நடுக்க முற்று, முத்துக்கருப்பியின் முகத்தை நோக்கி, "சுவாமி! நீ என் குற்றத்தை மன்னிக்க வேண்டும்; நான் காணிக்கை முடிய மறந்து விட்டேன்; இதோ உனக்கேற் பட்ட காணிக்கையாகிய இருபத்தொரு பணத்தையும், எடுத்து முடிகிறேன்" என்று தன் மடியிலிருந்தே அந்தப் பணத்தை யெடுத்து மஞ்சள் துணியில் முடிந்து "எப்படி யும் இது நமக்குச் சேர்வதுதானே" என்று நினைத்துக் கொண்டு அவளுக்கு முன்னே வைத்தான். அவ்வாறு வைத் தவுடனே முத்துக்கருப்பியின்மேல் வந்திருந்த கருப் பண சுவாமி, கோடாங்கியைப் பார்த்து, "நீயே இந்தப் பணத்தை யெடுத்து வைத்திருந்து என் ஆலயத்துக்கு வந்து ஒரு நல்ல நாளில் இதை எனக்குச் செலவு செய்து பூஜை நடத்திவிடு" என்று சொல்லிற்று. கோடங்கி "இந்த வார்த்தைக்குத்தான் நான் எதிர் பார்த்திருந்தேன்" என்று மகிழ்ச்சியுடன் அந்த முடிப்பை யெடுத்துத் தன் உடுக்கைப் பைக்குள் வைத்துவிட்டுக் கருப்பணசாமியை நோக்கி, "இனி நீ முடியெடுத்துக்கொடுப்பதில் என்ன தடை?"

என்றான். அதைக் கேட்டுக் கருப்பணசாமி, "இதோ நான் முடி தருகிறேன்" என்று சொல்லிப் பத்து நிமிஷம் வரை சுற்றியாடிப் பெருஞ் சப்தத்தோடு தலையின் உச்சியில் ஐந் தாறு மயிர்களைக் கோதி யெடுத்துக் கோடாங்கி கையிற் கொடுத்து, "இதோ நான் போகிறேன்; இனிமேல் எப் பொழுதும் இவளைத் தொடமாட்டேன்" என்று சொல் லிற்று. மலையாளபகவதி, "அப்படியே நீ செய்வதற்குறுதி யாக எனக்கு வலக்கை கொடு" என்று சொன்னான். அவன் கேட்டபடியே கருப்பணசாமி தன் வலக்கையால் அவன் வலக்கையில் அடித்தது. (பேயின் வாக்குறுதிக்காக அதனி டம் சத்தியம் வாங்குவது பூசாரிகளின் வழக்கம். இவ்வாறு அது வலக்கை யடிக்குமாறு பகவதி செய்ததே அதனிடம் சத்தியம் வாங்கியதாம்). அதன்மேல் மலையாளபகவதி கருப் பணசாமி எடுத்துக்கொடுத்த மயிர்களில் ஒன்றும் நழுவிவிடா தபடி அவற்றை யெல்லாம் திரட்டி வெகு ஜாக்கிரதையாக முடிந்து விட்டான். (இவ்வாறு பேய் எடுத்துக் கொடுத்த மயிர்களில் எதையேனும் தவறவிட்டால் அந்தப் பேய்போ காதென்பது பூசாரிகளின் அபிப்பிராயம். அதனால் அவர் கள் இவ்வாறு அவற்றைப் பத்திரமாக முடிவது வழக்கம்). மேற்கண்டபடி பேய் முடியெடுத்துக் கொடுக்கப் பூசாரி அதனை முடிந்தவுடன், சிலர் எழுந்து முந்தியே பேய்தூக்கு வதற்கென்று தாங்கள் தயாரித்து வைத்திருந்த பெருங் கருங்கல்லைப் புரட்டிக் கொண்டுவந்து சுப்பையன் வீட்டு வாசலிற் போட்டார்கள். அதைப் பார்த்ததும் முத்துக் கருப்பி எருமைபோல் கதறிப் பூனைபோல் சீறிக்கொண்டு போய் அதன் சமீபத்தில் நின்று புயங்களைத்தட்டித் தன்னு டைய பலத்தை யெல்லாங் கூட்டித் தானே அக்கல்லைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு இளங்கடாரி துள்ளி ஓடுவது போல வெளியேறி ஓடினாள். (பெண்களின் மேல்

வரும் பேய் உண்மையானதாயிருந்தால் அது எவ்வளவு பாரத்தையும் தூக்கிவிடு மென்பது பாமரர்களுடைய அபிப் பிராயம். ஆதலால் அவர்கள் அந்தப்பேய் உண்மையானதா என்று பரீக்ஷித்து அதனைத் தெரிந்து கொள்வதற்கு இவ் வாறு பெருங் கல்லைத் தூக்கிக் கொண்டு வந்து அதன் முன் போடுவதும், பேய் வந்து அதனைத் தூக்கும்போது அதற் குப் பக்கத்தில் எவரும் உதவியாக நின்று அதனைத் தூக்கி அப்பேயின் தலையில் வைக்காம லிருப்பதும் அவர்களின் இயற்கை. எனினும், பேயாடும் பெண்கள், தங்களுக் கேற்பட்டிருக்கும் திமிரினாலே இவ்வாறு எவ்வளவுபார முள்ள கல்லையும் இலகுவில் தூக்கிக்கொண்டு ஓடுவார்கள்) மேற்கண்டபடி முத்துக்கருப்பி ஓடவே அங்கு நின்ற ஸ்திரீ களெல்லோரும் இராஜாளியைக் கண்ட பக்ஷிகள் ஒடுங்கு வது போல ஓடி மூலை முடுக்குகளில் மறைந்து விட்டார் கள். புருஷர்களிலும் தைரிய மில்லாதவர்க ளெல்லோரும் அப்படியே வீடுகளில் நுழைந்து பதுங்கிக் கொண்டார்கள்.

இவர்களெல்லோரும் பேய் வந்தாடும்போது அதன் கூடவே யிருந்து மகிழ்ச்சியாகக் காரியங்கள் நடத்தினாலும் அது வெளியேறும்போதுமாத்திரம் எதிர்ப்பட்டவர்களைப் பிடித்துக் கொள்ளுமென்று நினைத்து இவ்வாறு மறைந்து கொள்வார்கள். இது இவர்களுடைய மூடக் கொள்கை களுள் ஒன்று.

இப்படி எல்லோரும் மறைந்தவுடன் கோடாங்கி தன் உடுக்கைப்பை முதலியவற்றை எடுத்துத் தோளில் போட் டுக்கொண்டு முத்துக்கருப்பிக்குப் பின்னே ஓடினான். அவ னுக்குப் பின்னே சுப்பையனும், மிகவும் தைரிய முள்ள பக்கத்து வீட்டுக்காரனும் ஓடினார்கள். இவர்களெல்லோ ரும் சிறிது தூரம் சென்றவுடன் மலையாளபகவதி, திரும் பிப் பார்த்து மற்ற இருவரும் தனக்குப் பின் ஓடி வருவ

தைத் கண்டான். அவ்வாறு கண்டதும், தான் மனதிற்குள் வைத்திருந்த ஒரு காரியத்தை நிறைவேற்றுதற்கு அவர்கள் அவனுடன் சென்றது இடைஞ்சலாயிருந்தபடியால் உடனே அவர்களை நிறுத்திவிடக் கருதி அவர்களை நோக்கி, "நீங்கள் வரவேண்டாம்; இது மிகவும் துஷ்ட தேவதை; நடுவழியில் உங்களை அறைந்தாலும் அறைந்து விடும்; அதிலும் சுப்பையா அண்ணன், இந்தப் பேய் பிடித்த பெண்ணுக்குப் புருஷனா யிருப்பதினால் இதற்கு அவர்மீது அதிக கோபமுண்டாகும்; இது வீட்டில் வந்து ஆடும் போதே அவரைச் சிலிர்த்துப் பார்த்தது; ஆகையால் அவர் வரவே கூடாது; நீங்கள் இருவரும் நில்லுங்கள்! நில்லுங்கள்!! நான் எதற்கும் அசையாத கட்டை; தனியே போகிறேனென்று நீங்கள் பயப்பட வேண்டாம்; நான் எது வந்தாலும் சமாளித்து இந்தப் பேயை இதனுடைய நிலையில் கொண்டு போய் நிறுத்திவிட்டு எல்லாக் காரியங்களையும் முடித்துக் கொண்டு வருவேன்; நீங்கள் உடனே திரும்புங்கள்! திரும்புங்கள்!!" என்று கூறினான். பக்கத்து வீட்டுக்காரன் தைரியசாலியா யிருந்தும் கோடாங்கி சொல்லிய இந்தக் கலக்கமான வார்த்தைகளைக் கேட்டவுடன் கலக்கங்கொண்டு "நமக்கேன் இந்தச் சனியன்" என்று திரும்பித் தன் வீட்டிற்குப்போய் விட்டான். சுப்பையன் முந்தியே கருப்பணசுவாமி தன் வீட்டில் ஆடும்போது தன்னைக் கோபித்ததை நேரில் பார்த்தவனாதலால், கோடாங்கி, வார்த்தையைக் கேட்டதும் "இவர் சொல்வது சரிதான்; எல்லாக் காரியங்களையும் பூசாரி நடத்திவிட்டு நம் மனைவியுடன் வீட்டிற்கு வந்து விடுவார்" என்று கருதித் தன் மனைவியாகிய முத்துக் கருப்பியை அந்த வித்தைக்காரனாகிய பகவதியின் வசம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பிப் போய் வீட்டிற்குள் நுழைந்து கதவை மூடிக்கொண்டான். அதன்மேல் மலை

யாளபகவதி மிக்க ஆனந்தத்தோடு முத்துக்கருப்பியைப் பின்தொடர்ந்தான். சிறிது நேரத்திற்குள் அவனும் முத்துக் கருப்பியும் ஊரைவிட்டு வெளியேறி வைகையாற்றைக் கடந்து வடதிசை நோக்கிச் சென்றார்கள்.

சுப்பையன் மனைவியைப் பறிகொடுத்து மயங்குதல்.

அந்தோ பரிதாபம்! இவர்கள் மேற்கண்டவாறு சென்ற பின்பு, மேற்கூறியபடி வீட்டிற்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்ட சுப்பையன், முத்துக் கருப்பியும், கோடாங்கி மலையாளபகவதியும் பேயை எங்காவது கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பிவந்து கதவைத் தட்டுவார்களென்று நினைத்து நெடுநேரம்வரை தூங்காமல் விழித்திருந்தான். நேரம் நடுச்சாமத்திற்கு மேலாகியும் அவர்கள் வரவில்லை. நேரம்கழிந்து கொண்டே யிருந்தது. நேரம் செல்லச்செல்ல அவனுக்குப் பலவிதமான எண்ணங்கள் உண்டாயின; முடிவாக விடியுந்தருணமும் ஆய்விட்டது. அதன்மேல் அவன் மனக் கலக்கத்துடன் கதவைத் திறந்துகொண்டு வெளியேறி இரண்டு மூன்று தெருக்களையும் தாண்டிப் போய் அவர்கள் வரும் வழியைப் பார்த்தான். அவர்களின் வரவைப்பற்றிய குறி ஒன்றுமே அவனுக்குத் தோற்ற வில்லை. அதனால் அவன் திகில் கொண்டவனாய், "என்ன! அவர்கள் இன்னம் வரவில்லையே! கருப்பணசுவாமி நெடுந் தூரம்வரை அவர்களை இழுத்துக்கொண்டு போய்விட்ட தோ; எவ்வளவு தூரம் ஓடினாலும் அது இந்த வூரெல்லைக் கப்பால் போகமாட்டாதே; இவ்வூரெல்லையின் முடிவுவரை சென்றிருந்தாலும் அவர்கள் இதுவரை திரும்பி வந்திருக்க லாமே; அவர்கள் வருதற்கு இவ்வளவு தாமதமாகக் காரண மில்லையே; நடந்தது என்னமோ தெரியவில்லையே; அவ் விருவரையும் பேய்தான் அறைந்து விட்டதோ" என்று

திரும்பி வீட்டுக்கு வந்தான்; உட்கார்ந்தான்; அங்ஙனம் உட்கார்ந்திருப்பதற்கு அவனுடைய மனம் இசையவில்லை; அதனால் மீண்டும் அவன் எழுந்து வெளியேறினான். இதற்குள் இருள் நீங்கி வெளிச்சமாயிற்று; சூரியனும் உதயமாயினான்.

அப்போது முன்னாளிரவு அவன் வீட்டில் பேயாட்டு நடக்கும்போது அவன்கூட இருந்தவர்களிற் சிலர் வந்து அவனிடத்தில், "கல்லைத் தூக்கிச்சென்ற உன் மனைவி திரும்பிவந்து சுகமா யிருக்கிறாளா?" என்று கேட்டார்கள். அதற்கவன், "ஐயோ! இதுவரையிலும் அவளும் வரவில்லை, கோடாங்கியும் வரவில்லையே" என்று வாடிய முகத்தோடு உரைத்தான். உடனே அவர்கள், "இஃதென்ன அதிசயமா யிருக்கிறது! அவர்களைப் பேய் அறைந்து விட்டதோ? நீ சீக்கிரம் சென்று சுடுகாட்டுக்கு அடுத்த விடங்களில் அவர்களைத் தேடிப்பார்" என்று கூறினார்கள். அவ்வாறு கூறவே, அவன், முன்னே, "நீ சுடுகாட்டுக்கு எப்பொழுதும் போகக் கூடாது; போனால் எமனுக்கு உன்மீது கோபம் வரும்" என்று தன்னிடம் மலையாளபகதி சொன்னதையும் மறந்து, முத்துக்கருப்பியின் எண்ணத்தையே மனத்தில் வைத்துப் பைத்தியம் பிடித்தவன் போன்று சுடுகாட்டுப் பக்கம் ஓடி நான்குதிசைகளிலும் திரிந்து அவர்களைத்தேடிப்பார்த்தான்; இன்னும் பிசாசுகள்போய் நிற்கும் இடங்களென்று கருதப் பட்ட காடுகளிலெல்லாம் போய்ப் பார்த்தான். அவர்கள் எங்கும் காணப்படவில்லை. பின்பு, அவன் "அவர்கள், இது வரை வேறு வழியாகத்திரும்பி வீட்டுக்குப் போயிருந்தாலு மிருப்பார்கள்" என்றெண்ணித் திரும்பி வீட்டிற்கோடி அங்கே அவர்களைத் தேடினான். அப்போதும் அவர்கள் அங்கில்லை. அதற்குள் இந்தப் பிரஸ்தாபம் ஊரெங்கும் பரவிவிட்டது. அவ்வாறு பரவவே, ஊராரெல்லாரும் திரண்டு

வந்து சுப்பையனைச் சுற்றிக்கொண்டு, அவன் முன்னே பொது ஜனங்களுக்குச் செய்த கொடுமைகளை நினைத்து, அவனுக்கிப்போது நேர்ந்த இவ்விஷயத்தைப்பற்றி மனதிற்குள் சந்தோஷமடைந்து, வெளிக்கு மாத்திரம் மிகுந்த விசனமடைந்தவர்கள்போல நடித்து, "ஐயோ! சுப்பையத் தேவர் நல்லவர் பாவம்! அவருக்கு இத்தகைய துன்பங்களெல்லாம் வந்துவிட்டன; அவர் மனைவியையும் இழக்குங் காலம் நேர்ந்தது; ஒரு சமயம் அந்தக் கோடாங்கிதான் அவளைக் கைப்பற்றிக்கொண்டு போய்விட்டானோ" என்று பல பலவிதமாக அவனுக்குக் கலக்கமும் சந்தேகமும் உண்டாகும்படியான வார்த்தைகளைப் பேசினார்கள். அப்போது சுப்பையன் அவர்களை நோக்கி, "நீங்கள் என் மனைவியைப் பற்றி இவ்விதமான அபிப்பிராயங் கொள்ளவேண்டாம்; அவள் தனக்கு என்ன துன்பம் வந்தாலும் என்னை மறந்து வேறொருவர் கூடச் செல்லவே மாட்டாள்; கோடாங்கி அண்ணனும் எனக்குத் துரோகஞ் செய்யமாட்டார்; என் கண்மணியான முத்துக்கருப்பியா என்னைமறப்பாள்!" என்று அவளைச் சிலாகித்துப் பேசினான். அதன்மேல் அவர்கள் அவனை நோக்கி "உன் அபிப்பிராயம் அப்பேர்ப்பட்டதாயிருந்தால், நாங்கள் சொன்னது தவறானதுதான்; அவர்கள் நேற்றிரவு திரும்பி வரும்போது நீ தூங்கிக் கொண்டிருப்பாயென்றும், உனக்குச் சிரமத்தை உண்டு பண்ணக்கூடாதென்றும் நினைத்து இங்கு வாராமல் அந்தக் கோடாங்கியின் வீட்டிற்குப் போயிருந்தாலு மிருப்பார்கள். ஆதலின் நீ கோடாங்கி வீட்டிற்குப் போய் அங்கே அவர்களைப்பார்" என்று சொன்னார்கள். இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே சுப்பையன், குதிரை பறிகொடுத்த பக்கிரிபோல மொட்டைத் தலையோடு அவர்களையும் அழைத்துக்கொண்டு அங்கே சென்று தன் மனைவியையும் கோடாங்கியையும்

தேடினன். அப்போது அந்த வீட்டில் யாருமில்லை. கோடாங்கியின் சிஷ்யர்கள் நாம் முன்கூறியபடி முன்னுளே வேற்றூர்க்குப் போய்விட்டதால் அவர்களும் அங்கே காணப்படவில்லை. சுப்பையன், பக்கத்து வீட்டுக்காரரிடம் அவர்கள்விஷயத்தை விசாரித்தான். "கோடாங்கியினுடைய சிஷ்யர்கள் முதல் நாளே வீட்டிலிருந்த சாமான்களை எடுத்துக்கொண்டு எங்கேயோ பிரயாணப்பட்டுப் போய்விட்டார்கள்" என்று அவர்கள் சொன்னுர்கள். அதனுல் அங்குச் சென்ற எல்லோருக்கும் கொஞ்சம் சந்தேகம் பிறந்தது. உடனே யாவரும் அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். அப்படிப் பார்க்கும்போது அவ்வீட்டின் ஒரு பக்கத்துச் சுவரில் சிலவாக்கியங்கள் கரியால் எழுதப்பட்டிருந்தன. அவை கோடாங்கியால் எழுதப்பட்டவையே; படிக்கத் தெரிந்தவர்களெல்லோரும் அவற்றை வாசித்து விட்டுப் பெரிய ஆச்சரியத்தை யடைந்தவர்களாய்ப் பிரமித்து நின்ருர்கள். சுப்பையன் அவற்றைப் படிக்கத் தெரியாதவனுகையால், அவற்றில் இன்ன விஷயம் இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளாதவனுய் அவற்றை வாசித்தவர்கள் பிரமித்து நிற்பதைக்கண்டு சந்தேகங்கொண்டு அவர்களை நோக்கி, "நீங்கள் ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்? நடந்தது என்ன? என்ன?" என்று கேட்டான். அப்போது அவனுக்கு மிகவும் பகையாளியாகிய ஒருவன், அந்த வாக்கியங்களை வாசிக்கத் தொடங்கி "சுப்பையத்தேவனுக்குக் கோடாங்கி பகவதி, எழுதுவதாவது: என்னை நீ மலையாளத்துக் கோடாங்கி யென்று நினையாதே; நான்ருன் ஆதியில் உன்னிடம் அரண்மனை வாசலில் 'உன்னைக் கெடுப்பேன்' என்று சபதம் செய்துசென்ற விகடக் குருசாமி; நீ என்னுடைய வல்லமையை உணராமல் முன்னே அரண்மனைக்குட் சென்ற என்னைத் தடுத்து, என் காரியத்தைக் கெடுத்

தாய்; அதற்காக 'நான் உன்னைக் கெடுத்து விடுவே'னென்று அப்போது உன்னிடம் சபதஞ்செய்து விட்டு வந்தேன்; அந்தச் சபதத்தை நிறைவேற்றுவதற்காக நான் இவ்வகை மாறுவேடங்கொண்டு வந்து உன்னைப் பலவகையிலும் ஏமாற்றி உன் குடியைக் கெடுத்தேன்; உனக்கு எல்லாத் துன்பங்களும் என்னுடைய தூண்டுதலாலேதான் நேர்ந்தன; முடிவாக நான் உன்னுடைய மனைவியையுங் கொண்டு போகிறேன்; தங்களுக்கு அதிகாரமிருக்கிறதென்று நினைத்து உலகத்தாருக்குத் துன்பஞ் செய்யும் பாவிகட்கெல்லாம் கிடைப்பது இக்கெதிதான்" என்று பலமாக எல்லோரும் கேட்கும்படி வாசித்து விட்டான். இந்த அறிவிப்பு கோடாங்கியால் எழுதப்பட்டதே. இதன்படி அவன் முத்துக்கருப்பியைக் கவர்ந்து கொண்டு போய்விட்டான்.

இந்த வாக்கியங்கள் காதில் விழுந்தவுடனே சுப்பையன், பேரிடி விழப்பெற்றவன் போலச் சுழன்று, கையைத் தரையில் மோதி, "ஆகா! இந்தச் சண்டாளனா இவ்வளவு காரியங்களையும் நடத்திவிட்டான்! எவ்வளவோ நான் கெட்டிக்காரனாயிருந்தும் இவன் சூழ்ச்சியில் ஏமாந்து போய் விட்டேனே! எப்படியாவது நான் இவனைத் தேடிக் கண்டு பிடித்து மார்பைப் பிளந்து கொன்று என் கண்மணியாகிய முத்துக்கருப்பியை மீட்டுக்கொண்டு வாமல் விடுவதில்லை; எதை யிழந்தாலும் முத்துக்கருப்பியை இழந்து நான் உயிரோடிருப்பேனா?" என்று பற்களைக் கடித்துக் கொண்டு ஒருவரையும் இலக்ஷியம் செய்யாமல் இவனும் ஒரு பேய்ப் பிடித்தவன்போல வடதிசை நோக்கி ஓடினான். அதன்மேல் ஊரரெல்லாரும், "சுப்பையன் ஏழைகளுக்குக் கெடுதி செய்ததால் அவனுடைய வாழ்வு அடியோடு கெட்டொழிந்தது; விகடக்குருசாமி மிகவும் கெட்டிக்காரன்; அவனை இன்னவனென்று இதுவரை ஒருவரும்

கண்டுகொள்ளவில்லையே! அவன் இந்தப் பாவிக்குச் செய்தது தகும்! தகும்!!" என்று பேசிக்கொண்டார்கள். பல தினங்கள் வரை அவர்களுக்குள் இந்தப் பேச்சே நிகழ்ந்து கொண்டிருந்தது.

சுப்பையன் அநாதிப்பிணமாதல்.

அந்தச் சுவரில் எழுதப்பட்டிருந்த அறிவிப்பின்படி அங்கே கோடாங்கியாக வந்து இவ்வளவு காரியங்களையும் நடத்தினவன் விகடக் குருசாமிதான். அவன் அரண்மனை வாயிலில் சுப்பையனோடு சண்டையிட்டுச் சபதஞ்செய்து சென்ற பிறகு வேற்றூர்க்குப்போய்ச் சில மாதங்கள் வரை மறைந்திருந்து கொண்டு தக்க மனிதர்களால் சுப்பையன் செய்த அக்கிரமங்கள் அரண்மனைக்கு எட்டும்படி செய்து, அவனுடைய உத்தியோகத்தைப் போக்கி, இன்னும் அவனைக் கஷ்டப்படுத்துதற்குப் பலரை அவனிடம் ஏவி விட்டு அவனுக்குப் பல கஷ்டங்களையும் உண்டாக்கிப் பின்பு கோடாங்கியாக மாறுவேடந் தரித்துவந்து அவனோடு சிநேகங் கொண்டு நயவஞ்சகமாயிருந்து இவ்வாறு அவன் குடியைக் கெடுத்து முத்துக்கருப்பியையுங் கூட்டிக்கொண்டோடினான். இந்தக் குருசாமி, கோடாங்கியாக மாறி வந்த காலத்தில் சுப்பையனோடு முதன்முதல் பழக்கமாகும் போதே முத்துக்கருப்பியைத் தன் வசப்படுத்தி விட்டான். அச்செய்கை சுப்பையனுக்குத் தெரியாது. குருசாமி அவன் குடும்பத்தைக் கெடுத்தபின் முடிவில் முத்துக்கருப்பியையும் கூட்டிக்கொண்டு போய்விடவேண்டுமென்றே அவ்வாறு தன் வசப்படுத்திக்கொண்டான். அவ்வாறு வசப்படுத்திக்கொண்டு, சுப்பையன் குடியைக் கெடுத்தபின் சுப்பையன் தரித்திரப்பட்டு முன்னே நாம் கூறியபடி அடுத்த வூருக்கு அரிசி தேடிவரப் போயிருக்கும்போது மனங் கலங்கியிருந்த முத்துக்கருப்பியிடம் சென்று அவளுக்குப்

பலகாரம் வாங்கிக்கொடுத்து, "தரித்திரம் பிடித்த உன் கணவனோடு நீ கூடி யிருப்பதைக் காட்டிலும் என்னோடு வருவாயானால் நல்ல சுகத்தை யடையலாம்" என்று சொன்னான். அவள் அதற்கு இசைந்து "எப்படி வெளியேறிப் போகலாம்" என்று அவனிடம் கேட்டாள். குருசாமி, அவளுக்கு "நீ பேயாற் பிடிக்கப்பட்டு ஆடுவதுபோல பேயாட்டமாடி நடிப்பாயானால் நான் உனக்குப் பேயோட்டும் பாவனையாகப் பலரும் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே மிகவும் இலேசாக அழைத்துக்கொண்டு போய் விடுவேன்" என்று தந்திரம் சொன்னான். இவர்கள் இவ்வாறு இவ்விஷயங்களை முடிவு செய்தது கொண்டதைத்தான், முன்னர் இச் சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தார்களென்று நாம் சொன்னோம். அவன் இவ்வாறு உபாயம் சொன்னதைக் கொண்டுதான் முத்துக்கருப்பி அவ்வாறு பேயாடத் தொடங்கினாள். அது அவன் அவளைச் சுலபமாக அழைத்துக்கொண்டு போவதற்கு மிகவும் உதவியாயிற்று. அவன் முத்துக்கருப்பிக்குப் பேயோட்ட அன்றிரவு செல்லும்போது 'இன்றைக்கு நாம் முத்துக் கருப்பியை நிச்சயமாக அழைத்துக்கொண்டுபோய் விடுவோம்; ஆதலால் நம் இரகசியங்களெல்லாம் சுப்பையனுக்குத் தெரியும்படி செய்துவிட வேண்டும்' என்று கருதி முதல்நாளே சிஷ்யர்களை வேற்றூர்க்கனுப்பிவிட்டு மேற்கூறிய அறிவிப்பைத் தன் வீட்டில் எழுதிவைத்து வந்தான். அவன் அன்று வெளியேறிப் போய்விடவேண்டுமென்று தீர்மானித்திருந்ததனாலேயே சிஷ்யர்களை முதல் நாளிலேயே வெளியூருக் கனுப்பினான். (இந்தச் சுப்பையன் போலவே இப்போதும் பலர், பூசாரிகளின் மாயையால் பெண்களை இழந்துவிடுகிறார்கள்.) இங்கே சுப்பையனுக்கு வந்த எல்லாக் கஷ்டங்களும் குருசாமியால் நடந்தனவெனினும் அவையெல்லாம் ஒன்றன்மேலொன்றாய்த் தவறாமல் நடப்பதற்கேதுவாயிருந்தது, வசைகவி மாணிக்கப் புலவர் பாடிய வசைகவியினாலேற்பட்ட சாபமே. அவர் மனங் கொதித்து அந்தப் பாட்டைச் சொன்னபடியால், அதில் கூறிய எல்லாத் துன்பங்களும் தவறாமல் சுப்பையனுக்குண்டாயின.

இவை நிற்க; மேற்கண்டவாறு வெறிகொண்டவன் போன்றுவடதிசையை நோக்கி ஓடிய சுப்பையன், தன் மனைவியைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் மிகுந்த ஆத்திரங்கொண்டு ஊரூராக ஆறுமாதங்கள்வரை திரிந்தலைந்து அவளைத் தேடினான். அவனுக்கு அவள் அகப்படவில்லை. அதன்மேல் அவன் முடிவாகத் திருச்சினுப்பள்ளியிற்போய்ச் சேர்ந்தான். அங்குப் போய்ச் சேர்ந்து சில நாட்கள் வரை தங்கியிருந்தான். அப்போது அவன் தனக்குச் சோறகப்படாமல் பட்டினி கிடந்ததனாலும், வெயிலிலும் மழையிலும் திரிந்து அலைந்ததனாலும் அவனுடைய தேகம்கெட்டு ஒருநாள் அவனுக்கு வாந்திபேதி உண்டாய் விட்டது. ஐயோ! பாவம்! அத்தருணத்தில் என்ன செய்வான் சுப்பையன்? யாரும் உதவியில்லாமல் ஒரு சத்திரத்தில் அனுதையாய்ப் புரண்டுகொண்டு கிடந்தான். அவ்வூர் அரங்கசாமி பிள்ளையென்னும் ஒரு தருமசீலர் அவனுடைய நிலைமைக்கிரங்கி அவனைத் தூக்கிக்கொண்டுபோய் வைத்தியசாலையிற் சேர்த்தார். அங்குள்ளார் அவனுக்கு வைத்தியஞ் செய்துபார்த்தார்கள்; வியாதி நீங்கிச் சிறிதேனும் குணம் காணவில்லை. அவன் ஆஸ்பத்திரியிற் சேர்ந்த ஒரு மணி நேரத்திற்குப்பின் அவனுடைய கண்கள் சுழன்றன; நாவறண்டு போயிற்று; நரம்புகளில் இசி வுண்டாயிற்று. அப்போது அவன் எண்ணுதவையெல்லாம் எண்ணினான்; அவன் உத்தியோகத்திலிருக்கும்போது செய்த அக்கிரமங்களெல்லாம் மிகவும் நியாய விரோதமானவைகளென்பது அப்போது அவனுடைய மனத்தில் தோன்றிற்று; அவன் வசைகவி மாணிக்கப்புலவர்க்குச் செய்த தீங்கையும் நினைத்தான். "நாம் செய்த அக்கிரமங்களினாலேயே நமக்கு இந்தக்கெதி கிடைத்தது" என்று தீர்மானித்தான். அவன் இவற்றையெல்லாம் நினைத்தும் அவனுக்கேற்பட்ட கஷ்டம் தீருவதாயில்லை. அவன் "வாழ்கிற நாளில் வஞ்சனை செய்து சாகிற நாளில் சங்கரா! சங்கரா!! என்றால் அது தீருமா?" அவனுக்கு உயிர் போகுந்தருணங் கிட்டிவிட்டது; அவ்வாறாகவே அவன், "ஐயோ! நமக்கு இவ்வளவு சீக்கிரத்தில்

சாவு கிட்டியிருக்கும்போது நாம் வஞ்சனைக்காரப் பயலாகிய கோடாங்கி பேச்சைக்கேட்டுப் பொருள்களையெல்லாம் செலவிட்டுக் குடுமியையும் இழந்தோமே; முத்துக்கருப்பியும் அவன் பின்னே ஓடிப்போய்விட்டாளே; இந்தச் சமயத்தில் அவள் நம் பக்கத்திலிருந்து நம்மேல் ஒரு துளி கண்ணீராவது வடிக்க நாம் தவம் செய்யாமற் போய்விட்டோமே” என்று பல சிந்தனைகளைச்செய்து கண்ணீர் விட்டான். உடனே உயிர் போய்விட்டது. அடுத்த நிமிஷத்திலேயே வைத்தியசாலை வேலைக்காரர்கள் அவன் பிரேதத்தை வண்டியிற்போட்டு இழுத்துக்கொண்டுபோய்ச் சுடுகாட்டில் புதைத்து விட்டார்கள்.

அவன் இவ்வாறு இறந்தவுடனே மதுரையில் அவனுடைய வீடு முழுவதும் இடிந்து விழுந்து தரையோடு தரையாய் அழிந்து விட்டது. அஃதிருந்தவிடம் பலரும் வெளிக்குப் போகுமிடமாய் இரண்டுதலைழந்து எருக்கு முளைத்துக் கழுதைகளும் பன்றிகளும் குடியேறுதற்குரியதாய் விட்டது. அவ்வீட்டின் பக்கத்தில் செல்பவரெல்லோரும், “அடடா! உலகத்துக்குக் கெடுதிசெய்த சுப்பையத்தேவன் வீடும் இருந்தவிடந் தெரியாமற் போயிற்றே” என்று சொல்பவராயினர்; சிறிது காலத்திற்குப்பின் சுப்பையன் வாந்திபேதியால் இறந்த செய்தியும் மதுரைக்கு எப்படியோ எட்டிவிட்டது. அதைக் கேள்விப்பட்டவுடனே மதுரைவாசிகளெல்லோரும் சுப்பையனை மிகவும் நிந்தித்து “அனியாயம் செய்வோரைக் கடவுள் சும்மா விடமாட்டார்” என்று பேசிக்கொண்டிருந்து சில தினங்கள் சென்றபின் அவனுடைய எண்ணத்தை மறந்துவிட்டார்கள். அவனைச் சார்ந்த பந்துக்களும் அவ்வாறே அவனை நிந்தித்துப் பின்னர் மறந்து விட்டார்கள். மேற்கூறியபடி இரவில் மறைந்தோடிய முத்துக்கருப்பியும், குருசாமியும் தஞ்சாவூரிற் போய்க் குடியேறி, சுப்பையனிறந்த சமாசாரத்தைக் கேள்விப்பட்டு, “சனியன் தொலைந்தது” என்று தலை முழுகிவிட்டு நல்ல வியாபாரங்களைச் செய்து சுகமாகவாழ்ந்திருந்தார்கள்.

இதை வாசிக்கும் நண்பர்களே! கெர்வத்தால் ஜனங்களுக்குத் துன்பஞ்செய்த சுப்பையன் பட்டபாட்டையும், அவன் பூசாரியையும், பேய் முதலியவற்றையும் நம்பியதால் அவனுக்கு வந்த தீங்கையும் நன்ருக ஆலோசித்துப் பாருங்கள். இவ்விதக் கொள்கை யுடையவர்களுக்கு இவ்வகைத் துன்பங்கள் வருவது நிச்சயம். ஆதலின், நீங்கள் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தைப் படித்ததன் பயனுக இவ்விதக் கொள்கைகளை அனுஷ்டிக்காமல் மனதை நல்ல நிலைமையில் வைத்துக் கொள்வதோடு, மற்ற பாமாருக்கும் இதனைப் படித்துக்காட்டி நல்லறிவு புகட்டும்படி நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உலகத்திலுள்ள பாமரக் கொள்கைகளை மிகுதியும் இதன் மூலமாக எடுத்துக் காட்டவேண்டுமென்பதே என்னுடைய உத்தேசமாதலால், இக்கதை மிகவும் சிறிதாயினும் இதில் உலக விஷயங்கள் என்னுல் மிகவும் எடுத்தெழுதி விளக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றைப்பார்த்து, அறிவுடையோர் நிச்சயமாக மகிழ்வடைவர்; உலக விஷயங்களின் ஆராய்ச்சி யில்லாத சில சாமானியர், “கதை நன்ருயில்லை; உபயோகமற்ற விஷயங்கள் இதில் எழுதப்பெற்றிருக்கின்றன” என்று குறை கூறுவர்; அவர்களையும் அவர்களுடைய அபிப்பிராயங்களையும் உலக ஞானமுள்ள விவேகிகள் எட்டுணையும் மதியார்.

இப்புத்தகத்தை வாசிப்போருக்கும் கேட்போருக்கும் எல்லாம்வல்ல இறைவன் சிறந்த அறிவையும், நிறைந்த ஆயுளையும், உயர்ந்த செல்வத்தையும் நல்கியருளுவானுக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

மலையாளபகவதி

பூர்த்திபெற்றது.

“ஆனந்தபோதினி” அச்சுக்கூடம், சென்னை.

" ஆனந்தபோதினி "

ஓர் இனிய மாகாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.